# அச்சுவை பெறினும்...

**அருண் நரசிம்மன்**



தமிழினி

Valardocs

# அச்சுவை பெறினும்...

அருண்
நரசிம்மன்

தமிழினி

தமிழினி
Achchuvai Perinum… - Novel — Arunn Narasimhan
முதல் பதிப்பு : மே 2016
E-book : Dec 20187
காப்புரிமை © : அருண் நரசிம்மன்
விற்பனையகம்: 25-ஏ, தரைத்தளம், முதல் பகுதி, ஸ்பென்சர் பிளாஸா, 769, அண்ணா சாலை, சென்னை - 2, தொலைபேசி : 044-28490027
அலுவலகம்: 63, நாச்சியம்மை நகர், சேலவாயல், சென்னை - 51. tamizhininool@yahoo.co.in 9344290920
அச்சாக்கம் : ஆர் கே பிரிண்ட்ஸ், சென்னை - 14
முன் அட்டை ஓவியம் : அருண் நரசிம்மன்
விலை: அச்சுப்பதிப்பு — ரூ 190
E-book by Valardocs, Chennai.

Disclaimer

இந்நாவல் ஒரு புனைவாக்கம். உள்ளடக்கம் முழுவதும் ஆசிரியருடைய கற்பனையே. நிஜப் பெயர்கள், மனிதர்கள், இடங்கள், நிறுவனங்கள், சம்பவங்கள் போன்றவற்றுடன் ஒத்திருந்தால் அது தற்செயலே.

# உள்ளே…

1. ஸ்ரீரங்கம். இன்று. காலை பத்து மணியளவில்.
2. அமெரிக்கா. இரண்டு மாதங்கள் முன்னால்.
3. அமெரிக்கா. ஒரு மாதம் முன்னால்.
4. அமெரிக்கா. ஒரு வாரம் முன்னால்.
5. பெங்களூர். நேற்று.
6. மெட்ராஸ் + ஸ்ரீரங்கம். நேற்று மதியம்.
7. பெங்களூர் + ஸ்ரீரங்கம். நேற்று மாலை.
8. ஸ்ரீரங்கம். முதல் இரவு.
9. ஸ்ரீரங்கம். இன்று. முதல் பகல்.
10. ஸ்ரீரங்கம். இன்று. காலை பத்து மணிக்கு மேல்.
11. ஸ்ரீரங்கம். இன்று. மாலை, இரவு.

மண்ணில் இந்தக் காதல் இன்றி…

12. ஸ்ரீரங்கம். மறுதினப் பகல்.
13. ஸ்ரீரங்கம். மறுதினம் மதியம்.
14. ஸ்ரீரங்கம். மறுதினம் மாலை.
15. ஸ்ரீரங்கம். மறுதினம் இரவு.
16. பயணங்கள். இரவு.
17. அமெரிக்கா. சென்ற வாரம்.
18. பெங்களூர். இனி வரும் வாரம்.

மண்ணில் இந்தக் காதல் இன்றி…

# 1

ஶ்ரீரங்கம். இன்று. காலை பத்து மணியளவில்.

“மகிழ்வான குடும்பங்கள் ஒரே வகையினதே. மகிழ்ச்சியற்ற குடும்பங்கள் ஒவ்வொன்றும் தத்தமது வகைகளில் மகிழ்ச்சியற்றவை. எந்த நாவலின் தொடக்கம் தெரியுமா ரேஷ்மா?”

“அறிவுஜீவி கருத்துகள் நான் படிக்கறதுலலாம் வராது ரங்கா.”

“ரேஷ், கமான். கலை வாழ்க்கையைப் பிரதிபலிப்பதில்லையா? வாழ்க்கை அனைவருக்கும் பொதுவானதுதானே.”

அரங்கத்தின் அங்கமதை அந்நியர் கண்படாமல் அரவணைக்கும் அலைவாணியாம் காவிரியின் கரையோரக் காலை உலாவில் அவர்களிருவரும் பேசிக்கொண்டதற்குச் சார்புடைய கருத்தென்றுதான் அவன் கூறியது அவனுக்குத் தோன்றியது. சில மணி நேரங்களுள் அவளும் மறந்திருக்கமாட்டாள்.

“இப்டி சொல்லிட்டா? இந்த ‘டீப் தாட்’லாம் ஒடனே எல்லார்க்கும் புரிஞ்சுடுமா ஸ்வீட்டி? நான்லாம் டியூப்லைட் பா...”

ஷிட். ஸ்வீட்டி தடவிய வழக்கமான அவளது அரண். கணினிப் பொறியியலில் பல்கலையிலேயே மூன்றாவதாய்த் தேறி பன்னாடு சுற்றிவிட்டு பெங்களூரில் பட்டொளியும் தன் புத்திக்குச் சற்றே ஆய்ந்தால் எட்டிவிடும் கருத்தையே நான் சொன்னேன் என்பதை உணர்ந்தும் உள்வாங்க மறுத்துத் தன் புத்தியையே குறைத்து மதிப்பிட்டுக்கொண்டு கெஞ்சும் சாதுர்ய சோம்பேறித்தனம். சொக்கும் அழகு கதியற்றவாறு கோருவது, எத்தீரனையும் வீழ்த்தவல்ல பெண்மையின் பலம் என்பதைக் கல்லூரி தினங்கள் தொட்டே கச்சிதமாய்ப் புரிந்துவைத்திருப்பவள்.

கேலிச்சிரிப்பைப் பற்களில் கடித்துச் சுழியும் உதட்டினுள் படர்த்திப் பாதி திறந்த அந்நிலையிலேயே இதழ்களை உறைய வைத்து எதிரே போக்குவரத்தைக் கடைக்கண்ணால் அலட்சியப் படுத்தி அவனுக்கு எதிர்ப்புறம் கழுத்தை ஒடித்துத் தலையாட்டி மௌன ‘என்னாங்கறே’யாய் நோக்கினாள்.

“என்னோட ரெண்டு நாவல்களையும் படிச்சதா ஜீ-சேட் செய்றச்சேலாம்

சொன்னியே. அதுலலாம் அறிவுஜீவி கருத்துகள் கெடயாதா, ஒனக்குதான் புரியலயா...”

“புரியறுதுதான் புரியும் பா. ஒன்னயே அப்டித்தானே... இத்தினி வருஷங் கழிச்சு இப்பத்தானே கம்மியா புரியுது. நான்லாம் ஒன்ன மாதிரி சகலகலாவல்லி இல்ல. Just a small town girl...”

தன் கட்சி தோற்கக்கூடாது என்று வேண்டுமென்றே வாதிடத் தொடங்கிவிட்டாள். இருபது வருடங்கள் முன்னால் இருந்த அதே விட்டேற்றி மனநிலை. நாற்பதை நெருங்கியும் பேச்சினில் அன்று ஈர்த்த அதே மழலைக் குழைவு. எத்தனை கபடமேற்றி விரித்தாலும் வெருட்டாத மைவரைந்த விழிகள். நான்தான் புரியாததுபோல வேண்டுமென்றே விவாதிக்கிறேன் என்றால் நீதான் ஒருமுறையேனும் விட்டுக்கொடேன் எனும் அதே ஒளிவற்ற ஒளிரும் சிரிப்பு. ரேஷ்மா மாறவில்லை. இவையனைத்தும் புரிந்திருந்தும் இன்றும் அவளைக் காதலிக்கும் என்னைப் போலவே?

நெற்றி சுருங்கிக் கண்கள் கூரிட மூக்கை நீவிக்கொண்டான் ரங்கா. ஸ்ரீரங்கம் ரங்கநாதன். இப்படிப் பெயர்கொண்ட மேலும் ஒருவன் என்றாகியிருப்பான், பள்ளி முடிந்து கதறக் கதற அப்பா ‘காபிடேஷன் ஃபீஸ்’ என்கிற கௌரவப் பெயரில் கையூட்டு கொடுத்து அவ்வருடம் திருச்சியில் தொடங்கப்பட்டிருந்த ஒரு தோலாந்துருத்தியான் கல்லூரியில் அவனைப் பொறியியல் சேர்த்திருக்கவில்லை என்றால். அந்த அவமானம் கொடுத்த ஊக்கத்தில் இளங்கலையைப் படிக்காமலேயே தேறி, ஓரிரு வருடங்களில் ரேஷ்மா கொடுத்த அழுத்தத்தில் வேலைக்கு வழி தெரியாமல் முதுகலையை அமெரிக்காவில் உழைத்துப் படிக்கக் கிளம்பியவன். ரேஷ்மாவைத் துறந்து.

இளமை ஆர்ப்பாட்டங்களில் அடுத்த சீனிவாச ராமானுசன் தானே என்றிருந்தவனுக்கு இளங்கலை முடிந்த ஓரிரு வருடங்களுள் தான் யார் தனக்கு யார் தன்னால் யார் என்றெல்லாம் அடுத்தடுத்த பொறுப்புகள் திகைப்பூட்டின. சீனிவாச ராமானுசனென்ன ஏதோ ஒரு சீனியாய் மலர்ந்து பரிமளிப்பதற்குள் அடையக்கூடிய ஆசைகள் அனுபவிக்க முடிந்த வெற்றிகள் ஆளுக்கேற்ற காதல்கள் என்பவனவற்றையெல்லாம் வாழ்க்கை தன்னிட்டம்போல் தரந்திருத்தி தோல்வியற்ற, வெற்றிகள் தீண்டாத, பல்லாண்டு பல்லாண்டு பல கோடி நூறாயிரம் ஜனத்திரள் வலியுணராது வாழ்ந்து செதுக்கி வைத்திருக்கும் சாமான்யச் சட்டகத்தினுள் சிந்தனை செத்துச் சிறப்புறச் சுருக்கிச் செம்புட மேற்றிச்

செயலிழக்கச் செய்துவிடும் என்று புரிந்து கொள்ள அதிக அவகாசம் பிடிக்கவில்லை. அன்றைக்கான அப்பீட்டாய், அமெரிக்காவைப் பார்க்க ஓடிவிட்டான்.

இருபத்திமூன்றில் நாற்பத்தியெட்டு அண்டர் வெயிட்டாய்ச் சுமார் பதினைந்து வருடங்கள் முன்னால் அமெரிக்கா கிளம்பியவன் இன்று அமெரிக்காவின் ஓக்ரிஜ் நேஷனல் லபாரட்டரியில் மெட்டீரியல் சயன்டிஸ்ட் என்கிற கீர்த்தி பெற்றுத் தந்த செழிப்பில் நாற்பதை எட்டிப் பிடிக்க வெறுக்கும் வயதில் எழுபதைத் தொட்டிருந்த கனத்தில் (இன்றும் அண்டர் வெயிட் தானாம் - மெக்லாரன் 'ஜிம்' சட்டம் சொல்லியது) குக்சி ஷூ-வில் ஆப்பிள் கணினி 'ஈக்கோ ஸிஸ்ட'த்திற்கு மாறிவிட்ட self made Mac Man. அயல்வாழ் தமிழ் இலக்கியவாதிகள் குழுமத்தின் இணைய உறுப்பினராய் (நிறையப் பேர் இலங்கைத் தமிழர்கள்) இரண்டு நாவல்கள் பதிப்பில் கண்டுவிட்ட Big Mac லஞ்ச் மீட்டிங் விரும்பும் அய்யங்கார் அசைவன்.
டேட்டிங் செய்வது பேரிச்சம்பழம் விற்பவன் கற்க வேண்டியது என்றிருந்தவன் அமெரிக்க முதுகலையில் தானும் அதை ஆங்கே அவனைவிடத் துல்லியமாக ஆங்கிலம் பேசும் தமிழ்ப் பெண் வாயிலாகக் கற்று, ஐந்தாறு வருடங்களும் தன் முனைவர் பட்டமளிப்பும் கடந்த ஒரு செவ்வாயில் வசித்த ஊரின் குஜராத்தி இந்தியன் ஸ்டோரில் மீண்டும் சந்தித்துக் கை குலுக்கி 'ஐல் கால் யூ'வில் தொடங்கி தொடுதிரை ஐ-போனில் மறக்காமல் கால்-செய்து 'ஐ-கால்'லில் டேட்டிங்கிற்கு தேதி குறித்து, ஐ-டியூனில் இளையராஜா அனுப்பி, ஐந்தாறு மாதங்களில் இருவரது இந்திய வீடுகளின் ஒப்புதலுடன் அமெரிக்காவிலேயே பெண் பார்க்கும் படலத்தை அரங்கேற்றி, முதலிரவில் 'ஐ லவ் யூ'வில் குழைந்து இதுநாள்வரை இல்லறத்தில் இழைந்து மகிழ்ந்திருக்கும் வேதவல்லியின் மணாளன். இதுவரை குழந்தை இல்லாததற்கு அவர்களிருவருமே காரணம்.

அறிவுஜீவிகள் திட்டமிடுவதில் கில்லாடிகள். புற உதவியின்றி அத்திட்டங்களை உகந்த செயல்களாக்கி வெற்றிகாண முடியாதவர்கள். செயல்திறனில் சிந்தனாவாதிகள் சந்தேகத்திற்குரியவர்கள். என்றோ கண்ட தனியொரு மகத்தான சிற்பியின் மகோன்னதமான மனப்பெருக்கில் கருட பார்வையில் குடையப்பட்டு ஆயிரக்கணக்கான செயல் திறனாளிகளால் உருவாக்கப்பட்ட எல்லோரா கோயிலில் தொடங்கி சமீபத்தில் கண்ட பதினான்காம் நூற்றாண்டுப் பாதிரி ஓவியனின் திரை வாழ்க்கை 'ஆண்ட்ரே ருபலேவ்' உட்படக் கலையாக்கங்கள் அனைத்தும் இதைத்தானே மீண்டும் வலியுறுத்திக்

கொண்டிருக்கின்றன.
அமெரிக்க அரசாங்கம் மெச்சும் தன் விஞ்ஞானி வேலையில் அவன் வகுத்த சிக்கலான திட்டங்களை அவனாலேயே வெற்றிகரமாகச் செயல்படுத்திவிட முடிகின்ற திறனை வியந்து கொள்கையிலேயே மனத்தில் உறுத்தும். செயல்திறன் மிகுவதனாலேயே அவன் அறிவுஜீவி இல்லை என்பது நிதர்சனமோ? அறிவுஜீவி இல்லை என்கையில் தன் திட்டங்களும் அற்பமானவையோ. சென்ற வாரம் அமெரிக்காவில் இருந்தவன் இன்று ஸ்ரீரங்கத்தில் தனியே ரேஷ்மாவை சந்திக்க நினைத்து அதில் வெற்றியும் கண்டுவிட்ட இந்தத் திட்டத்தைப் போல...

எத்திசையிலிருந்தும் இளமையை எவ்வேடமிட்டும் ஆகர்ஷிக்க ஏங்கும் இளங்கலை விடலையைப் போல இன்றும் நான் தான் அறிவுஜீவியாய் நடிக்கிறேனா? மெய்யில் நான் குடும்பங்களின் மகிழ்ச்சி பற்றிச் சொன்னது அறிவுஜீவி கருத்தா? வீட்டுக்கு வீடு வாசப்படி என்பதின் மீள்சிந்தையன்றோ அது...
சாய்ந்து பக்கவாட்டில் பார்வையைக் கோணினான்.

ரேஷ்மா புதிதாகத் தோன்றியிருந்த மாம்பழச்சாலை சிக்னலில் வலப்புறம் திருப்பி சென்னை புறவழிச் சாலையில் எதிர்ப்படும் கனரகப் போக்குவரத்தைக் கொந்திக் கிளறாமல் காரை காவிரிப் பாலம் ஏற்றுவதில் கவனத்தைத் திருப்பியிருந்தாள்.

புடவையில்தான் எத்தனை பிரமிக்கவைக்கிறாள். நீல நிறம். எனக்குப் பிடிக்கும் என்று ஞாபகமாய்த் தேடிப்பிடித்திருக்கிறாள். மேட்சிங் ப்ளவுஸ். கொசுவ மடிப்புகள் நேர்த்தியாய்... ரிவீலிங் என்றில்லை. அவ்வாறு செய்தால் எனக்கும் பிடிக்காது என்பது ரேஷ்மாவிற்கும் தெரியும். மன்னியிடம் கல்யாணமான புதிதில் அண்ணனின் அங்கமவள் என்கிற உரிமையில் நேரிடையாகச் சுட்டியபோது சிரித்துவிட்டாள்.

‘ரங்கா... நீ சொல்றபடி இந்திராகாந்திதான் கட்டிண்டிருந்தா. இன்னிக்கிலாம் நாலு கெஜம் போதுங்கறா. எனக்கு வெயிஸ்ட் வெளிப்படறதுல தப்பில்ல. நாசூக்கா இருக்கணும். எனிவே ஒங்கண்ணனுக்குப் பிடிச்ச மாதிரி கட்டிக்கறேன்...’

அக்கௌண்டென்ஸி அண்ணன் அவளது சொந்தப் புடவைக் கடையில் கணக்குப்பண்ணிய மன்னி வேறு எப்படிச் சொல்லுவாள். ‘ஒனக்கு வேண்டியத நோக்கு வரப்போறவகிட்ட சொல்லு. எங்க வேணாலும் கட்டிப்பா, ஒன்னயும் சேத்து...’ கண்ணடித்துச் சங்கோஜமின்றிப் பழகும் அழகான மன்னி.

இந்தமுறையும் மெட்ராஸ் வீட்டில் அம்மா தூங்கியதும் தனியே பேச நேரங் கிடைத்ததுமே, அமெரிக்க மாடலில் மைலாப்பூரும் சூடு போட்டுக்கொள்ளத் தொடங்கியுள்ள ‘மாடுலர் கிச்சனின்’ மைக்கா மோடையில் மறுநாள் ஆபிஸிற்கு புளிக்காதிருக்க அண்ணனுக்குத் தனிப்பாத்திரத்தில் தயிர் தோய்த்தபடி எச்சைப் பாத்திரங்களை டிஷ்-வாஷரில் ஏற்றியபடி அவனை வாரினாள். ‘ரெண்டுபேருமே வேலயக் காதலிக்கறத ஒத்தி வெச்சுட்டு ஒருத்தர ஒருத்தர் முன்னாடி மாதிரி சைட் அடிச்சிக்கிங்கோங்கப்பா. வேதா வந்த புதுசுல ‘எத்தன ஒழுங்கா நான் உடுத்திண்டாலும் ரங்கா இருக்கறச்ச ஒதறலா இருக்கும்... பொடவ எப்ப இடுப்புலேந்து நழுவுமோன்னு...’ம்பா. என்ன மெட்டீரியல், இடுப்பு பக்கமா வர்ர ஜரிகைல காட்டன் பட்டி வெச்சுத் தெச்சா... அங்க தையக்காரன் உண்டோ... இப்டி கேட்டுண்டிருக்கச்சயே ‘சர்யான பொடவக்கட புத்தி மன்னி ஒங்களுக்கு. நான் சொல்றது ரங்கா என்னப் பொடவைல பாத்தா என்ன செய்வான்னுட்டு... Get it’னு சிரிப்பா. How romantic-னு நெனச்சுப்பேன். என் கண்ணே பட்டுடுத்தோ... ஒரு வாட்டி தானே தப்பித்து... வயசு இருக்கே... Get going... ஹூம்... போறபோக்கில நான்தான் ஒங்க பேரச் சொல்லி இன்னொன்னப் பெத்துக்கணும் போல...’

ஸ்வீட் மன்னி. அவாளுக்குத் தெரியாது வேதாவை நேர்த்தியாகப் புடவை கட்டிக்கொள்ள வைப்பதின் சவால்கள். இத்தனை வருடங்களில் இப்போதுதான் அவள் இடையில் மடிப்புக் கலையாமல் நின்று வரவேற்கக் கற்றிருக்கிறது.
‘...நீ இன்னும் நேர்த்தியா உடுத்திக்கலாங்கறத நீயே ஏத்துப்ப. உனக்குப் பிடிக்கும், சுகங்கறதுக்காக ஆபீஸுக்கு இதே சுடிதார தொம்பாரேன்னா போட்டுண்டு போற? அங்க அமெரிக்காக்கு ஏத்த உடைய அவா மாதிரியே உடுத்திக்கத் தயங்கலியே நீ. பிறர் கண்களுக்குத்தான் உடுத்துறோம். அட்லீஸ்ட் நமக்குள்ள, நீ எனக்குப் பிடிச்சா மாதிரி, நான் உனக்குப் பிடிச்சா மாதிரி, ஓகே... உனக்குப் பழகின உடையும் உடுத்தும் விதமும் மட்டுமே சிறப்பானதுனு தொங்கக்கூடாது. நீ மெச்சற சார்லட் ப்ராண்டேயே ஜேன் அயர் வழியாச் சொல்லிருக்காளே: பழக்கவழக்கம் ஒழுக்க விழுமியம் ஆகாது. சுயச் சீராட்டல் மதம் அல்ல...’

எல்ஸெவியர் பதிப்பகத்தின் தொகுப்புத்துறை அலுவலில் பொருளீட்டியவாறு தனக்குப் பிடித்த ஆங்கில இலக்கியத்தில் முனைவர் பட்டம் பெற ஆயத்தப்பட்டிருக்கும் வேதவல்லியை புடவை உடுத்தச் சம்மதிக்கவைக்கத் தேவையிருந்த உழைப்பையும் ஆங்கிலப் பேச்சையும் மன்னி அறியமாட்டாள்.

எனிவே, ரேஷ்மாவிடம் அந்தச் சங்கடங்கள் இல்லை. Flirting is a woman’s trade, one must keep in practice என்று அதே ஜேன் அயரிடம் தன்னை அறியாமல் பாடம் பயின்றவள். சவால் நம் பக்கமே திரும்பிவிடும். ஆண் சமாளிக்கத் திணறும் சவால். கச்சித மாய், காஸ்ட்லியாய், கேஷுவலாய், தேகத்தின் வளைவு களைச் சந்தித்த சிலிர்ப்பில் எக்கச்சக்க முடிச்சுகளாய் இடையில் குவிந்து நாணிக்கோணாமல், கஞ்சி குடித்த விறைப்பில் கண்ட இடங்களில் துணுக்குற்றுப் பம்மாமல், அலங்காரம் என் அழகிற்கு உகந்ததே என்கிற திடத்தில், இது ரங்காவுக்கு என்ற சிட்டிகை அசிரத்தையுடன் இன்றும் அலங்கரித்துள்ளாள்.

பாலம் ஏறியதும் தொடங்கினான். “ஸ்பெஷலா புரிஞ்சிக்க என்ன இருக்கு ரேஷ். உயிருடன் இருப்பவர்கள் அனைவரும் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள் தானே? வாழ்க்கையின் சாராம்சங்களைக் கலைகளில் இங்கு எழுத்தில் விவாதிப்பதைப் புரிந்துகொள்ள முடியாமலா? இல்லை முயலாமலா?”

“எல்லாருக்கும் ஒன்னோட விஞ்ஞானி புத்தி இருக்காது ரங்கா. தேவையுமில்லை.” வெடுக்கினாள். இவனைப் பேச விட்டால் ஜெயித்துவிடுவான். மனத்தினுள் புன்னகைத்துக் கொண்டாள். மாறவேயில்ல, சுத்திச் சுத்தி இப்பதான் நான் நெனச்சதுக்கே வர்றானோ. நேத்திக்கு கட்டிப்பிடிக்க நெருங்கினதுமே சூடாயிட்டான். காதெல்லாம் சிவந்து. ஸ்வீட் இடியட்...

“மகிழ்ச்சியைப் புரிந்துகொள்ள விஞ்ஞானியா எதுக்கு இருக்கணும் ரேஷ்... இது ஜஸ்ட்...”

“ஒவ்வொருத்தருக்கு ஒவ்வொரு மாதிரிப் புரியும் இல்லையா?”

“அதனால்தானோ மகிழ்ச்சியின்மையைப் பலவகைகளில் உருவாக்கிக்கொள்கிறோம்? அர்ச்சாவதாரங்கள் போல...”

காவிரிப் பாலம் காரின் அடியில் விரைந்து பின்னேகியது. எண்பதுகளின் இறுதியில் புதிதாகக் கட்டிமுடித்த அன்று முகப்பில் விரிகோணத்தில் வாழைமரத் தோரணங்களுடன் ஜானவாச ஊர்வல வேகத்தில் வெள்ளோட்டம் சென்ற டி.எஸ்.டி. (டி.எஸ்.டி. - திருச்சி ஸ்ரீரங்கம் டிரான்ஸ்போர்ட்) பேருந்தில் ரங்கா சிறுவனாய்ப் பயணம் செய்திருக்கிறான். தொண்ணூறுகளின் தொடக்கத்தில் கீழே பெருக்கெடுத்த காவிரியைக் கண்டுகொள்ள கவனமின்றி அதே

பாலத்தின் மீது அதே டி.எஸ்.டி. பஸ்ஸினுள் காவிரிக் காற்றில் அவன் முகத்தினருகே அலையும் ரேஷ்மாவின் கூந்தல்காவிரி வியாபிக்கத் தொடங்கி இருந்தது.

“லவ் பண்றதச் சொல்றயா?”

எண்பதுகளில் பிறந்த புதிய காவிரிப் பாலம் முப்பது வய தாகிய இன்றும் அதனைவிட வயதாகி அதன்மீது விரையும் இருவரின் அதனைவிட இளமையான காதலைத் தாங்கியவாறு அதிர்ந்தது.

“கல்யாணம் பண்ணிக்கறதையும்.”

“காதல் திருமணங்களினால் மகிழ்ச்சியின்மை ஏற்படலாம் என்கிறாயா?” ஆங்கிலத்தில் வினவினாள்.

“கல்யாணத்திற்குப் பிறகு செய்ற காதல்னால...”

பாலத்தினடியில் அனைத்திற்கும் மூத்தவளாய் அகண்டு விரிந்த காவிரியவள் குழந்தையெனத் தவழ்ந்திருந்தாள்.

அண்ணன்தான் எத்தனை சாமர்த்தியம். நான் சொதப்பிய எதிலும் அவன் சோடை போனதில்லை. பள்ளியிலேயே சயன்ஸ் வராததை உணர்ந்து அக்கௌண்டன்ஸி எடுத்துக்கொண்டான். அறிவியல் பொறியியல் என்றெல்லாம் கஜகர்ணம் போடாமல் பிகாம் படித்து அப்பா தன் சீனியர் ஆடிட்டர் வேலை வழியே போவதற்குள் தான் மெட்ராஸ் ஷேர் மார்கெட்டில் வேலை பிடித்துத் துரிதமாய் ICWA, CA இரண்டையுமே ஒரே அமர்வில் முடித்து, அப்பா ஓய்வுபெறும் முன்னர் மைலாப்பூர் லஸ் உள்ளே தான் வீடு வாங்கி, என்னை அமெரிக்காவிடம் இழந்த அவர்களின் ஏமாற்றத்தைத் தன் புது வீட்டில் போக்கி, வரன் பார்க்கத் தொடங்கும் எண்ணத்தை அவர்கள் கொள்ளும் தினத்திற்கு முதல்நாள் மாலை மன்னியைப் பட்டுப்புடவையில் கூட்டிவந்து அம்மா காலில் விழச் செய்து, ‘மத்யான வெய்யில்ல ஸீஏ அப்ரெண்டிஸ் ப்ராஜெக்ட்டுல நான் கடகடயா ஏறி எறங்கறப்போ இவதாம்மா ஒருநா இவ கடைலயே நிறுத்தி வெச்சு இத்தன டயர்டா இருக்கீங்களே, தண்ணி குடிங்க... வீட்டுல ஆற வெச்சதுதான்... சாப்டாம ஓடினா ஒடம்பு வீணாயிடும், லஞ்ச் நூடுல்ஸ், வெங்காயம் கெடயாது, ஐ கேன் ஷேர் வித் யூ... அப்டீன்னா. என்ன நல்லாப் பாத்துக்கதானே வரன் தேடறீங்க. இவ ஏற்கெனவே என்னப் பாத்துக்கறாளே. ஒங்களுக்கேத்த வரங் கெடச்சாமாதிரி தானே...’ தான் சொதப்பி விடக்கூடிய எதையுமே வாழ்க்கையில் அண்ணன் வேண்டி ஏமாந்ததில்லை.

எனக்கு அமெரிக்காவரை சென்று தலையைச் சுற்றித்தான் சொந்த மூக்கையும் கடந்து சென்ற காதலையும் தொட வாழ்க்கை அனுமதிக்கிறது. அதிகரித்திருந்த ரங்காவின் சுயஇரக்கத்தை நிகழின் நிலைகொள்ளாமைக்கு இட்டுவந்தது அருகில் குரல்.

“இப்ப எதுக்கு இதயெல்லாம் சொல்றடா? எங்கிட்ட என்ன எதிர்பார்க்கற?” ரேஷ்மாவின் மூக்கு துடித்தது. அவ ளுக்கும் நினைத்துப்பார்க்க ஒரு கதை இருக்குமல்லவா.

கேட்டேவிட்டேன். Phew... It’s out in the open. பதிலச் சொல்லிடு ரங்கா. உன் வாயால கேட்டுடறேன். இப்பவும் முன்ன மாதிரி சொதப்பிட வேண்டாமே...

“காதல்... அதன் வெளிப்பாடுகள்... அதனுடைய அனைத்துப் பரிமாணங்களிலும்...”

இப்ப பாத்து இங்லீஷ்ல பூடகப் பேச்சு. நேர பாக்கறப்ப யாச்சும் நேரடியாப் பேசித் தொலையேன்டா. சேட்லயே பர வால்ல, கனவுகள் வரைக்கும்... “அது என்னிக்கும் மனசுல உண்டு ரங்கா. இப்ப நமக்கு வெவ்வேறு குடும்பங்கள் இருக்கு. இல்லையா?” என்னதான் செய்யச் சொல்றான்? சொன்னா செஞ்சுருவேனா?

“அதை நானும் மறுக்கவில்லை. மறக்கவில்லை.”

“என்ன செய்யமுடியுங்கறே? நீ சொன்னத ஏத்துக்கணும்னா நான் அபியை விட்டு வரணும். க்ளீன் ப்ரேக். நீயும் வேதாவை விட்டுறணும். முடியுமா?”

“எதுக்கு அவங்களை விடணும். They deserve better.”

“அதான் சொல்றேன். வேதா இல்லாம இப்பவும் தனியா நீ இருந்திருந்தா விஷயமே வேற.”

“என்ன செஞ்சிருப்ப?” ஆச்சர்யம் அவன் புருவங்களை போட்டோவுக்கு போஸ் கொடுப்பதைப்போல உயர்த்தியது.

“உன்னை ஸெடியூஸ் செய்யத் தயங்கிருக்க மாட்டேன். வேற எவகிட்டயாவது போறதுக்குள்ள நானே அமுக்கிப் புடிச்சுருப்பேன்.” நான் அபியோட இருந்திருந்தாலுமா? இல்ல, சாட்சியா ஒண்ணு பொறந்திருக்கலைனாவா? நானே எதுக்கு எல்லாத்துக்கும் பதில் சொல்லிக்கணும். இவனுந்தானே கொழப்பறான். இவன்தானே இப்ப

இருக்கற என்னோட நெலமை எல்லாத்துக்கும் காரணம். புரிஞ்சிட்டு வழியக் கண்டுபிடிக்கட்டும்.

“வேற யார் கிட்டயும் இப்பவும் போகலை.”

“வேதா...?” வேதவல்லி. அழகான பேர். கேட்டவொடனேயே நெனச்சேன். என்ன சொல்லி வெச்சுருக்கானோ... இந் நேரம் நிச்சயமா அவ என்ன bitch-னுதான் நெனச்சுருப்பா. So what? அபி மட்டும் கண்ணகி பட்டமா கொடுக்கப்போறார்...

“அவ என்னோட இருக்கறவ ரேஷ்மா. நான் உங்கிட்ட வந்துருக்கேன்.”

“குழப்பாத டியர். இந்த ரூட்ல போனா என்னன்னு தெரியும்ல?”

“இப்டியே போனா கரூர்...”

ஷிட். நா என்ன கேக்கறேன் இவன்...

“இந்தப் பழக்கம் ஒன்ன விட்டுப் போவேயில்லயே. சீரியஸாப் பேசறச்ச ஜோக் அடிக்கறது.” ரேஷ்மாவின் கன்னக் கதுப்பில் சிவப்பு ஜரிகையிட்டது.

“தேங்ஸ்...”

“பாராட்டலை. பெரிசா கையத் தூக்கிட்டு வந்துட்டான்... குலுக்க. கெட் சீரியஸ்.”

அபியும் இதையேதான் செய்வாரு. சை. வெறுப்பக் கிளப்பறதுல மன்னங்க ரெண்டுபேருமே. ரெண்டுமே ஒண்ணுதானோ, வயசு வித்தியாசத்தத் தவிர... அபி இஸ் ஸாஃப்டர். ஆனா த்ரில் ரங்காவோடதான்...

வளையலற்ற ஹாட்டீன் வடிவத் தங்கமுலாம் ஸ்விஸ்-வாட்ச் கட்டிய கையின் நிஜ வயதைக் காட்டிக் கொடுத்துவிடும் நகமை பூசிய விரல்களினால் குலுக்க நீட்டிய ரங்காவின் கை விரல்களைப் புறந்தள்ளும் சாக்கில் பற்றியபடி, வலக்கையினால் கல்லூரி வருடங்களில் அவர்கள் வீட்டிலிருந்த பழைய தொலைபேசி வகையின் டயலைச் சுழற்றுவது போல ஸ்டியரிங்கைச் சுழற்றிப் பழைய கரூர் புறவழிச் சாலையை விட்டுப் பழைய கொஹினூர் தியேட்டர் இருந்த தில்லைநகர் போகும் பரிச்சய மற்ற புதிய மேம்பாலப் பாதையில் திருப்பினாள்.

இறுக்கப் பற்றிவிட்டதாய் உணர்ந்த ரங்காவின் விரல்களிலிருந்து மெல்ல தன் விரல்களைப் பிரித்து... மூக்கைச் சரி செய்யும் சாக்கில் முகர்ந்தாள். லேசான குழந்தை வாசம் ரங்காவிடம் இன்றும் மிச்சமிருந்தது. அகமகிழ்வு அவள் முகத்தில் ததும்பியது.
கடைக்கண்ணில் தீவிரமாய் யோசிக்கையில் அன்று ஈர்த்த அதே ஒற்றை நெற்றிச்சுருக்கத்துடன் இன்றும் உர் என்று தெரிந்த ரங்காவைப் பொறுக்கமாட்டாமல் சீண்டினாள். “சொல்லுடா... ஜோக் அடிச்சுட்டு என்ன சீரியஸாயிட்ட... அப்ப கேட்டியே குடும்பம் மகிழ்ச்சின்னு வரி... எந்த நாவல்...”
காரின் சீற்றம் ரேஷ்மாவின் குரலில் இல்லை. ஏறும் காலை வெயிலின் தெளிவு ரங்காவின் மனத்தில் இல்லை.

மரணத்தில் முளைத்த காதல். நல்ல தலைப்போ? சே... வாராந்திரித் தொடர்கதைத் தலைப்பைப் போல... இலக்கியச் சுவை கோரும் உழைப்பை வழங்காச் சராசரி வாசகர்களுக்காக நாமே நம் திறன் தாழ்த்தி வகுத்துக்கொண்ட எழுத்தாய் ஒவ்வொரு அத்தியாயத்தின் முடிவிலும் கொக்கி வைத்து, அவ்வாசகர்கள் தினவாழ்வில் கௌரவம் களையாமல் தங்கள் வக்கிரங்களை மனத்தினுள்ளே விகசித்துத் திணறுவதற்கென்றே வட்டுடைகளின் கொக்கிகள் அவிழ்த்து...

இங்கு நிகழ்வதும் தொடர்கதை தானே... கதையில்லை. நிஜம். தொடர்நிஜம். மரணத்தின் அதிர்ச்சியைப் பகிர என்று தொடங்கி சந்தடி சாக்கில் பழைய காதலைப் புதுப்பித்துக் கொண்டு... நான் மட்டுமில்லையே, இருவருந்தானே.

புதுப்பிக் கவில்லை. கல்லூரியில் தொடங்கியதை மனம் மறக்கவில்லை. இன்று விட்ட இடத்திலிருந்து புதிதாய்த் தொடர விரும்புகிறது.

“ஸாரி, எந்த எடத்துல விட்டேன் ரேஷ்?”

“விட்டது கிட்டத்தட்ட இருபது வருஷத்துக்கு முன்னாடி பா... இப்ப ஸெகண்ட் கமிங்... எங்க வேணா தொடங்கு...” ஓப்பன் இன்விட்டேஷனோ. ஸோ? பாப்பமே என்ன செய்வான்னு...

காரினுள் கண்கள் நேற்றைய காதலை இன்று தேடின. கார் நேற்றைய கோயிலை இன்றும் நாடியது. காதல் தொலைந்த தெங்கோ... கோயில்களில்தானே என்றும் வாழ்கிறது.

# 2

அமெரிக்கா. இரண்டு மாதங்கள் முன்னால்.

நித்யகல்யாணிப் பூவை எங்கு காண்கையிலும் ரேஷ்மாவுடனான நிறைவேறாக் காதல் நினைவிற்கு வரும்.

விங்கா ரோஸியா என்று விநோதமான ஆங்கிலப் பெயரில் வெளிர் ரோஸ் நிற இதழ்கள் விரித்த நித்யகல்யாணி. உயிர்ப் பெண்டிர் சூடாப் பூ. தெய்வத்தைத் தீண்டாப் பூ. அங்கு அதிகம் முளைப்பதால் இடுகாட்டுப்பூ என்றறியப்பட்டு மறுக்க வழியின்றி மரணத்தில் மனிதன் சூடும் பூ.

ரேஷ்மா. மரணம் மீட்டெடுத்துள்ள மனத்தின் ரணம்.

எவற்றை மட்டுமே காணவேண்டும் என்பது காண்கின்ற வரையில் தெரிந்திருப்பதில்லையன்றோ. கண்டிருக்க வேண்டாம் என்பது புரிவதற்குள் கண்டதையும் கண்டு களிப்புற்று மனம் கன்னி கழிந்துவிடுகின்றதன்றோ. கண்டவற்றில் அதன் நியூரான் கூடுகளில் நினைவுகளாய்த் தங்குவது எவை என்பதற்கான காரணிகளும் காலத்தே கரைந்துவிடுகின்றதன்றோ. நினைவு களின் மேற்பூச்சுகள் உதிர்ந்துவிட்டபோதிலும் மனத்தே ஒடுங்கியுறைந்து விட்ட சில காட்சிகள் என்றுமழியா அஸ்திவாரங்களாய்க் காத்திருப்பதெதற்கென்றுமறியமலாகிவிடுகின்ற தன்றோ. பின்னொரு நாளில் நிகழ்பொறியொன்று நியூரான்களில் ஏற்றிய மின்னொளியில் நொடிப்பொழுதில் அஸ்திவாரம் தன்னுள்ளிருந்தே தனக்கான மின்னருவக் கோட்டையைத் தனியறையில் தக்க வைத்திருந்த தன்னிச்சைக் காட்சியைத் தட்டியெழுப்பியும் விடுகின்றதன்றோ.

காவிரிக்கரையில் அன்று அவளைக் கிடத்தி முத்தமிட்ட நித்யகல்யாணிப் படுகை. இடுகாட்டுப்பூ ஏன் நதிக்கரையில் செழித்திருந்ததோ, அன்று ரேஷ்மா அதனூடே மோனத்தில் கிடந்த கோலம் மட்டும் என்றோ வெந்தணலில் வாட்டி வைணவ ஆச்சார்யன் தோள்களில் பொறித்த சமாஸ்ரயண சங்கு சக்ரம் போல அவன் மனத்தில் பதிந்துவிட்டது. மரணம், நித்யகல்யாணி என்றால் மூன்றாவதாக ரேஷ்மா என்றே மனம் இன்றும் தன்னிச்சையாக இட்டு நிரப்பிக் கொள்கிறது.

கடந்த பதினைந்து வருடங்களுக்கும் மேலாக அமெரிக்கா வில் நித்யகல்யாணியை நான் கண்டதில்லை. எதிர்பாராத மரணம் ஒன்று அந்தப் பூவை நினைவூட்டியது. அப்பூவிலிருந்து வெகுதொலைவில் இல்லை ரேஷ்மா, என் மனத்தில். சுமார் இருபது வருடங்களுக்கு முன்னர். கடைசியாகப் பதினைந்து வருடங்களுக்கும் மேலாவது ஆகியிருக்கும்... அநாமிகாவின் தோழி என்றில்லை, எங்கள் இருவருக்கும் அநாமிகாவைத் தெரியும். கல்லூரிப் பழக்கம். அநாமிகாவுடன் நல்ல பழக்கம். ரேஷ்மா... கெட்ட பழக்கம்?

விழித்திருந்த ரங்கா படுக்கையிலிருந்து எழுந்து கொண்டான். எதிர்பார்க்கும் மரணம் உண்டா? ஹாலிவுட் pot-boiler-களில் பையிலிருந்து காதலி போட்டோவை எடுத்துக் காட்டியவன் நிச்சயம் அடுத்த காட்சியில் மரணமடைவான். எதிர்பார்க்கலாம். தரையிறங்கினால், டெர்மினல் கான்சர் ஆட்கொண்டவரிடம் எதிர்பார்க்கலாம். என் வயதொத்த அநாமிகாவிடம் அதை எதிர்பார்க்கவில்லை. அமெரிக்காவில் நடத்தப்பட்ட ரகளையான எங்கள் இந்திய இளங்கலைப் பொறியியல் கல்லூரி ரியூனியனில் சென்ற வாரம் சந்தித்தபோது கலகலத்தவளினுள் கான்சர் குடிபுகுந்துள்ளது என்றும் தான் எதிர்பார்க்கவில்லை. மகிழ்ச்சியான பொழுதுகளில் மரணத்தை எதிர்பார்க்க பாண்டுவைப் போல் வரமா பெற்றுள்ளேன்?

தனிமனிதத் தவிப்பைத் தன்னலம் பேணித் தணிக்க விழையும் ஒழிச்சலில்லா அமெரிக்கச் சுதந்திர வாழ்க்கையில் ஒருநாள் காவிரிக்கரையோர நித்யகல்யாணி நினைவில் வருவதற்கு அநாமிகாவிற்கு வந்திருந்த கான்சர் காரணம். சந்தேகமில்லை. கேன்சரால் இந்தியத் தோழி போய்விட்டாள் என்று காலையில் அலுவலில் மின்னஞ்சலில் அறிந்ததுமே அதிர்ச்சியைக் குலைக்கத் தொடுகோடாய் எதையோ சிந்திக்க விழைந்து மெட்டீரியல் சயன்ஸ் விஞ்ஞானி தொழில் புத்தி கேன்சருக்கு இந்திய மருத்துவம் என்று கீமோதெரபியில் பயன்படும் வின்க்ரிஸ்டைன், வினோபிளாஸ்டைன் போன்ற ரசாயனக் கலவைகளை யோசித்தது. அவை பிரித்தெடுக்கப்படுவது இந்தியப் பூவிலிருந்து. நித்யகல்யாணி. இடுகாட்டுப் பூ. மரணத்திலிருந்து மனிதனைக் காப்பதற்கு அவன் மரணத்தை அலங்கரிக்கும் பூவிலிருந்தே மருந்து. நித்யகல்யாணி இட்டுச் சென்றது ரேஷ்மாவிடம்.

அநாமிகா, நித்யகல்யாணி என்பவையெல்லாம் நிகழ் உலகின் சுட்டிகள்.

காரணம் என்றால் கடந்தகாலக் காட்சியை நினைவில் நிறுத்துவதற்கு அவசியமான டோபமைன் சுரத்தல் இன்று அதிகரித்துள்ளது எனும் அறிவியல் விளக்கம் போதுமானதே. ஆனால் சில மணி நேரங்களாய் உள்வாய் உலர்ந்து சுற்றம் சுருங்க ரேஷ்மாவை இன்று நினைப்பதற்குக் காரணம் அந்த நிகழுலகச் சுட்டிகளின் நினைவுலகத் தோற்றுவாய். நட்பையும் தாண்டியது. புனிதங்களற்ற வெளியில் சஞ்சரிப்பது.

காதல்.

அச்சொல்லாய் காரணி உருவெடுத்ததுமே குற்றவுணர்வு நெஞ்சைப் பிசைந்து எச்சில் விழுங்கி உள்வாயை ஈரப்படுத்தியது. அநாமிகா... அய்யோ பாவம். அவள் பிரிவை வருந்துகையில் மனம் காதலால் கிளர்கின்றதே. சென்ற வாரம் கலந்துகொண்ட ரியூனியன் நிகழ்ச்சியே அநாமிகா திட்டமிட்டிருந்த இப்பிறவியின் கடைசி மகிழ்ச்சி என்பதை இன்று மின்னஞ்சல் வழியே அறிகையில் ரங்காவின் மனமும் தடுமாறவே செய்தது. ரேஷ்மாவிற்குத் தெரியுமா... அநாமிகாவின் மரணம் பற்றி. மரணம் காதலை மீட்டெடுப்பதா? தெளிவுபெற முதலில் மரணத்தை மனத்திலிருந்து ஒதுக்க வேண்டும். அதற்கு... எழுத வேண்டும்.

மரணத்தின் சோக வீரியத்தையும் அது அன்றளவில் மனத்தில் ஏற்படுத்தும் இழப்பெனும் பெருந்துளையையும் உணர்வதற்குச் சிலருக்கு மரணத்தை நேரில் பார்க்க வேண்டி யிருக்குமாம். ரங்காவுக்கு அவசியமிருந்ததில்லை. அமெரிக்கா வந்த சில மாதங்களில் ஊரில் பாட்டி போய்விட்டிருந்தாள். ஆய்வுப் படிப்பின் நிர்பந்தங்களினூடே அவளைப் பார்க்க முடியா இறுதி நாட்களில் வந்திராத உறக்கம் மறைத்த அழுகையா? அதை எழுதி வைத்துக் கிழித்தெறிந்து வாங்கி விடாத ஆய்வுப் பட்டமா?

மேலும் மின்னஞ்சல் வந்த தினம் புதிய பயோ-பிளாஸ்டிக் உருவாக்குவது தொடர்பாய் மூன்று மாதங்களாய் தயார் செய்து வந்திருந்த அலுவல் பிராஜெக்ட் ரிவ்யூ மீட்டிங். ஒத்திப் போட்டால் அவ்வருடம் ஆய்வு பட்ஜெட் பணால். உயிருடன் அநாமிகாவாய் இருந்தவளைப் பார்க்கப் போகவில்லை.

மாலை கிராஃபீனுக்குப் பதில் அடுத்த பிரத்யேக இணைப்புச் சிக்கல்கள் மிக்க ரசயானக் கூட்டுப் பொருளாய் பாலிமர் சங்கிலி எவற்றை உபயோகித்தால் வர்த்தகப் போட்டிகளைத் தடுப்பதற்கான பேடண்ட் யுத்தத்தை, பணி செய்யும் அரசாங்கச் சோதனைச்சாலைக்குச் சாதகமாய்

சில வருடங்கள் ஜெயித்திருக்கலாம் என்கிற அன்றாட அறிவியல் அவசியங்களில் ஊதியத்திற்காகக் கட்டிப்போட்டுக் குத்தகைக்கு விட்டிருந்த மனத்தை ஒருவழியாகப் பெயர்த்துக்கொண்டு வீடு வந்து படுக்கையறையில் நினைவுகளில் தேம்பினான். பின்னிரவின் தனிமை தந்த தடுமாற்றம் மனத்தினை சஞ்சல வானில் சிறகுகள் விரித்து இப்போது ரேஷ்மாவிடம் இட்டுச் சென்றுவிட்டது.

விழித்தெழுந்திருந்தவன் விசனப்பட்டான்.

ரேஷ்மாவுடனான அக்காதல் கோட்டையைப் பதினைந்து வருடங்கள் முன்பு அவனே சரித்துவிட்டாலும், உறவு வெளியினில் உற்ற அன்பென்றும் உறவிலா நட்பென்றும் உறங்காக் காமமென்றும் ஊரறியாக் காதலென்றும் அன்று கலந்து கட்டிய அஸ்திவாரத்தை அகழ்ந்துகாட்ட எத்தனிக்கிறது பொது நண்பியின் இன்றைய மரணம்.

யோசிக்காதே. எழுது.

***

கல்லூரியில் உடன் படித்தவள் நேற்று மதியம் இறந்து விட்டாள். பத்து வருடம் முன்னர் கீமோவில் போயேபோச்சு என்றிருந்த கான்சர் கடந்த மாதங்களில் ரிலாப்ஸ். கொண்டு போயேபோச்சு.

கிட்டத்தட்ட இருபது வருடம் கழித்து, சென்ற வாரம் இங்கு அமெரிக்காவில் நடந்த ‘பாச்மேட்ஸ் ரியூனிய’னில் சந்திக்கையிலும் குழந்தைத்தனம் மங்கிடாத அகன்ற விழி களுடன், களையான முகத்துடன் அமைதியாகப் பேசினாள். தெற்றுப்பல் தெரியும் முன் சிரிப்பை மருதாணிக் கையெடுத்துப் பொத்திக்கொண்டாள். தங்க வளையல்கள் பதிலுக்குக் கலகலத்தன. இருபது வருடம் முன்னர் ‘உன் அழகின் ரகசியம் பீம புஷ்டி லேகியம் தானே’ என்று ஏதோ கடலை வறுத்திருப்பேன். சென்ற வாரம் சந்திக்கையில் அவ்வாறே பேசத் தயக்கம். டக்-இன் செய்த முழுக்கை சட்டைப் பேண்டினுள் அல்லவா இருக்கிறேன். தலையை வருடிச் சௌக்கியமா என்று கேட்கவே தோன்றியது. அதையும் செய்யவில்லை.

ஹாய் என்றவளிடம், வாயிலிருந்த பாராட்டை எச்சிலுடன் விழுங்கி, ‘ஹாய்... எங்கிருக்கிறாய் இப்போது? மாரீட்?’ (யெஸ், உனக்கே ஆய்டுத்து, எனக்காகாதா...) ஆண்மையின் திடம் பரிமளிக்கக்

கேள்விகளால் அளவளாவி, நான் இப்போது வசிக்கும் அமெரிக்க ஊரில், சொற்ப மைல்கள் அருகிலேயே இருக்கிறாள் என்றும் தெரிந்துகொண்டேன். ‘எப்டியும் யூஸ் பண்ணமாட்டோம், மறந்த்ருவோம்…’ என்றபடி, மொபைல் எண்கள் பறிமாறிக்கொண்டு அகன்றோம்.

யாயும் ஞாயும் யார் ஆகியரோ என்று அறிவிப்பின்றிக் கூடி, நேசமா, காதலா, களிவெறியா, கழிவிரக்கமா என்று இனம் காண அவகாசமும் எண்ணங்களுமின்றிச் சுற்றித்திரிந்து, படித்து, பஞ்சாய் வெடித்து, சிரித்து, செயலற்று… இளமையின் ஒரு கால கட்டடத்தில் இவ்வகை நண்பர்குழாம் அவற்றின் ரகளைகள், ரச னைகள், ரகசியங்கள், சமுதாயத்தை பொறுப்புகளை தற்காலிக மாய் மறைக்கும் அரணாய்த் தேவைப்படுகிறது. வயதாகி வேலை, குடும்பம், பொறுப்பு என்று உருவாக்கிக் கொண்ட அரண்கள், அந்நட்புகளை மறைத்துவிடுகின்றன. இழப்பின் அதிர்ச்சி யதார்த்த அரண்களைத் தகர்த்தெறிகையிலேயே, மறைக்கப் பட்டது மறக்கப்படவில்லை என்பதை அறிகிறோம். அதுநாள் வரை அன்பிற்கும் உண்டிங்கு அடைக்குந்தாழ்.

அட்லீஸ்ட் ‘லட்சணமாய் இருக்கிறாய், மகிழ்ச்சியாய் இரு’ என்றாவது கௌரவமாய்க் கூறிவிட்டு வந்திருக்கலாம். சென்ற வாரம் முழுவதும் ஒருமுறையேனும் போனிலும் அவளைக் கூப்பிட்டுப் பேசவில்லை. செய்திருந்தால் மீள்பரிச்சயத்தில் அவள் தன் நிலையைச் சொல்லியிருக்கலாம். ஆதரவாய் நானும் பீமபுஷ்டி லேகியம் பற்றி விசாரித்திருப்பேன். வெவ்வேறு காரணங்களால் இருவருக்கும் அவகாசமிருக்கவில்லை. சொற்ப தூரத்தில் வசித்தாலும் அவள் எனக்கு அத்தனை நெருக்கம் இல்லை என்பதில் அத்தனை தெளிவு. உதாசீனம்.

இன்று அவள் வீட்டில் சென்று பேச பயமாக உள்ளது.

கங்குல் வெள்ளம் கடலினும் பெரிதே. இரவு முழுவதும் தனித்தமர்ந்து விழித்திருக்கையில், தராதரமற்ற தகவல்களை, தவப் பயன்களை, தவறவிட்ட தருணங்களை, தன்னிச்சையாய்த் தொகுத்துத் தறிகெட்டுத் தழைக்கிறது மனது. இடையாடும் மௌனங்களில், இமையை மூடினால் பிதுங்கிப் பாதரஸமாய் வெளியேறிவிடும் பரிதவிப்பில் கலைந்த மனத்தில், களையாய் இறந்த நண்பியின் முகம்; உதாசீனமாகிய நட்புடன்.

***

படுக்கையில் அமர்ந்து மடிக்கணினியில் எழுதிக்கொண்டிருந்தவன் கண்களை மூடினான். இடது கண் ஓரமாய் இமைக்குள் உறுத்தல்…

கசக்காமல் இமைகளைக் கொட்டிப் படபடத்ததும் கண் கலங்கிவிட்டதை உணரமுடிந்தது. பின்னிரவு. எரிச்சல். சிவந்துவிட்டிருக்கும்...

பாத்ரூம் கண்ணாடியின் பக்கவாட்டுப் புரையினுள் ஐ டிராப்ஸ் உண்டு. ‘இது ஆயுர்வேதிக்... ஹோமியோபதிதான் ஹம்பக்... இது ஓகே... சிமிட்டாம கம்ப்யூட்டரயே எத்தன நாழி தினம் பாக்கற...’ வேதா அவனை வற்புறுத்தி திருவல்லிக்கேணி சிங்கராச்சாரி தெருவின் ஒரு ஒண்டுக்குடித்தன அழுக்கு வேட்டியிடமிருந்து தருவித்து அமெரிக்க லிஸ்டரின் மவுத் வாஷ், லொரெல் சோப்பு, டைலனால் சர்வரோக நிவாரணிகளுக்கு அருகில் குளியலறை அலமாரியில் தினமும் அவன் சொட்டிக் கொள்ள வைத்திருந்தது. கவனமாய் அவள் தான் தினமும் சொட்டிடுவாள். மூடிக்கொள்ளக் காத்திருந்து சட்டென்று அவன் உதட்டினில் அவள்... அனுமானித்துக் கவ்விக்கொள்வான் கண்களைத் திறவாமலேயே. ‘சீ... போடா... எப்டியும் கண்டுபுடிச்சுடற...’

‘உன் உதட்டோட வாசன காட்டிக்கொடுத்துருதே...’

‘சர்யான அய்யங்கார் மூக்குரா...’

விளக்கைப் போட்டால் வேதா எழுந்துவிடலாம். வெளிச்சமிருந்தால் தூக்கம் வராது அவளுக்கு. ஐ-போனின் டார்ச் விளக்கை ஏற்றிக்கொண்டான். கார்பெட் தரையில் சப்தமின்றி நடக்க எத்தனித்து மரத்திருந்த கால்களில் தன்னிச்சையாய் மூட்டு களில் சொடக்கினான். அப்பா ஆவதற்குள் வயதாகிறது...

சுவர் முழுவதும் மார்பளவில் விரவியிருந்த வாஷ்பேஸின் கண்ணாடியில் முகம் பார்த்தவன்... ‘கார்மேனிச் செங்கண் கதிர் மதியம்போல் முகத்தான்...’ இப்படி ஒருவனை இதே நிலையில் பார்த்துவிட்டுத்தான் எழுதியிருப்பாளோ? மெச்ச ஒரே பெண் கவிஞர். சின்ன வயஸ்லயே போய்ட்டா. அநாமிகா மாதிரி. அந்தக் காலத்துலயே கான்சர் உண்டோ? பிரமிடு கட்டிய காலத்துலயே உண்டுங்கறார் முகர்ஜி... ராஜ நோய் என்பார். என்ன புத்தகம் அது, புலிட்ஸர் கூட வாங்கியதே. வேதாவிடம் காலையில் கேட்க வேண்டும். ஆங்கிலத்தில் எழுதினால்தான் மவுசு. தமிழில் ஆசைக்குத்தான் எழுதலாம். ஆஸ்திக்குக் கூட nope.

என்ன தலைப்பு வைக்கலாம்? கங்குல் வெள்ளம் கடலினும் பெரிதே? படுக்கையில் வந்தமர்ந்தவன் மடிக்கணினியை உயிர்ப்பித்து எழுதியதை

மீள்வாசித்துத் திருத்த... தடுத்துக் கொண்டான். எழுத்தாளப் புத்தியக் காட்றயே...

உண்மையான உணர்வுகளைக் கதையாக்கிவிடவா எழுதினோம். மரணத்தைக் கடந்துவிட முடியாத மனத்திலிருந்து பொங்கியது. அநாமிகா ரேஷ்மாவைப் போல் நெருக்கமானவள் இல்லை. ஆனாலும் அவள் இறப்பில் எழுந்த உணர்வுகள் உண்மையானவையே. சென்ற வாரமும் நினைவில் வைத்திருக்கும் வகையில் அளவளாவிய நண்பிக்கு அவள் மரணத்திலாவது உண்மையாக இருப்போமே. எழுதிய வடிவந்தானே நான் மனத்தில் நினைத்தது. நிஜப் பிரிவை ஆதங்கத்துடன் எழுதியதை பாதிப் புனைவெனக் கருதிக் கட்டுரை வரைந்து காற்புள்ளிகள் வைத்துக் காண்போர் களிக்கும் காட்சிப் பொருளாக்குவதா? இதைத் திருத்திச் செப்பனிட்டுச் சரிசெய்து நேர்த்தியாக்கி வரட்டு வர்த்தக வாக்கியங்களாய் எந்த வாசகனுக்கு விற்க வேண்டிய அவசியம் உள்ளது, என் நாவல்களைப் போல?

இதோ... கண்களில் கசிவது எழுதியதின் நீர்மைதானே. இல்லை ஐ-டிராப்ஸ் மட்டுந்தானா? பிதற்றல் என்றால், பாசாங் கென்றால் அவ்வாறுதான் இருந்துவிட்டுப் போகட்டுமே. மனத்திலிருந்து அவை உண்மையாக வந்திருக்குமெனின், அநாமிகாவுடனான என் நட்பும் பாசாங்குதான் என்பதுதானே என் எழுத்துச் சுட்டும் உண்மை. உண்மையைக் குறிவைப்பது தானே எழுத்து. என்னையே அறிந்துகொள்வதும்தானே எழுத்து. துணிவோடு அவற்றை அடுத்தவனுக்கும் காட்டுவதுதானே இலக்கியம்...

நோ... யாருக்கும் காட்டவேண்டாம். மனத்தின் கண்ணீர் இன்று எழுத்தில் வடிந்துவிட்டது. அதை வெளிக்காட்டி வாசித்தவர்களிடம் நான் பெறும் பாராட்டு, ஒருவகையில் கீழ்மை தான். நண்பியின் மரணத்தில் என் எழுத்து யோசிக்கலாம், வடிகாலாகலாம், ஆனால் புகழை யாசிப்பதா...

நண்பர்களுடன் மட்டும் பகிரலாமா...

இருபது வருடங்களுக்கு முன்னால் இருக்குமா... எப்போது பி.ஈ. படித்தோம்? ஏகப்பட்ட வயசாயிடுத்தோ. அநாமிகாவைப் பற்றிக் கேள்விப்பட்டாலும் அமெரிக்காவிற்கு எதற்கு வரப் போகிறாள் இந்தியாவில் இருக்கும் ரேஷ்மா? வருத்தப்படலாம். என்னிடமிருந்து அறிந்தால் கோபப்படலாம்...
கேள்விப்பட்ட அகால மரணத்தின் அதிர்ச்சியிலிருந்து எழுதியதால்

மனம் விடுபட்டு புத்தியைக் கூர்மையிடக் கட்டளையிடும் வழக்கமான நிலைக்கு வந்துவிட்டதை ரங்கா உணர்ந்துகொண்டான். இனி எழுத ஒன்றுமில்லை. அநாமிகா மனத்திலிருந்தும் போய்விட்டாள். சகாக்களிடம் அனுப்பி விடுவோம்.
ஆனால் ரேஷ்மா? இப்போது மனத்தில் அவள் மட்டுந்தானே... அவளை யாரிடம் அனுப்புவது...

சந்தித்துப் பதினைந்து வருடங்களுக்கு மேல் ஆகியிருந் தாலும் இடக்கைகளில் கருநீல டெகிலா + க்ரான்பெர்ரி காக் டெய்ல் குலுங்காமல் ரீயூனியன் விருந்தில் கைகுலுக்கியபோது சகா ஒருவன் ஞாபகமாய்க் கேட்டதே அது ஒன்றுதானே.

‘Are you still in touch with...’

‘touch with... who?’

‘Come on, you know... ரேஷ்மா?’

‘அமெரிக்காலயே இருக்கற நாம ரியூனியன்னு பல வருஷங் கழிச்சு ஒரு தபா சந்திச்சி மறந்துக்கப்போறோமே... இந்த மாதிரி ‘டச்’சக் கேக்கறயா, இல்ல... ரேஷ்மாவோட இந்த மாதிரி (சகாவின் விரல்களைக் கைவிரல்களால் கோர்த்தபடி) டச்சல இருக்கேனான்னு கேக்கறயா?’

‘டேய்... இந்தச் சத்தாய்ப்பு போலியே இன்னும்...’

‘சொல்லிருக்காரே, தொட்டனைத்தூறும் மணற்கேணி. மாந்தருக்கும் தொட்டு அணைத்து ஊறும் மனற்கேணி.’

‘தொட்டு அணைச்சா எந்தக் கேனயனுக்கும் ஊறுந்தான்... சீரியசாச் சொல்லு... ரேஷ்மாவோட பேசினியா... Is she married?’

‘அவ என்ன ஔவையாரா? நாம கண்டுக்கலைனா கன்னியாவே கிழவியாறுதுக்கு...’

ரேஷ்மாவை ஒருமுகமாய்க் காதலித்த பலரில் ஒருவன் கைகொடுத்துப் பேசிக்கொண்டிருப்பவன். ஞாபகங்களினூடே பேச்சைத் தொடர்ந்திருந்தான் ரங்கா.
‘...ஆறு வருஷம் முன்னாடி இந்தியா ட்ரிப்லேயே கேள்விப்பட்டேன்... ஏதோ பிசினஸ்மேன் போல... பெங்களூரோ எங்கியோ இருக்கா, இருப்பா... அப்றம் எனக்கும் இங்கயே கல்யாணம் ஆயிடுச்சே. ஸோ, அம் நாட் இன் டச். எந்த வகையிலும்...’ குலுக்கப் பிடித்திருந்தவனின்

கையை விடுவித்துக் கொண்டான். ‘Anyway, past is past. நீயுமே இங்கதான இருக்க…’

கறாராய் முடித்து விட்டதாகவே அன்று நினைத்திருந்தான்.

நண்பர்கள் என்று நெருங்கியவர்கள் சொற்பமே. கல்லூரி நாட்களில் அவர்கள் வீக்னெஸ்களை மன்னித்திராத ரங்காவின் வெளிப்படைக் குணத்தினைப் பொறுக்கும் அளவிற்குச் சொரணையற்றவர்களுடனேயே நட்பு நீடித்திருந்தது. நெஞ்சத்தை விட்டுக் கையளவு விலகி வகுந்த அந்த தூரத்திலேயே இன்றும் ரீயூனியனில் பட்டென்ற பேச்சினால் அச் சகாவின் வம்பளப்பை நிறுத்திவிட்டான்.
ஆனால் ரேஷ்மா…

சிறிய வாயுடனான பாட்டிலுக்குள் இருக்கும் பெரிய பொம்மைக் கப்பல் போல மனத்தினுள் இருக்கும் இந்தக் காதலும் ஆச்சர்யமே. இளமை மனத்தினுள் அன்று சிந்தை சுருண்டு நுழைந்திருக்கையில் பொருட்படுத்தவில்லை. இடைப்பட்ட வருடங்களாய் இலக்குகளின் மெய்ப்பிக்கப்பட வேண்டிய அழுத்தங்களில் மடங்கிச் சுருங்கித் தட்டையாகி இருந்த அத்தனை உணர்வுகளும் ஒரு ஆயாச இரவில் அகால மரணத் தின் உராய்வில் குபுக்கென்று முப்பரிமாணம் பெற்றுப் பாய் மரங்கள் கிளர்ந்து பச்சைக்கிளிக் கொடி பறக்கப் பாட்டிலினுள் காதல் கப்பல் பயணத்திற்குத் தயாராகிவிட்டது.

பதினைந்து வருடங்களாய் மேலோட்ட நினைவில் இருந்து பதுக்கி வைத்திருந்தவள். வேதாவிடமும் ஓரிரு முறையே சொல்லியிருக்கிறான். கல்லூரித் தோழிகளில் ஒருத்தி என்கிற வகையில். அண்ணன் இதுவரை வேதாவிடம் போட்டுக் கொடுக்காதது ஆச்சர்யந்தான். மறந்திருப்பானோ. அண்ண னாவது… கிராதகன். தனக்கு வேண்டியதைச் சாதித்துக் கொள்வதில் சூரன். அப்பா பூணூல் என்பதற்கு முன்னர் கோயில் சந்திர புஷ்கரிணியில் கள்ளப்பூணூல் போட்டவனாயிற்றே. அசந்து மறந்தால் சமாஸ்ரயணம் முன்னர் பரண்யாஸம் கண்டிருப்பான். கண்ணாடி அணியும் முன்னர் காதலித்தான். மீசைக்கு ‘மயிர் மை’ அடிக்கும் முன்னர் குழந்தை பெற்றுக் கொண்டு விட்டான். ஒருவகையில் அவனால்தான் இன்றைய என் நிலையும். மன்னி இன்னமும் ரேஷ்மாவைப் பற்றிக் கிளறாதது தான் ஆச்சர்யமே.

எங்கு சென்று தேடுவது அவளை இப்போது? பொதுத் தோழி

அநாமிகாவைப் பற்றி மட்டும் சொல்லிவிட்டு மீண்டும் அவள் ஞாபகம் வைத்திருந்தாலும் நாம் முன்போல் மறந்துவிட வேண்டும் என்றாலும்...

***

மறுநாள் அலுவலில் அவனுக்கு மட்டும் தெரிந்த சகாக்களுள் அநாமிகாவை எவருக்குத் தெரியும் என்று அனுமானித்து ஐ-போன் காண்டாக்ட் பட்டியலைத் துழாவி, அவள் பிரிவைப் பற்றித் தான் எழுதியதை மின்னஞ்சல் செய்தான். மதியத்திற்குள் சிலர் ஒற்றை வரிகளில் வருத்தப்பட்டனர். குறிப்பாக ஒரு சகாவின் மின்னஞ்சலுக்குத் தொடர் பதில்களைத் தொடங்கிக் கொண்டான் ரங்கா. ரேஷ்மாவின் வகுப்புத் தோழன் அவன்.

‘டேய், நமக்கும் உண்டு... அவ்வளவுதான் உலகம். இருப்போம் போவோம்... இருக்கையில் மனத்திற்குப் பிடித் தாற்போல நினைத்தவற்றை முடிந்தவரை செய்துகொண்டு, நாளை என்று ஒத்திப்போடாமல், இன்றே பிடித்ததைச் செய்யத் தொடங்க வேண்டும்... இன்னொரு ரீயூனியனா, ஆர் யூ ஜோகிங்? சும்மா தண்ணி பார்ட்டி கொடுத்துக்க ஏன் இத்தனை பந்தா. அடுத்த வருஷம் பார்க்கலாம்... எனிவே, வேற யாருக்கெல்லாம் சொல்லணும்? அவர்களுக்கும் அனுப்பிவிடுகிறாயா நீயே? ரியூனியனுக்கு வேறு யார் வந்திருந்தார்கள்? நான் அதிக நேரம் இருக்கவில்லை (இது உண்மைதான்). இந்தியாவில் இருப்பவர்களுக்கும் மின்னஞ்சலில் தெரியப்படுத்திவிடு. நானும் அனுப்பும் சுமையைப் பகிர்ந்து கொள்கிறேன், நிச்சயமாய்... அநாமிகாவின் தோழிகள் கல்லூரி தினங்களில் யார் யாரென்று உனக்கு நினைவிருக்கிறதா? அவள் யார்... யெஸ்... ரேஷ்மா... அவளை நினைவிருக்கிறதா உனக்கு? எனக்குக் கிட்டதட்ட மறந்தேவிட்டது. ஆமாம்... அப்போது வருவோம் சேர்ந்து... அவளும் ஸ்ரீரங்கம்தான்... இப்போது எங்கயோ... லாஸ்ட் டச். நாங்களே மெட்ராஸோடு போய்விட்டோம். அங்கே அண்ணன் வீட்டில் இருக்கிறார்கள்... நங்கநல்லூர் வீட்டைப் பூட்டி வைத்திருக்கிறார்கள்... பதினைந்து வருடங்கள் மேன்... ஓ... இருக்கிறதா... மின்னஞ்சலா? லிங்க்ட்-இன் சர்வீஸிலா... இல்லையே. நான் இல்லை. ஃபேஸ்புக் வேண்டாம். துயரமான விஷயம், இதைப் போய் அவள் ‘சுவரில்’ எழுதினால் நம் மக்கள்ஸ் உச் கொட்டி லைக் போடுவார்கள். நிர்பயா ரேப் கேஸுக்கே அதானே ஆச்சு. கேவலத்திற்கு நாமே உடந்தையாக வேண்டாம். வெறுப்புனு இல்லை. இதுக்கு வேண்டாம். சரி நானே இரவு அந்த

லிங்ட்-இன்னில் பார்க்கிறேன்...’

மேற்படி பத்தி ஒரு பத்து நிமிட நேரடி போன்காலில் முடிந்திருக்க வேண்டிய உரையாடல். என் சூழலுக்கும் உலகிற்கும் உன்னைவிட நான் முக்கியமானவன் என்பதைத் தத்தமது வேலைகளில் படு பிஸி என்று காட்டிக்கொள்வதன் மூலமே அடுத்தவருக்குப் புரியவைத்து ஒன்று ஏறி அடிப்பதில் இரண்டு கல்லூரிக் கால ஆண் சகாக்கள் முனைகையில், போன் செய்ய நேரமெப்படி ஒழியும்? ஒற்றைவரிக் கேள்விபதில் மின்னஞ்சல் பரிவர்த்தனைகளில் அரங்கேற, ரேஷ்மாவின் தற்போதைய இணைய இலக்கம் ஒன்றை ரங்கா அறிவதற்குள் வேலை செய்த களைப்பில் அரைநாள் ஓடிப்போயிருந்தது.

கொட்டாவியுடன் அலுவல் லஞ்ச் மீட்டிங்கிற்குத் தயாரானான்.

கொட்டாவி விடுவதே மூளையைக் குளிர்விக்கக் காற்றை உள்ளிழுப்பதற்காக என்று சமீபத்தில் ஆய்வுக் கட்டுரை ஒன்றை வாசித்திருந்தான். பேத்தல். ஆபீஸ் குளிரில் பகலிலேயே கொட்டாவி வருகிறது... குளிர்ந்த மூளையை மேலும் குளிர் விக்கவா? படுக்கையிலும் வருகிறது... இந்நேரம் தூங்கிக் கொண்டிருப்பாள்...

அவளுக்குப் பகலாய் இருக்கும் அமெரிக்க இரவில், வீட்டுக் கணினியில் மிச்ச ரேஷ்மாவை கண்டடைய வேண்டும் என்று எண்ணிக்கொண்டான்.

***

படுக்கையறைக் கதவை க்ரீச்சிடாமல் ஒருக்களிக்கையில் அமெரிக்க இரவின் நியான் ஊடுருவலில் ரங்கா கவனித்தான். ஒரு காலை மடக்கித் தலையணையை அவன் என்று கருதித் தன்னுள் அடக்கியவாறு குப்புறப்படுத்து உறங்கிக்கொண் டிருந்தாள் வேதவல்லி.

அணிந்திருந்த பூப்போட்ட வெளிர்நீல ஹவுஸ்கோட் தொடைக்குமேல் ஏறியிருக்க, மேட்சிங் அரையாடையினுள் அசாத்திய திண்மையாய்... கதவைச் சாத்தினான் ரங்கா.

வீட்டு ஆபீஸ் அறையின் கணினி முன் மீண்டும் அமர்ந்தான். பிரத்யேக டச் பேடைத் தடவுகையில் அருகில் கை பட்டு ஐ-போன் 3:31 AM என்றது. இருபத்தியேழு இஞ்ச் குறுக்கு வெட்டு ‘ரெடினா டிஸ்ப்ளே’ கண்ணை வருத்தாமல் ஒளிர்ந்தது. சமீபத்தில்தான் ஆப்பிள் மகிண்டாஷிற்கு மாறிவிட்டிருந்தான்.

சகாவிடமிருந்து மின்னஞ்சலில் வரப்பெற்றிருந்த ‘லிங்க்ட்-இன்’ வலைப்பக்கத்திற்கு ‘சஃபாரியை’ச் சுண்டினான்.

தொண்டை உலர்ந்திருந்ததாய்க் கருதி எச்சில் விழுங்கினான்.

ரேஷ்மா அவனுக்காகக் தனித்திருக்கவில்லை. பெயரளவில் அபியுடன் இருந்தாள். பெயரைத் தவிர எதையுமே உறுப்பினர் அட்டையும் பிரத்யேக அழைப்பும் இன்றிக் காட்ட மறுத்தாள்.

ஷிட். விட்டுவிடலாமா... இதுக்குன்னு ‘லிங்க்ட் இன்’ என்கிற இந்த இணையச் சமூகவலைக்குள் சிக்க வேண்டுமா? ஏற்கெனவே முகநூல் என்று மூன்று நான்கு மணிநேர மாய மட்டி விரயத்தினுள் முங்கியாயிற்று... வேதா எழுந்து விட்டாளா... அசந்திருந்தாளே... புரண்டிருப்பாளோ... பின்னழகி...

‘உன் அழகு இந்த ரெண்டு முட்டக் கண்களில்னுதான் சொல்லணும், பட்... ஸீரியஸ்லீ...’ முதல் இருட்டில் வேதாவின் பௌர்ணமிகளைப் பரிச்சயப்படுகையில்... பக்கவாட்டில் ‘Love at the time of cholera-வுடன் புரண்டிருந்தவளின் புஜங்களைப் பற்றி வாகாய் அவள் முகத்தருகே பின்புறத்திலிருந்து குனிந்தவாறு புன்னகைத்தான்.

‘But what? Tell me, ரங்கா...’

‘You got a nice inviting butt...’

அவள் அமெரிக்க அண்ணன் வீட்டில் பெண்பார்த்த ‘டேட்’டில் தனியே சந்தித்துப் பேசிக்கொண்டிருக்கையில் தற்செயலாய் அவன் கை முதல்முறை புடவையில் இருந்த அவள் இடையில் பட்டுவிட... ‘உனக்கென்ன தொட்டாலே நலங்கிட்டா மாதிரி இடுப்பு இத்தன செவந்து கன்னிப் போய்டுது? நிஜமான கன்னிதான் போ...’ என்று ரங்கா புன்னகைத்ததும் தலைகுனிந்த அவள் கன்னமும் சிவந்துவிட்டிருந்தது. அவ்வாறான அனுபவத் தின் எதிர்பார்ப்பில் திருமணமான புதிதில் முதல் அந்நியோன்யங்களில் அவனது வெளிப்படைப் பேச்சினால் வேதா கைமூடிய முகத்தில் வெட்கப்படுவாள் என்றே நினைத்தான் ரங்கா.

‘தெரியும்...’ சொல்லிவிட்டு அவனையும் தன் பின்னோடு சேர்த்துக்கொண்டு புரண்டு அவனை வியக்கவைத்தாள் வேதா.

பெண்ணின் மனமே பேராண்மைக்குப் பெருஞ்சவாலன்றோ.

நான்கடிக்கப் போகிறது. எழும்பும் முன்னர் அவள் விரும்பும்

அந்தவாக்கிலேயே அவள் மீதாய் இன்றும்...

எழுந்துபோய் ஒருக்களித்திருந்த படுக்கையறைக் கதவை ஓசைப்படாமல் குமிழ் திருகி முழுவதும் சாத்தினான்.

சமையலறையில் ‘சித்த குனிஞ்சுக்கோங்க’ என்று அமெரிக்க ஆளையே நின்றவாக்கில் அடைக்க முடிந்த குளிரூட்டியில் இருந்து பாட்டிலுடன் வீட்டு ஆபீஸ் அறைக்குள் நுழைந்து கதவைச் சாத்தி, போட்டிருந்த ஸ்வெட் பேண்ட்டை கழற்றி சுழல் நாற்காலியின் முதுகில் மடித்துவிட்டு, உள்ளாடை யுடன் மீண்டும் கணினி முன்னர் அமர்ந்துகொண்டான் ரங்கா.

லிங்க்ட் இன் எனும் இணைய சமூகக் குழுமத்தில் பிரத் யேக உறுப்பினராய்ச் சேர்ந்துகொள்வதில் மும்முரமானான்.

# 3

அமெரிக்கா. ஒரு மாதம் முன்னால்.

நிகழ் சுவாரஸ்யமற்றது. நடந்தவற்றை அசைபோடும் மனவோட்டத்தை நடப்பவற்றின் மீது ஏற்றமுடியாதெனும் நிஜமான நிஜம் நிகழ். அது கலிடாஸ்கோப்பெனக் கற்பனையில் குலுக்கிக் கவர்வதற்கேதுமற்றதாய்க் கடந்து செல்லும் காட்சி. காதலர் கை கோர்த்துக் காலாரச் சஞ்சரிக்கும் கற்பனை வெளிகளற்ற சம்பவக் கோர்வை நிகழ்.

நிகழ் படைப்பூக்கமற்றது. கவிதை வேடமணிந்த சொற் கூழ். மனத்தின் ஆயாச ஓலங்களை, ஆழ்ந்தெடுக்கும் அநிச்சயங்களை ஆண்டாண்டு அனுபவித்திருக்கும் அதிசயங்களைத் தன்னுள் ஏற்றித் தகதகத்துத் தெவிட்டாத பச்சை மனமண் நிகழ். அதைக் காலமழையில் நீராட்டிக் கடந்தவையாக்கிக் கால் நூற்றாண்டு அனுபவச் சகடையில் கடைந்தெடுத்து வனைகையில் தான் அதனுள் எத்தனை புதிய வார்ப்புகள்! புன்னகைக்கும் புதினங்கள்! பழுத்திருக்கும் புண்கள்! பயமுறுத்தும் பூதாகரங்கள்!

என்ன ஆயிற்று நமக்கு? வியந்துகொண்டான் ரங்கா.

ரேஷ்மாவுடன் மீள்-தொடர்பு ஒரு மாதமே கடந்திருக்கும்.

லிங்ட் இன் என்பது அலுவல்கள் வழியே இணையத்தில் இணைந்துகொள்ளும் நெட்வொர்க். அங்கு சந்திக்கையில் பரிமாற்றங்கள் பலகாலம் முன்னர் அறிமுகமான இருவரின் நாகரீக அளவளாவலில் தொடங்கியது. சந்தித்து எத்தனை வருடங்கள் ஆகியிருக்கும், எப்படி இருக்கிறாய், என்ன வேலை செய்கிறாய், கார் வைத்திருக்கிறாயா, இந்தியா/அமெரிக்கா எப்போது வருவாய், அங்கேயே செட்டில் ஆகிவிட்டாயா, அம்மா அப்பா எங்கே எப்படி இருக்கிறார்கள்… என்று போய், கலியாணம் ஆகி விட்டதா, குழந்தைகள் பெயர்கள் என்ன, என்ன செய்கிறார்கள் என்று தொடர்ந்து… அன்றைய அமர்வில் ஏய், உன்னோட நாய் மெகாபைட் (Megabite - நிறையக் கடிப்பதால்) இப்ப இருக்கா என்பதிலோ, நீ ஃபேஸ்புக்ல இருக்கியா என்பதிலோ முடியும்.

லிங்ட்-இன் வழியாகக் கிடைத்த மின்னஞ்சல் பரிமாற்றங்களில் அடுத்த

இருதினங்களில் பரஸ்பரம் தெரிந்துகொண்டதன் சாரம்: ரங்கா முகநூலில் சேட் செய்வதைத் தவிர்க்க விரும்பினான். ஏன் என்று ரேஷ்மா கேட்டதற்கு 'அதனுடைய இடை முகம் பிடிக்காது' என்று மட்டும் சொன்னான்.

வேதாவிற்கு அவன் முகநூல் பக்கங்கள் வெளிப்படை. சொல்லப்போனால் அவன் மின்னஞ்சல்களும் அவற்றின் கடவுச் சொற்களுமே அவளிடமிருந்து என்றுமே மறைக்கப்பட்டதில்லை. இதை ரேஷ்மாவிடம் சொல்வதில் தயக்கமில்லை. ஆனால் அந்தத் தகவல் அவளைத் தயங்கவைத்து விட்டால்?

'பழசை நான் மறந்துட்டேன். வேணும்னா பாத்துக்கோ, முகநூலில் நாம் என்ன எழுதினாலும் என் மனைவியும் நிச்சயம் வாசிப்பாள். எங்களிடையே ஒளிவுகள் இல்லை. வேதாவிற்குத் தெரியாமல் என் மனம் எதையும் சிந்திப்பதில்லை. என் மனத்தினுள் உனக்கு முன்போலப் பிரத்யேக உரிமைகள் வேண்டு மென்றால் நீ இனி என் ஆசை மனைவி வேதாவின் பார்வையில் தான் அதைப் பெற முடியும். சரி என்றால் பழகு, இல்லை...' இவ்வாறு கரிசனமின்றிக் கறாராய் அவர்களின் உறவையும் காத லையும் தான் வரையறுப்பதாய் ரேஷ்மா நினைத்து விட்டால்?

*சீ பாவம்... ஷி டிஸர்வ்ஸ் மோர்...*

ரங்காவின் மனம் குதிப்பதா வேண்டாமா என்றிருக்க, மின்னஞ்சலில் ரேஷ்மா அடுத்து கேட்ட ஒரே கேள்வி முடிவை வழங்கியது போலாயிற்று.

'என் அந்தரங்கமான எண்ணங்களைப் பகிர வேண்டும் என்றால் இந்த மின்னஞ்சல் பாதுகாப்பானதா?'

குதிப்பதற்கான முயற்சிகள் ரங்காவிடம் ஆலோசிக்காமலேயே அடுத்த மின்-பரிமாற்றங்களில் தொடங்கிவிட்டன...

ரேஷ்மாவிடம் ஐ-போன் இல்லை. ஐ-மெஸேஜ், ஃபேஸ் டைம் என்று ஆப்பிள் பிரத்யேக 'ஆப்பு'களுக்குள் சிக்க வழி யில்லை. அவள் ஸாம்ஸங் ஆண்டிராய்டில் இருந்த 'வாட்ஸ் ஆப்' ரங்காவிடம் இல்லை. போனில் தருவித்துக்கொள்வதாய் ரேஷ்மாவிடம் ஜி-மெயில் அரட்டையில் தெரிவித்தான்.

வேதாவிடம் இதுவரை அவளைப் பற்றிக் குறிப்பிட வில்லை. மறைக்க வேண்டும் என்றில்லை. அவ்வாறென்றால் மறைக்கப்பட

அவர்களுக்கிடையே ஏதோ இருக்கிறது என்று தானே ஆகிவிடும். பழைய கல்லூரித் தோழி... சரி தோழியை விட சற்று மேலே... பதினைந்து வருடங்களாவது கடந்திருக்கும். மீண்டும் சந்தித்துக்கொண்டால், அதுவும் இணையத்தில், அவளுடன் அவ்வப்போது மீண்டும் கல்லூரி நாட்களை அசை போட அனுமதியில்லையா? வேலை எல்லாம் சரியாகத்தானே செய்து வருகிறோம். வேதாவிற்கு வேலைப் பளு என்றால் அகால நேரங்களில் காரேறி 'டு கோ' டப்பிகளில் 'தாய் (லாந்து) உணவு' வாங்கி வருவதில் தொடங்கி வார இறுதிகளில் வலுக்கட்டாய மாய் விஜயம் செய்யும் இந்தியக் கடைகள்வரை எதுவும் குறை வைக்கவில்லை... சே... இவ்வாறு யோசிப்பதே ஏதோ குற்றத்திற்கு அனுமதி தா என்று வேதாவிடம் கோருவது போலலல்லவா ஆகிவிடுகிறது... எனிவே, ரேஷ்மாவுடன் பழகிய அன்று பிரம்மச் சாரியாக அல்லவா இருந்தோம்...

'ஏண்டா, நான் போன் பேசினாலே கிண்டலடிப்ப. இப்ப நீ வெட்டியா ஸோஷல் மீடியால தலய விட்டுக்கற... சாப்ட வா... ஆறுது...' வேதா உரிமையாடினாள்.

'ப்ச்... இரு வர்றேன். நீ சாப்டு... அதான் இப்ப டைனிங் டேபிளுக்கு ஆபிஸ் பொலம்பல கொண்டுவர்லேல்ல...'

'அதுக்காக சோஷியல் மீடியா அடிக்ட் ஆணுமா? எப்டியாது எதையாது வெச்சு... 'வாழ்க்கையை அத்தனை அநாவசியமாகச் சிக்கலாக்கிக் கொள்ளவில்லை என்றால் அவன் சலிப்பில் செத்துவிடுவான் என்று தோன்றுகிறது'னு பாஸ்டர் நாக் டாக்டர் ஷிவாகோவில் எழுதினது ஞாபகம் வருது...'

'ம்ம்ம்... எல்லாத்துக்கும் ஒரு ஆங்கில இலக்கியக் 'கோட்' டப் போட்டுரு. நீ என் தத்துவத்தில் சிறிது கற்கவேண்டும். பழையதை மட்டுமே நினை, அதன் ஞாபகங்கள் உனக்கு மகிழ்ச்சியை அளிக்கும்...'

'அய்யோ... போதுமே... ஜேன் ஆஸ்டன்... எங்கிட்டக்கயேவா... இந்த புத்திய உன் தமிழ் நாவல் எழுதறதோட நிறுத்திக்கோ...'

'என்ன பிரச்சனை... நீயும் வேணா வாட்ஸ்-ஆப்ல சேந்துண்டு இங்லீஷ்லயே மாட்லாடு... சேத்து விடட்டுமா...'

'ஏற்கெனவே பிஎச்டின்னு அகலக் கால் வெச்சு வேலயயும் விட முடியாம ஆசைக்கும் அலுப்புக்கும் தினப்படி நேக்கு போராட்டமா இருக்கு. இதுல இந்த வெட்டி அரட்டை அடிக்கலேனு தான் கொறை...' சாப்பிட்டு

முடித்திருந்தாள் வேதவல்லி. அவனுக்கான பண்டங்களைத் தட்டிலிட்டுச் சுடவைத்தபடியே பேச்சைத் தொடர்ந்தாள். '...'நிஜ வாழ்வின் துக்கங்களைக் கற்பனையான வாழ்க்கையின் சுகங்களுடன் ஒப்பிடுகையில் வாழவே தோன்றாது, என்றும் கனவு கண்டுகொண்டிருக்க மட்டுமே தோன்றும்.' அலெக்ஸாண்டர் டூமா வாட்ஸ்-அப் வர்றத்துக்கு முந்தியே உணர்ந்து சொல்லிருக்கார். இப்ப சாப்ட வரப் போறியா இல்லையா... இல்லாட்டி...'

'கம்ப்யூட்டர்ல இருக்கறச்ச சாப்பாட்ட கொண்டுவந்து மூஞ்சிக்கு முன்னாடி நீட்டாதன்னு சொல்லிருக்கேன்ல. எத்தன வாட்டி இதோட... அங்கயே வையேன்...'

'இங்க வெச்சு எத்தன்னாள் ஆறிருக்கு ரங்கா... சாப்ட்டுட்டு வேலயக் கவனி... சேட் தான பண்றே... ஃப்ரெண்ஸ் தானே, எல்லாம் பேசினது போரும்... வந்து...'

'வர்...றே...ன்... சொல்றேன்ல. நீ போ... எழுதறச்சே கழுத் துக்குப் பின்னாடி மூச்சுவிடாதன்னு... கமான்... யாராது பாத்தா எனக்கு எழுத வராது... பரிச்ச எழுதறா மாதிரி...'

'பாக்கவேணான்னா வந்து சாப்டு மொதல்ல...'

'டைனிங் டேபிள்லயே வை... வந்துட்டேன்...'

'அரை மணிக்கு முன்னாடி அங்க இருந்ததத்தான் சுடவெச்சு கொண்டுவந்துருக்கேன்...'

'... ... ...'

'மைக்ரோவேவ்ல அடிக்கடி வெச்சா டேஸ்ட் போயிடும்... ஏற்கெனவே நான் சமையல்ல ரொம்ப கெட்டி...'

'... ... ...'

பதினோராவது முறை கூப்பிடும்முன், வேதா ஓய்ந்து விட்டாள். அடுத்த வாரம் வழங்கவேண்டியிருந்த தன் மாநாட்டு ஆய்வுக் கட்டுரையைத் தயார் செய்வதில் மும்முரமானாள்.

ரங்கா சாப்பிடவில்லை. சிந்தனை செரித்திருந்தான்.

ரேஷ்மாவுடன் பேசுவதைக் காட்டுவதில் ஒன்றும் தயக்க மில்லை. எப்படி எடுத்துக்கொள்வாளோ. ஏற்கெனவே... வெயிட்,

தேவைக்கதிகமாய் உணர்ச்சிவசப்படுகிறோமோ. முன் கோபத்தைக் குறைத்துக்கொள்ள வேண்டும். வேதாவுடன் பல உராய்வுகளுக்கு அதுவே காரணம். அவளது ரிப்பீடட் சொதப் பல்களையும் தாண்டி...

வழக்கம்போல் தானே இயங்குகிறோம். வருடங்கள் கழித்துச் சில வாரங்களுள் திடீரென்று ரேஷ்மாவை மனம் வியா பிக்க வைத்துத் தடுமாறுகிறதே. கனவுதான் காரணமா? சே... நோ... தட்ஸ் ஜஸ்ட்... எனிவே, இரவின் கனவுகள் பகலில் மறப்பவை, மறுதினம் பழையவை. நியூஸ் பேப்பர் போல.

என் திருமணத்தில் கோளாறு... என்றில்லை... சபலம்? மேபி, Seven year itch? அதற்கு வேதா எப்படியிருந்தாலும், ரேஷ்மா மர்லின் மன்ரோ போல் அல்லவா இருக்க வேண்டும்... இல்லையே. ரேஷ்மாவின் சாயல் வேறு. யாரோ மாதிரி, யார் அது, விளம்பர மாடலா, நோப்... ராக் ஸ்ட்ரீட் ஜர்னல் என்று இருபது வருடங்கள் முன்னால் திருச்சியிலேயே நான் ஒருவன் மட்டும் வாங்கிவந்த சஞ்சிகையில் அல்லவா அந்த முகத்தை முதலில் பார்த்தோம். சங்கீதா பிஜ்லானியா... இல்லை, அது அஸாரின் செகண்ட் இன்னிங்ஸ்... ஆங்... கமால் சித்து. விளம்பரம் இல்லை, எம்.டி.வி. விடியோ ஜாக்கி. அவளைப் போலல்லவா இருப்பாள் ரேஷ்மா. அன்று.

ஜி-சேட் அரட்டைகளில் இதுவரை இருவருமே புகைப் படங்களைப் பரிமாறிக்கொள்ளவில்லை. அதற்குள்...

ரங்கா தேடிக் கவனித்திருந்தான். முகநூல் ப்ரொஃபைல் படங்களில்... இன்றும் ரேஷ்மாவிற்கு ‘தேனி கொட்டிய’ அதே அழைக்கும் உதடுகள்தான், உள்ளே அதே பளீர் சிரிப்பு. ‘உங்கள் பற்களை தினமும் சர்ஃப் கொண்டுதான் துலக்குவீர்களா மிஸ். ரேஷ்மா? அது பற்பொடி என்று யார் உங்களுக்குச் சொல்லிக் கொடுத்தது மிஸ். ரேஷ்மா? உங்கள் அம்மையாரா? அவர்களும் இதே... அரசி பரம்பரையா, புன்னகை அரசி... சொந்த ஊர் ஈ...ரோடோ? இல்லத்தில் சந்தித்து ஒரு பேட்டி எடுத்துக் கொள்ளட்டுமா? காபி யார், அவர்கள்தானே போடுவார்கள்...’ மைக்காய் அவள் முன் கைகுவித்து என்றோ பேட்டி எடுத்ததை நினைவில் வைத்திருப்பாளா?
‘வெச்சுருக்கலேன்னா என்ன இப்ப? போய் பல் தேச்சு விடப் போறியா?’ நாற்பது வயதான மற்றொரு ரங்கா மன தோரம் அதட்டினான்.

பல நாட்களாய்ப் பகுத்தாய்ந்து புரிந்துகொண்டு பகுத்தறிவுப் பகலவனாய்த்தானே அவளை விட்டு விலகினோம். சுமார் ஆறு வருடப்

பழக்கத்திற்குப் பின்னர்... அவளிடம் ஜாபிதா போட்டு விளக்கிவிட்டு வேறு விலகினோம். ஒருநாள் முழுவதும் மௌனமாய் இருந்தவள் போன் போட்டு வழக்கமான குழைவில் தான் வேலைக்கு எடுத்திருந்த விடுப்பு முடிவதால் இரவு ஊருக்குப் போவதற்கு விடையனுப்ப ஸ்ரீரங்கம் ஸ்டேஷனுக்குக் கூப்பிட்டாள். மங்கம்மா நகரிலிருந்து அண்ணனுடன் தம்மடிக்கக் கம்பெனி கொடுப்பதாய் நடந்தே சென்றிருக்கலாம். போகவில்லை. அன்று அத்தனை தெளிவு. அவளைக் காதலிப்பதே வாழ்க்கையின் சாதனை ஆகிவிடக் கூடாது என்பதில். நன்றாக நினைவில் உள்ளது.
இன்று... சாதித்துவிட்டோமா? கனவுகள் நனவாகி நகர்ந்து விட்டனவா. உண்டு செரித்த உணவுப் பண்டம் போல. அல்லது பழசாகிப் பயனற்றுப் போய்விட்டனவா. நேற்றைய செய்தித்தாள் போல. மறுநாள் வந்துவிட்டதா.

Has tomorrow come?

புதுப்புது கனவுகளாய்க் கண்டுகொண்டிருப்பது மட்டுமே இருப்பின் சலிப்பை மறக்க மனிதனுக்கு ஒரே வழியா? தினமும் புதிய உணவை உட்கொள்வதைப் போல, புதிய செய்தித்தாளை வாசிப்பதைப் போல... தாள்தான் புதிது, செய்தி அதேதானே...
At last, tomorrow has come. கனவானதின் முதல் நிஜ ஈர்ப்பு நன்றாக நினைவில் உள்ளது.

பெர்ரி மேஸன், சேஸ் கடந்து, ஷெல்டன், வாலஸ் கடப்பதற்குள், ராபின்ஸ், ஹெய்லி, மிச்னர் தொடுவதற்கு முன்பான கல்லூரி முதல் வருட வயது.
இதில் சிட்னி ஷெல்டன் வரை உடன் வரும் வயதொத்த பெண்டிர் பின்னர் எடுக்கும் வழி வேறு. மில்ஸ் அண்ட் பூன்-ஐ மறக்கமுடியாமல், ஜேன் ஆஸ்டனைப் படிக்கமுடியாமல், ஜோன் காலின்ஸ், டேனியல் ஸ்டீல் என்று பெரும்பாலும் தடம் புரண்டு விடுவார்கள். காதல் பாடம் கற்க கல்லூரி மாணவர்கள் தொல்ஸ் தோய் வாசிக்காததைப் போல. அதற்கு ரங்காவுக்குத் தற்செயலாய் சமயத்தில் கிட்டியதைப் போல ஒரு ‘அமெரிக்க வெறுமை’ அமைய வேண்டும்.

முதல் வருடப் பொறியியல் கல்லூரி வகுப்பில் ரங்கா எதையெதையோ நோட்டுப் புத்தகத்தில் மறைத்து வாசிப்பதை முன் பெஞ்சில் அமர்ந்திருந்த பெண்களில் ரேஷ்மாவும் கவனிக்கத் தவறவில்லை.

பெண்கள் பெஞ்சுக்குப் பின்னால் அமர்ந்துகொள்வதன் நோக்கம்,

அவர்களுடன் கடலை, கவன ஈர்ப்பு கடந்து பெரும் பான்மை ஆண் ஆசிரியர்கள் அந்தப் பக்கம் தேவைக்கதிகமாய்த் திரும்ப மாட்டார்கள் என்பதும்தான். வகுப்பில் மாணவர் களிடையே அவர்கள் நிலை அஜால் குஜாலாகிவிடுமே...

‘யேய்... என்ன படிக்கற? செக்ஸ் புக்கா?’ ஸ்ரீரங்கத்தில் இருந்து தன்னோடு பஸ்ஸில் வரும் ஒல்லிக்குச்சிப் புதுப் பையன் என்கிற வரையில்தான் ரங்கா அறிமுகமாயிருந்தான்.

‘ச்சீய்... நெனப்புதான்...’

‘ஏன், பாய்ஸ் அதெல்லாம் படிக்க மாட்டீங்களாக்கும்?’

‘ம்ம்ம்... ஒங்கிட்ட கேட்டே தெரிஞ்சுக்கலாங்கறச்சே...’

‘போதும். கொஞ்சம் விட்டா... என்னன்னு சொல்லேன்?’

‘ஸ்குரில் கேஜ் மோட்டார் எப்டி செய்யறதுங்கறது பத்தி...’

‘ஏய்... ரங்கநாத் ரைட்? அங்க என்ன சத்தம்?’ கணினி நிரல் ஒன்றைக் கணகாரியவிமாய் கையிலிருந்த வெள்ளைப்-பரப் பில்-கருப்பு-எழுத்தில் இருந்து எதிரே கருப்புப்-பரப்பில்-வெள்ளை-எழுத்திற்குப் பிரதி எடுத்துக்கொண்டிருந்தவர் கடுப்பாகிப் போனார். ஆசிரியர்கள் பெண்கள் பகுதிக்குத் திரும்ப மாட்டார்கள்தான். ஆனால் தாம் பெறத் துணியாத இன்பத்தைத் தேவாங்குப் பயல்கள் பெறுவதா...

‘... ஒண்ணுமில்ல சார், ஸ்குரில் கேஜ் மோட்டார் பத்தி டௌட் கேட்டாங்க... எலக்ட்ரிகல்ல... அதான்...’

வகுப்பே தேவைக்கதிகமாய்ச் சிரித்தது.

ஆசிரியரின் அப்போதைக்கான ஒரே சாதனை ரேஷ்மா வையும் வகுப்பிலிருந்து வெளியே அனுப்பியது.

அவர்கள் வகுப்பின் வாசலுக்குள் இடித்துக்கொண்டு சேர்ந்தே விலகியதும்தான் அவருக்கு உறைத்தது. வாசலுக்கு விரைந்து அவனை லைப்ரரிக்கும் அவளை எதிர்ப்புறம் பெண் கள் பஸ் நிற்கும் மரத்தடிக்கும் போகச்சொல்லி இரைந்தார். உள்ளே வகுப்பு மேலும் கலகலத்தது மரத்தடிவரை கேட்டதாம்.

‘இப்பயாச்சும் சொல்லேண்டா... என்ன படிச்ச?’ பஸ் இரைச்சலில் காதிற்கருகில் ரேஷ்மா. தலைமுடியைக் கோதும் சாக்கில் ரங்கா உடனே

முகத்தை விலக்கிக்கொண்டான்.

இருவருமே ஆசிரியர் பணித்திருந்த தத்தமது இலக்கு களுக்குச் செல்லாமல், கல்லூரிக் கட்டடத்தை வலம் வந்து, கருவேலம் பொட்டலில் வெயில் பாராமல் இடைவெளி விட்டு நடந்து (சேர்ந்து பார்த்தவர் மறுநாள் 'ப்ரின்ஸி' யிடம் போட்டுக் கொடுத்துவிட்டால்...) வீட்டிற்குப் போக அதே பேருந்தில் முன்னும் பின்னுமாய்த் தொற்றிக்கொண்டார்கள்.

கல்லூரியில் இருந்து ஊர் திரும்ப பேருந்தை மதியம் பிடிப்பதன் தாத்பர்யம், காலை மாலை போலில்லாமல் இருக்கைகள் முழுமையாய்க் காலியாக இருக்கும். சகாக்களும் சொற்பமே இருப்பர். இரண்டு பேர் இருக்கையில் சேர்ந்து அமரலாம்.

'பதில் வேணுமா, உண்மை வேணுமா?'

'ஏன்... உண்மையான பதில் வேணும்.'

'பதில்னா, வில்லியம் ஷைரர் எழுதினது. உண்மைன்னா... படிக்கலை, சும்மா புரட்டிண்டிருந்தேன்...'

'Looking for the juicy parts... அதானே?' ரேஷ்மா சிமிட்டியதும் கண்களின் கவனஈர்ப்பு கூடிப்போனது.

'ஹிட்லருடைய மூன்றாம் ரீக்கின் வீழ்ச்சியைப் பற்றிய இதுல அதுமாதிரி எதும் கெடையாது. அண்ணன் ரொம்ப சிலாகிச்சான்... எடுத்துண்டு வந்தேன்.'

'தண்டி புஸ்தகத்த காலேஜுக்கு எதுக்கு... சீன் போடவா...'

'நீ இரவல் கேட்டா கொடுக்கலாமேனு...'

அப்பாடா சிரிச்சுட்டா. பிரைட் ஸ்மைல். நினைத்துக் கொண்டதை ரங்கா சொல்லிவிட்டான்.

அவள் சமாளித்து சிரிப்பை அடக்க முனையாமல் '...இந்த மாதிரி ஹெவி புக்ஸ்லாம் ஒன்ன மாதிரி ஒல்லிகுச்சிக்குத்தான்... நான் இப்போதான்...'

'...சிட்னி ஷெல்டன்...'

'யெஸ்... எப்டித் தெரியும்?' சிரிப்பு களைந்து சட்டென்று புருவத்தில் ஆச்சர்யம் காட்டினாள்.

‘நீ க்ளாஸ்ல பேசினப்போ கேட்டேன்... இந்தா...’

அண்ணனுக்கும் அவனுக்கும் ஜோடியாய் அம்மா வாங்கி வைத்திருந்த ரெட்டைப் பின்னல்களாய் அடியில் குஞ்சங்களுட னான தன் ஜோல்னா பையினுள் துழாவி எடுத்துக் கொடுத்தான்.

‘சீக்கிரம் கொடுத்துடு...’ என்று வாய் வரை வந்ததை அடக்கியது பெருந்தவறென்பதை அடுத்த மாதம் உணர்ந்தான்.

அண்ணன் வீட்டில் புலம்பிக்கொண்டிருந்தான். பாக்கெட் மணியில் நூலகத்திற்கு அபராதம் கட்டுவது பற்றி. புத்தகம் எங்கே என்பதற்கும் ரங்காவால் சரியாகப் பதில் சொல்ல முடியவில்லை. இதுதான் சான்ஸ் என்று அம்மாவிடம் போட்டுக் கொடுத்துப் பேர் வாங்கும் புத்தி அண்ணனுக்கு பிகாம் முடிக்கையிலும் வந்த தில்லை. பதிலுக்கு அவன் சன் கம்ப்யூடர்ஸ் சகாக்களோடு கடையுள்ளே தம்மடிப்பதைச் சொல்லும் புத்தி பொறியியல் முதல் வருடத்திலேயே ரங்காவுக்கும் வந்திருக்கும். ஆனால் புத்தகத்தை ரேஷ்மாவிடம் கறாராய்க் கேட்டுவிடுவதை ரங்கா நினைத்தே பார்க்கவில்லை.

ஒருவழியாய் அவள் புதுத் தோழிகளிடமெல்லாம் இருந்து விட்டு அந்தப் புத்தகம் ரங்கா தன் ஸீகிங்ஸ் ஐஸ்கிரீம் காசு அண்ணனுக்கு மொய் என்றிருந்த நாளில் திரும்பி வந்தது.

If tomorrow comes. புத்தகத்தின் பெயரே மறந்துவிட்டது.
திருப்புகையில் ரேஷ்மாவை கோபிக்க முடியவில்லை. புத்தகத்தை வாங்காமல் நோக்கியவாறு ரங்கா அடித்தொண்டை யில் உறுமியது: ‘At last tomorrow has come...’

இன்றுதான் மறுதினம் வந்துள்ளது.

அன்று ரங்கா சொன்னதை மறுநாள் நிகழில் அவன் அமெரிக்க ஆபீஸ் அறையின் தனிமையில், ஜி-சேட்டில், பெங்களூரில் இருந்து அவனிடமே பகிர்ந்தாள் ரேஷ்மா.
தன்னை மீறிய சிரிப்பைத் தனியறையில் ஆபிஸ் மொத்தமுமே எட்டிப்பார்த்துக் கண்டுவிடக்கூடும் எனக்கருதி உடனடியாகக் கணினி முன்னிருந்து எழுந்து தேநீர் குடிக்கச் சென்றான்.

‘என்ன இத்தனை மகிழ்ச்சி செஷைர் கேட்? ஸ்வீப் ஸ்டேக்ஸில் மில்லியன் டாலர்கள் அடித்துவிட்டாயா?’ வாட்டர் கூலர் அருகே ரங்காவைப் பார்த்தவுடன் கேட்டான் ஆண்டி.

ரங்கநாதன் எனும் பெயரை அப்படியே வாசித்து உச்சரிக்க வராமல் ரங்... என்று திக்கி ‘ராங்கா’ என்றே இன்றும் ராங்காய் விளிக்கும் ‘சராசரி அமெரிக்கப் பதரி’ல் ஒருவன் என்பதால் அவனை ‘ஏண்டி’ எனாமல் ‘ஆண்டி’ என்று சுருக்கி உச்சரித்து விளிப்பது ரங்காவின் பழிவாங்கல். தமிழ் ஆண்டி.

‘அதைவிட உன்னதமானது ஆண்டி. ஐம் இன் லவ்...’

நாக்கைக் கடித்துக்கொண்டான். எதற்கு இவனிடம் சொன்னோம்? காதல் மனம் கனிவானது. அதன் உன்மத்த நிலையி\லிருந்து உலகில் யாவையுமே நல்லதெனவே காணும்.

‘யு பெட்...’ என்று தொடங்கிய ஆண்டி, வேறு எந்தத் தகவலும் இன்றி எவ்வாறு உடனடியாகக் கேட்டான் என்பதை ரங்காவால் பின்னரும் ஊகிக்க முடியவில்லை. ‘...உன் மனைவிக்குத் தெரியுமா?’

வேதாவிடம் சொல்லுவதா. என் காதல் வேதாவுடன் இல்லை என்பது இவனுக்கு... வேதாவிடமா... ‘என்ன? கமான்... அவள்... இதையெல்லாம்... பை தி வே... நீ...’

‘தெரியாது என்கிறாய். சரி. என் வேலை இல்லை இது ராங்கா. பழகுவதால் சொல்கிறேன், தனிமனித உரிமை என்று உன் வழக்கமான பாணியில் உரை கொடுத்துவிடாதே. டூ-டைமிங் பாவம் எனவில்லை, ஒத்துவராது என்பேன்.’
’

இவனுக்கு என்ன தெரியும், என் காதலைப் பற்றி? காதல் நெஞ்சம் களேபரமானது. எச்சரிக்கைகள் மேல் எச்சில் துப்பத் தயங்காது.

‘ஏன் சொல்கிறாய்...’ ரங்கா தனக்கு வெளியேயான அறிவியல் விஷயத்தின் மேல் ஆர்வம் காட்டுவதுபோல முகத்தை வைத்துக்கொண்டான்.

இவனிடம் எதற்கு விளக்கம் கேட்கிறேன். இவன் யார்? வேலை போனால் கண்டுகொள்ள மாட்டான். கடன் கேட்டால் தர மாட்டான். நாளை என் குழந்தைகளுடன் தன் குழந்தைகளை விளையாட விட மாட்டான். அமெரிக்கன்.

ஆண்டி புன்னகைத்தான். ‘நாம் குடும்பிகள். அதாவது, கோழைகள். நமக்கு இதற்கு பலம் கிடையாது...’

‘இதில் பலத்திற்கு என்ன வேலை... ஓ... நோ நோ, இதில் உடல் தொடர்பில்லை... இன்னமும்...’

இன்னமும் என்பதை ‘இறந்தது அஸ்வத்தாமா எனும் யானை’ என்பதை தருமன் துரோணரிடம் சொன்னதுபோல ரங்கா தனக்கு மட்டுமே கேட்டிடச் சொன்னான்.

‘நானும் உடல் பலத்தைச் சொல்லவில்லை ராங்கா. அதற்கு எத்தனை வேண்டுமானாலும் வைத்துக்கொள். பணத்திற்கு தொழில் செய்பவர்களை ஆழம் பார்ப்பதை – forgive the pun - ஓர் இரவில் தொடங்கி முடித்துவிடலாம். செய்துகொள் தேவையெனின்...’

‘நோ... அதற்கு அவசியம் இல்லை ஆண்டி... இது, இவள் அவ்வாறு இல்லை. முன்னாள் தீப்பிழம்பு. இந்தியாவில் இருக்கிறாள். வெறுமனே அரட்டை. தொடமுடியாத தூரத்தில்...’

‘உன் கண்களின் கள்ளத்தனம் அத்தனை தூரத்தைக் காட்டவில்லை ராங்கா. என்னவோ... வேலையை கவனிப்போம். மதிய உணவில் சந்தித்துக்கொள்வோம் அல்லவா? இல்லை, அதையும் இணையத்திலேயே முன்னாள் காதலியுடன் செய்வ தாய் உத்தேசமா? ஈ-லஞ்ச்... that’ll be cost cutting...good one...’

பதிலுக்குக் காத்திராமல் பகபகவெனச் சிரித்தபடி முஷ்டியால் ரங்காவின் தோளைக் குத்திவிட்டு அதன் வெளிப்பரப்பில் பேய்களைக் கண்டால் பயந்து நடுங்கும் ‘ஹலொவீன்’ எழுத்துருவில் ‘ஜீஸஸ் ராக்ஸ்’ என்று அறிவித்த போர்ஸெலின் கோப்பையினுள் தேயிலைப் பையிரண்டை வெந்நீரில் முக்கிக் குட்டியவாறே அகன்றான் அமெரிக்க ஆண்டி.

# 4

அமெரிக்கா. ஒரு வாரம் முன்னால்.

நீலவண்ணக் குளிரைப் போல
நீந்திவரும் நெருப்பைப் போல
நேற்று ஒலித்த கனவைப் போல
நிஜத்தை நெகிழ்த்தும் நிழலைப் போல
காதல் கணங்கள்.
காத்திருந்த கன்னிவெடி போல
கால்மாறிய நாட்டியம் போல
புன்னகைத்த புலியைப் போல
புணர்ச்சியின் கலியைப் போல
காதல் கணங்கள்.
பரமபதச் சோபனம் போல
பங்குசந்தைப் பதாகை போல
பாய்ந்துவரும் பட்டொளி போல
பாதி நமுத்த பழங்கதை போல
காதல் கணங்கள்.
பயமிலாக் கவிதை போல
முகமிலா மோட்சம் போல
பொருள்படாப் புதினம் போல
போன சென்ம புத்தன் போல
காதல் கணங்கள்.
மேகதூத மேட்டிமை போல
மேலைக்காற்றின் மௌடீகம் போல
மரத்தில் மறைந்த மாமதம் போல
மனத்துள் மணந்த மன மதனைப் போல
காதல் கணங்கள்.

மறுபடியும் இவ்வாறு எழுதத் தொடங்கிவிட்டோமே. மறுபடியும் காதலிக்கிறோமா அல்லது காதலிப்பதை மறுபடியும் இந்த எழுத்துவகையில் செய்கிறோமா? மற்றொரு இல்லற இரவின் அமெரிக்கத் தனிமையில் ரங்கா தட்டச்சப் பயன்படாத ஏகலைவ விரலை எச்சிலின்றிச் சூப்பியவாறு யோசித்தான்.

இவ்வகை எழுத்து இன்று தன்னிச்சையாய் மனத்தில் புறப்படுகிறது. பல

வருடங்கள் கழித்து. ஆமாம், வேதாவுடன் பழகியபோதும் மனம் இதைச் செய்யவில்லை. நாடவில்லை.

சில வருடங்கள் முன்பிருந்து இவ்வாறு எழுதாமல் காதலித்து, கால்சிராயில் காரேறி, கணினியில் கண்துஞ்சாமல் கருத்தாடும் இவன் யார்? அதுவரையிலான ஆளுமையைக் கட்டியெழுப்பிய குணங்களையே மாற்றிக்கொண்டா வேதாவிடம் பழகினோம்? வேதாவிற்குப் பிடித்தவன் எனக்கும் பிடித்தவனா?

ஒன்று உறுதி. எனக்குப் பிடித்த ரங்கா எனும் நான் ரேஷ்மாவை காதலித்தவன். இன்று வேதாவையும்.

ரேஷ்மாவை விட்டு விலகியதும் பதினைந்து வருடங்களாவது இவ்வகை எழுத்தும் என்னை விட்டு விலகிவிட்டிருந்தது. இன்று அவளிடம் மீண்டும் அழைத்துச் செல்கிறது.

மீண்டும்? அல்லது மீளாமல்?

நிகழ் நிறமாலைகள் நிறைந்த கலிடாஸ்கோப்பாய் சுவை பெறுவதற்குக் கற்பனையேறிய கடந்தவையாய் மனப்பார்வையில் படவேண்டியிருக்கிறது. அன்று அலுத்துக்கொண்ட பொழுதுகளெல்லாம் இன்று அலங்காரமானவையாய்ப் பரிமளிக்கின்றன. அன்று அநிச்சயமாய்க் கடந்த அன்றாடங்கள் இன்று அற்புதக் கணங்களாய் விம்முகின்றன.

ரேஷ்மாவைப் பற்றி, அவள் மேல் தனக்கிருந்த காதலைப் பற்றி, அதைச் சொல்லிவிட்டால் போய்விடுமோ எனும் தயக்கங்களைப் பற்றி, மானே தேனே தடவாது மனவோட்டமாய் ரங்கா எழுதி வைத்திருந்த பலவற்றையும் அவன் இல்லாதபோது மங்கம்மா நகரில் அவர்கள் வீட்டின் மாடியறையில் இரு வருக்கும் பொதுவான ரோஸ்வுட் செஸ்ட்-அப்-டிராயரை ஒழிக்கையில் அண்ணன் பார்த்துவிட்டிருந்தான்.

பொறியியல் கல்லூரி இளங்கலை இரண்டாம் வருடம் ரங்காவுக்கு முடிந்திருக்கவில்லை. அண்ணன் பிகாம் முடித்து மேலே போவதற்கான ஆயத்தங்களை அதற்கு முன்னரே திட்டமிட்டவாறு செயல்படுத்த மெட்ராஸ் செல்லவிருந்தான்.

அண்ணன் ரொமாண்டிக் இல்லை. நிதர்சனவாதி. கண்ணாடி போட்ட ஆடிட்டர் அனைவருமே அவ்வகைதானே.

பாச்சை உருண்டை வாசத்துடன் ரங்காவின் எழுத்துக் கற்றை முழுவதையும் ரேஷ்மாவிற்கு அனுப்பிவிட்டான். அதிலும் விவரம். ஸ்ரீரங்கத்தில் அவள் வீட்டிற்கு அனுப்பாமல், பொறியியல் கல்லூரி ஹாஸ்டலில் வசித்த அவள் தோழியின் முகவரிக்கு c/o போட்டு செலபன் ஒட்டிய 'அக்நாலஜ்மெண்ட் டியூ' ரெஜிஸ்டர் தபாலில். கீழ அடையவளைந்தான் தலைமை தபால் நிலையத்திலிருந்து இல்லை. அப்பாவிற்கு அங்கு பல நண்பர்கள். அம்மாமண்டபம் சாலையில் யோகா கல்யாண மகால் தாண்டிக் கும்மிருட்டு உபரி தபால் நிலையத்திலிருந்து.

ரேஷ்மாவிடம் முதல் முத்தம் ரங்கா பெற்றது அண்ண னால் தான். முதல் அறையும்... முத்தத்திற்கு சற்று முன்னால். அவள் வீட்டு மொட்டை மாடிக்குச் செல்லும் படிக்கட்டில்.

நினைவில் நிற்பதால் இவை அன்றைய நற்பொழுதுகளா, அன்றுமே நற்பொழுதுகள் என்பதால் நினைவில் இன்றும் நிற்கின்றனவா?

ரங்கா நினைவுகூரும் 'அந்த நாள் ஞாபகம் நெஞ்சிலே வந்த' தருணங்கள் பலவற்றையும் ரேஷ்மா ஞாபகத்தில் வைத்திருக்கிறாள் என்பதில் இல்லை மகிழ்ச்சி. ஞாபகத்தில் வைத்திருப்பதை மின்-அரட்டைகளில் ஒப்புக்கொள்கிறாள், மனத்தை நேர்மையாய் வெளிப்படுத்தி என்பதிலேயே மகிழ்வு.
பெண்கள் மனத்தின் ஆழமே இவ்வகை நேர்மையை வெளிக்காட்டுவதன் தயக்கத்தில்தானே ஆண்களினால் அளக் கப்படுகிறது. அந்த நேர்மை தானே, பரிமாற்றங்களினூடே மனத்தின் குணப்படுகை சட்டெனத் தெள்ளிடுவது தானே, ரேஷ்மாவிடம் அன்றிலிருந்தே ரங்காவுக்குப் பிடித்த விஷயம்.

காதல் எத்தனை ஆழமானது என்பதை நிறுப்பதற்கான அளவுகோல்கள் உலகின் அனைத்துக் காதலர்களும் ஏற்கும் வகையில் உருவாக்க இயலுமா? அவரவர் மனத்துள் அறிவிப்பின்றி மலர்ந்த அதுவரை மறைந்திருந்த பகுதியின் ஆழ அகலத்தைப் புற அளவுகோல்களால் அளக்க அம்மனது ஒப்புமா?

ரங்காவை அவளுக்கு எத்தனை பிடிக்கும் என்பதை அவனைப் போல கணிதத்தில் நூறு மதிப்பெண்கள் எடுத்துக் காட்டும் முனைப்பிலும், ஆங்கிலத்திலும் தமிழிலும் நோட்டுக் களை எழுதி ரொப்பிய காதல் வரிகளிலும் காட்ட வகையின்றி, நேரடியாக 'ரங்கா... உனக்கே தெரியும், எனக்கு மெகாபைட்னா எத்தன உயிர்ன்னு. ஒன்ன எனக்கு

அதவிட ரொம்பப் பிடிக்கும். அவ்வளவுதான் எனக்குச் சொல்ல வருது. புரியுதா...' என்று தன் நாயுடன் அவனை ஒப்பிட்டுக் காதலை வரையறுத்தபோதும் ரேஷ்மாவின் அதே நேர்மைதானே அந்த எளிமையான மனத்தை ரங்காவின் பார்வையில் ஆழப்படுத்தியது.

***

வேதாவை வெறுக்கவில்லை மனம். நன்றாகப் புரிகிறது. அன்றுபோல்தான் இன்றும் கணவனாய் அவளுடன் உறவு பாராட்டுகிறது. வழக்கமான வேடிக்கைகள், வின்யாசங்கள். சிற்றுண்டி நேரத்தில் ஒரே கோப்பையில் கொடுக்கல் வாங்கல் கள், அதற்கு முன்னர் ஒரே தொட்டியில் ஒரே நேரத்தில் குளியல் கள், அதற்கும் சற்று முன்னர் ஒரே சொகுசு கம்பளியினுள்...

வேதா கொடுக்கும் டிபன்பாக்சை அமெரிக்காவிலும் அவ்வப்போதாவது ஆபீஸ்வரை எடுத்து வந்து அதனுள் இருப்பதையே முடிந்தவரை இன்றும் சாப்பிடச் செய்கிறோம். வழக்கமான வேதாவின் திராபைச் சமையலை நன்றாய் இருப்பதாய் அன்றுபோல இன்றும் மனம் பொய்யுரைக்கிறது. ராமரே இதே வகையில் வனவாசத்திலும் காதலூற சீதையின் சமையலை விதந்தோதி உள்ளதாய் வால்மீகி எழுதிவைத்திருக் கிறார். 'சீதே... நீ இப்பண்டத்தை நன்றாகத்தான் செய்திருக்கின்றனை! இந்த நெருப்பு இருக்கிறதே, என்னே போக்கிரித்தனம். ஒரு பக்கம் கிஞ்சித்து அதிகமாய் எரிந்துவிட்டது...'

மற்றபடி கள்ளத்தனமின்றித் தலைவன் தலைவியுடனான புறநானூற்றையும் வேதாவிடம் இன்றும் மனம் பழகுகிறது.

ஆனால் ரேஷ்மா... இவள் அகநானூறு போலும்... வேதாவை அமெரிக்காவில் காண்பதற்கு முன்பிருந்தே அகம் பழகியிருந்த முகம். இன்று மீண்டும் அவளுடன் இணையத்தில் சேட் செய்யக் காத்திருக்கையில் ஸ்ரீரங்கம் பஸ் ஸ்டாப்பில் சந்தித்து அளவளாவப் போகிறோம் என்கிற நினைப்பே ஒவ்வொரு நாளையும் விடியலுக்குக் கொண்டுவருவதன் அதே பதினைந்து இருபது வருடம் முன்னாலான விடலை உற்சாகம்.

***

ரேஷ்மாவுடன் மின்-பழக்கம் (மின்-மீள்காதல்) எண்ணிக்கையில் அவன் வயதை விட அதிக நாட்களாகியிருந்தது.

வயதான பார்வையில் வெளிப்படும் கோணங்களில் சாதகமான மறுபரிசீலனைகளில் அதே விடலைப் பொழுதுகள், புதியனவாக... மின்னஞ்சல்களில், அரட்டை ஜி-சேட்டுகளில்...

ReshAbi: Got a minute?

pUchandi: Sure...for you always...

ReshAbi: நீ எழுதிய கட்டுரையைப் படிச்சேன். எனக்கு ரொம்ப மகிழ்ச்சி. நீ எத்தனை வளர்ந்துவிட்டாய்...

மெட்டீரியல் சயண்டிஸ்ட் சஞ்சிகை இருபத்தியோராம் நூற்றாண்டின் புதிய பொருள்கள் பற்றியும் அவற்றின் மானுட உபயோகம் பற்றியும் சமீபத்தில் ரங்காவிடம் மின்னஞ்சல் கேள் விகள் அனுப்பிப் பதில்களைக் கட்டுரையாக்கித் தருமாறு கேட்டு, அவன் கொடுத்ததில் பாதியைப் பதிப்பித்திருந்தனர்.

pUchandi: ஓ, அதுவா... அது விளம்பரத்திற்காக ஜாக்கிரதையாக எழுதியது. அதில் என்னைத் தேடாதே...

ReshAbi: அதான் நேரடியாக இருக்கிறாயே. ஏன் அதில் போய். படிக்க நன்றாகத்தான் இருந்தது... பிரமிப்பாய்... முக்கியமான பதவியில் இருக்கிறாய் எனப்படுகிறது... என்னுடன் பேச நேரமிருக்குமா...

அரசாங்க நிறுவனம் என்பதால் ‘உங்கள் பணத்தைக் கொண்டு எதையாவது புதிதாக ஒவ்வொரு நிமிடமும் செய்து வருகிறோமாக்கும், அடுத்த மெகா-பிராஜெக்ட் mega buck நம் முதலீட்டுடையதுதான்’ என்று நிறுவனப் பங்குதாரரிடம் பூசி மொழுக இவ்வகைப் பேட்டி, கட்டுரைத் தொல்லைகள் நிறைய வராது என்றாலும், வருகையில் தப்ப முடியாது. அதே அரசாங்க உத்தியோகம் என்பதால். உடனே மக்களின் வரிப் பணத்தை வீணடிக்கிறார்கள் என்று எழுதிவிடுவார்கள். ஒன்றும் பேரிழப்பில்லை அச்செய்திகளினால். ஆனால் விளம்பரத்திற்குப் பேர் போன அமெரிக்கர்கள் விரும்பாதது எவ்வகையிலும் கெட்ட விளம்பரங்களை. ரங்காவின் ஆய்வுப்பணியில் தாங்கள் செய்வதை ‘நல்ல விளம்பரம்’ செய்து கொள்வதும் ஓரங்கமே.

pUchandi: முக்கியமானது என்பதாலேயே பதவி இருமுனைக் கத்தி.

அசந்தால் உள்ளிருந்தே கிழித்துவிடும்.

ReshAbi: என்னிக்குமே நீ உஷாராச்சே. நம் மேட்டர் உட்பட. இப்பவும் நான்தான் கோட்டை கட்டுகிறேன்...

pUchandi: நானும் கட்டுவேன். சொல்வதில்லை...

ReshAbi: பாத்தியா, ஜாக்கிரதை...

வேண்டியதையும் வேண்டாததாய்ச் சொல்லிவிட முடியும் தான். ஆனால் வேண்டும் என்பது வேண்டாம் என்று சொன்ன பிறகுதான் வேறு ஒன்றை வேண்டும் என்று சொன்ன பிறகுதான் தெரியவருகிறது என்றால்? ஒன்றைத்தான் வேண்டமுடியுமா? இல்லை ஒவ்வொன்றாய்த்தான் வேண்ட வேணுமா?

பச்... ஒலித்த போனை ‘சைலண்ட்’டில் அடக்கினான் ரங்கா. ஆபீஸ் வேலை நேரத்தில் யாரது...

ReshAbi: R U ther? Enna sound illa?

pUchandi: வேண்டுவதைச் சொல்லாமலும் விட்டதுண்டு ரேஷ்...

ReshAbi: ரேஷ்! லாங் டைம் ஹென்ஸ் கேட்கிறேன்... அபிக்குப் பெயரைச் சுருக்குவது பிடிக்காது.

pUchandi: அதனால்தான் அபி-யாய் சுருக்கியுள்ளாயா அவரை உன் மின் முகவரியில். திமிர் அடங்கவில்லையே இன்னும்...

ReshAbi: சீ போடா. ஒன்னாலயே அடக்க முடியல பாவம் அவர் எப்படி.

pUchandi: நானுந்தான்... 15 வருஷம் முன்ன நீ பயமுறுத்தின துல ஓடிவந்தவந்தேனே... இன்னும் இந்தியாப் பக்கமே வரலை...

ReshAbi: கல்யாணம் கூட அங்கயே செஞ்சிகிட்டயாடா? உங்க அம்மா இங்க குதிச்சிருப்பாங்களே...

pUchandi: ஆமா (கல்யாணம்). நிறைய (அம்மா குதிச்சது). நடுல இந்தியா வந்தேன். ரெண்டு மூணு வாட்டி. அண்ணனப் பாத்துட்டு மெட்ராஸோட திரும்பிட்டேன்.
ஆறேழு வருடங்கள் முன்னால் வந்திருந்தபோது அவள் திருமணம் செய்யப்போகிறாள் என்று அரசல்புரசலாய் அறிந்து தொடர்பு கொள்ளாமல் திரும்பிவிட்டதைக் குறிப்பிடவில்லை.

ReshAbi: ஏன்? கேக்கணும்னு இருந்தேன், ஸ்ரீரங்கம் வீட்டக் கொடுத்துட்டீங்க போல... அப்பா சொன்னாரு.

pUchandi: நீயே இல்ல... அப்பறம் எதுக்கு வந்துட்டுன்னு. என்ன, யெஸ், வீட்டை வித்துட்டாங்க. அத இப்ப கேக்காதே.

ReshAbi: நான் பேசிட்டு தானே இருக்கேன்...

pUchandi பேசினா மட்டும்... எல்லாருந்தான் பேசறாங்க...

ReshAbi: பகல்ல பக்கம் பாக்கணும், பேசறதுக்கே... ஆபிஸ் இது. ஒரு வேலை தொடங்கலை இன்னும்...

pUchandi: ஔட் ஸோர்ஸிங் ஜாப்னு சொல்லிக்கோ...

ReshAbi: இந்தியாலேந்து அமெரிக்காவுக்கு அவுட் ஸோர் ஸிங்கா! எனக்குத் தேவைதான். பொய்னாலும் இப்டியா...

pUchandi: ஆபீஸ்ல அதுக்குப் பேரு டிப்ளமஸி. நான் பேட்டி கட்டுரைல செய்யலை... படிச்சுட்டு நீ எத்தன நல்லாருக்குங்கற.

ReshAbi: ஹானஸ்டா பேட்டி கொடுத்தே, வேலை போயிரும். இந்தியா வந்து எங்கிட்டதான் நிக்க வேண்டி வரும்.

pUchandi: நின்னா மட்டும்? உண்மையைச் சொல்லிப்போமா?

ReshAbi: ஏற்கெனவே சொல்லிக்கலயா? எப்பலேந்து நீயும் பொய் பேசத் தொடங்கின?

pUchandi: நமக்குள்ள ஒத்துவராதுன்னு சொன்னதுலேந்து...

pUchandi: என்ன கோவமா? சத்தத்தயே காணோம்...

ReshAbi: பொய்னாலும், அது சரின்னே இப்பத் தோணுது..

pUchandi: ஒத்துவர்றதாலதான இப்ப பேசிக்கறோம்...

ReshAbi: என்னோட இருந்திருந்தீன்னா இதயெல்லாம் நீ செஞ்சிருப்பியா ரங்கா... ஐம் டௌட்புல்...

pUchandi: இருந்து பாத்தாத்தான் அது தெரியும்... :-)

ReshAbi: சான்ஸ் வராமயா போகும் ;-)

pUchandi: வந்தா மட்டும் என்ன செய்யப்போறியாம்?

ReshAbi: பகிர்ந்துக்கறத்துக்கு எத்தனையோ இருக்கு... ஒண்ணும் இல்லாதது மாதிரியும் இருக்கு...

pUchandi: யெஸ்... வாழ்க்கையின் விளக்கம்.

ReshAbi: சோகமா, பேதடிக்கா தோணிடலாம்... ஆனா இப்டி இருக்கப் பிடிக்கலை எனக்கு... சே, புலம்ப ஆரம்பிச் சுட்டேன்... ஏண்டா மறுபடியும் வந்தே..
.
pUchandi: தட்ஸ் ஓகே... விட்டா நானும் செய்வேன்...

ReshAbi: யார் விடணும் ரங்கா? You always have the right பொலம்பிஃஃபை with me..

pUchandi: என்னடா வர்லையேன்னு பாத்தேன், ஃபை ஃபைன்னு தமிழாங்கிலத் தனியகராதி. நேஷனல் மொழி மாதிரி இது ரேஷ்-ஷனல் மொழி. மொனஞ்சு சேத்தீன்னா, rationalனு பகுத்தறிவு பாசறைகளைப் பதிப்பிக்கச் சொல்லலாம்...

ReshAbi: ஸ்டாப் இட். இடியட். கைல மட்டும் கெடச்ச... சீரியசா பேசும்போது ஜோக் அடிக்காதன்னு எத்தன வாட்டி...

pUchandi”: ஏய், இருக்கியா?

pUchandi: என்னாச்சு, திட்றதப் பாதில நிறுத்தக்கூடாது.

ReshAbi: Maybe I am not in a position anymore...

pUchandi: திட்றதுக்கா? இன்னொரு வாட்டி கூட செய்யலாம் நீ...

ReshAbi: எனிவே, நோபல் வாங்கறச்ச என்னையும் குறிப்பிடு...

pUchandi: இஞ்சினியருக்கு நோபல் கொடுக்கையில் நீயும் கூட வாங்குவாய்.

ReshAbi: நானுங் கூட-னா? ஏன் பொம்பள வாங்கக் கூடாதா?

pUchandi: பாயறியே... கூடன்னா along with, எங்கூட... நீயும் எங்கூட வாங்கலாம்னேன்...

ReshAbi: ஏது, நானு... குட் ஜோக்...

<>pUchandi: நான் சீரியஸாப் பேசறச்சே ஜோக் அடிக்காதே...

ReshAbi: நான் சொன்னதயே... ஒன்ன அப்டியே...

pUchandi: அதுக்குத்தான இத்தன தள்ளி என்னை அமெரிக்காலயும் ஒன்ன இந்தியாலயும் வெச்சுருக்கு...

ReshAbi: மாட்டினே...

pUchandi: என்னதான் செய்வே சொல்லிடேன்...

ReshAbi: அப்டியே கட்டிப் புடிச்சு... கீழ தள்ளி...

pUchandi: WWF மேட்ச் மாதிரி...

pUchandi: ஏய்... இருக்கியா?

ரேஷ்மா இல்லை. இணையத்தில் காணோம். கட்டிக் கீழே தள்ளிவிட்டுப் போய்விட்டாள்.

மறுநாள் மின்னஞ்சல் வந்தது. கரெண்ட் போய்விட்டதாம்.

அனுப்பிய கடைசிச் செய்தியும் போயிருக்காதுதான். நல்லவேளை. வளச்சு வளச்சு கிண்டல் பண்றதைக் கொறைச்சுக்கணும்.

ரேஷ்மாவின் மின்னஞ்சல் அத்துடன் முடியவில்லை. அடிக்குறிப்பில் கேட்டிருந்தாள். ‘ஏதோ கனவு என்று ஒரு அரட்டையின் போது குறிப்பிட்டிருந்தாயே... நான் உன்னிடம் கனிவாய் இருந்ததாய்... என்னவென்று சொல்லேன்...’

மறுதினம் மின்-அரட்டையில் ரங்கா சொன்னதற்கு அவளிடம் இருந்து உடனடி பதிலில்லை. மறுநாளும் இல்லை.

இரண்டு நாட்கள் கழித்து அவன் என்றோ எழுதிய காதல் வரிகளை விசாரித்து மின்னஞ்சல் அனுப்பினாள்.

***

கடந்தவற்றையும் கடக்கப்போவதாய் எதிர்பார்ப்பன வற்றையும் மனம் படைப்பூக்கத்துடன் சிந்தித்துப் பார்க்கலாம். வருங்காலத்தைப் பற்றிய மனத்தின் படைப்பூக்கமே நம் கனவுகள். கடந்தகாலத்தைப் பற்றிய மனத்தின் படைப்பூக்கமே சுகநினை வெச்சங்கள். கற்பனை வறண்ட

நிகழில் தோய்ந்திருப்பதில் மனத்தின் படைப்பூக்கத்திற்கு வேலையில்லை. படைப்பூக்கமற்ற மனம் நடைப்பிணம்.
தினந்தோறும் தகவல் குப்பைகளைக் கிளறி, சேகரித்து, சுறுசுறுப்பாக அசைபோடும் செக்குமாட்டு வேலையில் இருந்து படைப்பூக்கத்தை மீட்டுக்கொள்ளும் முனைப்பில் இரண்டு வருடங்களில் இரண்டு தண்டித் தமிழ் நாவல்கள் எழுதிவிட்ட ரங்கா அறியாததா.

ஆனால் அவன் நேற்றே அறிந்தும், இன்று புரியாததாய் ஆனவையும் உண்டே.
கனவுகளும் சுகநினைவெச்சங்களும் கற்பனை நிறைந் தவை. சந்தேகமில்லை. கனவுகள் என்கையில் கற்பனைகள் நன வாகையில் நலம் பயக்கலாம். சுகநினைவெச்சங்கள் என்றோ எவ்வகைகளிலோ நனவாகிவிட்டவை. அவற்றை மீண்டும் எவ்வாறு நாம் நினைத்தவாறு நனவாக்குவது?

எங்கு சுற்றியும் ரங்கனைச் சேவி எனும் ஸ்ரீரங்கத்தை விட்டு பதினைந்து வருடங்களாகிவிட்டது. அமெரிக்காவில் எங்கு சுற்றியும் இன்றும் ரங்கனைத்தான் சேவிக்கிறேன்.

கணினி முன் அமருகையில் நினைத்துக்கொண்டான்.

ரங்கா என்று மூன்றுமுறை அவன் குரலில் சொன்னால் கணினி உயிர்பெற்றுவிடும். வாய்ஸ் பாஸ்வேர்டு.

ஆனால் ரங்காவின் மடிக்கணினி ஆப்பிள் மேக்புக்கின் பெயர் வேறுவகை. தனித்திருக்கையில் கேட்டால் ‘ஏஞ்சலினா ஜோலி, Lap Top, மடி மீது அமர்பவள் அல்லவா…’ என்பான்.

அந்த மேலோட்ட விடலை நகைச்சுவையின் ஆழ்மனக் காரணம் உத்திரவாதமாய் ரேஷ்மா என்பது நிறத்தையும் சுவையையும் பொருட்டாது கவனிக்கையில் தெரியவரும். ரேஷ்மாவின் உதடுகள் ஏஞ்சலினாவினதைப் போன்ற வடிவுடை யவை. அவளிடம் ரங்கா சொன்னதில்லை. ஆனால் காதலை மீட்டுக் கொண்ட இந்த இருமாதங்களில், ஏன் நேற்றைய கனவில் கூட…

கணினியின் ஜி-சேட்-ஜன்னலில் ரேஷ்மாவின் முகம் மந்தகாசமாய்ப் புன்னகைத்தது. சிரித்துக்கொண்டான் ரங்கா.

அவள் முகநூல் பக்கத்தில் இருந்து அவனுக்காகப் பத்து வயது குறைத்துக்கொண்ட படத்தைத் தருவித்து இந்த ஜி-மெயில் அரட்டை

அரங்கில் அவளுக்கான முகவரி முகத்தில் பிரத்யேக மாய் ஒட்டியிருந்தான். ஒரு மாதம் முன்பு. நினைவில் நின்ற முதல் கனவிற்கு மறுநாள்.

வீட்டிற்குப் போயிருப்பாள். இரவாகியிருக்கும். இரவு...

‘கணினிக்கு ராங்கா என்று பெயரிட்டு வணங்கவில்லையா நீ. பழைய காதலியின் நினைப்பாய் இருக்கென்றால் World of Warcrafts போல கேரக்டர் - செக்ஸ் அனுமதிக்கும் ஆன்லைன் கேம்ஸ் ஒன்றில் பிடித்த கேரக்டருக்கு அவள் பேரை வைத்துக் கொள். கொஞ்சிக் குலாவு. சல்லாபம் செய். குஸ்திச் சண்டை போடு. மிச்ச நேரம் கணினியை அணைத்துவிட்டுப் போய் மனைவியை அணை. இன்னும் kinky-யாய் தத்ரூபமாய் வேண்டு மென்றால், வீட்டுக் கராஜில் வாக்குவம் க்ளீனருக்குக் காதலி பேரை வைத்துக்கொள். அவளை நினைத்து இவளிடம் நெருங்காதே. நல்லதல்ல. பேராண்மைக்கு அவமானம் அது...’ சென்ற வாரம் அமெரிக்க ஆண்டி பொரிந்ததில் பொருளுண்டு.

ரேஷ்மாவை நினைத்து வேதாவை நெருங்கவில்லை. அது நிச்சயம். அதற்காக ரேஷ்மாவை நினைக்காதிருக்க வேண்டுமா? அவளே மறுதலிக்காதபோது அதைச் செய்வது அவள் பெண் மையை உதாசீனப்படுத்தும் செயல் அல்லவா? அவளைப் பற்றி நினைப்பதையெல்லாம் அவளிடமே பகிர்வதனால் வேதாவை நான் சிறுமைப்படுத்தவில்லையே.

ரேஷ்மாவிற்கு என்னுடன் மீண்டும் பழகுவதில் உடன் பாடு இல்லையென்றால், இன்றைய நிலையிலும் நேற்றைய காதலைப் பகிர்வது தன் மனத்திற்கும் குணத்திற்கும் கண்ணியமன்று என்றிருந்தால், இந்நேரம் தொடர்பைத் துண்டித்திருப் பாளே. மோகத்தின் தந்திகளை மீள்கொண்ட மையலை மன சாட்சி மறந்து மின் சாளரங்களில் மீட்டிட மாட்டேளே.

நான் நானாக இருக்கும் பட்சத்தில் அவள் அவளாகத் தானே இருக்கமுடியும். அவளால் என்னிடம் உள்ளத்து நேர்மையைத் தவிர வேறு எதைக் காதல் என்று பகிர்ந்துவிட முடியும்?

அவர்களைப் பெற்றவர் அவ்வுறவில் இனி இல்லை என்றாகி விட்டார்களா, திருமணமாகித் தாங்களுமே பெற்றோர் என ஆகி விட்டவர்களுக்கு. அன்றைய அண்ணன் இன்றும் என் அண்ணந்தானே. மன்னியும் சகியும் வந்தபிறகும்.

அன்றைய காதலர்கள் வெவ்வேறு தம்பதியர்களாய் இன்றிருந்தும் தங்க ளுக்கே சொந்தமான காதலை மீட்டுக்கொள்ளக் கூடாதா?

முடிவென்றால் ஒரே வழிதான். அது காதலுக்குத்தான் தெரியும்.

ரங்கா அலுவல் இருக்கையில் நிமிர்ந்து அமர்ந்தான்.

உந்துதல் என்பதே ஒரு காரியத்தைச் செய்யவேண்டியதற் கான காரணங்களைக் கண்டுகொண்டு பின் இடைவிடாது அவற்றை நினைவில் நிறுத்திக்கொள்வதுதானே.

கணக்கிலடங்காக் காரியங்களை நம்மால் செய்யமுடியும் என்றாலும், எவற்றைச் செய்வது என்று கண்டுகொள்ளாமல் இருப்பதையே 'போர் அடிக்கிறது' என்கிறோம். நிகழ் சலிப்ப டைவது இவ்வாறே. கடந்தவற்றை மனக்கண் முன் நிறுத்தி அவற்றை நோக்கித் தொடங்கப்பட்ட பயணம் செய்திறனை மேம்படுத்திக் காட்ட வல்லது. நிகழ் சுவாரஸ்யமடைவது இவ்வாறே. ஆனால் சுவாரஸ்யத்தை நோக்கிய அப்பயணத்தின் உந்துதலான கடந்தவை கானல் காட்சிகளே. சுகநினைவெச்சங் களை நோக்கிய அதன் பயணத்தின் பரவசத்தில் மனம் இதை மறந்துவிடக்கூடும். வாழ்வில் எதிர்காலத்தை இல்லை என்று நிகழ் கருதுவது இவ்வாறே. இவற்றையெல்லாம் பேசிப் பேசியே பொழுதை ஓட்டுவதில் அறிவுஜீவிகள் கில்லாடிகள். காதலில் விழுந்தெழுந்தவனை அறிவுஜீவி எனக் கொள்வதில்லையே இவ்வுலகம்.

'சூஸன், howdy... லிஸன், இந்தியா போணும்... அடுத்த வாரம்... நோ நோ, நான் மட்டுந்தான்... யெஸ், இரண்டு ப்ராஜெக்டுகள்... பூனேயில் கெமிக்கல் லாப் ஒன்று உள்ளது, அங்கு இரண்டு நாட்கள், அப்படியே... இல்லை, ஆன்வர்ட் பாம்பேக்கு போதும்…Business class... அவசியம் அடுத்த வாரமே போக வேண்டும். நான் சொல்லிக்கொள்கிறேன் வில்லியிடம்... வில்லி என்றால் உனக்குத் தமிழில் என்னவென்று தெரியுமா? வில்லன். Yeah, we know our Willie, ஹா ஹா... come again... நோ நோ, ஹோட்டல் வேண்டாம், நண்பர்கள் இருக்கிறார்கள்... லோக்கல் டிராவலும் நானே பார்த்துக்கொள்கிறேன்... yeah, local boy. திரும்புகையில் சென்னை ஏர்போட்டில் இருந்து... மறந்து விடாதே... யெப், பெற்றோர்... அண்ணனுடன்... வாலெட்டிற்கு அனுப்பிவிடு, மின்-டிக்கெட் போதும்... காலையில் இருந்து போனை நெட் வொர்க்கில்தான் இணைத்து வைத்திருக்கிறேன். இன்றே உறுதி செய்துவிட்டுச் சொல்... தேங்ஸ் ஸு... யா, செய்வோம்... இந்தியா வில் இருந்து திரும்பியதும், நிச்சயம்... வெடா... ஓ வேதாவிடம் சொல்கிறேன்... we'll go to a nice

Lebanese place I found...bye and have a good one...’

புறக் காரணிகளால் மட்டுமே அநியாயமாய் அநேக வருடங்கள் போக்குவரத்து நெரிசலில் ஓரிடத்தில் சிக்கிக் கொண்ட மகிழ்வூர்தி, தற்செயலாய் வாழ்க்கைப் பாதையில் பிளந்த சந்தர்ப்ப இடைவெளியில், காவல் கட்டுப்பாடு, எச்சரிக்கை சிவப்பொளி, பின்னால் வந்தவன் என்று பாத்திரா மல், நிகழில் இருந்து மீண்டு, வயதுகளில் விடுபெற்று, மிச்ச வாழ்நாளில் விட்ட காலங்களை மீட்டெடுக்கப் பாய்ச்சலாய்ப் பயணமாகும் வேகத்தில், விபத்துகள் மலிந்த வேகத்தடைகளற்ற சாலையில் ரேஷ்மாவுடனான காதலை நோக்கி விரைந்தது வேதவல்லி மணாளனான ஸ்ரீரங்கம் ரங்கநாதனின் மனம்.

அமெரிக்காவோ இந்தியாவோ, பூத்துவிடும் பருவகால மென்று ஏதுமில்லையே நித்யகல்யாணிக்கு.

# 5

## பெங்களூர். நேற்று.

பருப்பற்ற சாம்பாரும் பந்தலற்ற கல்யாணங்களும் புகையற்ற அடுப்புகளும் புகைபிடிக்கும் அணங்குகளும் எனச் செழிக்கும், சொந்தமாய் சிறு நதியற்ற 'பூங்கா நகரம்' பெங்களூரு மேட்டிமைக் குளிரில் சோம்பிச் சுருண்டிருந்த அதிகாலை.
புண்ணாக்கு சாப்பிட்டிருந்த பூவுலகப் பொதுமக்களைப் பத்தாண்டுகளில் பர்க்கர் சாப்பிடப் பக்குவப்படுத்திய ஐடி தொழிற் துறை எனும் உலகலாவிய வர்த்தக வெண்குடையின் கீழ் அமெரிக்கப் பகல் வேலைகளை விழித்திருக்கும் இந்திய இரவு வேளைகளாகவும் அமெரிக்க இரவுத் தூக்கங்களை இந்தி யப் பகல் வேலைகளாகவும் அவுட்ஸோர்ஸ் செய்துகொள்வதில் முன்னோடியானதில் பெங்களூரின் உபநகரமாய்த் தன்னை அறிவித்துக்கொண்டுவிட்ட எலக்ட்ரானிக் சிட்டியின் ஈசான மூலையில் வாசலில் மின்விளக்குப் பொருத்திய கண்ணாடிப் புரையின் அருகே கருப்புக் கயிறில் சுற்றிய வெள்ளைப் படிகக்கல் தொங்கும் பளிங்குப் பாளங்கள் பதித்த தங்கள் அடுக்கக அரண்மனையில் அதிகாலைக்கு அலார்ம் வைத்து அபிக்கு முன்னரே எழுந்து துணிமணிகளைப் பையில் எடுத்து வைத்துக் கொண்டிருந்தாள் ரேஷ்மா.

தாய்வீடு செல்ல எந்தப் பெண்ணிற்குக் கசக்கும்! தாயை மட்டுமா பார்க்கப் போகிறாள்...

'உங்களுக்கு சாடர்டே சண்டே ஸ்கூல் லீவ், வீட்டுல ரெஸ்ட் எடுத்துக்கறீங்க இல்ல? மம்மிக்கும் ரெஸ்ட் வேணு மில்ல? சொல்லுங்க... மம்மி டூ டேஸ் பாட்டி வீட்டுக்குப் போயிட்டு, ஃப்ரெண்ஸப் பாத்துட்டு வர்றேன் சரியா. நீங்களும் டாடியும் ஜாலியா பாய்ஸ் ஒன்லியா வீட்ல இருப்பீங்கள்ல?'

ஆறுவயதுக் குழந்தையை ஒரு வாரமாய் தாஜா செய்து வைத்திருந்ததாய் நினைத்தாள். என்றுமில்லாமல் இன்று அதி காலையில் அவர்கள் படுக்கையறையில் ஒலித்த அலாரத்திற் குத் தான் தூங்க வைக்கப்பட்டிருந்த தனியறையில் விழித்துக் கொண்டு அவள் படுக்கையில் இறைந்திருந்த துணிமணிகள் மேல் உருண்டபடி 'நீங்க போயிட்டீங்கன்னா யாரு எனக்கு டிரெஸ் செஞ்சு விடுவாங்க? டாடிக்கு தலை சீவவே வராது...' தூக்கம் வடியாத முகத்தைத்

தூக்கிவைத்துக்கொண்டது அது.

'ஐயோ... எந்திரிடா. இஸ்த்ரி செஞ்சதெல்லாம் கசக்கி... ஒன்னிய யாரு விடிகாலைல எந்திரிச்சு... ஸ்கூல் போக ஒருநா இப்டி எந்திரிக்லாம்ல.' முகம் சுருங்கியவனைத் தூக்கி இழுத்து அணைத்தவாறு, 'இல்லைங்க செல்லம், மம்மிய விட டாடி நல்லாத் தல சீவுவாங்க. அவுங்க தினம் செஞ்சிக்கறாங்களே. உங்கள பார்க்குக்கு கூட்டிட்டுப் போவாங்க...' வெளியே சமாதானச் செயல்பாடுகளும் சொற்களும் ஓடிக்கொண்டிருக்கையி லேயே மனத்தினுள் ஆயாசம். எழுந்ததுமே எரிச்சல்... தூக்கமில்லையா? அபி எழுந்திரிச்சித் தொலைக்கலாம். எத்தன சொல்லியும் நேத்திக்கும் லேட்டு. பதினோரு மணிக்கு வந்து படுத்தா... பேருதான் கம்பெனி சிணிளி. படுறது நாய் பாடு...

கலவையான உணர்ச்சிகளோடு பையைக் கட்டியதில், எதை எடுத்து வைத்தோம் வைக்கவில்லை புரியவில்லை. கட்டி லில் கசங்கி இறைந்திருந்த துணிகளை லாண்டரி கூடையில் அடைத்தாள். வந்து சரிசெய்வோம். நோ, நாளை அபியை டிரை கிளீனருக்குப் போடச் சொல்லணும். லீவுதான. செய்யட்டும்...

'மம்மி... நானும் உங்ககூட வர்றேனே மம்மி...'

'எங்கூட வந்துட்டீங்கன்னா பர்த்டே பார்ட்டிக்கு எப்டிப் போவீங்க. அவ உங்க பெஸ்ட் ஃப்ரெண்டு தானே... நீங்க போலன்னா அழ மாட்டாங்களா.' சரியான எதிர்வாதம். குழந்தை அடங்கி விட்டதாய் நினைத்தாள்.

'யாரு கூட்டிட்டுப் போவாங்க? கிஃப்ட் மம்மி?'

'டாடி கூட்டிட்டுப் போவாரு செல்லம். கிஃப்ட்டை அப்புறம் நான் வந்தாவுட்டு கொடுத்துக்கலாம், ஒகே?'

'நீங்க வந்தாட்டு, எனக்கும் கிஃப்ட் வேணும் மம்மி...'

'அது சரி, குடுத்துட்டாப் போவுது.' என்ன கிப்ட் என்று கேட்பதைக் கவனமாய்த் தவிர்த்தாள்.

'நாய்க்குட்டி. நீங்க சின்னப்ப வெச்சிருந்தீங்களே, மெகா பைட், அது மாரியே வேணும். ஸ்கூலுக்கு கூட்டிட்டுப் போலாமா? கார்ல கூட்டிட்டுப் போலாமா மம்மி? மம்மி, டிங்கு கொக்காட்டு வெச்சிருக்கான்... கார்ல வெச்சா பறந்திரும்ல...'

ரேஷ்மாவிற்கு அயர்ச்சியாக இருந்தது. இதே சமா தானத்தை இன்னும் எத்தனை முறை செய்யவேண்டும்? நாய்க் குட்டி வேண்டாமென்று அவளா சொல்வாள்? ஒன்றென்ன, நான்கு வளர்க்கத் தயார். அபிக்கு வீட்டிற்குள் விலங்குகள் ஒவ்வாது. காதலிக்கையில் அனைத்தையுமா கேட்டுச் சரிபார்த்துக் கொள்ள முடியும்? அதுவும் ஒரு நிராகரிப்பிற்குப் பிறகான மறு காதலில்...

நாம் அதற்குத் தயார் என்கையிலேயே காதலிக்க வேண்டும்; தனிமை என்பதால் செய்தால் இவ்வாறுதான்...

இதற்கு இப்போது நேரமில்லை. கோதாஸ் காபி பொடி பில்டரில் இறங்கியிருக்கும். திக்கா குடிச்சா தலைதூக்கும் எரிச்ச லைக் குறைக்கும். நாளை அம்மா காபி. இதம்...

‘சரி, பாக்கலாம், நாய்க்குட்டி தான். கொக்காட்டு கிக்காடு லாம் கெடயாது. ஊருக்குப் போகவிட்டாதான். சரியா? கிளம் புங்க. இன்னிக்கி ஸ்கூல் வேன்லயே போய்டுங்க. லேஸச் சரியாக் கட்டுங்க... அய்யோ, ஐடி கார்டு இங்கயே இருக்கே... ப்ரேயர் ஹால்ல நிக்கவெச்சிருவாங்க...’ பையன் பின்னால் ஓடினாள். இப்போ ஓடிவிடுவதே நல்லது. பேரண்ட்ஸ்-டீச்சர் மீட்ல ‘எஜுகேட்டட் ப்ரொஃபெஷனல்ஸ் நீங்களாமே கொழந்தய டிஸிப்ளினா அனுப்பி வைக்கறத ப்ரச்சனையா நெனச்சிங் கன்னா...’னு அந்தப் பன் கொண்டை ஹெட்மிஸ்ட்ரஸ் நக்கலா இழுக்கறத்துக்கு பதில் நானில்ல இளிக்கணும்...

‘நீயே இந்த PTAக்கு போய்ட்டு வந்துரும்மா. நீ தான் மேன் மேனேஜ்மெண்டுல எக்ஸ்பெர்ட்...’ எதையாச்சும் சொல்லி நம்ம தலைல கட்டிட்டு அபி தப்பிச்சுருவாரு. ‘நாங்க ஆர்ம் சேர் திங்கர்ஸ். சல்யூஷன்ஸ் கொடுத்துருவோம். செய்றத ஆக்ஷன் வுமனிடம் விட்டுர்றதுதான் சரி... ஈக்குவல் ஆப்பர்சுனிட்டி பேச றோம்ல...’ குடும்பப் பொறுப்புகளில் முடிகிறவரை தப்பி விடும் ஆண்கள். எதையோ சாதிப்பதற்கென்று சாக்குபோக்கு... இண்டக்ஷன் அடுப்பில் இட்ட தோசைக்கல் நீர்த்திவலை களானது எரிச்சல். தனக்குத் தேவைங்கறப்ப மானே தேனே My sensible half, ஒன்ன மறப்பனான்னு கொஞ்ச வேண்டிது... ஏழு மணிக்குள்ளார வந்து தோசைய ஊத்தி வெக்கச் சொன்னா எங்க போய்த்தொலஞ்சாளோ. இவ இன்னிக்கீ...னு லேட்டு...

பெண் தாய்வீட்டிற்கு இரண்டு நாட்கள் போகத் தன் வீட்டை எவ்வளவு

தயார் செய்ய வேண்டியுள்ளது. அபியைப் போல நான்கு துணிகளைப் பையில் வைத்தோமா கிளம்பினோமா என்றில்லாமல். சில மணி நேரங்களே. பிறகு ரங்காவைச் சந்திக்கப் போகிறாள். உற்சாகம் கரண்டியில் குழித்துச் சுழித்த குளிர் மாவாய் தோசைக்கல்லில் பொரிந்த எரிச்சலை மறைத் தது. வெங்காய ஊத்தப்பமாய்த் தனக்கு வார்த்துக்கொண்டாள்.

எப்படி இருப்பான் இப்போது? முகநூலிலும் மின்னஞ்சல் முக உருவிலும் நித்யகல்யாணிப் பூவின் படத்தையே வைத்திருக்கிறான் - கள்ளன், எதையும் மறக்கவில்லை. தனியே காலை உலா சென்றிருந்த அபிக்கு இரண்டை சரியான அளவில் வார்த்து ஹாட்-பேக்கில் மூடினாள்
.
படிக்கும்போதே மீசைமுளைக்காத அழகன். இப்போது ஜிம் போகிறானாம். முறுவலித்தாள். மீசை வளர்த்திருப்பானா? இல்லை அபியைப் போலவே... குளியலறையில் ஆடை நெகிழ்த்திய தேகத்தைப் பக்கவாட்டில் கண்ணாடியில் பார்த்துக் கொண்டாள். வயிற்றை எக்கியதில் சுருட்டி வலித்தது. ஹேண்ட் ஷவரின் சூடான நீர் ஸிஸேரியன் வடுவைச் சுழித்து இறங்கிய தில் இதம் இம்சித்தது. பின்புற தேகம் பெங்களூர் குளிரில் சிலிர்த்தது. இரண்டு மாதங்கள் பார்க்கவில்லை, இன்னும் சில மணி நேரங்கள் முடியாதா? அப்புறம் ஆளே என் கையில்தான்.

படுக்கையறை ஒப்பனை மேஜையின் முன் அமர்ந்தாள். கண்ணாடியில் தெரிந்த முகம் பதினைந்து வருடங்களாய் அதிகம் மாறாமல் இருப்பதற்குக் காரணம் வாரமொருமுறை தலையில் பூசும் கருமையும், முகத்தில் பூசும் களிம்பும்தானோ. முகம்தான் மாறவில்லை. உடலில் மாற்றங்கள் பல. குழந்தை பெற்ற பெண்ணுடல் தன் பிறவிப்பயன் தீர்ந்துவிட்ட ஆயாசத்தில் கட்டுக்கோப்பைத் தளர்த்திக்கொண்டு விடுகிறதோ. இவள் உண்ணும் அதே உணவைத்தானே அபியும் தினம் உண்கிறார், அவர் மட்டும் அன்று கண்டதுபோலவே இருக்கிறாரே. ரங்கா கவனிப்பானோ வயிற்றுப்பகுதியில் புதிதாய் தோன்றியிருக்கும் பையை? மாட்டான். காலேஜிலும் ‘நீ அழகாய் இருக்கிறாய்’ என்று ஒருமுறையும் நேரடியாகச் சொன்னதில்லை. அபியும் சொன்னதில்லை. ஆண்களே அப்படித்தானோ. நமக்கு வாச்சது தான் இப்டி... ‘How is my sunshine today...’ ஆபீஸில் சில மாதங்கள் பழக்கத்தில் ஜூனியர் புரொக்ராமர் போன வாரம் ஈமெயில் அனுப்புகிறான். நான் சிரிச்சா தீபாவளியாம் அவனுக்கு. கல்யாணம் ஆகிக் கொழந்த இருக்கு தெரியுமில்லன்னா ‘அது உங்குளுக்குத்தான, எனக்கில்லயே’ங்கறான்...

என்ன சின்னப்பசங்க லாஜிக்கோ...

‘ஓலா கேப் வந்து வெயிட்டிங், இன்னுமா கிளம்பல?’ கையில் பேப்பருடன் எட்டிப்பார்த்தார் அபி.

தலையைக் கோதி உடைக்கேற்ற பச்சை நிற க்ளிப்பினுள் பட்டுப்போன்ற முடிக்கீற்றைச் சிறைப்படுத்திக் கொண்டிருந்த ரேஷ்மாவுக்கு எரிச்சல் மீண்டும் தலைகாட்டியது.

‘காலைல மூணு பேப்பர் படிக்கறதுக்கு ஒங்க மவன ஸ்கூல் கௌப்ப உதவிருந்தா நேரத்துக்கு கிளம்பிருப்பேன்.’

‘குளிப்பாட்டி டிரெஸ் போட்டு விடறேன்னு சொன்னேனே. உங்களுக்கு டிரெஸ் பண்ணத் தெரியாதுன்னு தொரத்தின.’ கண்ணாடியைக் கையில் இறக்கியதும் அபியின் சிவந்த முகத்தில் இளமை திரும்பியதைக் கவனித்தாள். இல்லாத மீசையின் நரையை இல்லாத தொப்பை சமனிட்டது.

‘உங்ககிட்ட விட்டா தெருக்கூத்தாடி மாதிரி கிளம்புவான் - அவனே சொல்றான் டாடிக்கு டிரெஸ் செஞ்சுவிடத் தெரியா துன்னு.’ அருகில் வந்து அபியின் மூக்கை நிமிண்டினாள்.

‘ஆம்பளைக்கு என்ன பெரிய? ஒரு டிராயர் ஒரு சட்டை...’

இத்தன நேர்த்தியா உடுத்திக்கிட்டு வந்து நிக்கறேனே... அப்டியே இழுத்து வளச்சி... ம்ஹூம்.

‘நீங்க போட்டுக்கறீங்களே பச்சை பேண்ட், நீலச் சட்டை... கம்பெனி சிஇஓ...’

‘லேட்டாயிடிச்சி, கௌம்பு. ஒருமணிக்கு பிக் அப் பண்ண வர்றேன், ப்ளைட் நாலு பத்துக்கு.’ மீண்டும் பேப்பருடன் உறவு.

அதான... சண்டையைக் கூட தொடரமாட்டாரே. ஒடனே அடங்கிப்போய் நாமதான் தப்பாச் சொல்லிட்டொமோன்னு ஆக்கிட வேண்டிதுு. இப்ப இந்த ரயில் டிக்கெட் விவகாரம். நினைத்ததும் கடுப்பு ஏறினாலும் இனிமே திட்ட முடியாது.

திருச்சியிலிருந்து திரும்புவதற்கு அப்பா ரயில் டிக்கட் வாங்கிவிட்டார், போவதற்கு மயிலாடுதுறை எக்ஸ்ப்ரெஸில் டிக்கட் போடுங்கள் என்று அபியிடம் சொல்லியிருந்தாள் ரேஷ்மா. வழக்கம்போல் பிசினஸில்

மூழ்கி மறந்திருந்தார்.

‘…சிஸ்டம் லெவல் ப்ரொகிராமிங் செய்ற ஸ்டார்ட்-அப்ப வளர்க்கறது சும்மாவா? டைட் ஷெஜூல்மா… போய் ஒக்காந்தா லஞ்ச்சே மூன்றரைக்கு தான்…’ பாவம். சொல்வதும் சரிதான். பாதிநாள் மதியம் சாப்பிடுவதே இல்லை. கம்பெனி தொடங்குங்கள் நானும் வேலைக்குப் போகிறேன் என்று நானே உந்திவிட்டு இப்போது திண்டாடுகிறேன்… இப்படி விமானத்தில் போவதும் ஒருவகையில் நல்லதுதானே. மயிலாடுதுறை எக்ஸ்ப்ரெஸ் நாளைக் காலையில் போய்ச் சேரும். காற்றில் பறந்தால் முக்கால் மணி. இன்றைக்கே ஸ்ரீரங்கம். ரங்கா வரும் முன்னர் அங்கிருக்கலாம்.

‘ஒரு மணியா? ஆர் யு ஜோக்கிங்? ஃப்ளைட் நாலரைக்கு. ஒரு மணிக்குக் கிளம்பினா பத்தாது. லெவன் தெர்ட்டிக்கு வந்துருங்க.’

‘நாலரை மணி ஃப்ளைட்டுக்கு பதினொண்ணரைக்கு… பைத்தியமா நீ? ஒரு மணிக்குக் கிளம்பினா…’

‘பெங்களூர்ல ஆறு வருஷத்துக்கு மேல இருக்கீங்க, டிராஃபிக் பத்தி ஒண்ணுமே தெரியாத மாதிரி பேசறீங்களே. இங்கேந்து ஏர்போர்ட் போவணும். டிராஃபிக் ஜாம்ல மாட்டினா ஃப்ளைட் திருச்சி போய்ட்டு திருப்பிட்டு வந்துரும்.’

‘இதுக்குதான் பஸ்ல போயிடுங்கறேன். இங்க எலக்ட்ரானிக் சிட்டில புடிச்சா அரைமணில ஹொஸூர், அப்டியே கிருஷ்ணகிரி, சேலம்… எட்டு மணிநேரத்துல திருச்சி. ஏர்போர்ட் போகவே நாலு மணிநேரம், ஃப்ளைட் ஒரு மணிநேரம்…’

ஒடனே சின்னப்பிள்ளையாக்கி வழி சொல்ல வேண்டிது. ‘பஸ் எல்லாம் ஆவாது. மேல மேல பட்டுக்கிட்டு… ஒங்களுக்கு என்ன? ஏர்போர்ட்ல விட்டுட்டு வீட்டுக்கு வரப்போறீங்க. நானில்ல போறேன்.’ சொன்னதைத் திருத்த முடியாது என்பதை உணர்வதற்குள் பிடித்துக்கொண்டார்.

‘போய்ட்டு வர்ரேன்னு சொல்லு. அம்மா இல்லை. தப்பிச்சிட்ட. உன்ன ஏர்போர்ட்ல விட்டுட்டு தனியாத் திரும்ப நாலு மணி நேரம் ஓட்டிட்டு வரணும். வீடு வர நீ திருச்சி போய்டுவ.’

‘அதுக்குத்தான் சொன்னேன், சின்னதாதான் இடிச்சுருக்கு, என் காரை இப்போ சர்வீசுக்கு விடாதீங்கன்னு. பரவால்ல. ஒங்க காரக் குடுங்க.

அதான் அத்தை ஊர்ல இல்லல்ல. தெரியாது. நான் ஓட்டிட்டே திருச்சி போயிடறேன். ஒங்களுக்குதான் கார் ஓட்டப் பிடிக்காது. எனக்கு அப்டி இல்லன்னு தெரியும்ல...'

'அந்தக் கதையே வேணாம். நூறு கிலோமீட்டர் வேகத்துல பறப்ப. ஏற்கெனவே சிட்டிக்குள்ள சிக்னல்ல இடிச்சாச்சு. ஒன்ன நம்பி ரெண்டு ஆம்பளப் புள்ளங்க இருக்கோம், மறக்காதே.'

இரண்டல்ல, மூன்று. நாக்கைக் கடித்துக்கொண்டாள். கைப்பை கோப்புகள் மடிக்கணினிப்பை என்று சரிபார்த்தபடி யோசித்தாள். மனம் தறிகெட்டு அலைகிறதோ. இன்றா இரண்டு மாதங்களாகவா? இவ்வாறு இன்றும் நினைக்கும் உரிமையை இரண்டு மாதங்களாய் இணைய அரட்டைப் பரிமாற்றங்களில் உருவாக்கி வைத்துவிட்டானோ. கனிவான கணவன் குழந்தை கார் பணம் என்று மகிழ்வான குடும்பமாய் வாழ்க்கை சீராய் இருப்பதே சலிக்கிறதோ. முடிந்து போனதை மீண்டும் தொடங்கிக் குழப்பிக்கொள்கிறேனா. நட்பாய்ப் பார்க்கவே வந்திருப்பதாய் ரங்கா கருதினால்? ம்க்கும். கனவுகளைப் பரிமாறிக்கொள்ள வேண்டியதில்லையே, நண்பர்கள்...

'சரி, நான் கிளம்பறேன். கணிக்ஸ் ரெண்டு வாட்டி போன் போட்டுட்டாங்க. ஆபீஸ் போன்ல மெஸேஜ் வந்துட்டேருக்கு. (யாரிடமிருந்து என்று அவளுக்கா தெரியாது?) என் பைய வரும்போது எடுத்திட்டு வர்றீங்களா? ஆபீஸ்ல வெக்க வேணாம்...'

வெராண்டாவில் நின்று யோசித்தாள். 'விஜயாம்மா வருவாங்க, நீங்க காத்திருக்காதீங்க. அவங்ககிட்ட வீட்டுச் சாவி இருக்குது. சும்மா புள்ள கேட்டுதுன்னு ஐஸ்க்ரீம் வாங்கிக் கொடுக்காதீங்க. இப்பத்தான் கொணமாகிருக்கு. எதுனாச் சும்னா போன் செய்ங்க. ஐயோ மறண்ட்டேன் பாருங்க பால் ஆயிடிச்சி, வாங்கிட்டு வந்துருங்க. நந்தினி குட் லைஃப். டெட்ராபேக்ல இருக்குமே. கேட்டு வாங்குங்க. காய்ச்ச வேணாம். சுடவெச்சிக் குடிக்கலாம். குட்டிக்கு நைட் மைலோ கொடுக்க வேணும்.'

'ஆடிட்டர் ஆபீசுக்குப் போகணும். பால் வாங்க முடியாது. விஜயாம்மாவையே வாங்கச்சொல்' என்று அபி சொல்வது முழு தாய்க் காதில் ஏறும்முன்னர் கேபில் ஏறினாள் ரேஷ்மா.

***

ஆபீஸில் முதல் ஈமெயில், எதிர்பார்த்தபடி - ‘சில மணி நேரங்களே.’ இப்போதிலிருந்து சரியாகப் பதினொன்றரை மணி நேரம், ரங்கா. மணிக்கட்டுக் கடிகாரமுள்ளைக் கையால் தள்ளி விடவேண்டுமென்றது மனம். இன்றைக்கு வேலை ஓடாது. ரங்கா இன்று காலை அரட்டைக்கு வரமுடியாது என்று வாட் ஸாப்பில் சொல்லியிருந்தான். பறிகொடுத்தாற்போல் இருந்தது. அல்லது பறிகொடுத்துவிட்டதை மீண்டும் நினைவினில் அசை போடவைத்துக் குரூரமாய்க் கெக்கலிக்கிறதா ஆழ்மனம்? ஓரிரு மாதங்களாக ஆபீஸ் வந்தவுடன் ஒரு மணி நேரம் அவனோடு அரட்டை அடிப்பதை வழக்கமாக்கிக் கொண்டிருந்தாள். ஜஸ்ட் ஸ்வீட் நத்திங்ஸ். அவளுக்கென்று தனி அறை. உத்தரவின்றி யாரும் நுழையமாட்டார்கள். ரங்கா போல... இல்லை. அவனையும் நானே அனுமதித்தேன். வேண்டாமென்றால் நானே...

வழக்கத்தைவிட வியர்த்தது. பெங்களூரும் சூடாகிறதோ. அமெரிக்கா போவதுதான் வழி... அமெரிக்காவில் இருந்தபோது நிறைய அரட்டையடித்தான். இந்தியா வந்து வாட்ஸாப் மட்டும். அண்ணா வீட்டிலிருந்து அரட்டை முடியவில்லை.

இருக்கையை நிமிர்த்தி இரண்டாவது மெயில் பார்த்தாள். ‘உன்னுடன் அவசரமாகப் பேச வேண்டும்.’ அவளைத் தோழியாகக் கருதும் அவளுடைய பாஸ்.

என்ன அவசரம்? ஆபீஸ் மொபைல் ஒலித்தது. பாய்ந்து எடுத்தாள். ரங்கா அல்ல. பாஸ். ‘ஹேய்... மார்னிங் கணிக்ஸ்.’

‘இல்ல ரேஷு, Bad morning...’ குரல் சோக ரகசியமாய்.

‘ஹேய், வாட் ஹேப்பண்ட்? ஏதாச்சும் டவுன்சைஸிங்கா? வேல காலியா?’ குரல் உற்சாகத்தை முண்டினாலும் சே, இன்னிக்குப் போயா நடக்கணும்...

அனுமானங்களினாலும் இன்று ரேஷ்மாவின் எரிச்சலைப் பற்றவைக்க முடிந்தது.

பிரச்சனை வேறுவிதம் என்பது எதிர்ப்புறம் முனகலில் புரிந்தது. ‘காபி ஷாப் வர முடியுமா, ரேஷ்மா...’

ஆபீஸ் இருந்த பத்து மாடிக் கட்டடத்தின் மேல்மாடி காபி ஷாப்பில் ரேஷ்மா நுழைந்தபோது அவள் பாஸைத் தவிர ஓரிருவரே புழங்கினர். இப்போதுதான் ஆபிசுக்குள் நுழைந்திருப்பார்கள். சீட்டிற்கு

போவதற்குள் அனைவருடனும் குசலம் விசாரித்துவிட்டு இருக்கையில் மின்னஞ்சல், முகநூல், டுவிட்டர், இணைய செய்தித்தாள்கள் மேய்ந்து களைத்து பத்து மணி வாக்கி லேயே காபி ஷாப்பில் களைகட்டுவார்கள்.

‘என்ன இன்னிக்கி ஒன் பாஸ் வந்ததுமே ஃபைர் இஞ்சினத் தொடங்கிட்டாங்க போல. ப்ராஜெக்ட் ஊத்திக்ஸா?’ புகை மூட்டமாய்க் கேட்டபடி வெளியேறிக்கொண்டிருந்த சகாவிடம் ‘அதான் அணைக்க போய்ட்டுருக்கேன்...’ என்றபடி மேயும் அவன் கண்களைக் கவனியாதது போல ‘பொறுக்கி... போய் பொண்டாட்டிய கழட்டிக் காட்டச் சொல்றதுதானே...’ என்று மனத்தினுள் சபித்தபடி கடந்து மூலை டேபிளின் ரெக்ஸின் வெண்குடையின் கீழ் அவள் மேலாளரின் எதிரில் கைகளால் உடையைப் பின்புறம் தழைத்தவாறு அமர்ந்தாள்.

எதிரே குனிந்திருந்த கணிக்ஸிடமிருந்து ஒரு விசும்பல்.

ஐயோ, அழுகிறாளா? கையில் புகைந்துகொண்டிருக்கிறதே. நிமிர்ந்தவள் கண்கள் கன்னடப் பெண்களுக்கே உரிய அசட்டு வெளிர் முகத்தில் தக்காளியைவிடச் சிவந்திருந்தது. இரவெல்லாம் பார்ட்டியா... இல்லை, அழுதிருக்கிறாளா?

‘ஏய்...’ கனைத்துக்கொண்டு சரியான ஆங்கிலத்தில் தொடங்கினாள். ‘என்ன ஆயிற்று? வாட்ஸ் கோயிங் ஆன்?’ பெங்களூரில் ஆறு வருடங்கள் இருந்ததில் ‘பேக்கு, பேடா’ போன்ற அத்தியாவசியச் சொற்களுக்கு மேல் கன்னடம் வர வில்லை ரேஷ்மாவிற்கு. அலுவலில் அனைவரும் ஆங்கில அபிமானிகள்.
எதிரே அமர்ந்திருந்தவளிடம் பேச்சில்லை. செயலிருந்தது.

பிளாட்டினம் லைட்டரில் இன்னொன்றைக் கனற்றி ஓரிழுப்பில் இருதயம் நிறைத்தாள். பாக்கெட்டை மேஜையின் மீதாய் ரேஷ்மாவிடம் விசிறினாள். டன்ஹில்.

‘நோ தேங்ஸ். Done with it for good way back...’ ‘ஓ... பச்... ஸாரி... ஃபர்காட்...’ என்றிருந்தவளிடமிருந்து எழுந்து காபிஷாப் அருகில் வெண்டிங் மெஷினிலிருந்து ஒரு பாட்டில் நீரைக் கொண்டுவந்து கொடுத்தாள் ரேஷ்மா.

‘அழாமல் சொல்லுங்கள், என்ன ஆயிற்று?’

திருத்திய புருவங்கள் நெரித்தன. புகையேந்திய விரல்கள் இடையே

நெற்றிச் சுருக்கத்தைப் பற்றித் தட்டி முடிகோதின. வாய் அடியிலிருந்து ஆங்கில எல் வடிவமாய்க் காதுவரை ஏறிய தாடைகள். உள்ளே குறுக்கே நீண்ட சாயம் பூசிய தடித்த உதடு களை எட்டிப்பார்க்கும் நீண்ட மையத்தில் கூர்மையான கருட மூக்கு. அழுததில் கூர்மையின் இருபுறமும் நாசி உள் மடிந்து துடித்தவண்ணம். கருடன் சிரித்திருக்கையில் பிளக்கும் அவ்வுதடு களை இரண்டு ( ) வடிவத்தினுள் அடக்கிக் கொப்பளிக்கும் புஷ்டியான கன்னங்கள். இன்று கண்ணீர்க் கறையுடன்.

'That motherfucker left me... போய்ட்டான்...'

கணிக்ஸின் குரல் திணறியது. தமிழ்ப் பெண்களுக்கு வாய்த்திராத வெண்மையில் கன்னடக் கடலோரப் பெண் முகம் சாயங்களின் உள்ளிருந்து கோபம் காட்ட முயன்றது.

'என்ன...' இத்தனை கொச்சையாக யாரை... கணவனையா.

'பதினைந்து வருட தாம்பத்தியம் பொருளில்லாமல் இருக்கிறதாம். ஓஷோவிடம் தஞ்சம் அடைந்துவிட்டாராம். Bull Shit.' ஒற்றைப் பிளாட்டின வளையல் ஒலிக்கக் குத்தினாள்.

'யார் உங்கள் கணவரா? என்ன செய்தார்... ஓஷோவென் றால், ரஜ்னீஷா? இறந்துவிட்டாரே... Am I right? விவரமாகச் சொல்லுங்கள். தட் இஸ்... முடியுமென்றால்...' ரேஷ்மாவிற்குப் பரபரவென்றிருந்தது. தரையில் அவளுடன் நகர்வதற்கு அலறிய சேரை பக்கவாட்டில் திருப்பி கணிக்ஸின் அருகில் அமர்ந்தாள்.

'ரஜ்னீஷ்தான் போய்ட்டார். அவர் பேரைச் சொல்லி இங்கயே பெங்களூரில் பணக்கார கும்பல் ஒன்று உள்ளது. ஒரு பெரிய வீட்டில் ஒன்றாய் free love என்று கூத்தடிக்கிறார்கள்.' குரல் சற்று நிலைபெற்றது. 'கூத்து என்ன கூத்து, வேண்டியப்ப Just fuck each other's brains out... இந்தாளும் சன்யாசம்னு அங்கு போய் சேரப்போகிறார். Fucking moron...'

வழக்கமான வாரம் ஒருமுறை புலம்பும் பிராஜெக்ட் டைம் ஷீட், downtime loss, bench pay, நல்ல ஆட்கள் பற்றாக்குறை, மோச மான ஆட்களை நீக்கமுடியாத குறை போன்றவை இல்லை இந்த விஷயம். இன்னிக்கிதானா வரணும்... இப்போது ரேஷ்மா விற்கு அதே வகைக் கெட்ட வார்த்தைகள் மனத்தினுள் எழுந்தன. 'என்ன உளறல் இது கணிக்ஸ் நிஜமாகத்தான் சொல்கிறீர்களா? என்ன ஆச்சு? Why

suddenly?’

‘ரெண்டு மாதங்களாகவே தியானம் செய்ய என்று தினம் சென்று கொண்டிருந்தார். நேற்று நான் ஆபிசிலிருந்து திரும்பு வதற்குள் ‘நான் ஓஷோவிடம் போகிறேன், தேடாதே. அவரவர் வாழ்க்கையைத் தனித்தனியேதான் அனுபவிக்க வேண்டும். குடும்பம் என்பது தளை...’ என்று ஏதேதோ எழுதி வைத்து விட்டுத் துணிமணி வங்கி பாஸ்புக் ஏடிஎம் அட்டை - மறக்காமல், பார்த்துக்கொள் - எல்லாம் எடுத்துக்கொண்டு போய் விட்டார்...’ கணிக்ஸின் வாயிலிருந்து ஆங்கிலமும் புகையினூடே கான்வெண்ட் பள்ளியில் பழக்கிய பரிச்சயத்துடன் நேர்த்தியாய் வெளிப்பட்டது.

‘...நான் அந்தாளோட நண்பர்களுடன் பேசிக் கண்டு பிடித்தேன் இரவு அந்தக் கும்பலைப்பற்றி. இரண்டு மாதங்களாக வேலைக்கும் செல்லவில்லையாம், நேற்றுதான் தெரிந்தது’ உள்ளிழுத்ததில் கணிக்ஸின் கோபம் சிகரெட் முனையில் கனன்றது.

‘சன்யாசம். Bull shit. Open love என்கிற பெயரில் எவரும் எவருடனும் குண்டியடிக்கலாம் என்பதே சன்யாசம் என்றால் நான் மதர் தெரஸா...’ புதிதாய் அழத் தொடங்கினாள்.

ரேஷ்மாவிற்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை. ‘கணவன் என்னை விட்டுப் போய்விட்டான்’ என்று அழும் பெண்ணிடம் என்ன சொல்வது? ‘போகட்டும் விடு...’ என்றா?

‘பதினைந்து வருடங்கள் என்னுடன் வாழ்ந்து, ஒரு மகளை யும் பெற்றுவிட்ட பிறகே தெரிகிறதாம் ஒரு பெண்ணோடு கொள்வது அன்பு இல்லை சுயநலம், அனைவரிடம் கொள்வதே அன்பு என்று. அந்த வீட்டிற்குப் போய் இருப்பவர் அனைவரிட மும் அன்பு செலுத்தப்போகிறாராம். Fucking dog. என்ன அன்பு எது வழியாச் செலுத்துவான்னு நமக்குத் தெரியாத மாதிரி’ கேவலினூடே இரைச்சலிட்டாள்.

‘ஷ்ஷ்... கணிக்ஸ். கட்டுப்படுத்திக் கொள்ளுங்கள். குழந்தை எங்கே?’ ஆபிஸ் பார்ட்டிக்கு ஒரு நாள் வந்திருந்து தன் குழந்தையுடன் விளையாடியது ரேஷ்மாவிற்கு நினைவில்.

‘அம்மா வீட்டிற்கு அனுப்பிவிட்டேன். அப்பா அந்தாளுடன் பேசிப்பார்க்கலாம் என்று போயிருக்கிறார். வீட்டில் இருந்தால் எனக்குப் பைத்தியம் பிடித்துவிடும்.’

‘நீங்கள் அவரோடு பேசவில்லையா?’

‘மொபைலை அணைத்து வைத்திருக்கிறார். அந்த வீட்டிற்குச் சென்றேன். வாசலில் ரைஃபிள் வைத்த காவலன் துரத்துகிறான். ஆஷ்ரமாம் ஆஷ்ரம்... brothel den.’

‘What the... போலீசிடம் போனீர்களா?’

‘போய் என்ன சொல்வேன், ரேஷ்மா? என் கணவனைக் கடத்திவிட்டார்கள் என்றா? வேலைக்காகாது.’

சரிதானே. என்ன புகார் கொடுப்பாள். உருப்படியான ஆலோசனை எதுவுமில்லை என்றால் சும்மாயிரு என்றது ரேஷ்மாவின் மனம். ‘சரி, என்னதான் எழுதியிருந்தார் அவர்?’

நாற்காலியின் காலில் அடிபட்டிருந்த கைப்பையைப் பிளந்து கணிக்ஸ் கசங்கிய காகிதத்தை நீவி நீட்டினாள். அழுகை நின்றிருந்தது. வாசிப்பவள் தனக்கு நேர்ந்த அநியாயத்தை அறிந்து தன் கட்சியில் சேரப்போகிறாள் என்கிற ஆறுதலில்.

மேய்ந்ததில் ரேஷ்மாவிற்குப் புரிந்தது - ஒருவனுக்கு ஒருத்தி எனும் கற்புநிலை மனிதன் ஏற்படுத்தியதாம். மேட்டுக்குடி மக்களுக்கு மட்டும் அனைத்தும் கிடைத்துவிடக் கூடாது என்று கீழ்மட்ட மக்களால் ஏற்படுத்தப்பட்டதாம். மனிதன் அடிப்படை யில் விலங்குதான். விலங்கிற்கு உண்டா தடைகள்... மனிதனுக்கு மட்டும் ஏன் தளைகள்... அதான்...

‘Bull Shit.’ கசக்கி விட்டெறிந்தாள் ரேஷ்மா. என்ன உளறல் இது? கணிக்ஸின் கணவனைச் சந்தித்ததில்லை. இன்று மாட்டினால் கட்டிவைத்து கன்னத்தில் அறைந்து எத்தனை விலங்கிற்குடா ஆறறிவு என்று கேட்க வேண்டும். நாய் கம்பத்தில் காலத் தூக்கும், நீ செய்வாயா நாயே? குப்பையைக் கிளறி பீ தின்னும் ஈயும் விலங்குதானே, செய்வானா? அன்பில் மட்டுமே இயற்கைக்கு மாறாக இருக்கிறோமாம். தினம் 80 கிலோமீட்டரில் இவன் ஓட்டும் பென்ஸ் கார் இயற்கையோடு ஒத்துப் போகிறதோ? சபலத்திற்குப் பணிய ஒரு சப்பைக்கட்டு.

தலை கனத்தது ரேஷ்மாவிற்கு. காரணமின்றிக் கோபம் வந்தது. மனத்தில் நமைச்சல். காலை சீக்கிரம் எழுந்தது கண் எரிந்தது. மேஜையில் கையருகில் டன்ஹில் பாக்கெட் அழைத்தது. அதன் புகை மணம் பல வருடங்கள் முன்பு பரிச்சயமானது. ரங்காவால். கைவிட்ட

ரங்காவால். எடுத்துப் பிரித்து... நோ... பிரிக்காமல் மீண்டும் டேபிளில் வைத்துச் சுழற்றினாள்.

எதிரே தலையைப் பிடித்துக்கொண்டு உட்கார்ந்திருந்தாள்.

ரேஷ்மா மணி பார்த்தாள். பத்து. காபி ஷாப்பிற்கு ஓரிருவர் வரத்தொடங்கியிருந்தார்கள். ஒரு மணி நேரத்தில் அபி வந்து விடுவார், ஏர்போர்ட் செல்ல. ஏனோ ஓச்சலாய் இருந்தது. ஏன் இவள் என்னிடம் இதையெல்லாம் சொல்ல வேண்டும்? நான் என்ன குப்பைத்தொட்டியா அவரவர் குப்பைகளை என்னிடம் கொட்ட? காரை இடிச்சிட்டுப் போன வாரந்தான் ஒருத்தி... கோபமாய் வந்தது. அபி பிஸியாயிருப்பார். ரங்காவுடன் பேசலாமா? நோ சான்ஸ். அவன் அம்மா இருப்பாள் கூட. ஸோ? காதலிப்பவனிடம் பேச்சுரிமை எனக்கில்லையா.
காதல். ஏன் இத்தன எரிச்சலா இருக்கு. Am I PMSsing?

கணிக்ஸ் எழுந்தாள். ‘நான் வீட்டுக்குப் போகிறேன் ரேஷ்மா. நீயே க்ளையண்ட் காலை பார்த்துக்கொள்வாயா?’

What? ஆட்டக் கடிச்சு மாட்டக் கடிச்சு... இன்று ரேஷ்மா அரை நாள் லீவு. சொல்லியிருந்தாளே...

‘இன்றைக்கு மட்டும் எனக்காகச் செய்யமாட்டாயா, ரேஷ்மா? என்னால் எதுவும் செய்ய முடியாது. இன்றைய க்ளையண்ட் காலை விடுவது ப்ராஜெக்ட்டுக்கு நல்லதில்லை...’

என்ன இவள். நிலையைப் புரிந்துகொள்ளாமல் நெருக்குகிறாளே. ஆபிஸில் மேலிடம் அறியும் கணிக்ஸ் ஒரு go getter என்பதை. வீம்பிற்கே ஐந்து ப்ராஜெக்ட்டுகளை தானும் செய்வேன் என்று ஏற்றுக்கொள்வாள். கூடவே தன்னைப் போன்ற ஆட்களைத் தேர்வுசெய்து அமர்த்திக்கொள்வாள். ரேஷ்மா வருடங்களாய் இவளுடன் சேர்ந்துகொண்டது அவ்வாறுதானே. இவள் இப்படி இருப்பதால்தான் ஓடி விட்டானோ? ரேஷ்மா காத்திருந்தது இந்நாளுக்குத்தானே...

‘கணிக்ஸ், ப்ளீஸ் நான் இன்று ஊருக்குச் சென்றே ஆக வேண்டும்.’

‘என்னால் யாருடனும் பேச முடியாது, ரேஷ்... ஒன்று செய்ய முடியுமா. ஃப்ளைட் மாலை தானே அதற்குள் நொய்டா டீமுடன் பேசி திங்களுக்கு மாற்றப்பார். எனக்காக ப்ளீஸ்...’

இரண்டு பேரிடையே எத்தனை தரம் ப்ளீஸ்களை வைத்து ஏற்ற

வேலையைப் பந்தாட முடியும்? அமெரிக்க க்ளையண்ட் டோடு பெருந்தொல்லை. அவனுடைய வெள்ளி மாலை என் றால் பறந்துவிடுவான் காதலியோடு டேட்டிங் என்று. பிறருக்கு வெள்ளியாவது மாலையாவது. அவன் சொடுக்கிக் கூப்பிட்டால் கைகட்டி ஓடி வரவேண்டும். ஷிட்.

‘சரி பார்க்கிறேன்.’

ஏர்போர்ட் போகும் வழியில் நொய்டா டீமுடன் பேசிச் சரி செய்யப் பார்க்கலாம். அனைத்தையும் திங்கள் வைத்துக் கொள் என்று. எழுந்தார்கள்.

‘முடிந்தால் இரவு பன்னிரண்டிற்கு மேல் பேசச் சொல்கிறேன் கணிக்ஸ்...’

லிஃப்டில் ஆசுவாசப்படுத்தி ஆபீஸ் வாசலில் அவள் காரேறும் முன்னர் முதுகைத் தடவி அனுப்பி விட்டு, தன் இருக்கைக்குச் சென்றாள் ரேஷ்மா கணக்கிட்டவாறே.
பல்லவன் ஸ்ரீரங்கம் சேர்வது எட்டரைக்கு. ஒன்பதுக்குச் சென்றால் கூட பார்த்துவிட்டுப் பன்னிரண்டிற்குள் அங்கு வீட்டிற்கு வந்துவிடலாம். அஞ்சு நிமிஷம் ஆபீஸ் போன் பேசினா ரங்கா கடிச்சா தின்னுடுவான்?

தின்னா தான் என்ன...

***

நன்றாகக் கார் ஓட்டத்தெரிந்தவர்கள் பிறர் அதை ஓட்டு கையில் பக்கத்தில் உட்காருவது பெருந்தொல்லை. ஓட்டுநர் எவற்றை எல்லாம் எவ்வாறு செய்ய வேண்டும் என்கிற எதிர் பார்ப்புகள், இல்லாத ஆக்ஸிலெரேட்டரையும் ப்ரேக்கையும் அடிக்கடி மிதிக்கத் தூண்டும். ‘நீயே ஓட்றியா?’ என்று அபி கேட்டபோது வேறு சமயம் என்றால் சரி என்றிருப்பாள் ரேஷ்மா. அபி ஓட்டும் 50 கிலோமீட்டர் வேகம் இவளுக்கு ஒத்துவராது. இன்று வேறு வழியில்லை. வரப்போகும் நொய்டா ஆபிஸ் போனுக்காக ஓட்டுநர் இருக்கையை அபியிடமே விட்டுக் கொடுத்திருந்தாள். ஏர்போர்ட்டிற்குச் செல்லும் பாதி தூரம்வரை இவனுடன் பேசி, அவளுடன் பேசி ஒருவழியாக க்ளையண்ட் காலை திங்களுக்கு மாற்றிவிட்டிருந்தாள். இனி கணிக்ஸ் பாடு...

‘ஊருக்கும் எதுக்கு ஆபீஸ் போன். எங்கிட்ட குடுத்துடு. அணைச்சு

வீட்டுக்கு எடுத்துட்டுப் போயிடறேன். எஞ்சாய்.’

ஐயோ... ஆபீஸ் போனின் எண் தான் ரங்காவிடம் இருக்கிறது. அதிலேயே வாட்ஸாப் உரையாடல்கள் இரண்டு மாதங்களாய். பெர்சனல் எண்ணை அவனிடம் கொடுக்கவில்லை. ‘இல்ல... கொண்டுபோவணும். கணிக்ஸ் கூப்டுவாங்க.’

‘ஆபீசுக்குப் போன வாரமே லீவ் எழுதிக் குடுத்திட்டியே. ஏன் இப்படிப் படுத்தறாங்க ஒன்ன...’ போக்குவரத்தைக் கொந்திக் கொண்டிருந்தார் அபி.

தயங்கினாள் ரேஷ்மா. கணிக்ஸின் இன்றைய நிலவரத்தை அபியிடம் சொன்னால், அவளுக்கு இந்த நிலை என்கையில் நீ ஊருக்குப் போகத்தான் வேண்டுமா என்றால்... ரேஷ்மா இங்கு இருந்தால் மட்டும் கணிக்ஸின் பிரச்சனை தீர்ந்துவிடுமா என்ன.

அடுத்த சிக்னல் மௌனத்தில் சொல்லிவிட்டாள்.

‘ஓஷோவுடைய Free loveகறது எல்லாம் சரியா அபி?’

திரும்பி அவளை நோக்கி நெற்றி சுருக்கியவரை ‘ம்ம் சொல்லுங்க... கேக்றனில்ல...’ என்பதாகிய அவளது பழகிய சிரிப்பும் முகவோட்டமும் காட்ட சற்று நேரம் அமைதியாக இருந்தார் அபி.

‘ரஜ்னீஷ் சொன்னது வேற, ரேஷ்மா. ‘அன்பெனும் ஏணி யின் கீழ் படி காமம். அந்த ஏணியின் நடுப்படி நேசம். அதற்கும் மேல்படி பரிவு. கீழ் படியில் ஏறியே, பிறகு அதை விடுத்தே, நடு மேல் படிகளுக்குச் செல்ல முடியும்.’ இப்படி அவர் சொன்னதை ஆஹா, சாமியாரே காமம் சரின்னு சொல்லிட்டார்னு வக்ரமாய் எடுத்துக்கறவங்கதான் கணிக்ஸ் கணவர் மாதிரிப் பைத்தியக் காரங்க. ஃப்ரீ லவ் மூவ்மெண்ட் அமெரிக்கால போன நூற்றாண்டு ஆரம்பத்துல இங்கயும் அங்கயுமா தல தூக்கிச்சு. இப்பவும் இருக்கணும். பெரிய பெரிய வார்த்தைகளால அலசறதுனால தனக்கு வேண்டிய மாதிரி மாத்தி அமைக்கும் சந்தர்ப்பவாதிங்க, இதையும் அதையும் கலந்து தாங்கள் சொல்வ தெல்லாம் சரின்னு நினைக்கிறவங்க, பொறுப்புகளைக் கை கழுவறதுக்குச் செய்யும் யுக்திகள்...’ அபி சொல்லிக்கொண் டிருந்தார்.

ரேஷ்மாவிற்கு மனம் குறுகுறுத்து அலைபாய்ந்தது. நானும் இவ்வகைதானா... சீச்சீ, பைத்தியக்கார எண்ணம். அவள் பார்க்கப்போவது முன்பின் தெரியாதவனை அல்ல. ஆப்த நண்பனை.

நண்பனை விட மேலான... முதல் காதலனை. பதினைந்து வருடங்களுக்குப் பிறகு பார்ப்பதே தவறா? அபியை ஏழெட்டு வருடங்களாய்த் தெரியும் என்றால் ரங்காவை அதற்கு முன்பே ஐந்தாறு வருடங்களாய்... நிமிர்ந்து உட்கார்ந்தாள். ஓஷோ சொன்ன கீழ் படிக்கட்டை மட்டும் நாடிச் செல்லவில் லையே அவள். ஏணி முழுவதையும் ஏறத்தான் இப்போது விமானம் ஏறுகிறாள். பரிவையும் நேசத்தையுமே கோருகிறாள்.

அபியின் பேச்சை மீண்டும் கவனித்தாள்.

‘...அவர் அதில் சேர்வதற்கு ஒரே காரணந்தான் ரேஷ்மா. Midlife crisis. சொல்வாங்களே நாப்பதில நாய்க் குணம். அதுதான். கடந்து போன இளமையை இழுத்துப் பிடிக்கறது. எல்லா ஆம்பளைக்கும் வருவதுதான்... chasing skirts...’

‘எல்லா ஆம்பளைக்குமா? உங்களுக்கும் வந்துருக்கா?’

‘What’s the doubt? அதுல தானே ஒன்னக் கல்யாணம் செஞ்சுக்கிட்டேன்... மறந்திட்டியா...’

‘Very funny. க்ரைஸிஸ்லயும் உங்களுக்கு ஓகே சொல்லி என்னைக் கட்டுற நல்ல முடிவ எடுக்க வெச்சிருக்கேன்ல...’

‘ஜோக்ஸ் அபார்ட், ஒன் பாஸ்கிட்ட சொல்லு ஏதாவது உதவி வேணும்னா என்னைக் கூப்பிடச் சொல்லி...’

‘எதுக்கு? ஒண்ணும் வேணாம். நீங்க நம்ம வீட்டைக் கவனியுங்க போதும். நாளைக்குப் புள்ளய அவன் ஃப்ரெண்டு வீட்டுக்குக் கூட்டிப் போக மறந்துடாதீங்க...’

‘கமான்... பர்த்டே பார்ட்டியா? பிடிக்காத ஒண்ணு. எல் லாப் பசங்களோட அம்மாக்களும் வருவாங்க. ஓரமா ஒக்காந் திருக்கணும். அழகாவும் ஏதும் தேறாது லைன் போடலாம்னா...’

‘ஏது, நீங்க... ஹஹ்ஹா... ஏன் போட்டுதான் பாருங்களேன் ஒங்க லைன... எவ மாட்றானு பாக்கறேன்...’ சிரித்தாலும் ரேஷ்மாவின் மனம் ஆபீஸ் குழப்பத்திலும் அது தந்த புதிய உளைச்சலில் இருந்தும் விடுபட எத்தனிக்காமல் எரிச்சலைக் கொட்டியது. அபியின் குறும்பு மனம் எப்பவாச்சுமே எட்டிப்பார்க்கின்றது. ஓய்ச்சலற்ற வேலைப் பளு... வெக்கேஷன்னு சேர்ந்து போயே வருஷங்களாச்சு. அதுவும் குட்டி

பொறந்ததும் இப்படித் தனியே பிய்த்துக்கொண்டு போனால்தான் உண்டு...

‘ரேஷ்மா, கண்டிப்பா கூட்டிட்டுப் போணுமா? வண்டர்லா போயிடறேனே. நாள் ஆயிடுச்சு போயி...’

‘வெளயாடாதீங்க டியர். இப்பத்தான அதுக்கு ஒடம்பு கொணமாயிருக்கு. வண்டர்லாவுல தண்ணில குதிச்சு கொட்ட மடிச்சு மறுபடியும் காய்ச்சல் வர்றத்துக்கா? பிஸைட்ஸ், அவள் அவனோட பெஸ்ட் ஃப்ரெண்டு. பாக்கலைன்னா மனசு ஒடஞ்சிரும். போன்ல ப்ராமிஸ் கொடுத்திருக்கு இது. பொம்பளப் புள்ளய நம்பவெச்சு ஏய்க்கக்கூடாது...’

‘லைலா மஜ்னு பாரு... I’ll deal with it, ok?’

லைலா மஜ்னு. அம்பிகாபதி அமராவதி. ரோமியோ ஜூலியட். ரங்கா-ரேஷ்மா. அனைத்துக் காதல் கதைகளும் ஒரே கதையா? இல்லை... ரங்கா ரேஷ்மா தோல்விக் கதை இல்லை. இன்றும் தொடரும் காதல் கதை. அபி ரேஷ்மா போல..

கார் குலுக்கலில் அவசர மதிய பர்க்கர் எதுக்களித்தது.

‘என்னம்மா ஆஃப் ஆயிட்ட, பார்ட்டிக்கே போறேன். ஓகே... அது என்ன கிஃப்ட் ராப்புல ஹேண்ட்பேக்ல திணிச்சிருக்க, விழுந்துறப் போவுது...’

‘ஐயோ, அதுவா... போன வாரம் மேனேஜர்ஸ் கோர்ஸ் போனேன்ல. கட்டின ரெண்டு லட்சம் துட்டுக்கு இதுதான்... Art of War அது இதுன்னு புக்ஸ்... பொரட்டுவோம்னு... நீங்க மட்டுந்தான் அறிவுஜீவி புக்ஸ் படிப்பிங்களா, நாங்களும் செய்வமில்ல... சரி, வேகமாப் போறிங்களா...’

‘இந்தக் காரையும் இடிக்கறதுக்கா? சரி, எல்லாம் எடுத்துட்டியா? டிக்கெட்? துணியெல்லாம் படுக்கைல எறச்சிருந்தியே... காட் தெம் பேக்ட்? பை வழக்கம் போல கனக்கலயே, ஒத்த ஆளா நானே தூக்கிட்டேனே. உன் மயிர் மை, கண் மை, வாய் மை, எல்லாம் எடுத்துக்கலியா?’ கண்ணடித்தார் அபி.

ரங்காவுக்கு வாய்மை தவிர எந்த மையும் பிடிக்காது. உங்களப் போலத்தான் அபி... சொல்லிவிடலாமா? சொல்லிருக் கேன்ல முன்னயே... க்ளோஸ் ஃப்ரெண்ட்... அவனப் பாக்கத்தான் போறேன் டியர். ஸோ... இதெல்லாம் முக்கியமில்லை. அவனுக்குப் பிடிச்சது என்னை மட்டும்... ஐயோ... நீலப் புடவை. படுக்கையில் எடுத்து

வைத்திருந்தாள்... குழந்தை நச்சரித்ததில் மறந்து விட்டாள். காரை திருப்பச் சொல்லலாமா? எடுத்து வருவதற்குள் விமானம் போய்விடும்...

ஹ... ஊர்ல போய் புதுசா வாங்கிட்டாப் போச்சு...

# 6

மெட்ராஸ் + ஸ்ரீரங்கம். நேற்று மதியம்.

பற்றாக்குறையில் பரிதவிக்கும் மானுடம் பகலிலேயே படுக்கை வசதிகொண்ட இருக்கை என்றதும் பறக்காவெட்டியாய்ப் பத்துப்பேரை அமர்த்தவே முயலும், அதில் பாதிப் பேருக்கான அமர்வுகளில். சூழல் பதப்படுத்தப்பட்ட பெட்டி யிலும் அது மூன்றாமுலக நாட்டினது என்பதை நிலைநாட்டு வதிலேயே நாட்டினருக்குக் குறி. சென்னை எக்மோர் நிலையத்தில் தனக்காகக் காத்திருந்த பல்லவன் விரைவுவண்டியில் ஏறியதும் இருக்கைகளை நோட்டமிடுகையில் ரங்காவுக்குத் தோன்றியது.

எழுதிவைத்துக்கொள்ள வேண்டும். ஆப்பிள் மடிக்கணினி பையினுள் பத்திரமாய். கால்சிராய்ப் பையினுள் ஐ-போன்.

நோப். இது பர்செனல் விசிட். ரேஷ்மாவிற்காக. காதலுக்காக. கதை எழுதுவது கிடக்கட்டும் கழுதை. எனிவே, அவகாசமும் இல்லை. நோக்கமும் இல்லை.

நான்கு இருக்கைகள் இருக்க வேண்டிய வரிசையில் ஐந்து. இடையே ஒரு சாரியில் மட்டுமே நடந்து செல்ல முடியும் பாதையில் மக்கள் இரு சாரிகளில், கைகளில் விரலுக்கொன்றாய் சாமான்களுடன்.

ஆசாரமான குடிகாரன் போதையில் நடப்பதன் ஸ்லோ மோஷன் போன்று ரங்கா தன் இருக்கைக்கு ஊர்ந்தான்.

அமெரிக்க ஆம்ட்ராக் ரயில்களில் சாதா வகுப்பே இந்த முதல் வகுப்பைப் போல. புழங்கும் ஜனமும் தேவையற்ற பேச்சின்றி சாமான்களின்றி, வழிவிட ‘ஸாரி, எக்ஸ்யூஸ், ப்ளீஸ்’ கேட்டபடி... சாமான்யனோ சாதித்தவனோ, பொது இடங்களில் நடந்து கொள்வதெப்படி என்பதை அமெரிக்கர்களிடம், பொது வாக, மேலை நாட்டினரிடமே கற்றுக்கொள்ள வேண்டும். நாகரீகத்தின் வளர்ச்சி எனக் கருதப்படுவதற்குத் தேவையான சமூகச் செயல்பாடுகளை, சுகாதாரங்களை, கட்டுப்பாடுகளை இன்றையவரையில் ஒட்டுமொத்த இந்தியச் சமூகமாக நாம் பொருட்படுத்தியதில்லையே. இன்றும் உடல் பேணல், உனது உரிமை, ஊடக நேர்மை என்று தொடங்கி செக்ஸ் கல்விவரை எதையுமே இந்நாட்டினர் வளர்த்தெடுத்துக்

கொள்ளவில்லை. தேவையற்ற ஒளிவுகளுடன் காதலிப்போம், தேவைகளுக்கென மட்டும் தாம்பத்யம் பழகுவோம்.

இல்லாளுடனும் இருட்டினில் மட்டுமே உறவு கொள்வோம், உடன்பிறந்த குற்ற உணர்வோடு... ஆழ்வாரை வருத்திய ‘சென்மம் பல பல’ செய்திடினும் இதில் ஒன்றில் கூட நாம் திருந்தப் போவதில்லை...

பல்லவன் விரைவுவண்டி ஸ்ரீரங்கம் சென்றுகொண்டிருந்தது. பெயரைக் காப்பாற்றிக்கொள்ள அவ்வப்போது விரைந்து கொண்டிருந்தது. அதன் வேகத்திலேயே பயணித்திருந்த ரங்காவின் மனவோட்டமும் அதிகரித்திருந்தது.

அமெரிக்காவிலிருந்து மும்பாய் வந்திறங்கிய ஜெட்லாக்-இல் இருந்து இரண்டு தினங்கள் முன்பே முழுவதுமாய் விடுபட்டிருந்த ரங்கா மைலாப்பூர் அண்ணன் வீட்டில் இருந்த ஒரே நாளிலும் இருப்புக் கொள்ளாமல் தவித்திருந்தான். ரேஷ்மா வாட்ஸ்ஆப்-பில் அவனுடன் தொடர் அரட்டையில் இருந்தாள்.

கல்லூரி தினங்களில் காதல் என்றாகிவிட்ட பின்பு தினமும் ரேஷ்மா போன் பேசிப் படுத்துவாள். அவன் செய்யாதிருந்தால் அவள் அழைப்பாள். ‘ரங்கூ... நோக்குதாண்டா. அப்டி என்னதான் சந்தேகம் வருமோ. கிளாஸ்லயே ஒழுங்கா ஒக்காந்து கவனிக்கறது. ஒடனொத்தவன் ஒங்கண்ணனுந்தான் படிச்சான்... ஒருநா ஒருத்தி போன் போட்டான்னு இருக்கணுமே... மண்டைல அடிச்சா மாதிரி பேரச் சொல்லி கூப்டுங்கறது... ‘அவ்வீஸ் அங்கிள்’னு ஏதோ இவ பாத்துப் பண்ணி வெச்சா மாதிரி சொந்தம் கொண்டாடறது... தூத்தேறி... லிமிட்டா பேசிட்டு வந்து சாப்டு. பேரப் பாரு... ரைஸ் மா கோதும்மான்னு...’

தொலைபேசி வீட்டில் தொல்லை பேசி என்றிருந்த வருடங்கள்.

இன்று அலைபேசி அள்ளிக்கொண்டு போகிறது. தானியங்கித் தாம்பத்யங்களில் தேங்கிப் போன பல பழைய காதல் களை மீட்டெடுத்துள்ளது. பருவப் பெண்களைப் பொது இடங்களில் மீண்டும் குனிந்த தலை நிமிராதவர்களாக்கியுள்ளது.

தனக்குள் சிரித்துக்கொண்டான்.

ஆண் நானுந்தான் இன்று குனிந்த தலை நிமிரவில்லை. ஐ-போன் குறுஞ்செய்திகளில் அமிழ்ந்து. அவன் வரும்முன்னரே ரேஷ்மா தன்

பெற்றோர் வீட்டிற்கு வந்து சேர்ந்துவிடுவாளாம்.

காலை மிதித்துக்கொண்டு ஒருத்தி கடந்தாள்.

ய்யோ… ஷிட். ஒரு எக்ஸ்யூஸ் கிடையாது, சாரி கிடையாது… Zero civic sense. என்ன அவசரம்… திட்டக் கூட முடியாது. தவறு எதுவென்று அவளுக்குப் புரிந்தால்தானே.

பொதுவெளியில் மக்கள் மத்தியில் தங்களை எவ்வாறு நேர்த்தியாக வழிநடத்திச்செல்லவேண்டும் என்பதே இந்தியர் களுக்குப் புரிவதில்லை. செல்போனில் உரக்கப் பேசுவது… டங்கு டக்கா பாடல்களை அலறவிடுவது… படித்து டிகிரி வாங்கி விட்டால் போதுமா… பக்கம் பார்க்காமல் முகத்திற்கு அருகே இருமுவது தும்முவது… வழியெங்கும் சாமான்கள்… ஏஸி கோச் சிலும்… இவர்களுக்கெல்லாம் ரிஸர்வ்ட் டிக்கெட் இருக்கா?

அமெரிக்காவில் இருந்தவரை இந்தியாவைப் பொருட்டாக்காது இருந்தது மனம். இங்கு வந்ததும், இதன் சிறு குறைகளையும் பூதக்கண்ணாடியில் பார்த்து ஐயோ பூதம் என்கிறது. போகபூமியான அமெரிக்காவே சென்றுவிட கர்ம பூமியான இங்கு அனைத்திலும் ரோகபூதங்களைக் கண்டுகொள்கிறது.

‘கர்மபூமிய விட்டு போகபூமிக்குப் போறுதுன்னு முடிவு பண்ணிட்ட. நல்லாவே இருப்ப. சந்தேகமில்ல. போகபூமியோனோ. எல்லா போகங்களும் அனுபவிக்கலாம். ஒடம்ப நன்னாப் பாத்துப்ப. மனசுல சந்தோஷத்தத் தேடணும். அதை வெளில காசு கொடுத்து வாங்கிட முடியும்னு நெனக்கற எடத்துக்குப் போற ஒங்கிட்ட சொன்னாப் புரியாது. வேணா பாரு, ஆக்கமா எதுமே தோணாது. கண்ணாடி முன்னாடி ஒன்னயே பாத்துப் பாத்து மயங்கிப்ப. மனுஷாளுக்கு உபயோகமா இனிமே எதையுமே செய்யமுடியாமப் போய்டும்…’

குரலில் கோபமின்றி, சாபமின்றி, சம்மதமின்றி, வருத்தமிருந்தால் அதை வெளிக்காட்டாத ஈனஸ்வரத்தில் காதில் புஷ்பராகக் கல் மின்னப் படுக்கையிலிருந்து பொக்கைவாய் பிளந்து காற்றொலிகளுடன் பாட்டி அவனிடம் பதினைந்து வருடங்கள் முன்னால் சொன்னது. அவன் அமெரிக்கா போன சில மாதங்களில் அவளும் போய்விட்டாள். அவள் உபயோகித்த நாராயண தைலம், நீலிப் பிருங்காதித் தைலம் வாசங்களும் பிறை வடிவத் திருமண் மேல் ஆண்டாள் போல் ஸ்ரீசூரணம் தீற்றிய எண்பதிலும் சுருக்கங்களற்ற வெளீர் நெற்றியும், சுங்குடிப்

புடவை ஸ்பரிசங்களும் தான் இன்று நினைவில் தங்கியுள்ளன.

அவள் கிரியைகளுக்கு அவன் அடுத்த ஃப்ளைட் பிடித்து வராததை அம்மா நேற்று கூடக் குத்திக்காட்டிவிட்டாள். காசு என்ன காய்க்கறதா, நெனச்சாக் கிளம்பி வர...

'ஒங்க தாத்தா இருக்கேரே... லேசுபட்டவர் இல்லை... ஒனக்குத்தான் இப்டி நேயமா இருக்கேர்... இப்ப ஒடம்புக்கு முடில ஆஞ்சு ஓஞ்சுட்டேர்... சின்ன வயஸ்ல, தாட்பூட் தஞ்சாவூர்ன்னு... இருந்தாப்ல ஒருநா பம்பாய்க்குத் தேடிண்டு போய் ஒரு பொண்ண 'இது' பண்ணிட்டு வந்துட்டேர்... ரயில்வே பதவின்னா கேக்கணுமா... பென் பால்ஸ்... அதாண்டா, கடுதாசி போட்டுப்பாளே... பேனா ஒறவு. பேணக்கூடாத ஒறவு... இதான் சாக்குனு அவ அடுத்த ரயிலப் புடிச்சுண்டு நேர கெளம்பி வந்துட்டா... கேட்டாக் கடுதாசியக் காட்றா, கடு தாசி... அப்பப்பா. அடிவயித்துல பகீர்ன்னுத்து நேக்கு. வடக்கத்தியா விவரம்லாம் நமக்கேது தெரியறது சொல்லு... இவரானா இந்த க்ஷணம் நம்மாத்துலயே அவ தங்கறத்துக்கு ரூம் போடுங்கறேர்... முத்தா இருந்தேரோ பொழச்சேன். அவர்தான் ஒங்க தாத்தாவ அடக்கினேர். மகேந்திரமங்கலத்துல குத்தகைப் பாக்கினு பாக்கச்சொல்லி அனுப்பி வெச்சுட்டேர். வீடு வரைக்கும் வந்துட்டாளேன்னு கோயில் கொளம்னு நாலு எடத்தக் காமிச்சு நல்ல படியா ஊரப்பாக்க போய்ட்டுவாடிம்மான்னு ஏத்தி அனுப்பி வெச்சேன்... இந்தப் பக்கம் இனிமே தல காட்டாதடிம்மா, ஒங்காத்துலயே சொல்லி கோதும ரொட்டி சாப்டறவனா பாத்துக்கோன்னு, கெஞ்சாத கொறையா...'

கல்லூரி முதல் வருடம் இன்னமும் அவன் வீட்டுப் பக்கம் எட்டிப்பார்த்திராத ரேஷ்மாவோடு தனக்கிருப்பது காதலா என்று புதுக்கவிதைகளில் யோசித்துக்கொண்டிருந்த அவனிடம் மட்டும் பாட்டி எதற்கு இதைக் கூறினாள் என்பது இன்றும் ரங்காவுக்கு நினைத்தால் ஆச்சர்யம்தான்.

உண்மையா, மேலும் விவரங்கள் என்ன என்றெல்லாம் தாத்தாவிடம் அவர் உயிருடன் இருந்தபோது கேட்கமுடிந்த தில்லை. பேச்சைத் தொடங்கினாலே அப்பா இன்றும் வெளுத்துவிடுவார். அண்ணனுக்குத் தெரிந்ததாயும் காட்டிக் கொள்ளவில்லை. 'பழங்கத. நோக்கூ....ன்னு சொல்றா. செனிலிட்டி கூடிப்போச்சு... பாதிக்கு மேல புருடா...' என்று இழுத்து முடித்து விட்டான்.

பாட்டி மட்டும் தன் வாழ்வில் நிஜமாய் நடந்தவற்றைத் தான்

ஞாபகங்களாய் பத்திரப்படுத்தியிருந்தாள் என்பதை மேலும் ஒரு தகவல் புள்ளியில் அவனிடம் உறுதி செய்துள்ளாள்.

கல்லூரி இறுதிவருடத்தில் ஒருநாள் அவள் படுத்திருந்த பெஞ்சு அருகில் பானஸோனிக் டிரான்ஸிஸ்டரில் விவித்பாரதியில் ஒலித்துக்கொண்டிருந்த பழைய ஓ.பி.நய்யார் பாடலைப் பாட்டிக்கு ஏது ஹிந்திப் பாட்டெல்லாம் புரியப்போறது தூங்கட்டும் என்று நிறுத்துகையில் விழித்துக்கொண்டு, அவனை அழைத்துப் படுக்கையில் அமரவைத்துப் பாடிக்காட்டினாள்.

‘மனுக்கியாங்கே கோலு பாபா… மனுக்கியாங்கே கோலு…’

ஓ.பி.நய்யார் பாட்டல்ல. ஏதோ நாட்டுப்புறப் பாடல்.

சன்னமான நடுங்கும் குரலில் மேலும் நான்கைந்து வரிகள் பாடுவாள். பாட்டி இந்தியில் பாடி அளித்த ஆச்சர்யத்தைக் கடந்து தான் அப்பாட்டைப் பொருட்படுத்தவில்லை என்பது ரங்காவுக்கு இன்று அவ்வரிகள் மறந்துவிட்டதில் புரிந்தது.

ஆனால் அவளுக்கு இந்திப் பாட்டுத் தெரியுமாம். ‘வாவ். யாரு பாட்டி சொல்லிக்கொடுத்தா? எப்பக் கத்துண்ட?’

‘பம்பாய்க்காரிட்ட தான்டா…’ எந்த பம்பாய்காரி என்று அவளும் ரங்காவிடம் விவரிக்கவில்லை, அவனும் கேட்டுக் கொள்ளவில்லை. தொடர்ந்தாள். ‘…ரெண்டு நாள்னா இருந்தா… நேக்கு பாட வருமான்னு ‘நேக்கா’ தெரிஞ்சுக்கக் கத்துக் கொடுத்தா. பதிலுக்கு நானும் அவளுக்குச் சொல்லிவெச்சேன்… ரெண்டு திருக்குறள்… இன்னா செய்தாரை ஒறுத்தல்…’

அமெரிக்காவில் பிறகொரு நாள் அவள் போய்விட்டாள் என்றறிந்து நினைக்கையில் பாட்டியின் மனப்போக்கை இரண்டாவது குறளின் தேர்வு ரங்காவுக்கு ஓரளவு புரிய வைத்தது. ‘அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை…’

தொடங்கிய புதிதில் பல்லவன் கோச்களின் உள்ளே கதவோரம் திருக்குறள் எழுதிவைத்திருப்பார்கள். தென்னிந்திய நினைவுச் சின்னங்களின் படங்களுக்கு மேல். இன்று ஒவ்வொரு இருக்கையின் முதுகிலும் விளம்பரத்திற்கு மட்டும் பன் கொண்டை போட்டுக் கொள்ளும் அழகான அம்மாவுடன் சிரித்தவாறு மேல் பித்தான் கழண்டிருக்கும் சிவப்புச் சுடிதாரில் ஒருத்தி மகளிர் காப்பீட்டிற்கு

விண்ணப்பிக்கிறாள்.

பல்லவன் எக்ஸ்பிரஸ் எண்பதுகளில் வெள்ளோட்டம் திருச்சியில் இருந்து புறப்பட்டபோது அதன் புத்தம்புது பச்சை மஞ்சள் மேனியை அண்ணனுடன் ரங்கா ஸ்ரீரங்கம் ரயில்வண்டி நிலையத்தில் நின்று வேடிக்கை பார்த்திருக்கிறான். அடுத்த மாதம் குடும்பமாய் மெட்ராஸ் உறவினர் வீட்டிற்கு அதில் பயணித்துள்ளனர். சாதா கோச்சே முதல் வகுப்புப் பெட்டி போல, சோபா சீட் போட்டு, எட்டே 'போகி'கள். வெஸ்டிப்யூள் என்று ஒன்றுடன் ஒன்று உட்புறமாய் இணைக்கப்பட்டது. ஒரு பாண்ட்ரி கார், கதகதவென. அதன் மறுபாதியில் ஒரு ஓரத்தில் தடுப்பு வைத்து லைப்ரரி. அமர் சித்ர கதாவில் இருந்து த்ரீ இன்வெஸ்டிகேட்டர்ஸ், ஹார்டி பாய்ஸ் போன்ற சிறுவர்கள் கதைப் புத்தகங்கள், நாவல்கள்... சீட்டிற்கு எடுத்துப் போகலாம். தாம்பரம் வருகையில் வந்து கலெக்ட் செய்து போவான். அடித்து நொறுக்கி ஐந்தே மணி நேரத்தில் மெட்ராஸ். அச்சரப்பாக்கத்தில் தடம் புரளும் காலம் வரையில்.

அந்தப் பிரயாணத்தைப் பற்றி இன்றும் முதலில் ஞாபகம் இருப்பது, பக்கத்தில் இருப்போருடனேயே பேசவிடாமல் அபிநயிக்க வைத்த பல்லவனின் பேரொலி... பேரிரைச்சல். அப்பா அண்ணனுக்கும் அவனுக்கும் கட்லெட் ஆர்டர் செய்து கொடுத்தார். அம்மா அடுத்த வாரம் போட்டிக்கு அதை வீட்டில் செய்து உருட்டிக் கறுக்கிச் சொதப்பினாள். நன்றாய் இருப்பதாய் அண்ணனுடன் சேர்ந்து அவனும் பொய் சொன்னான். இருவருமே மறைத்துக் கொண்டுபோய் மங்கம்மா நகர் வீட்டிற்கு அருகில் ஓடிய காவிரிக் கரைப் புதரில் வீசினார்கள். காக்கைகளுடன் காடைகளும் கட்லெட்டைக் கொத்தித் தின்றது ஆச்சர்யம்.

பல்லவன் எக்ஸ்ப்ரஸ் சார்ந்த அனைத்துமே ரங்கா அதுவரையிலான வாழ்க்கையில் முதல் முறையாகக் கற்றுக்கொண்ட, தெரிந்துகொண்ட ஆச்சர்யங்கள்.

ரேஷ்மாவுடன் ஒரேமுறை தான் பல்லவனில் பயணம் செய் துள்ளான். அவன் அமெரிக்க மேற்படிப்பிற்கு விண்ணப்பிக்கத் தேவையான 'டோஃபெல்' ஆங்கிலம் அயல்மொழி என்பவர்களுக்கான தேர்வு எழுதுவதற்குச் சென்னை போகையில். ரேஷ்மா வேலைக்கான நேர்முகத்திற்கு தோழியுடன் சென்று கொண்டிருந்தாள். வெவ்வேறு பெட்டிகளின் தங்கள் இருக்கைகளைத் தவிர்த்து வெஸ்டிப்யூல் கோச்களைக் கடக்கையில் இணைப்புகளில் தோள்கள்

இடித்துக்கொண்டு சிரித்தபடி, பாண்ட்ரீ காரில் ‘இதுல கட்லெட் சாப்டுப் பாத்ருக்கியா?’ என்று அவளிடம் கேட்டு..., தோழி உடன் இருந்ததால் இருவருமே அடக்கி வாசித்தனர். பிறகு ஒரே ப்ரெட் சான்விச்சைப் பிய்த்துத் தனித் தனிப் பேப்பர் தட்டில் வைத்து உண்டனர்.

பளீர் சிரிப்பு, சாயமற்ற செங்கருமையில் சுழித்த உதடுகள், மெனிக்யூர் செய்து நகமை இட்ட விரல்கள், Reshu என்று தங்கத்தில் எழுதியதையே கோர்த்து அணிந்திருந்த மெலிதான செயின், இளஞ்சிவப்பில் சிறுசிறு பூக்கள் வரைந்த வாசனைக் கைக்குட்டை, இறுக்கமான பச்சைப் பட்டுச் சுடிதாரில் அருகில் அமர்ந்திருந்த அவள் அடிவயிற்றுப் பகுதி... இன்று அப்பிரயாணத்தைப் பற்றி நினைவில் இருப்பவை.

தொண்டையில் பாரமாய் எதுவோ உதரத்தினுள்ளிருந்து இழுத்து நாக்கு உலர்ந்து இப்போதே தண்ணீர் குடித்தாக வேண்டும் என்று நச்சரிக்கும் மனத்தின் ஏக்கம் இன்றையதா அன்றும் இருந்ததா?

ரேஷ்மாவோடு அன்று இறுதிவரை செல்லவில்லை. மாம்பலத்திலேயே அவன் கனவுகளுக்காக இறங்கிவிட்டான்.

தொடுவானில் நிலைகுத்தியிருந்த பார்வையை மறைத்து அருகில் ரயில்வண்டி தடதடத்தது. நினைவுகளைக் கலைத்து நிகழிற்குக் கொண்டுவந்தது.

இன்று ரங்கா அமர்ந்திருந்த பல்லவன் காத்திருந்தான். கிராஸிங்.

நீலப் புழுதியாய் முகங்களற்று விரையும் எதிர்வண்டியும் பல்லவன்தான் போல. இல்லையாம். அருகில் பச்சைக் கடுக்கண், மஞ்சள் சீச்சூரணம், வெத்தலைச்சீவல், வெள்ளை அரக்கைச் சட்டை, பஞ்சகச்சப் பித்தளைக் கூஜாக் குடுமி மாமா வியாக் யானம். உடனிருந்த நண்பருக்கு. ‘வைகையா வர்றது பல்லவனாத் திரும்பிடுவான். பல்லவனா வர்றவன் வைகயாப் போவான். விட்ட அன்னிலேந்து அப்டித்தாங்காணும்...’

பழைய காதலி பக்கத்து டிரெய்னில் போய்க்கொண்டிருக்கும் பயணி. பயணத்தில் எதிர்பாராமல் பார்த்ததும், ஜன்னல் வழியே கையாட்டிக் கொள்ளலாம். தருணத்தில் தண்டவாளங்கள் நெருங்குகையில் கைகுலுக்கிக்கொள்ளலாம். விஞ்சினால், அடுத்த நிலையத்தில் இரண்டு வண்டிகளும் நிற்கையில் இறங்கி ப்ளாட்பார பெஞ்சில் அருகருகே அமர்ந்து பரஸ்பரம் குசலம் விசாரித்துக் கொள்ளலாம். மனத்தினுள் நம் வண்டி கிளம்ப இன்னும் எத்தனை நேரம் உள்ளது என்று ஓடிக் கொண்டேதான் இருக்கும். இத்தனை வருடங்கள் ஏறி, இருந்து, என்றோ

நிர்ணயமான ஏதோ ஊர்கள் எனும் இலக்குகளை நோக்கி ஓடிக்கொண்டிருக்கும் வண்டியை விடுத்துப் பாதி வழியில் வண்டி மாற்றுவது அத்தனை எளிதல்லவே. அது கடந்த காலத்தில் ஒரு கட்டம் வரை பழகிய வண்டி எனினும். இரண்டு வண்டிகளிலும் நாம் பயணம் செய்வதற்கான பக்குவம் வண்டிகளுக்கே உண்டா என்பதும் புரிபடுவதில்லையே.

எழுந்து மன்னி வீட்டில் காய்ச்சி ஆறவைத்துப் பாட்டிலில் கொடுத்திருந்த ஆறின வெந்நீரைக் குடித்தான்.

எப்பப் போய்ச் சேர்வான், இந்த வேகத்துல எல்லா கிராஸிங்லயும் நிறுத்திண்டு... ரங்காவின் மனவினாவிற்கு அதே குடுமி மாமா தன் நண்பரிடம் பதில் சொல்லிக்கொண்டிருந்தார்.

‘எல்லாம் ஓட்றவன் கைலதான் சார் இருக்கு. கொக்குக்கு ஒண்ணே மதின்னு ஓட்டணும். இருக்கற சிக்னல்லலாம் சேப்பு விழுந்துடுத்தோனு தேவுடு காத்துத் தோப்புக்கரணம் போட்டுண்டிருக்காம அடிச்சுண்டு போனான்னா மேக்கப் பண்ணிச் சரியாப் போய்ச் சேந்துடுவான். எங்க சார்... ஒங்களுக்கு ஞாபகம் இருக்குமா தெரில. அந்தக் காலத்துல செங்கோட்டாப் பாஸஞ்சர்னு... Boat mail-ம்பா... ராத்திரிப் பதினோரு மணிக்குதான் எடுப்பான். ஜமுக்காளத்த ஒதறிப் போட்டுண்டு கட்ட பெர்த்துல ஏறிப் படுத்தா, கருக்கல்ல மெட்ராஸ். எப்டியும் பிக்அப் பண்ணிடுவான். மாம்பலம் ஸ்டேஷன்ல எறங்கினா ஆத்துக்குப் போயி ஃபர்ஸ்ட் டிகாக்ஷன்ல காபி...’

அவரவர் இளமையில் அவரவர் உலகம் அமர்க்களமாய்த்தான் இருந்துள்ளது.

அவரவர் வயதான பார்வையில்.

விழுப்புரம் வந்துவிடும். சாப்பிட்டுவிடவேண்டும்.

கவனத்தை ரங்கா அச்செயலை நோக்கித் திருப்பினான்

.

***

‘எக்ஸ்யூஸ் மீ... கொஞ்சம் சீட்டை நிமித்திக்கறீங்களா, சாப்பிடணும்...’ முன்சீட்டில் அமர்ந்துகொண்டிருந்தவளிடம் (காலை மிதித்த பெண்?) சைகையிலும் தான் செய்ய வேண்டியதைக் குறிப்பிட்டபடி ரங்கா

எழுந்துகொக்கியில் மாட்டி வைத்திருந்த சிற்றுண்டிப் பையை எடுத்தான்.

சீட்டின் முன்னால் ஒருபுறம் தூக்கிக்கொண்டு கோணலாய்த் தளர்ந்துகொண்ட பிரவுன் பெயிண்ட் தகரப் பலகையின் மீது வைத்துப் பிரித்தான். மன்னி மிளகாய்ப் பொடி தடவித் தனித்தனியாக அடுக்கிக் கொடுத்திருந்த இட்லி சட்னி சாம்பார்.
சட்னியின் காரம் கண்களில் ஜலம்.

மன்னி அண்ணாவுக்குப் பிடிச்சா மாதிரியே சமைக்கிறாள். இல்லை அமெரிக்கா என் நாக்கையும் சாகடித்துவிட்டதா... வேதாவிற்குக் காரம் ஆகாது. தனக்கேற்றவாறு சமைப்பவள்... மன்னியிடம் கேட்கவேண்டும் ‘ஒங்குளுக்குப் பிடிச்சா மாதிரி பண்ணிக்கவே மாட்டீங்களா மன்னி...’ சிரித்து மழுப்பி விடுவாள். இல்லாட்டி ‘ஒங்கண்ணாக்குப் புடிச்சதுதாம்பா நேக்கும்...’ என்பாள். நேசிக்கும் பெண்களிடம் உண்மையைக் கோருவது உரிமை. பெறுவது பாக்கியம்.

அண்ணனுக்கென்றே வாழ்வதாய் என்னிடம் காட்டும் மன்னி அதை அண்ணனிடமும் காட்டுவாளா? எனக்கெனவே இருப்பதாய் என்னிடம் காட்டும் வேதவல்லி அவளுக்கு என்ன வேண்டும் என்பதை என்னிடம் காட்டுவாளா?

உண்மையைக் கோருவது உரிமை. பெற்றால் பாக்கியம்.

அலுவல் தோழிகளிடம் ஓரிருமுறை சகஜமாய்ப் பழகி யதையே பொறுத்துக்கொள்ள முடியாத வேதா ரேஷ்மாவைப் பற்றி நான் கூறுவதற்குத் தயார் என்றாலும் தாங்குவாளா? உண்மையை அளிப்பது என் கடமை. பெறுவது உறவின் ஊசிமுனை.

உண்மையின் நிலையே இவ்வாறிருக்க, தான் பேசுவது பொய் என்று கேட்பவர்களுக்கும் தெரியும் என்பது தெரிந்தும் பொய் பேசும் பெண்களை என்ன செய்வது? அம்மா போல...

‘...இன்னிக்கி நாப்பது லக்ஷம் கொடுத்தாலும் கெடைக்காது. அதான... ஏம்மா மறுபடியும் ஆரம்பிக்கற? அமெரிக்காலேந்தே முட்டிண்டேன். வீட்டக் கொடுத்துடாதீங்கன்னு...’

‘வர்றதே மூணு வருஷத்துக்கு ஒருவாட்டி, இந்தவாட்டி ஒரு வாரந்தான்... ரெண்டு நாள் பூனால புண்ணாக்குலன்னு ஆபீஸ் வேலை பாத்தாச்சு. இதுல வந்து ரெண்டா நா ஸ்ரீரங்கம் கெளம்பியாச்சு...’ இப்படி

அவனுக்கும் தெரிந்த உண்மைகளில் தொடங்கிய அம்மாவின் பேச்சு ரங்கா மைலாப்பூர் அண்ணன் வீட்டிலிருந்து ரயில்வே ஸ்டேஷனுக்குப் புறப்படும் முன்னர் பொறுமையை இழக்கவைக்கும் விஷயங்களுக்கு மாறி, சில நிமிடங்களில் சர்வநிச்சயமாய்க் கோபத்தைக் கிளப்பிவிடும் பொய்களைத் தொட்டிருந்தது.

‘நாப்பதா? அமெரிக்கால ஒக்காந்துண்டு இங்க வெல வாசிய... நாலு லட்சத்துக்கு ஒங்கப்பா கொடுத்த நம்ம வீடு வெலைக்கு வந்துருக்கு. இன்னி தேதிக்கு எண்பத்தியெட்டு லக்ஷமாம். நம்மகிட்ட யாரும் சொல்லலை... மாங்காதான்... அதாண்டா அவன் பேரென்ன, ஏண்ணா... அவன் பேரென்ன... கொழா மாத்த வருவானே... ரங்குவோட படிச்சவன்... போன மாசம் செல்போன் வாங்கிருக்கேன்னு பேசினப்ப வீட்டு விஷயத்த சொன்னான். பாடசாலைல விசாரிச்சேண்டா. சொல்றதாத்தான் இருந்தோம் நீங்களே கேட்டுட்டீங்கங்கறா. அப்பா நம்பிக் கொடுத்தவர் பரமபதிச்சுட்டேராம். வாரிசுன்னு ஒத்தருமில்லை. பாடசாலை டிரஸ்ட்டே சொத்து விஷயத்த கவனிக்கறாப்போல. போறேங்கறியே... ஒன்ன அங்க தங்கச் சொல்லலை. முறுக்கு மாமிட்ட ஏற்கெனவே சொல்லி வெச்சுட்டேன். அவா ஆத்துலயே ஏஸி ரூம் தந்துருவா. நீ ஒரு எத்து போயி நம்ம வீட்டப் பாத்துட்டு மட்டும் வாயேன்... நாமளே வாங்கிடலாமான்னு தான்... அமெரிக்கா போர்துக்கு முன்ன நீயே ஒங்கண்ணன்ட்ட பேசிப் பாரு... நா... சொன்னா ஒன் மன்னிக்குப் பொத்துண்டு வந்துரும்... வாங்கிட்டா மட்டும் எங்கள தனிக்கா உட்டுட்டு நீங்க போய் இருந்தரப் போறேளாக்கம்ன்னு கொதர்க்கம் பண்ணுவா...’

அம்மா பேசப் பேச அடங்கியிருந்த நினைவுகள் ரங்காவின் மனத்தை எரிமலையாக்கிக் குழம்பாய்த் தொண்டைக்குழியில் ஆத்திரம் பீறிட்டு வழிந்தது. கெட்ட வார்த்தைகளாய்ப் புறப்பட்டது. ஆற்றாமை வார்த்தைகளை வெளிவருவதற்குள் குழப்பியது. கோர்வையாய் ஒன்றுமே சொல்ல வரவில்லை.

இப்படி அவன் பெற்றோர் தாங்கள் முன்பின் யோசியாமல் எத்தனை மடத்தனங்களைத் தங்கள் சீரான சிந்தைப்பெருக்கில் இருந்து புறப்பட்ட வாழ்க்கை முடிவுகளாய் வளருகையில் அவனிடமும் அண்ணனிடமும் மானாவாரியாய் வழங்கி யுள்ளனர்.

முட்டிக்கொண்டான் போனில். வீட்டை விற்காதே என்று. அமெரிக்காவிற்குப் படிக்கப் போன புதிதில் ஸ்டைபண்டிலேயே பணம் அனுப்பிவிடுவதாய்... அண்ணனையோ அப்பாவையோ லோன் போடச்

சொல்லுங்கள் என்று...

ரேஷ்மா விஷயத்தில் கிணற்றில் குதிக்கிறேன் என்ற அம்மா வீட்டு விஷயத்தில் அதே கிணற்றில் தானே ஜகடை கட்டி நீர் இறைக்கமுடியவில்லை என்பதையெல்லாம் சால் ஜாப்பாக்கி ஒரே பாக்காய் ‘ஒங்கண்ணனும் மெட்ராஸ் போய்ட்டான் நீயும் அமெரிக்கால, நாங்க மட்டும் இங்க தனியா எத்தன்னாளக்கி என்ன பண்றதுரா? அப்பா அப்பப்ப மாரப் புடிச்சுக்கறா... ராத்ரி ஒண்ணுகெடக்க ஒண்ணு ஆயிடுத்துன்னா அப்றம் அய்யோன்னா வருமா அம்மான்னா வருமா... நீங்க என்னை உயிரோட பாக்கமுடியாதுறா... நா வேண்டிக்கறதே அதத்தான... காலாகாலத்துல சுமங்கலியாப் போய்ச்சேந்துட ணும்னு...’ என்று எடுத்த விஷயத்தை விட்டு விலகி எதையெதை யோ எமோஷனலாய்ப் பிதற்றிச் சாதித்துக்கொண்டுவிட்டாள். அந்நேரத்தில் அவள் நினைத்ததை. அவனுக்கு நன்றாக அது தவறான முடிவு என்று தெரிந்தும்...

இன்று நேர் எதிர்ப்பதமாய் நாலு லட்சத்திற்கு விற்ற வீட்டை மீண்டும் எண்பது லட்சத்திற்கு வாங்க வழி தேடுகிறாள். எங்களிடமே. எவ்வித முரண்களும் வருத்தாமல்.

பெண்களே இவ்வாறுதானோ, க்ஷணப்பித்தம் க்ஷணச் சித்தம்... யார் எக்கேடு கெட்டாலும் தன் சுகம் முதலில். அதைச் சுட்டி விட்டால் மட்டும் பொத்துக்கொண்டு வந்துவிடும்.

ரிலாக்ஸ். கூல் டௌன். ரேஷ்மாவை சந்திக்கப்போவதை இதே அம்மாவால் இன்று ஒன்றும் செய்யமுடியாது. இன்றும் காதலிக்கிறேன்... றோம்... இனியும் காதலிப்பேன்... சந்திக்க மட்டுமா போகிறேன்... சந்தித்து...

புதிதாய்ப் பிறந்த உற்சாகத்தில் மனம் ஆற்றாமையை அழுத்தி அமைதி கொண்டது. இயல்பாய் பதிலளித்தான்.

‘அம்மா... என்ன வெளையாடறயா? எங்கிட்ட ஏதும்மா அத்தனை பணம்?’

‘ஏண்டாப்பா ஒங்கிட்ட இல்லாததா... சும்மா கத வுடாத... அதான் ஒத்தருக்கு ரெண்டுபேரா அமெரிக்கால டாலர்லயே சம்பாதிக்கறீங்களே. அங்கயேதான எங்க கண்ணுலலாம் படாம போட்டு வெச்சுருக்கேள்... கேட்டா, அங்க ஒத்தருக்கே இன்னொருத்தருது தெரியாது, அமெரிக்கா கல்ச்சர் அது இதுன்னு என் வாய அடச்சுடவேண்டிது...’

‘டாலர்ல சம்பாதிச்சா? செலவும் அதுலதான செய்யறோம்...’

ஷிட். ஒடனே எரிச்சலைக் காட்டிவிடுகிறேன். ஒருத்தனின் எரிச்சலை அநாயாசமாய்க் கிளறுவதில் அம்மாவின் நேக் பல வருடமாய்த் தெரிந்ததுதானே. வருடங்கள் கடந்தும் பக்குவப் படாமல் எரிச்சலடைவது அம்மாவின் வெற்றிதானே.

வேதாவின் சம்பளத்தை நான் இன்றுவரை கேட்டதில்லை என்று சில மாதங்கள் முன்பு போன் பேசுகையில் சொல்லி விட்டதில் கோபம். அது எப்படிப் புருஷனிடம் கொடுக்காமல் அவளாய் வைத்துக்கொள்வது என்று தொடங்கியவளை ‘சுத்தி வளைக்காதம்மா, என் சம்பளத்தையும் உங்கிட்ட சொல்ல மாட்டேன்...’ என்று ரங்கா சொல்லிவிட, ஒரு வாரம் பேச வில்லை. இப்போது ஞாபகமாய் நைச்சியமாய் குத்திக் காட்டுகிறாள். அதான் ரெண்டு பேருமா சம்பாதிக்கிறீங்களேன்னு...

எதைச் சொன்னால் பிடிக்காது என்று நன்றாகத் தெரிந்து வைத்துக்கொண்டு பலவீனத்தைக் கிளறி... எதிராளியிடம் வெளிப்படும் அந்நேர அவசர உணர்வுகளில் தன் மூக்கைச் சிந்திக் கண்களைக் கசக்கி அதனால் இளகும் எதிராளியின் மனத்தைக் குழப்பித் தன் காரியத்தைச் சாதித்துக் கொள்வதில்...

எந்த நியாயப்படியும் தான் சொல்வது சரியில்லை என்றாலும் தன் கட்சி தோற்றுவிடக் கூடாது என்பதில்தான் அம்மாவிற்கு எத்தனை கவனம்... ரேஷ்மாவும் இப்படித்தான். அதான் அம்மாக்கு முதலில் இருந்தே ஆகவில்லையோ... வேதா மட்டும்? அம்மாக்கு நான் பழகிய எந்தப் பெண்ணோடு ஒத்துப் போயிருக்கு? மன்னியுடனுந்தான் சஷ்டாஷ்டகம். அண்ணாக்குப் பிடிச்சுருக்கா என்பதில் அக்கறையில்லை. அவளுக்கு அடங்கிய வாளா இருக்கணும். சொன்னபடி டிவில மகாபாரதம் பாத் துண்டு, மெட்ராஸ்லயும் மடிசார்ல உப்பு தூக்கலா வத்தக் கொழம்பு பண்ணிண்டு...

‘பத்து வருஷத்துக்கு முன்னாடி ‘ஸ்டூடண்ட் டேஸ்’லயே நானே வாங்கினுடறேன்னு முன்பணம் அனுப்பினேன். ஒன் பொறந்தகப் பெரியநாயகி கோயில் கும்பாபிஷேகத்துக்குன்னு தார வாத்துட்ட. ஒன் ஊர்ல கடைத்தெருவெல்லாம் எனக்குப் போஸ்டர் அடிச்சு ஒட்டினதோட போச்சு பெருமை. ஸ்ரீரங்கம் வீடு பாடசாலையாயிடுத்து. இப்பப் போறச்சே நானே உள்ள நொழையணும்னாலும் குடுமி வெச்சுண்டாகணும்...’

‘ஆமா, வெச்சுனுடுவியாக்கும்… அமெரிக்கால பேஷன்னா செய்வியோ என்னவோ. ஏதோ உன் வயசான காலத்துல நீயாது ஸ்ரீரங்கத்துல…’

‘இனிமே ஸ்ரீரங்கத்துல போய் வாழறாமாதிரி இல்லம்மா. நீங்கள்லாமே உட்டுட்டு வந்து பத்து வருஷத்துக்கு மேலாச்சு. எனக்கென்ன இனிமே? அமெரிக்காலேந்து வெக்கேக்ஷனுக்கு வரச்சே மெட்ராஸோட ஸ்டாப்… மன்னியே எங்கள நன்னாப் பாத்துப்பா. தட்டீஸ், ஐ மீன்… ஒனக்கு முடியாதப்ப…’

நாக்கைக் கடித்துக்கொண்டு சமாளித்து விட்டதாய் நினைத்தான்.

‘அப்ப எதுக்கு இப்ப மட்டும் போறயாம்?’ குரோதம் ஏறியதும் அம்மா சிறுமியானாள்.

‘அம்மா… யானைக்கு அர்ரம்னா குதிரைக்கு குர்ரங்கறயே? வீட்டத்தான் வாங்க மாட்டேன்னேன். இப்ப ஸ்ரீரங்கத்துக்குப் போறது பழைய ஃப்ரெண்ட்ஸ் கூப்டதால. குவிஸ் ஷோ-க்கு தலைமை ஏற்புமா. அவாளே நடத்தறா, திருச்சி நகரத்துக்கு…’ பேச்சைத் திசை மாற்றினான். ‘…கூடவே செமினார் கொடுக்கணும். படிச்ச காலேஜ்லதான்… நாந்தான் அவாளுக்கு ஒரே பிஎச்டி… ஐயா அமெரிக்கா நாட்டு விஞ்ஞானியோலியோ, அதான் இப்பப் புத்திசாலிப் பெரியமனுஷனாய்த் தெரியறேன்… இப்ப மைக்க புடிச்சு என்ன பேசினாலும் குறிப்பெடுத்துப்பா… உள்ள இருந்தப்ப ஒரு பய கண்டுக்கல… நம்மாளு கெட்டி தாங்கறதயே வெள்ளக்காரப்பய சொன்னாதான கேப்போம்.’

‘அதெல்லா… சரிதாண்டா, ஒன் சமத்துக்குக் கேக்கணுமா. என்ன வேணாக் கூத்தடி… நா… சொல்றது எங்க ஒன்ன தட பண்ணித்து? போய்ப் பாருடான்னா, எதையோ பேசிண்டு… நோக்குப் புடிச்ச வீடுதான… எத்தன பழகிருக்க… நா வேணா சொல்றேன் பாரு, நீ போய் வீட்டப் பாரு, தன்னால அதுவே ஒன்னக் கூட்டிணுடும்…’

‘ஸ்ரீரங்கம் வெச்சுக்கணும்னு நெனச்சதுனா…, நானே வேணான்னாலும் வீடென்ன, வாழ்க்கையே அமைச்சுத் தரும். உனக்காகப் பழைய வீட்ட ஒரு வாட்டி போய்ப் பாக்கறேன், போதுமா. இப்ப ஆள விடு. முறுக்கு மாமிகிட்ட சொல்லி வை… அவா ரூம்ல நீ சொல்றயேன்னுதான் தங்கறேன். பேசக் கூப்ட்டவா ஓட்டல் ரூம் போடறேன்னா. ஒரேடியா மாமிய தடபுடல் பண்ணவேணாம்னு சொல்லிடு. நான் மீட்டிங்கல்லாம் போணும்… முன்னப்பின்ன ஆகும். சாப்பாட அங்கயே கவனிச்சுப் பேன்.

மைனரா காஃபி மாதிரி கொடுத்தாப் போறுன்னு சொல்லிவை. ‘அமெரிக்கா போய்ட்டே எங்காத்துலலாம் சாப்டு வியான்னு’ போன ஒன்னே ஈனஸ்வரத்துல ஆரம்பிச்சுடுவா...’

சித்திரை வீதியில் தங்கள் வீட்டையே கூறுபோட்டு பூலோக வைகுந்தம் நாடிவரும் யாத்ரீகர்களுக்கு மூன்று நான்கு ‘ஏஸி ரூம்’ கட்டிவிட்டிருக்கிறார்கள், அவர்கள் வீடுகளில் முன்னர் சமையல் உதவிப்பணி செய்துவந்த முறுக்கு மாமியின் குடும்பம். ரங்கா அங்குதான் தங்க வேண்டும். அரங்கத்தில் இருந்த சொந்த வீட்டை விற்று விட்டு ஓய்வில் நகர நரகத்தை நாடி யுள்ளனர் அவன் பெற்றோர்.

எதற்கோ ஆசைப்பட்டுக் கையிலிருப்பதின் அருமை பெருமை புரியாமல் இழந்துவிட்டுப் பின்னர் ஆசைப்பட்டதை அடைந்து விட்டதையும் அதை அனுபவிப்பதையும் மறந்து, இழந்ததைப் பற்றியே நினைவேக்கமாய்...
இக்குணம் என் குடும்பத்தின் மரபணுவிலேயே உள்ளதோ.

அவனுக்கென்றில்லாத வீட்டை நோக்கி விரையும் பல்லவனில் அமர்ந்திருந்த ரங்கா மீள்காதல் பரவாதிருந்த தன் மனத்தின் அன்றாடங்களுக்கான ஓரத்தில் தானியங்கி நியூரான் களை அழுத்தி வினாவைக் குறித்து வைத்துக்கொண்டான்.

***

சாப்பிட்டு முடித்திருந்தான். விழுப்புரம் கடந்திருந்தது.

மன்னி அண்ணனுக்கென இரவே பதமாய்த் தோய்த்து வைத்திருந்த தயிரைக் கோப்பையில் சர்க்கரை இட்டுச் சுவைக்கையில் அவள் பேச்சை யோசித்தான்.
‘ரெண்டு பேருக்கா வெச்சுரட்டா ரங்கா?’ மைலாப்பூர் சமையலறை மோடையில் காலாட்டிக்கொண்டிருந்த அவனிடம் வாயில் மிட்டாய் அதக்கிய முகத்துடன் மதியம் மன்னி கேட்டிருந்தாள்.

முகத்தை முடிந்தவரை நேராக வைத்துக்கொண்டு கேள்வியாய் நெற்றிச் சுருக்கியவனின் ஜீன்ஸ் தொடையில் சமையலறை ஈரம் படாதிருக்க முழங்கையில் ஏற்றியிருந்த தங்க வளையல் சரியப் பட்டெனத் தன் மருதாணி விரல்கள் சேர்த்துத் தட்டினாள். ‘சும்மா சொல்றா... ஒங்கண்ணா ஏற்கெனவே சொல்லிருக்கேர். வந்ததும் வராததுமா இப்ப

நீ கணகார்யமா ஶ்ரீரங்கத்துக்கு எதுக்கு ஓடறேன்னு நேக்கு தெரியாதா...'

என்ன தெரியும்? எவ்வளவு தெரியும்? 'இல்ல மன்னி அதெல்லாம் ஒண்ணுமில்லை... ஃப்ரெண்ஸ்... ரொம்ப வருஷ மாச்சு பாத்து... ஜஸ்ட் கெட் டுகெதர்...' கெஞ்சலாய் வழிந் திருந்தவனைக் கண்கள் விரித்து நிமிர்ந்து நோக்கினாள்.

'என்னவோ பா... பாத்து அளவா சாப்டு... ஒனக்குமே கண்டத சாப்டற வயசெல்லாம் தாண்டிண்டு வருது... மன்னி சொல்றது புரியறதா? இல்ல... நம்ம ஒடம்புதான, தாங்குமேன்னு getting lucky உத்தேசங்கள்லாம் உண்டுதானா?'
மன்னி வேலைதான் பொடவைக் கடையில். அவளும் கல்லூரி சென்றவளே. மெட்ராசின் நவ யுவ நாகரிகத்திற்குப் பேர் போன WCC கிராஜுவேட் அல்லவோ. ஆடிட்டர் அண்ணனைக் கவரமுடிந்த சாமர்த்தியம் புற அழகில் மட்டுமா நின்று விட்டிருக்கும். பொடவைக் கடை உறவினருடன் அவளே சேர்ந்து தொடங்கிய சொந்த பொட்டீக் ஷாப்.

'அதெல்லாம் ஒண்ணும் இல்லை' என்று சொல்ல வந்தவன், தயங்கி 'மன்னி... பாக்கதான் போறேன்... கெட்டிங் லக்கினுலாம் யோசிக்கலை... ஆனா, ஒங்க இட்லிய நிச்சயம் வேற யாரோடயும் பகிர்ந்துக்கறதா இல்லை... எனக்கு மட்டும்தான். ஒக்கே. தயிர மறந்துறாதீங்க...'

அவள் தோள்கள் இரண்டையும் பிடித்து மென்மையாய் உலுக்கிவிட்டுப் 'பேக்' செய்ய வேண்டும் என அகன்றான்.

அண்ணனும் மறக்கலை. மன்னியும் மறைக்கலை.

May just get lucky…

பல்லவனில் மன்னியின் தயிரைக் குடித்திருந்த ரங்கா பொறை ஏறியதில் தலையில் தட்டிக்கொண்டான். ரேஷ்மா நினைக்கிறாள்... புன்னகைத்துக்கொண்டான்.

Get lucky. அந்தச் சொற்றொடர் அமெரிக்காவில் பிரபலம். கல்லூரி வயதினர் பரிபாஷை. கண்ணடித்தவாறு Got lucky?' என்று கேட்பது 'உடலுறவு கொள்ளும் யோகம் அடித்ததா, காரியத்தை முடித்தாயா?' என்பதின் சங்கேதச் சுருக்கம். இன்று கூகிள் தேடியந்திரத்திலேயே 'தேடு' என்பதற்கு அருகில் Feeling lucky? எனும் மின்-

பித்தானாய்ப்புழங்கும் சொற்றொடர். ரங்கா இதன் சாராம்சத்தை அமெரிக்கா செல்லும் முன்னரே அறிந்து கொண்டவனானான். ரேஷ்மாவிடம்.

அவர்கள் கல்லூரியின் நான்காம் வருடக் 'கல்ச்சுரல்ஸ்' நிகழ்ச்சிகளில் 'ஃபேஷன் ஷோ' முடிந்து செம்பட்டை முடியுடன் இரவின் அலங்கார வெளிச்சங்களின் மறைவில் குளிர் கண்ணாடி யைச் சுழற்றிக்கொண்டிருந்த அவனை 'ஃப்ராக்' அணிந்த மெட்ராஸ் காலேஜ் பரட்டைத்தலைப் பெண் அரையிருட்டும் அநாமதேயமும் அளித்த எதிர்பார்ப்பில் உதட்டோரமாய் சின்னதாய் முத்தமிட்டதை ரேஷ்மா பார்த்துவிட்டாள்.

பக்கவாட்டில் அவன் மீது படர்ந்திருந்தவளை விலக்கவும் முடியாமல் இடைகோர்த்து அணைக்கவும் முடியாமல் சங்கடமாகச் சுருங்கியவனைக் கடந்து ஒன்றுமே நடவாதது போல தோழிகளுடன் ரேஷ்மா கடந்து செல்ல, ஒருவேளை இருட்டில் அடையாளம் தெரியவில்லையோ நல்லவேளை, இருந்தாலும் இடுப்பைப் பக்கவாட்டில் திருப்பாதே என்று எச்சரிக்கை கலந்த நிம்மதியில் மனம் படபடத்து 'shall call you later...' என்று ரங்கா தன்னை விடுவித்துக்கொண்டு இரவில் கலந்து...

மறுநாள் கந்தக பூமியின் தரிசல் நிலத்தில் தரமற்று முளைத்த கான்க்ரீட் கட்டடமான சுற்றுச்சுவரற்ற அவர்கள் கல்லூரியினுள், பேருந்துகள் இளைப்பாறக் கட்டப்பட்டிருக்கும் வேப்பமரத்தடியில் வழக்கம்போலச் சந்திக்கையில் முதல் கேள்வியாய் ரேஷ்மா 'Got lucky yesterday?' என்றாள்.

நேற்றிரவு வெளியில் ஃப்ராக்கும் உள்ளே நாட்டுச் சரக்கும் போட்டிருந்த அந்த மெட்ராஸ் பெண்ணிடமிருந்து தான் சம யோசிதமாய் தப்பிவிட்டதையே தன் வழக்கமான பீட்டர்-மேரி ஆங்கிலத்தில் கேட்கிறாள் எனக் கருதி 'Of course...' என்றான் ரங்கா.

இடுப்பில் கை வைத்து அவன் குறுநகையை முறைத்தவள், 'You bet..damn you... ஃப்ராடுறா நீ... இவ அப்பவே முட்டிண்டா, ராத்திரி அங்கயே சட்டயக் கோத்ருக்கணும்... வந்துட்டாளுவ ஒருத்தன வுட்டு வெக்க மாட்டாளுவளே... பனாத மாதிரி லவட்டீஸ் போடலேன்னா... Man stealing bitches...'

'யேய் யேய்... இரு இரு பிச்சஸ்-னுலாம்... இப்ப என்ன...' ரங்காவுக்குப்

புரியவில்லை அவளது ஆத்திரம்.

‘வாய மூடுறா கழுத... சொல்றான்... காட் லக்கியாம்... அவ மெட்ராஸ்னா நீ half of MADras...’

‘நா தப்பிச்சுட்டேன்னு...’

போயே விட்டாள்.

மாலைக்குள் விபரீதம் தன் குறைபாடான ஆங்கில அறிவினால் என்பதை முழுமையாக அவனை உணர்ந்துகொள்ள வைத்தனர் நண்பர்கள். இம்மாதிரி தருணங்களை நழுவ விடுவார்களா. பின் எதற்குக் கல்லூரி வருகிறார்களாம். தன் மூளையை உபயோகித்து ரங்காவே புரிந்து கொண்டது, ஹாஃப் ஆஃப் மெட்ராஸ் என்கிற வசையை. பயித்தியங்கறா...

இன்றும்தானே. அவள் மீது.

May just get lucky.

கண் அயர்த்தியது. அரைவிழிப்பில் ஆழ்மனம் அகல விழித்திருந்தது. ரேஷ்மாவிடம் என்ன வேண்டுகிறது மனம்? காதலியிடம் வேறு என்னதான் வேண்டும்? அமெரிக்கா வீட்டில் இருப்பவள் கொடுப்பதைத்தானே ஸ்ரீரங்கம் வீட்டில் இவளும் தருவாள்? பேராசையா, உரிமையா? எதை முன்வைத்து ஒருவரிடம் பெறுவதை மற்றொருவரிடமும் கோருகிறது மனம்?

அவளுக்கும் வேண்டும்தானே? அந்த ஜி-மெயில் சேட்... பிறகும் மின்-காதலில் மின்னிக்கொண்டுதானே இருக்கிறாள்.

லிங்ட் இன்னில் தொடங்கி மின்னஞ்சல் முகநூல் மின்னரட்டை என்று நேற்று வாட்ஸ்-ஆப் வரை அவளும் தகைந்து தானே வரவேற்கிறாள். சந்திப்பை எதிர்நோக்குகிறாள். எதிர்பார்ப்புகளைத் தன் வரவேற்கும் வரிகளில் கூட்டியளிக் கிறாள்.

சபலத்தின் மறுபெயர்தான் சந்தர்ப்பமா.

என்ன வேண்டுமாம் அவளுக்கு?

அவளை விடு, உனக்கு? கேட்டவுடன் பதில் கிடைத்தது.

எனக்கு வேண்டும்தான்.

தெளிவின் திடம் தந்த திகைப்பு உடனே குழப்பியது.

சும்மா கிடைப்பதென்றால் யாருக்குத்தான் வேண்டாம் என்கிறோமோ? ஏற்கெனவே அமெரிக்காவில் வீட்டிலேயே சும்மா கிடைத்ததே... சும்மா கொடுக்கிறாயா, சரி, அப்படி யெனின் இரண்டாகக் கொடு என்கிறதா மனம்?

கடைக்காரன் குடைக்கு சொன்ன விலையிலிருந்து பேரம் பேசி கருமி குறைத்துக்கொண்டே வர, கடுப்பான கடைக்காரன் இந்தாய்யா, சும்மாவே கொண்டுபோ என்று குடையை நீட்ட, சும்மாவா, அப்ப ரெண்டாக் கொடு என்றானாம் கருமி.

தன்னால் தகைவதை இரண்டாய்க் கொடு என்கிறதா மனம்?

சும்மா கிடைக்கையில் இரண்டுடன் நிறுத்துமா?

அகப்பேய். ஆட்டைக் கடித்து மாட்டைக் கடித்து அடுத்து அகத்திலேயே கடிக்குமோ. அய்யோ அண்...

தவிப்பறிந்த காதலின்றிக் காதல் கனிந்த அன்பினோடு அன்பின் அரவணைக்கும் தவிப்போடு தரணியில் என்றும் நாமணுகும் தாரகைகள் தான் எவரோ?
தான் உருவாக்கிய தளிர்நடை தவிர தன்னை உருவாக்கிய தாயவள் எஞ்சுவாளா?
தனித்த தொப்புள்கொடி கொண்டு தன்னால் உருவாகிய தங்கைகளும் தானே கட்டியராக்கிக்கொடியோடு தளுக்காய் வந்து சேரும் தமக்கைகளுமே தருணம் தழைந்தால் தைத்திரியங்களைத் தகர்த்தெறிந்து தன்வெறிகொண்டு தீம்தரிகிடயோடி விடும் தாபத்ரைய தகிப்பைத் தட்டியெழுப்பிவிடுவரே.

அகப்பேய் அலறுகின்றதே, ஆசையில்..

.

பல்லவன் விருத்தாச்சலத்தினுள் ஊளையிட்டபடி நுழைந்தான்.

இந்த இடத்தில்தான் இலக்கியத் தகுதிபெற்ற எழுத்தில் இயற்கை வருணனைகள் வந்துபோகும். பெரும்பான்மைக் காதலர்களுக்குப் பெயர் தெரியாத பல பறவைகள் மொழிகளில் அடங்காத ஒலிகளில் காதலைப் பகிர்ந்துகொள்ளும். ஏதேதோ மரங்கள் எப்போதும்போல் காதலன் மனம் ஆடும் காவடியை ஒத்து அசைந்திருக்கும். எப்படியும் சூரியன் புறத்தையே இரவாகத் தவிக்கவிட்டுத் தகிப்பாய்க் காதலன்

மனத்தினுள் இறங்கி ஏதாவது செய்வான். விண்மீன்கள் காதலியின் அலையும் கூந்தலில் அலர்ந்து சிதறிய மல்லிகைகளென...

காதலித்திராதவர்கள். தவிப்பற்றவர்கள். அறிவுஜீவிச் சுயமைதுனிகள். இவற்றை எழுதியவர் வாசித்தவர் எவருமே.

காதலில் இருப்பவனின் வெளிப்பார்வையில் காதலியைத் தவிர எது புலப்படும். உலகை வெறுத்தவரின் கை ஸ்ரீராமஜெயம் போல, அவன் வேறு எதை எழுதிவைப்பான்.

ரங்கா எழுதவில்லை. இருக்கையில் சாய்ந்து கால்கள் நீட்டிக் கண்களை மூடினான்.

பல்லவன் பயணித்தான். இலக்கை நோக்கி. இனியும் இரவைக் காத்திருக்கவிடலாகா எனும் இரட்டிப்பு வேகத்தில்.

நிச்சயமாய் ஒன்று உண்டு. ரேஷ்மாவை காதலிக்கிறேன். அதனால்தான் காமுகிக்கிறேன். அவள் சம்மதத்துடன் தான் மனத்தாலும் அவளை மோகிப்பேன் ...கித்தேன் ...கிப்பேன்.

ரேஷ்மாவைக் காதலியாய் நோக்குவதின் பரவசம் வேதாவை மனைவியாய்க் காண்பதில் கிடைக்கவில்லை என்று மனம் கருதுகிறதா? ரேஷ்மாவைச் சந்திக்கப்போவதினால் இன்றா, சந்திக்கமுடியாது என்று கருதிய அன்றா?
வேதாவை தினமும் சந்திக்கத் துடித்த காலமும் உண்டுதானே. அன்றைய பொழுதுகளிலும் ரேஷ்மாவைத்தான் ஆழ்மனம் சந்திக்கத் துடித்ததா? இல்லை அவளுடனான காதல் கைகூடியதில் வேதா எனும் காதலியை இழந்துவிட்டேனா? கணவனில் கரைந்த காதலனை வேதாவுமே இன்று தேடிக்கொண்டிருக்கிறாளா? சரி என்று வேதா சம்மதித்த அக்கணமே ஆள்மாறிப் போய் விட்டதை அறிந்த அதிர்ச்சியில் காதல் கனிந்து அன்பெனும் காயாகி விட்டதா? இனி அவ்வுறவு ரசீது கிழிக்கப்பட்டுச் சொந்தமாகிவிட்ட காமக்கலையம் மட்டுந்தானா? அதே காமக் கலையந்தான் காதல் வேடமணிந்து ரேஷ்மாவிடம் இன்றும் கடைப்பொருளாய்க் கண்ணடிக்கிறதா? அவளுடனும் அன்றே கைகூடியிருந்தால் கடைப்பொருள் காதற்களையிழந்து காமக்கலையமாய்க் கட்டிய மனைவியெனக் கவுந்திருக்குமா? இல்லை இன்று உடல் கூடிவிட்டால் கடைப்பொருள் உன்னிடம் ஏற்கெனவே உள்ளதன் மறுபதிப்பு, மீள்தோற்றம், மோகப்போலி என்று புரிந்துவிடுமா.

தினவாழ்க்கையின் அருகாமை தரும் அசூயைகள் அன்றி இருதினங்கள் மட்டுமே இயலும் தருணங்களில் மட்டுமே இருவராலும் இயல்வதைக் கறந்துவிட மட்டுமே சந்திக்கப் போகும் ரேஷ்மாவின் உருவற்ற உறவில் உன்னதங்களை மட்டுமே காண்கின்றதே. கூடவே இருந்து கைக்கருகே கண்விழித்துக் காலையில் கால்கழுவுகையில் கொப்புளித்து ஓக்காளிக்கும் அன்றாட அந்தரங்கங்கள் அகற்றி ஆலகால அமிர்தமாய் அடலேற்றிக் கொள்கிறதா மனம் ரேஷ்மா மீதான காதலை? வாழ்க்கையின் மிக அழகான விஷயமாய் ரேஷ்மாவின் காதலை நினைத்துக்கொண்டு வேதாவைக் காதலித்துக் கைப்பிடித்ததையும் கோரமாய் ஆக்கிக்கொள்ள விழைகிறதே மனம்.

தினவாழ்வு திறந்துகாட்டும் இயல்புகளில் எவருடனும் காதல் கனிரசம் கவனிக்கவில்லையெனின் வெய்யிலில் வைத்த வெண்பனிக் கூழ்போல வடிந்துவிடுமன்றோ.

ரங்காவின் மனத்தின் குறுக்கே ஆழி பிளந்தது. ஆழியின் இரு புறமும் மனக்கரை புரண்டது, பதுங்கியது, பயந்தது, போதித்தது. அக்கரையைக் கண்டுகொள்ள விம்மியது. குறுக்கே உருவான அகழியின் ஆழத்தைப் பொருட்டாமல்.
இறக்கும் தறுவாயில் மனிதன் வாழ்க்கையில் செய்தன வற்றை நினைத்து அடையும் திருப்தியை விடச் செய்யாமல் தவறவிட்டவற்றை நினைத்தே அதிகம் வருந்துகிறான். சந்தர்ப் பங்களைத் தவறவிடக்கூடாது. நான் இப்போது செய்ய விரும்பு வது ரேஷ்மா.

தன் வீட்டிற்கு வந்திருப்பாள். சாப்பிட்டிருப்பாளா. வந்து சேர்ந்ததும் சொல், இரவு எந்நேரமானாலும் பார்க்க வருகிறேன் என்று வாட்ஸ்-அப் செய்தியில் விரும்பியிருந்தாள்.

கைகூடாக் காதல் என்றுமே கைகூடிய காதலினும் உசத்தியானதாய்த் தோற்றம் பெற்றுவிடுகிறது. ஏனெனில் கைகூடிய காதல் நிகழ்காலத்தியதாய்த் தொடர்கிறது. நிகழ் வழக்கமாய் வாழ்ந்துகொண்டிருப்பது, சற்றேனும் அலுப்பானது, சிந்தனை சிறுத்தது, பல்வகைப் படைப்பூக்கமற்றது, கற்பனை வறண்டது. ஊரைவிட்டு ஓடிய காதலர் இன்றும் அடுத்த ஊரில் என்ன செய்கிறார்கள் என்பதைக் கைகூடிய காதல் நமக்கே காட்டிக் கொடுத்து விடுகிறது.

‘R U here yet?’ வாட்ஸ்-அப்-பில் ரேஷ்மா பொறுத்திருந்தாள்.

லால்குடி.

கைகூடாக் காதல் தொக்கி நிற்கும் தொல்பொருள். மனத்தில் என்றும் தொட்டுப்பேசும் தொலைதூரம். முற்றுப் பெறா வாக்கியம். முழுமை பெறா மோகச்சிலை. எழுதப்படாப் புத்தகம். எண்ணிலடங்கா சாத்தியம். எச்சரிக்கையின்றி எவரையும் தலை குனியவைத்து எத்திசையிலும் எகிறி எழும் ஏரோப்ளேன் வெடி முழுமைபெறாக் காதல்.

குனிந்து ஆப்பிள் வாட்சில் மணி பார்த்துக்கொண்டான்.

அடுத்த அரைமணிக்குள் இருபத்திமூன்று அங்க அடுக்குகள் கொண்ட சரீரத்தை நிலத்தில் நெடுஞ்சாண்கிடையாக்கிச் சமகாலப் பல்லவனும் அரங்கத்தினுள் சேவித்துக் கிடந்தான்.

# 7

## பெங்களூர் + ஸ்ரீரங்கம். நேற்று மாலை.

இருபத்திமூன்று இருக்கைகளே இருக்கலாம் எனும் சிறிய ஏரோப்ளேனில் ஹோல்டாலுக்குள் பையை எட்டித் திணித்து விட்டு இருக்கையில் அமர்ந்தாள் ரேஷ்மா. நல்லவேளையாக ஜன்னலோர சீட். விமானத்தில் வெளியே என்ன பார்த்துவிட முடியும்? பக்கத்தில் உட்கார்ந்திருப்பவரிடம் பேசாமல் ஜன்ன லில் சாய்ந்து தூங்குவதாய்ப் பாசாங்கு செய்யலாம். மனத்தின் ஆர்ப்பரிப்பைப் பேச்சில் குலைக்க விருப்பமில்லை.

உயர்சாதி மாட்டை அது ஒருகாலத்தில் உயிருடனிருக்கையில் போர்த்தியிருந்த கைப்பையிலிருந்து காம்பேக்ட் டப்பியை எடுத்துத் திறந்து அதன் சிறிய கண்ணாடியில் பார்த்துக் கொண்டாள். முன்தினம் பார்லரில் செய்துகொண்ட முத்து facials பலனளிக்கத் தொடங்கிவிட்டது. காதில் அமெரிக்க டயமண்ட் லோலாக்கு உற்சாகமாய் இரண்டு கதைகள் சொல்லிக் கன்னத்தில் கண்ணடித்தது. மன்மத அம்பாய்த் திருத்திய புருவங்களின் மத்தியில் வெள்ளைக்கல் வைத்த பச்சை பிந்தி பொட்டு. மேல் இமைகளில் பச்சை ஐ-லைனர் வரைந்த மெல்லிய கோடு கண்களைச் சந்திப்போருக்குக் கிறக்கத்தைக் கூட்ட வல்லது. இயல்பாய்ப் பிளந்திருந்த உதடுகளில் இருக்கிறதா இல்லையா என்று தெரியாதபடி கோணங்களில் பளபளத்த செம்பூச்சு. சற்று முன்னரே முத்தமிட்டு வந்திருப்பதைப்போல...

ரங்காவைப் பார்க்கப் போறப்ப அழிச்சுறணும். ரேஷ்மா இரவு படுக்க வரும் முன்னர் மேக்கப் அனைத்தையும் அழித்து விட வேண்டும் என்பார் அபி. நேர்த்தியாக மடித்து என்ஷாண்டியூர் பவுடர் கமகமத்த கைக்குட்டையைப் பையி லிருந்து எடுத்து மென்மையாக உதட்டை ஒத்தினாள். போனில் குறுஞ்செய்தி அனுப்பினாள். ‘விமானத்தில் ஏறிவிட்டேன். உன்னிடம்... ;-)’

‘அலைபேசிகளை அணைத்து வைக்கவும்.’ விமானப் பணியாளைச் சபித்தபடி இருக்கையைச் சாய்த்தாள். தம்மாத் தூண்டு போன் சிக்னல் இத்தன பெரிய ஏரோப்ளேன் கம்யூனிகேஷன கெடுத்துருமா? இதயெல்லாம் ஒருத்தரும் கேக்கறதும் இல்லை. விளக்கறதும் இல்லை. படிக்கவெச்சா லவ் பண்ணி இழுத்துட்டு ஓடிருவாளுவன்னு சாதிசனம் நம்பறா மாதிரி...

ரங்காவைப் பார்க்கப்போகிறோம் என்பதே அடிவயிற்றில் பட்டாம்பூச்சிகளானது. பதினைந்து ஆண்டுகளுக்கு முன் ஆசிரியர் கரும்பலகையில் எழுதத் திரும்புகையில் ஓரக்கண் அவனைப் பார்க்கும் கணத்தில் அவனும் பார்க்க நேர்ந்தால் பறக்கும் அதே பட்டாம்பூச்சி. தீவிரமாக அளவளாவுகையில் ரங்காவின் கண்கள் நொடி அவள் கண்களிலிருந்து இறங்கி அவளது ஈர இதழ்களில் பதிந்துவிட்டு ஏறும்போது தோன்றும் சுகம். எப்படி ரங்காவால் மட்டும் அதே சிலிர்ப்பை இன்றும் தோற்றுவிக்க முடிகிறது அவள் மனத்தில். இதுதான் காதலா?

சிலிர்ப்பு ரங்காவாலா? கள்ளத்தனம் தரும் த்ரில்லா? இளமையில் பெற்றோர் அறியாது காதல் செய்த கிளுகிளுப்பு இப்போது ஐம்பதை நெருங்கும் கணவனுக்குத் தெரியாமல் செய்வதினாலா?

விமானத்தைச் சுற்றி மேகமிட்டதும் பையில் போன் கூவியது. ரங்கா அழைப்பு என்றால் அணைத்ததும் உயிர்க்குமோ, பதினைந்து ஆண்டுகள் அணைந்திருந்த காதலைப்போல். கூவியது அலுவல் அலைபேசி இல்லை. பெர்சனல் போன். அபி? கிளம்பிட்டியாம்பாரு. இருப்பு கொள்ளாதே… சே, பாவம்…

கைப்பைக்குள் அலசி எடுத்தாள். அபி இல்லை, அத்தை.

இவங்க ஏன் இப்போது? ‘என்னங்க அத்தெ… இல்ல சொல்லுங்க… கிளம்பிடிச்சி… தனியா எங்க அத்தெ, அதான் அவங்க டாடி கூட இருக்காரே…’ கொழந்த என்ன கரைஞ்சுருமா? இவுரே ஒண்ணுத்துக்கு ரெண்டா ஏத்திவுட்ருப்பாரு.

எதிர்ப்புறம் அத்தைக்குப் பெருங்குரல். அலைபேசியே தேவையில்லை. பக்கத்து சீட்டில் திரும்பினால் பேசத்துடிக்கும் பெண்ணைத் தவிர்த்து ஜன்னலுக்கு வெளியே பார்த்துக் கொண்டிருந்த ரேஷ்மாவிற்கு, அவள் தலை தன் பக்கம் சாய்வது போலிருந்தது. Nosy Parker. வம்பிற்கென்று அலைபவர்கள். இதுக்குதான் பிஸினஸ் க்ளாஸ் வாங்க வேண்டும். ‘அத்த, சிக்னல் சரில்ல. கேக்க மாட்டீங்குது. அப்றம் கூப்பிடறேன்.’ வைக்கவில்லை என்றால் ரத்தக்கொதிப்பில் விமானத்திலேயே கத்தி விடுவாள்.

மாசாமாசம் அபி பிசினஸ்னு வெளியூர் போறார், எத்தனை முறை அத்தை அவர்ட்ட கேட்ருப்பாங்க குழந்தை தனியா இருப்பானேனு? கல்யாணம் ஆயிரிச்சினா உரிமைகளக் கழட்டி வெச்சுறணும்.

பெண்ணடிமைச் சமுதாயம். தாய் வீட்டிற்குப் போக உரிமையில்லை. கட்டிவெச்சிட்டா காதல் போயிரணும். இப்டி அடிமைத்தனப் படுத்தறதே அத்தை மாதிரிப் பெண்கள் தான்... அபி ஒண்ணும் சொல்லலையே...

அலைபேசியை அணைத்துப் பையினுள் எறிந்து மூடினாள். ரெண்டு நாளும் இத ஆன் செய்யக்கூடாது. அம்மா போன்லயே குட்டியோட பேசணும். ரெண்டு நிமிஷத்துக்கு மேல அத்தையோட பேசினாப் பொறும போய்டுது. விட்டா ஒங்க கூடவே இருக்கேன்னு வந்து ஒக்காந்துருவாங்க. மாமாதான் 'புள்ளங்க தனியா இருக்கறதே முறை'னு கட்டி வெச்சிருக்காங்க. மாமா முதலில் போய்ட்டா... அத்தையக் கூடவே கூட்டி வெச்சுக்க முடியாதுன்னு அபிட்ட சொல்லிறணும்.

நகப்பூச்சின் வாசம் நாசியில் ஏறியதுமே வாயிலிருந்து விரலை எடுத்தாள். மூன்று வாரங்கள் கவனமாய் நகத்தைக் கடிக்காமல், முன்தினமே பார்லரில் மானிக்யூர் செய்திருந்தாள். ரங்காவுக்குச் சிகப்பு நகச்சாயம் பிடிக்காது. நக நிறத்திலேயே பூசியிருந்தாள். கால்களிலும். இருபது நிலவுகள் நகமெங்கும் ஒளிவிடும்... இப்பவும் இளையராஜா கேட்கிறானோ? வருடங்களாய் இசை கேட்பதையே மறந்துவிட்டாள். அபிக்கு இசை யார்வம் இல்லை...

எக்ஸ்கியூஸ் கேட்டவளிடம் 'டயட் கோக் ப்ளீஸ்' என்றாள். கடைசியாக வீட்டிற்கு வெளியே காபி குடித்தது ரங்கா வுடன். அவன் அமெரிக்கா போவதாய்ச் சொன்ன அன்று.

'மன்னிக்க வேண்டும். டயட் இல்லை. சாதா தரவா?'

'ப்ச், வேண்டாம்.' வழக்கமான தேங்ஸ் இணைக்கவில்லை. எரிச்சல். என்ன விமானம் ஓட்டுகிறார்கள்? இடியட்ஸ். கார்லயே போய்ருக்கலாம். வேண்டியத நிறுத்தி வாங்கிட்டு... ஹாயா... சுதந்திரக் காற்றை எதிர்த்துக் கிழித்து வேண்டிய மட்டும் உள்ளிழுத்தவாறு... பெண்களுக்கு கார் ஓட்டப் பிடிச்சிருக்கக் கூடாது. இன்னொரு பேத்தலான குலமகள் விதி. ஏம்ப்பா இப்டி என்னய சுதந்திரமா வளத்தீங்க? மாட்டிட்டு முழிக்கறேன். அன்னிக்கிக் காரை இடிச்சவளும் பெண்தான். அதுனால தானே பரிதாபப்பட்டுப் பேசினாள். இப்ப ஆத்திரமா வருது. கார்ல வரமுடியாம...

கண்மூடி ஜன்னலில் தலை சாய்த்தாள். ஏன் இன்று காலையிலிருந்து எதற்கெடுத்தாலும் எரிச்சல்? நாளாகிவிட்டதா? மாத விலக்கிற்கு ஒருவாரம் இருக்கிறதே. கருத்தில் கொண்டுதானே இந்த இரண்டு

நாட்கள் ரங்காவை வரச் சொன்னது…

இடுப்பு வலியுடன் காதலில்… இருந்துள்ளோம். ரங்காவுடனேயே… காலேஜில் ஒரு மதிய உணவு வேளையில் 'ராம்போ ஸ்டைல்' என்று இளைஞர்கள் சில்வஸ்டர் ஸ்டாலோன் போல பின்புறம் ஆங்கில எஸ்-ஸாய் வளைத்துக் குலுக்கும் சிகை அலங்காரத்தில் இருந்த ரங்காவை வாருவதற்கு அநாமிகா 'ஏன் ரங்கா பேகி பேண்டு போட்டுகிட்டு இப்டி கிரீடம் இல்லாத ராஜா கிராப் வெச்சிருக்க?' என்றதும் ரேஷ்மாவிற்கு இடுப்பு வலியிலும் சிரிப்பை அடக்க முடியவில்லை. ரங்கா மேஜையில் அருகிலிருந்த சாவிக்கொத்தை எடுத்து விட்டெறிய, தாக்கிய அடிவயிற்றில் ரேஷ்மாவிற்கு மூச்சே நின்றுவிட்டதாய் வலி. கண்களில் மளுக்கின நீருடன் இடியட் என்று கத்தியவாறு வயிற்றை நேரடியாகப் பிடிக்கவும் முடியாமல் நிமிரவும் முடி யாமல் தோழிகளுடன் விலகிவிட சுற்றியிருந்த ஆண் சகாக்களுக்கு ஏன் இந்த சப்பை மேட்டருக்கு இத்தனை இரைந்தாள் என்பது புரிந்திருக்க வாய்ப்பில்லை. மாலை வழக்கம்போல ஒன்றை ஒன்று விரட்டிக்கொண்டு காலேஜ் பஸ்களில் இருவரும் வீட்டிற்குத் திரும்புகையில் செம்பட்டு விமான நிலையம் அருகே அவள் ஜன்னலோரம் அமர்ந்திருந்த பஸ் இடப்புறம் எடமலை பட்டிப்புதூர் சாலையில் திரும்பும் முன்னர் நேரே சென்று கொண்டிருந்த முன்னால் பஸ்ஸில் பின் படிக்கட்டில் அமர்ந்திருந்த ரங்கா சில நொடிகளுள் தன் வயிற்றைத் தடவி வாயைப் பிளந்து ஸா-ரி என்று உச்சரிப்பதைக் கண்டு கொண்டாள். அவன் கண்களில் அவள் வலியின் காரணம் புரிந்ததற்கான பரிதாபம். அந்நொடியில் ரேஷ்மாவிற்கு உணர முடிந்ததுதான் காதலில் உள்ளோம் என்பதை. இரவு போனில் பேசுகையில் 'சாரி-தானே சொன்ன, எதுக்கு?' என்று வேண்டுமென்றே அவனை ஆழம் பார்க்கையிலும் 'ரொம்ப திட்டிட்டேனா' என்று அடுத்துக் குழைகையிலும் அவள் வெளிக்காட்டும் உணர்வுகளால் தன்னை மாற்றிக்கொள்ளத் தயங்காதவனையே காதலிக்கிறோம் என்பதும் புரிந்தது. இடுப்பு வலியுடன் காதலிப்பதன் பாதிப்பை அன்றே உணர்ந்தவள் இன்றும்…

ஆறேழு மாதங்களாகவே ரேஷ்மாவிற்கு விலக்காவதற்கு சில நாட்களுக்கு முன்பிருந்து PMS தொல்லை ஆரம்பித்து விடுகிறது. நிமிடத்துக்கு நிமிடம் மாறுகிறது மனநிலை. திடீரென்று கையில் கிடைப்பதை எடுத்து வீசவேண்டுமென்பது போல் கோபம், திடீர் அழுகை, திடீர் சிரிப்பு… எந்த நிமிடத்தில் என்ன உணர்ச்சி என்றே கணிக்க முடியாதபடி. சில சமயம் தாங்க முடியாத உடல் வேட்கையுடன். அபிதான் பாவம்…

டாக்டரிடம் கேட்டதில் இந்த வயதில் PMS தீவிரமாக இருப்பது சாத்தியமே என்றாள். அரைகுறை. எத்தினி வயசாயிடிச்சின்னு இவ... பிறகு ஒழுங்கற்ற மாதவிலக்கிற்காக அவளிடம் சென்றதில் ஸ்கேன் எடுத்துப் பார்த்து கர்ப்பப் பைக்கு வெளியே கர்ப்பம் ஏற்பட்டுள்ளது, உடனே அறுவை சிகிச்சையில் கருப்பையை நீக்கவில்லை என்றால் உயிருக்கே ஆபத்து என்றாள். அபிதான் ‘கருப்பைய எடுக்கறதா, மொதல்ல டாக்டர மாத்து’ என்று தன் உறவினர் டாக்டரிடம் அழைத்துச் சென்ற தில் ஒழுங்கற்ற மாத விலக்கிற்குக் காரணம் Ectopic pregnancy இல்லை சூலகத்து நீர்க்கட்டிதான் என்பது தெரிந்தது. சரி செய்வதற்குத் தினமும் கருத்தடை மாத்திரை உட்கொள்ள...
ஐயோ femme எடுக்கலியே!

மாத்திரைப் பட்டையை எடுத்துக் கொள்ளாமல் வந்து விட்டாள். தினமும் இரவு சாப்பிட வேண்டுமே... முந்தின இரவு நினைத்தாள் கையோடு பையில் எடுத்து வைக்க வேண்டு மென்று. காலை குழந்தையுடன் போராடியதில் மறந்தாச்சு. அபியால்தான்... சே, உதவிருந்தா புடவை, மாத்திரை எதையும் மறந்திருக்க மாட்டாள். மாத்திரை ஒரு வேளை தவறினாலும் அடுத்த நாள் மாதவிலக்கு வந்துவிடும். போனவுடன் மருந்துக் கடைக்குப் போய்... ஸ்ரீரங்கத்தில் இருக்குமா? கார்ல வந்திருந்தா பிரச்சனையே இல்ல... எல்லாத்தயும் நாமே முடிச்சுருக்கலாம்... எல்லாத்துக்கும் இடிச்ச அந்தப் பொண்ணுதான் காரணம்...

***

ரேஷ்மா இன்றைக்கு அவசியப்படும் தன் சுதந்திரம் ஒரு வாரம் முன்பு திட்டமிடாமல் காருடன் பறிபோனதற்கான விபத்திற்கு அவள் காரணமல்ல. காரணமானவள் இருபத்தி ஐந்து வயது ஐஐஎம் எம்பிஏ பட்டதாரி. வோடபோன் கம்பெனியில் சென்ற வருடம்வரை பார்த்த வேலையில் கைகொள்ளாமல் சம்பாதித்ததிலேயே குறுக்குச் சந்திலிருந்து வேகத்துடன் கிளப்பி சிக்னலில் ரேஷ்மா சுதாரிக்கும் முன்னர் அவள் காரில் மோதிவிட்ட தன் காரைப் புதிதாய் வாங்கியிருந்தவள். நினைவில் இன்று தங்காத பெரிய பெயருக்கேற்ப சம்பவ தினத்தின் அண்மைக்காலத்தில் குழப்பமானவள் என்பது விபத்திற்குப் பிறகு நடந்திருக்க வேண்டிய வாய்த் தகறாரில் தொடங்கி அரை மணியில் ரேஷ்மாவிற்குப் புரியத் தொடங்கியபோது அந்தப் பெண் உடன் வந்திருந்த மாமா அறைந்ததில் கன்னம் சிவந்து

உதட்டோரம் ரத்தம் கசியத் தன் கதையை ரேஷ்மாவிடம் நிர்பந்தமாய்ப் பகிர்ந்திருந்தாள்.

நிறைவேறாக் காதல் கதை.

இடித்த காரின் பின்சீட்டில் பெற்றோர். அவளை காரிலிருந்து வெளியேற்ற முயன்று தோற்றதில் தன் தம்பியைத் தாய் அழைக்க மாமாவின் தோல்வியே அப்பெண்ணின் உதட்டோரம் கசிவது.

ஓ... காதலிப்பவனைக் கட்ட விடாமல் படித்த மேஜர் பெண்ணிடம் நகர மையத்தில் கட்டப் பஞ்சாயத்து செய்கிறார்களா கிராமத்து முறைமாமனும் முறைக்கும் பெற்றோரும்?

இவ்வாறே ரேஷ்மா அன்று உடனடியாக நினைத்தாள். ஊரெல்லாம் ஒரே தமிழ்சினிமா கதைதானா? ஒரு கதையிலாவது காதலன் தன் முறைப்பெண்ணிடமோ அத்தையிடமோ அடி வாங்கியிருப்பானா? ஆண்கள் எழுதிய கதைகள்...

இடதுமுகம் நசுங்கி உடன் வந்திருந்த அபியினால் ஓரங் கட்டப்பட்ட தன் செடான் காரில் ரேஷ்மா ஏஸியைப் பெரிதாய் ஓடவிட்டு அந்தப் பெண்ணை அமர்த்தி விவரம் கேட்டதும் அவள் மௌனமாய்த் திரும்பிக்கொண்டாள்.

‘நாங்க கட்டிவெக்கறோம்னுதான்... அந்தப் பையனுக்கு கல்யாணம் ஆயிருச்சிங்க. இவுளுக்கும் தெரியும்.’ பெற்றோர்.

விபத்தின் வில்லங்கத்தில் இருந்து மகளைக் காக்கத் தங்கள் வீட்டுக் கதையை அந்நியரிடம் பகிரத் தயங்கவில்லையோ.

‘இல்ல. நோ. அவுனுக்கு அவ ஏத்தவ கெடயாது. நான்தான் அவனுக்கு சூட் ஆவேன்...’ திடீரென்று வீரிட்டாள் அப்பெண்.

‘ஆமா பத்து வருஷம் படுத்துப்பாத்து வந்து சொல்றா கேட்டுக்கணும். இதுக்குதான் பொட்டச்சிய படிக்கவெக்காதங்கறது...’ கையை ஓங்கிப் பாய்ந்த மாமனை...

‘மிஸ்டர், பேசிட்டிருக்கறச்ச வயலன்ஸ் தேவையா. இடிச்சதயே போலீஸ் கேஸாக்கிடுவேன். இப்ப டொமஸ்டிக் வயலன்ஸ் சேந்துக்கும். சாட்சி நானு... செய்ட்டா...’

அபியின் அதட்டல் அவனை நிறுத்தியது. சொன்னதுடன் ஒதுங்கியிருந்த

அவர்கள் கார்களைக் காட்டி எதிரே டிராபிக் போலிஸிடம் கன்னடத்தில் சிரித்துப் பேசி அபி அனுப்பி வைக்க தமிழ் சினிமா மாமா அணைந்துபோய் அமர்ந்தான்.

ரேஷ்மா கேட்டாள். ‘பையங்கூட பேசிப்பாத்தீங்களா?’

‘இவ அழுத்திக் கேட்டு டார்ச்சர் கொடுக்கறாங்கறதால வேணா இப்பவும் காதலிக்கறேன்னு சொல்றேங்கறான்.’

‘இல்லங்க மேடம். அவன் காதலிச்சான்... ப்ரூஃப் இருக்கு. அத எடுக்கத்தான் போய்ட்டிருக்கேன்...’ பெண் ஆவேசமானாள்.

‘லவ் பண்ணது உண்மைதாங்க. அப்றம் ஏனோ அவன் வேணாம்னுட்டான். வுட வேண்டிதுதானே. கேக்க மாட்டேங்குது... அவனுக்குக் கல்யாணமாயி ஆறு மாசமாச்சு. இப்பப் போயி நிக்குது. சொல்லிக்கில்லி பாத்துட்டு இப்ப அவங்க வீட்லேந்து ஊர்ல காலேஜ்ல படிக்கற இவ தம்பியவே தூக்கிருவோம்னு ஓப்பனா கொலை மிரட்டல் விடுறாங்க’ பெற்றோர் பரிதாபம் கோரினர்.

ரேஷ்மாவிற்கு விபத்தின் எரிச்சல் கடந்து பிரமிப்பாய் இருந்தது. இரண்டு மாதங்களாய் ரங்காவுடன் மீண்டும் தொடர்பில் இருக்கையில் இந்த நிகழ் காதல் கதையின் போக்கு அவளை ஈர்த்தது. போகலாம் அறுவை என்று சைகை செய்த அபியைப் பொருட்படுத்தாமல் மேலும் துருவினாள்.

‘அப்றம் ஏம்மா... நீ போய் நின்னா அந்தப் பெண்ணோட வாழ்க்கையும்ல கெடும். ஐஐஎம்-ல படிச்சிருக்க...’

‘அவுளுக்கும் தெரியுங்க எங்க லவ் பத்தி. அவனே சொல்லி இண்ட்ரோ செஞ்சிவிட்டான். பேசினா எங்ட்ட. அவன் எனக்குத் தான் சரின்னேன். அப்டியும் கட்டிட்டா...’

உச்சக் குரலில் அந்தப் பெண் ஹிஸ்டீரிக்காய் பேசப்பேச அவள் குழப்பமே தெளிவானது. இவளை மறுத்துவிட்டு அவன் வேறு ஒருத்தியை மணந்துள்ளான். இவளால் தன் காதல் தோற்றுவிட்டது என்பதை ஏற்க முடியவில்லை. அது என்ன ருசு ஏதோ எடுக்க ஸ்கூலுக்குப் போகிறேன் என்று...

‘அதெல்லாம் ஒண்ணுமில்லீங்கமா. பையனோட அம்மா அந்த ஸ்கூல்ல டீச்சர். அங்க போய் கூப்பாடு போட்டு கலாட்டா செஞ்சு

அவமானப்படுத்தப் போய்ட்டிருக்கா. என்ன சொல்லியும் கேக்காமப் போக என் தம்பி கடுப்புல அடிச்சிட்டான்...'

இவ்வயதில் இத்தனை தீவிரமான காதலா? ரேஷ்மாவால் ஜீரணிக்க முடியவில்லை. அங்கு பொங்கிய எரிச்சல் தன் மேலா என்றும்கூட வீட்டிற்கு வந்து சில நாட்களாய் யோசித்தாள். ஒரு வேளை ஆசைகாட்டி ப்ரெக்னென்ஸி ஏதும்... அதை மறைத்து காதல் கத்தரிக்காய் என்று இவள் பாவ்லா... எப்படிக் கேட்பது...

'பாருமா... காதலிச்சுருக்கலாம். இப்ப இல்லேங்கறான். அதுக்கு கேஸ் போட முடியாது. ஒன்னக் கட்டிருந்து அவளயும் கட்டினான்னா அடல்ட்ரி கேஸ் போடலாம். குழந்தை... அப்டி ஏதுன்னாலும் போடலாம். இதுக்கு ஒண்ணும் செய்ய...' இடை மறித்து அந்தப் பெண் 'லவ் செஞ்சிட்டு வேணாம்னா நியாயமா. புடிக்கலைன்னா எதுன்னு சொன்னா மாத்திப்பேன். வேணாம்னா... அவுனுக்கு நான்தான் சூட்டபிள்னு எனக்குத் தெரியும்...' என்று இரைய, பொறுமையிழந்த அபி இடை புகுந்து சமாதானம் செய்ய ரேஷ்மா அவளிடம் விளக்கினாள்.

'நீ இத்தன சண்ட போட்டு இப்ப இருக்கற மனைவிட்டேந்து டைவர்ஸ் வாங்கவெச்சு அவனும் வர்றான்னே வெச்சுக்க, நிஜமாவே இதுக்கப்பறமும் லவ் பண்ணுவான்னு நெனக்கறயா? ஒன்னோட சேருவானா என்ன? ஒன்னயும் சேர்த்து மூணு பேரோட வாழ்க்கையப் பாழடிக்காத. வீட்டுக்குப் போயி பொறுமையா யோசிச்சு முடிவெடு. நான் சொல்ட்டா, அவனாவே இப்ப வந்தாலும் படிச்சவ நீதான வேண்டாங்கணும்... நீ இத்தன லவ் பண்றதுக்கு மொதல்ல ஏத்தவனா அவன்...'

சொல்லிக்கொண்டிருக்கையிலேயே முகத்திலடித்தாற் போல அந்தப் பெண் காரிலிருந்து இறங்கித் தன் காருக்குப் போய்விட்டாள். பெற்றோர் சங்கடமாய்க் கோரிய மன்னிப்பை ஏற்று விபத்தானதற்கு நஷ்டம் ஏதும் கேட்காமல் வீடு வந்தனர்.

'மேன்-மேனேஜ்மெண்ட்ல நீ பெரிய ஆள்தான். அப்பிடியே பைனான்ஸ்லயும் அறிவை உபயோகிச்சா எங்கியோ போயிருவ. நல்லவேள நம்ம கம்பெனில ஒரு வேல போட்டுக் கொடுக்கச் சொல்லலை. மாதர் குல மாணிக்கமே...' வழி யெல்லாம் அபி வெறுப்பேற்றி வந்தார்.

***

அன்று எதிர்பாராமல் முகம் நசுங்கிய ரேஷ்மாவின் கார் அபியினால் ரிப்பேர் ஷாப்பிற்கு அனுப்பப்பட்டது. விளைவு, இன்று இடுப்பில் அதிகரிக்கும் வலியுடன் ரங்காவைப் பதினைந்து வருடங்கள் கழித்துச் சந்திக்கச் செல்கையில் ஏறிய விமானத்தில் கருத்தடை மாத்திரை எடுத்துவரவில்லை.

இப்போதைய நிலையில் ரேஷ்மாவிற்கு அந்தப் பெண் மீது ஆத்திரமே ஓங்கியிருந்தது என்றாலும் எத்தனை தீவிரமாய்க் காதலிக்கிறாள் என்கிற ஆச்சர்யம் நீங்கவில்லை. அவனை மீண்டும் அடைந்துவிடுவாளோ? பேத்தல். அவனே வேண்டாம் என்ற பிறகு இழுத்துவைத்து என்ன செய்யப் போகிறாள். உடல் பசியைத் தீர்த்துக்கொள்ள வேறு ஆணா இல்லை. ஒரு பெண் ஒரு ஆணுடன் உறவுகொள்ள முடிவெடுத்து விட்டால் எந்த அற ஒழுக்க விதிகளையும் அதன் தோற்றுவாயோடு தூக்கியடிக்கத் தயங்கமாட்டாள். எக்கடவுளும் தடுத்தாட்கொள்ளும் தகுதி யுடையவர் அல்லர். அவள் பேசிய விதத்தைப் பார்த்தால் அதெல்லாம் முடிந்துவிட்டது என்றே... அந்தப் பெண் நிச்சயம் கன்னி அல்ல... அவள் காட்டியதே காதல் என்றால், இவள் ரங்காவை இன்று பார்க்கப் போவதற்கு என்ன பெயர்? இத்தனை தீவிரம் ஒருமுறையாவது காட்டியிருந்தால் அன்றே போகிறேன் என்றவனை இழுத்துவைத்து... இன்று செய்ய முடியுமா? கூப்பிட்டதும் வருகிறானே, செய்தால் என்ன... கணிக்ஸ் புருஷன் போல இல்லை ரங்கா. அவளுமே...

காதல், காரை இடித்த பெண்ணிடம் இருக்கும் விருப்பமான பொருளை அடைதல் போன்ற வெறி அல்ல. கணிக்ஸ் புருஷன் சுட்டும் கட்டற்ற காமமும் அல்ல.

அபியுடன் தனிமையை ஒழித்துக்கொண்ட பந்தமோ? பிறகு ரங்கா எதற்கு இப்போது...

தரையில் காலூன்றி அண்ணாந்து பார்க்கையில் வானுடன் ஒட்டி உறவாடும் குளிர் வெண்மேகங்கள் அருகில் ஜன்னலுக்கு வெளியே பிடிப்பற்று அந்தரத்தில் வெயிலில் தத்தளித்திருந்தன.

தலைவலி தொடங்கியது. கொண்டுவர மறந்தவையுள் சாரிடானும் அடக்கம். வீட்டிலிருந்து குமார் செம்பட்டு ஏர்போர்ட்டிற்குக் கிளம்பிருப்பானோ? வழியில் காரை நிறுத்தி வாங்கி வரச் சொல்லலாமா. வேண்டாம். லேட்டாக்கிடுவான். வீட்டுக்குப்போயி ரெஸ்ட் எடுக்கவே நேரமில்ல. குளித்து டிரெஸ் மாத்தவே நேரம் சரியா

வரும். அம்மாவின் டிபன மறுக்க முடியாது. ரங்காவிடம் எங்கிருக்கிறாய் என்று கேட்கலாம்...

அலைபேசியை உயிர்ப்பிக்க நினைக்கையில், ‘தரையிறங்கப் போகிறோம். அலைபேசிகளை அணைத்து வைக்கவும் நன்றி.’ என்றவளை இரண்டாம் முறையாக மனத்தினுள் திட்டியவாறு கலைந்திருந்த முடியைத் திருத்தி மீண்டும் பச்சை க்ளிப்பினுள் செருகி இருக்கை பெல்ட்டை இறுக்கினாள் ரேஷ்மா.
இன்னும் இரண்டே மணி நேரங்கள்.

# 8

## ஸ்ரீரங்கம். முதல் இரவு.

‘யாத்ரியோ க்ரிப்பியா த்யான் தீஜியே...’ ஸ்ரீரங்கம் இரயிலடியில் ஒலிபெருக்கியில் பெண்குரல் தேசியமொழியில் ரங்காவின் கவனத்தை அதற்கு வழங்குமாறு விண்ணப்பித்தது.

மாட்டேன் போ, ரேஷ்மாவிற்கு மட்டுந்தான்...

சற்று முன்னர் கேட்ட பீத்தொவனின் மூன்லைட் சொனாட்டாவின் முதல் வரியை சி-மேஜர் ஸ்கேலில் சீட்டிய டித்தவாறே, பூக்கூடைகளை முழம்போட்டு நீட்டிய கைகளில் தாங்கிய இடுப்புகளில் பாவாடைகளில் இடிக்காமல், தாத்தா பாட்டிகளின் தத்தல்களைச் சமாளித்துக் கடந்து தன் வேகத்தில் நடந்தவன், நிலையத்தின் முகப்புக் கட்டடத்திற்குள் நுழையாமல் நினைவுகளில் அதன் அருகில் ‘முழங்கால் முடிச்சான்’ சிறு படிக் கட்டுகளில் இறங்கினால் ரெயில்வே கம்பிகள் உருவப்பட்டுக் கால்தடுக்கும் ஒத்தையடிப் பாதைக்கான இடைவெளியை இருட்டினில் துழாவினான்.

இருந்தது.

ஹ... ஸ்ரீரங்கம். மாறவேயில்லை.

காற்றை இருநூறு மில்லி அதிகம் மூச்சினுள் இழுத்து விட்டான்.

ஓரிருவர் அதற்குள் குறுக்குப்பாதையில் வெளியேற அடைத்துக்கொண்டு சாமான்களை வரிசை கட்டியிருந்தனர்.

ஸ்ரீரங்கம், பதினைந்து வருடங்களுக்குப் பிறகு...

பழகியவை பழகிய இடங்களிலேயே... நினைவுகளை நிஜ மென்றாக்கி... துள்ளல் ஊரில் கால்பதித்ததினால் மட்டுமா?

கால்சிராய்ப் பையினுள் ரேஷ்மா அதிர்ந்தாள்.

ஹ... ரேஷ்மாவும் அவள் வீட்டில்... பழகியபடி, பழையபடி.

ஐ-போனை எடுத்தவாறே கட்டைவிரலினால் அழுத்தினான்.

தன் அனொடைஸ்டு அலுமினம் மேனியின் நீரொட்டாப்

பொருளினாலான பூச்சைத் தீண்டியது அவன் கைரேகைதான் என்று தெரிந்துவிட்டதில், ஐ-போன் மலர்ந்தது.

'ஹேய் ரே...' ஷிட். அழைத்தவர் முக அவதாரத்தைக் கடைக்கண்ணில் கவனித்ததில் வாய் குழறிச் சுதாரித்தான். 'ஹலோ... ஹலோ... என்னம்மா?' குரல் மாறிப்போயிருந்தது. '...வை ஆர் யூ காலிங்? இல்ல, ஒண்ணுமில்லை, அண்ணா நம்பர்லேந்து கூப்ட்டியா, மன்னியோன்னு நெனச்சுட்டேன். இப்பவே கேக்கறியே? அவாத்துக்குப் போய்ட்டு... யா... இப்போத்தான் இறங்கறேன். லேட்... சாப்டுக்கறேன் மா... ஐ நோ...'

நிமிடத்திற்குள் அம்மாவைத் துண்டித்தான்.

அதற்குள் ரேஷ்மா கூப்பிடும் அழைப்பிலிருந்து கூப்பிட்ட அழைப்பாகியிருந்தாள்.

Bite me. பசிச்சா எனக்குச் சாப்டத் தெரியாதா. இப்பத்தான் பாசம் பீறிட்டு அடிக்கணுமாக்கும்... காசிக்குப் போனாலும்...

அழைக்கலாமா இரவு தாமதமாகிவிட்டதா என்று தொடு தரையின் மீதாய்ப் படாத இடத்தில் பட்டுவிடப்போகிறதே, பட்டு அவளை அழைத்துவிடப்போகிறதே, அழைத்து அவள் அதிருப்தியைப் பெற்றுத்தந்துவிடப்போகிறதே என்று அவன் விரல்களை நடுக்கிக்கொண்டிருந்தபோதே...

'வந்துவிட்டாயா. வந்ததும் சொல். வீட்டிற்கு வருகிறேன்.'

ரேஷ்மாவின் குறுஞ்செய்தி 'டிங்கி'ய அதிர்ச்சியில் திரையில் பட்ட அவன் விரலினால் திறந்துகொண்டது.

நிமிர்வதற்குள் இரயில்நிலையத்திற்கு வெளியே கூட்டத்தினுள் முட்டிக்கொண்டான்.

ஆட்டோவா சார்? இப்டி வாங்க சார்... நீங்க மட்டுந் தானா... லக்கேஜ் எடுத்தாரலியா...'

'இல்லப்பா, வேணாம். லக்கேஜ் இல்லை.' ஊடாடி நடக்கத் தொடங்கினான். ரங்காவின் சுமை ஒற்றை முதுகுப்பை. அதனுள் ஸ்ரீரங்கத்தில் காதலிக்கத் தேவையான அனைத்தும் அடங்கியிருந்தது.

'அதிக நேரம் முடியாது. Too late in the night :-( வழி சொல்.'

அவளிடமிருந்து குறுஞ்செய்தி தொடர்ந்து ஒலித்தது, ஒளிர்ந்தது. வழி கேட்கிறாள். சாக்காய் வைத்துப் போனில் அழைத்துப் பேசுவதா? அவள் செய்யட்டுமே. வேண்டாம், நேரில் பேசுவோம்... குறுஞ்செய்தி வாக்கியங்களில் சித்திரை வீதியில் முறுக்கு மாமி வீட்டிற்கு அருகில் வருவதற்கான வழி அனுப்பினான். கால் போன பாதையில் நினைவில் நடந்தபடி. அமெரிக்கா என்றால் ஐ-மேப்பில் 'லொக்கேஷன் பின்' பொருத்தி ஐ-மெஸேஜில் அனுப்பினால் அவள் சுண்டித் தன் போனில் வரைபடங்களுடன் விரித்துக்கொள்ளலாம். எந்த மூலையிருந்தாலும் அவள் இடத்திலிருந்து கிளம்பி வழி பிசகாமல் வந்தடையலாம், நேரே என் படுக்கை வரை...

போனைப் பையிலிட்டு நடையை விரைவாக்கினான்.

ரயில் நிலையத்திலிருந்து வலதுபுறம் திரும்பி வாசித்த பள்ளி வரை செல்லாமல் இடதுபுறம் இருட்டு மூத்திரச் சந்தில் திரும்பி (அட, இன்று தெருவிளக்கு எரிய, அமோனியா வாடை யும் குறைந்திருந்தது) பழைய மீன்/பூ மார்க்கெட் கடந்து வசந்த நகர் போகும் வலப்புறப் பாதையைத் தவிர்த்து இரவின் இந்நேரத்திலும் மாட்டு வண்டியுடன் மினிவேன் சமவேக மந்தகதியில் ஊரும் போக்குவரத்து நெரிபடும், உள்ளூர்க் கேடிகள் தாடியுடன் தங்களை நாட்டின் அரசியல் வாரிசுகளாய்க் கூப்பிய கரங்களுடன் அறிவித்துக் கிழிந்த சுவரொட்டிகள் சீரழித்த நீள்மதிலரங்கத்தின் திட்டிவாசலினுள் நுழைந்து, சாக்கடைக்கு எதிர்ப்புறமாய்த் தலைகுனிந்து கடந்து சாத்தார வீதியைத் தவிர்த்து வலப்புறம் கீழ அடையவளைந்தானில் திரும்பி, அப்பாவிற்குப் பரிச்சயமான அதிகாரிகள் இருந்த தலைமைத் தபால் நிலையம் செயல்பட்ட கட்டடத்திற்கு எதிரே இடப்புறம் குடிசைகளைத் தவிர்த்து உள்வட்ட மாமதிலோரமாய் நடந்து, வலப்புறம் கீழச்சித்திரை வீதியின் தேர்முட்டியினுள் திரும்பி, மகர யாழ் செங்கோட்டு யாழ் படங்களை முதன் முறையாக அவனுக்கு அறிமுகம் செய்த திக்குவாய் வாத்தியார் கேகேகே வசித்த வீட்டின் உளுத்த வாசல் தட்டி விழுந்து கிடக்கும் கூரைகளுக்கு எதிரே இடப்புறம் வீட்டோரங்களில் மணல் மேல் மழைபுகா சிமெண்ட் இடப்பட்டுவிட்ட தெற்கு சித்திரை வீதியில் நடந்து, பழைய சிந்தாமணி, பொதுக்ஸ் வீடு, பன்னிரண்டாவது தேர்வில் பள்ளியிலேயே முதலாவதாய் வந்த ராத்திரி ஒன்றரை வரை ரகசியமாய்ப் பாடங்களை நெட்டுரூப் போட்டுக் காலையில் எதுவுமே தெரியாதவனாய்ப் பள்ளி வந்து சோடா புட்டியைக் கழற்றித் துடைத்தபடி அரைத் தூக்கத்தில் அருகில் அமர்ந்திருக்கும் புட்டியின் வீடு, இன்று அமெரிக்காவில் புதுக் கவிதைகள், அபத்தமான இசைக்

கட்டுரைகள் எழுதித் தமிழ்நாட்டின் பேரிலக்கியச் சிறு பத்திரிகையின் அமெரிக்க எடிட்டர் என்பதால் அவற்றைப் பிரசுரம் கண்டு நலம் விசாரித்து எழுதிய மின்னஞ்சலுக்கு இன்றுவரை பதில் போடாமல் இருக்கும் பள்ளி நண்பன் வீடு ஆகியவற்றைக் கடந்து, எதிர் சாரியில் ஓரிரு திருமாளிகைகளுக்குச் சமீபமாய்ப் புதிதாய்த் தொடங்கப்பட்டிருந்த ரங்கா இன்வர்ட்டர் கடைக்கு அருகில்...

ஒரே மூச்சில் நடந்து வியர்த்திருந்தவனுக்கு ரயிலடியிலிருந்து முறுக்கு மாமி வீட்டை அடைய எட்டு நிமிடங்களே பிடித்தது.

அதற்குள் காவிரிக் கரையோரம் முப்பது வருடங்கள் முன்பு முளைத்திருந்த ஸ்ரீரங்கம் என்பதில் அவற்றைச் சேர்க்கலாமா கூடாதா என இன்றுவரை ரங்காவுக்குத் தெரியாத காலனியின் பெற்றோர் வீட்டிலிருந்து அவள் கிளம்பிவிட்டதாய் ரேஷ்மாவின் குறுஞ்செய்தி அவனிடம் தூது சொன்னது.

பின்கழுத்தில் சூடேறிச் சூழ்நிலை உணர்ந்தவனான்.

அன்னம் போய் அனுமார் போய் அதற்கடுத்து மேக தூதமே மலையேறிப் போய், பின்னர் சேடி போய் சேணமிட்ட செய்தி போய் சிவந்த பெட்டி போய்... இன்று வானலையன்றோ வையகமெங்கும் காதல் தவிப்புகளை எழுத்துருவில் தன்னிட்டப்படி வளர்த்துத் தணிக்கிறது.

நடை தளர்ந்த நரை வளர்ந்த மஞ்சள் பூசி உழைத்து இறுகிய குங்குமப்பொட்டு முகத்துடன் கமறும் தொண்டைக் கட்டைக் குரலில் உபயகுசலோபரிகளுடன் முறுக்கு மாமி வழங்கிய இரவுச் சாப்பாட்டையும் (கொண்டக்கடலை கலந்த பழம் புளியோதரை, கொத்தவரங்காய் பருப்பு உசிலி, அனுமார் கோயில் வடை அல்லது அது மாமியின் நேற்றைய அடை) வாழைச் சருகில் வைத்து வாசல்புறத் திண்ணையிலேயே அவசரமாய் விசாரித்துவிட்டு ரங்கா மாடிப்படியேற எத்தனித்தான், தனக்கென்று ஒதுக்கப்பட்ட தனியறைக்கு.

‘நீ மட்டுந்தான் வந்தியாடாப்பா? ஆத்துக்காரியக் கூட்டுண்டு வர்லியாக்கும்... சௌக்கியந்தானே...’

படியேறும் அவனிடம் குட்டித்திண்ணையின் மரத்தூணில் எண்ணெய் விரல்களைத் துடைத்தவாறு முறுக்கு மாமி ஸ்வாதீனமாய்ப் பேசத் தொடங்கினாள்.
கௌளி ஒன்று கெக்கெக்கியது.

‘ஆமா. இல்லை. வேல.’

அடுத்து, இருபது வருடங்கள் முன்னால் அவர்களுக்கிருந்த சொந்தவீட்டில் அவள் சமைத்த மோர்களியின் கறிவேப்பிலை தொண்டையில் சிக்கி அரைடிராயரில் அவன் மூச்சு முட்டிக் கண்ணீர் மல்கக் கேவினதை ரசித்து நினைவுகூர்ந்தாள்.
‘மாமி... நான் நாளைக்கு இங்க ஒரு மீட்டிங்ல பேசணும். தயார் செஞ்சிக்கணும். கம்ப்யூட்டர்ல... மேல போறேன்...’

‘போடாப்பா போ. வேலயக் கவனி. எங்காத்து ராகவன் கூட கம்ப்யூட்டர்தான். காத்தால பேசச் சொல்றேன்... ஒன்னோட அமெரிக்கால ஒரு வேல செஞ்சிவெச்சுடப் பாரு...’ அவசரமாய் மாடி நோக்கிக் கையை உதறிக்கொண்டிருந்தாள்.

அதானே. ஓக்ரிஜ் நேஷனல் லேபில் அமெரிக்க மெட்டீரியல் சயன்ஸ் பிஎச்டி படித்து நான் பிரயத்தனம் செய்து பெற்ற ஆய்வுவேலையில் அருகில் சீட்டு போட்டு ஸ்ரீரங்கத்தில் வெத்தலப்பாக்கு கடை போல இயங்கும் கம்ப்யூட்டர் கோர்ஸ் படித்தவனை அமர்த்திக்கொள்ள வேண்டும்... இவள் சமைத்த மோர்க் கிளி, சே, களியை அன்றொரு நாள் உண்டதினால்.

கிருஷ்ணரைவிட அவருக்கு அவல் கொடுத்த குசேலராய் இருப்பதே கலியுகத்திலும் வாழ்க்கையின் வெற்றி ரகசியமோ.

‘மாமி... என்னத் தேடி இப்ப யாராது வரலாம்... மாடில தான் இருப்பேன்...’

இரண்டு நாள் ஒண்ட வந்தவன் அவள் வீட்டில் அவள் அளித்த இடத்தில் தான் இருக்கப்போவதை அவளிடமே செய்தி யாய் அறிவித்துவிட்டுப் படியேறினான்.

‘காலம்பர காப்பி போட்டுக் கொடுத்துவிடறேன்...’ மாமியின் குரல் ரேழிக்குள் தேய்ந்தது.

முதல் நான்கைந்தைத் தவிர மற்றவை மரப்படிகள். மொட்டை மாடியாய் இருந்ததைச் சுற்றிலும் சுவரெழுப்பி அறைகளாய்த் தடுத்திருக்கிறார்கள். அறையினுள் தக்கைக் கதவின் மேல்தாழ்ப்பாள் திக்கியது.

காலையில் அந்த ராகவன் காபி எடுத்துவருவானோ. பேசு வதற்குள் கிளம்பிவிட வேண்டும். மாமியிடம் ‘கம்ப்யூட்டர்’ என்று

சொன்னதினால் வினை. கம்ப்யூட்டர் என்றாலே அதில் சாமான்யருக்குப் புரிபடாத ஆனால் பொருளீட்டும்படியான முக்கியமான வேலைகள் மட்டுமே செய்யமுடிந்த வஸ்து என்பது இவர்களைப் போன்றோரின் சமகாலக் கற்பிதம் என்பதால் தானே ஊரில் பாதிப் பெண்களுக்கு அமெரிக்காவில் மாப்பிள்ளை வாய்க்கிறது. மீதமிருப்போர் ரேஷ்மாக்கள்.

ரங்கா நகைத்துக்கொண்டான். வந்துகொண்டிருப்பாள்.

முதுகுப்பை முக நக விகாரங்கள் களைந்து நாற்பது வாட்ஸ் மஞ்சளாய் முகச்சவரம் முடிகோதல்கள் இடையே படுக்கையைக் கவனித்தான். சுத்தம் திருப்தி அளித்தது. ரேஷ்மா விற்கு... இரண்டு தினங்கள் உள்ளன. இன்றிரவு நாற்காலியில் அமர்ந்து கொள்வோம்.

அறையின் வெண்சுவர்களுக்குப் பொருத்தமில்லாத பச்சை நிறத்தில் மூலையில் ஒன்றனுள் ஒன்றாய் அமர்ந்திருந்த பிளாஸ்டிக் நாற்காலிகளைப் படுக்கைக்கு அருகில் அமர்பவர் முட்டிகள் இடிக்கும் தூரத்தில் எதிரெதிரே இழுத்துப் பொருத்தினான்.

‘சினிமாக்குலாம் வயசுவந்த பொம்மனாட்டியோட ஒன்னாப் போக்கூடாதுரா... சொல்லிபிட்டேன். முட்டியுமுட்டியும் இடிச்சுக்கறா மாதிரிப் பக்கத்து பக்கத்துல ஒக்காந்துண்டு... ஐய்யே கருமாந்த்ரம். இதெல்லாம் எங்க போயி முடியுன்னு பெத்தவ நேக்குதாண்டா நன்னாத் தெரியும்...’ ரேஷ்மாவுடன் தனியே இல்லை, மேலும் மூன்று நண்பர் நண்பிகளும் சேர்ந்து மேட்னி ஷோ ‘வருஷம் 16’ போவதற்கு அனுமதி கேட்டபோது அம்மா மாரைப் பிடித்துக்கொண்டு இரைந்தது. அன்று ரங்கா சினிமா போகவில்லை. ஆனால் ஒன்று மட்டும் அன்றே நிச்சயமாய்த் தெரியும். ரேஷ்மாவின் முட்டியை இடித்துக்கொள்வதற்காகச் சத்தியமாய் அவன் சினிமா போகத் திட்டமிடவில்லை. அப்படி ஒரு செயல் நிகழக்கூடும் என்றே அம்மா சுட்டியபிறகுதான் அவனுக்கே உறைத்தது. இன்று? ‘எங்க போயி முடியுன்னு...’ அவளுக்கு மட்டுமே தெரியும் என அன்று அம்மா கருதியது வருஷம் பதினாறு போலக் கடந்து இன்று ரங்காவுக்கும் தெரியும். இங்குதான், அம்மா நினைத்துப்பார்த்திராத இதே ஸ்ரீரங்கத்தில்தான் முடியப் போகிறது. முட்டியும் முட்டியும் இடிப்பதில் தொடங்கி...

எழுந்த விடுபற்ற உணர்வின் வெளிப்பாட்டில் கணினிப் பையைக் கட்டிலுக்கு அடியில் காலால் எற்றினான். கணினியை விரித்து முதுகில் ஆப்பிள் ஒளிர ஸ்டைலாய் படுக்கையில் விசிறினான்.

ஏஸி விசையைச் சொடுக்கியதும் மின்சாரம் அறை விளக்குகளைக் கண்கொட்டிவிட்டு உயிர்த்தது. பவர்கட் குறையவில்லையா. கரப்புப் புழுக்கை மணத்துடன் முகத்தில் குளிர்ந்தது. ப்ளடி இண்டியா. மாமி இந்த ரூமுக்கும் இன்வர்ட்டர் போட்டிருக்காளா? சொதப்பிவிடப் போகிறோம்...

பெயிண்ட் செலவு முறுக்கு மாமி குடும்பத்தின் ‘ரெனொ வேஷன் பட்ஜெட்’டிற்குள் வராததால் முன்பக்கம் சிமெண்ட் மட்டுமே பூசிய மாடியறையில் குளிர்வசதி செய்வதற்காகப் புதிதாய்த் துரு ஏறி ஒட்டடை படிந்திருந்த வலைக்கம்பிகளுக்கு உட்புறமாய் ஒற்றை ஜன்னலில் பொருத்தப்பட்டிருந்த புகைக் கண்ணாடியின் வழியே கீழே தெரிந்த சித்திரைவீதியைக் கவனிக்கத் தொடங்கினான்.

***

நிமிடங்களில் அறையினுள் தேவைக்கதிகமாய்க் குளிர்ந்தது. ஏஸியை கட்டுப்படுத்த ரிமோட் எங்கே... ஷிட். வழக்கம்போல் ஏஸி ஒத்துக்கொள்ளவில்லை. அமெரிக்காவில் முங்கினாலும் ஏழைபாழைய உடல் இந்தியக் கட்டாந்தரைக்கே தான் ஏற்றது என்பதைச் சமயத்தில் காட்டிவிடுகிறது.

ஒன்பதரைக்கு மேல் மாமியைக் கூப்பிடுவதா... அதற்குள் ரேஷ் வந்து விட்டால்...

புகை மணக்கும் பஜ்ஜி விற்கும் உலையடுப்புக் கனல் பறக்கும் தட்டுவண்டியைக் கடந்து தெருவிளக்கின் அரையிருட்டில் பளபளத்து ஊர்ந்த அமெரிக்காவில் விற்கப்பட்டும் ஜப்பானிய ஏற்றுமதி மாடலைக் காப்பியடித்துத் தோற்ற இந்தியாவின் வெற்றிப் படகுக் கார் மாடல்... ரேஷ்மாவினுடையதா? குயிக்கிட்ட காரினுள் இருந்து இறங்கும் சுடிதார் பெண்...

கருணையற்ற காலம்தான் எத்தனை காவியங்களைச் சுருக்கியுள்ளது. எத்தனை காதற் கோட்டைகளைக் குலைத்துள்ளது. எத்தனை குமரிகளைக் குனித்துள்ளது. நகரங்கள் நாசமாகி நட்டகல் மட்டுமென நலிந்துள்ளன. நாகரீகங்கள் நசிந்து அட்லாண்டிஸ் என ஆழ்கடலில் அடங்கியுள்ளன. ஆண்டுகள் கடந்து அவள் மட்டும் அன்றலர்ந்த தாமரையாய், சித்திரத்தில் வரைந்த செந்தாமரையாய், சேதாரமற்ற செம் பொன்னாய், சேற்றினில் முளைத்த சிந்தெடிக் சிறுமலராய் அவன்

கண்களுக்குத் தெரிவாளா என்ன? கருணையற்ற காலம்.

கண்களை நம்பமுடியாது, கற்பனையின் தீட்சண்யம் மழுங்கியிருக்கையில். மாடி ஜன்னலில் இருந்து ரங்கா சைகை செய்தான்.

ரேஷ்மா காரிலிருந்து இறங்கி முறுக்கு மாமி வீட்டு முகப்பில் தயங்கி உட்புறம் சைகைகளில் பேசி செல்போன் கார் சாவி அணிந்த கையை உயர்த்தித் தலையை ஆட்டியவாறு மரப் படிகளை இன்ப முனகல்களாக்கி அவன் இருந்த தனியறைக்குள் நுழைவதற்கு ஒரு நிமிடம் போல ஆயிற்று.

வருடங்களாய்ச் சிறுகச்சிறுக வேகம் கூட்டி விரைந்து விசை கொண்டு விம்மி வாயருகில் நுரைத்துப் படபடவென அவனுள் அடித்துக்கொண்டிருந்தவை அளந்திட்ட ஒரு நிமிடம்.

கதவைத் திறந்து தாழிட்டு மூடியவன் எதிரே அவனுயரத்தில் நின்றாள். கண்கள் சந்தித்ததும் புன்னகைத்தாள். காண்கையில் தன் தலை கோதினாள். அவன் பார்வை தழைகையில் சாய்ந்து பார்த்துச் சட்டென்று கண்ணடித்தாள். குப்பென்ற நினைவு ரங்காவின் புன்னகையாய் வெளிப் பட்டது.

குழுமியிருக்கும் கைகால்முகங்களுக்கிடையே கவனித்தால் மட்டுமே கண்டுகொள்ளமுடிந்த நொடியிலும் பொடியான காலத்துளியில் சுருங்கி விரியும் கண் ஓரம். தொடர்ந்து உள் நகைத்து உயரும் உதட்டோரம். வருடங்கள் முன்னால் கல்லூரி தினங்களில், அவர்கள் இருவர் மட்டுமே பரிமாறிக்கொண்ட காதல் சங்கேதம்.

அவளும் இந்தச் சந்திப்பிற்கு என மனத்தில் திட்டமிட்டுத் தயாராகித்தான் வந்திருக்கிறாள். வேறு எவ்வாறு இருக்க முடியும். அவன் ரேஷ்மாவை அவனுக்குத் தெரியாதா.

காலம்தான் எத்தனை கருணையானது. காலப்போக்கில் கழன்று கொண்ட கவித்துவ காதல்கள்தான் எத்தனை. அதனால் காப்பாற்றப்பட்ட காதலற்ற, காதல் எழும்பக் காத்திருக்கும் கலியாணங்கள்தான் எத்தனை. தவறுகள் எத்தனை தண்டிக்கப் படாமல் தப்பியுள்ளன. காலப்போக்கில் செய்யப்பட்டதாலேயே எத்தனை தவறுகள் தண்டனையாகியுள்ளன. தவறுகள் எனப்பட்டவையே காலப்போக்கில் தவறுகள் இல்லை என்றாகி அவற்றிற்கான தண்டனைகள் என்பதையே பொருளற்றவையாக்கி விட்டுள்ளன.

தண்டிப்பது என்பதே தவறென்றாகி விடலாம். காதலின் களிநயங்கள் தவறுகளா தண்டனைகளா என்பதைக் காலமே காத்திருந்து கருதுகோளட்டும். காத்திருக்கும் காதலின் கால்கள் வருடக் கண்டங்கள் கடந்து கிளம்பி வந்த அவனுக்குக் கால் நூற்றாண்டு கடந்தாலென்ன, காணும் அவள் கண்கள் மேலே கண்ணாடி கொலுவீற்றிருந்தால் என்ன, கீழே கன்னக் கதுப்புகளில் கருமை கூடியிருந்தாலென்ன, கேசக்குழல் மீதே கடையிறக்கிய கருமைப் பூச்சிருந்தால் என்ன. கழுத்து குறுத்து இடை பருத்து உடை தளர்ந்து நடை அகன்று தாயமுதம் தழைந்திருந்தால் என்ன, தாழம்பூ தடித்திருந்தால் என்ன. காலத்தில் அனைத்துமே கடந்து நிற்கும் காதலுள் கரைந்துவிடுமன்றோ. காலம்தான் எத்தனை கருணையானது.

***

‘ஹி ஹேன்ஸம்.’

ரேஷ்மாவின் முதல் வார்த்தைகள்.

வேதா சொல்லியிருக்கிறாளா?

இவளெதிரே ஏனோ அவள் நினைவு. ரேஷ்மா அணிந்திருக்கும் சுடிதார் போலவே அவளும் வைத்திருப்பதாலோ.

திருமணம் நிச்சயமான பிறகு அவள் நண்பியிடம் ரங்காவின் போட்டோவைக் காட்டியதும் நாக் அவுட் என்றாள் என ஒரு டேட்டிங்கில் வேதா கூறியிருக்கிறாள். ‘நாக் அவுட் என்றால் நாக்கை வாய்க்கு வெளியே தொங்கப்போட்டுக் கொள் வாளா சர்யான ஜொள்ளு பார்ட்டி…’ என்ற அவன் பி.ஜே.க்கு (Poor Joke) விரல் மூடிச் சிரித்திருக்கிறாள். அவன் இரண்டு நாள் பேசாமல் இருந்த போது ‘சுண்டுவிரலில் மாட்டிப் பெண்களின் இதயங்களைச் சுழற்றிவிடுவாயல்லவா’ என்று மின்னஞ்சலில் கேட்டுக் காதல் புரிந்திருக்கிறாள். மற்றபடி மனத்தில் பட்டதை வேதா நேரில் பகிரமாட்டாள். நோ ‘ஹான்ஸம்…’ பிஸினஸ்.

பச்.

காதலர்க்கிடையில் பரஸ்பர புகழார ஆசுவாசங்கள் அவசியமா? மேஜிகல் என்று அமெரிக்க மேற்படிப்பு கல்லூரி தினங்களில் அவளை நோக்கி உதிர்த்த ஒற்றைச் சொல்லில் டின்னர் டேபிளில் எதிர்ப்புறம்

அமர்ந்திருந்த மாணவி எலிஸா கூட வந்திருந்த ஆண்துணையை அன்றிரவே வெட்டிவிட்டு ரங்காவுடன் சுற்றுவதற்கு மறுநாள் போனில் அழைப்புவிடுத்து ஆயத்தப்பட்டாளே. பெண்களிடம் மட்டுந்தான் புகழாரங்கள் செல்லுபடியாகும் என்று மணமான பெண்கள் கருதுகிறார்களா. ரேஷ்மாவும் மணமானவளே... மனைவியர் கருதுகிறார்கள் போலும்.

லீவ் இட்.

இதோ ரேஷ்மா. இவள் வேறு ஜாதி. லிட்டரலி. இன்னொருவன் பெண்ஜாதி... உள்ளே வந்தவள், நின்றாள், கவனித்தாள், கிட்டே வந்து...

ரங்காவை ஆலிங்கனம் செய்துகொண்டாள்.

இடைப் பக்கவாட்டில் தொங்கிய அவற்றின் இடம் பெயர்த்துத் தன் கைகளால் தன்னை அணைத்திருக்கும் அவளது இடையணைத்து இழுத்து இடைவெளியின்றி இழைந்து... எண்ணங்கள் ஏழுகால்களில் எழும்பிக் கிளர்ந்து எண்திசைகளிலும் கிளையெடுத்துச் சிலும்பிச் செயல்வடிவம் பெறத் துடிப்பதில் ரங்கா தவித்தான். தன் கைகளைத் தொங்கும் நிலையில் அரும்பாடுபட்டுத் தக்கவைத்தான். தான் தக்கையோவென்று அவளுணராதிருக்கத் தாட்சண்யத்தில் தளர்ந்து தாங்கினான்.

மூன்று அல்லது நான்கு மிஸிஸிப்பி ஹக். அமெரிக்கா போன புதிதில் கல்லூரியில் கற்ற அந்நாட்டு நாகரீகம். கட்டுண்ட நபர் கண்டபடி நினைக்காதிருக்க, அரசியல்சரியான ஆலிங்கனம் என்பது எத்தனை விநாடிகள் இருக்கவேண்டும்? தோராயமாக மனத்திற்குள் மி-ஸி-ஸி-ப்-பி என்று சொல்வதற்காகும் கால வரையறையில் செய்தால் தழுவும் செயல் சிக்கல்களை எழுப்பாத பண்பானதாய்க் கருதப்படும் என்பது அமெரிக்க பால்யத்தில் கற்றுக் கொள்வதாம். மிஸிஸிப்பி அந்நாட்டின் பெரிய நதி. தீராநதி... ஐந்தாறு வருடங்கள் இவ்வகை அமெரிக்கக் கலாச் சாரங்களை கவனித்திருந்ததில், வேதவல்லியுடன் வாஷிங்டனில் முதல் ‘டேட்டிங்’கின் போதே மனத்தினுள் மிஸிஸிப்பி சொல்லத் தயாராக இருந்தான். அவன் உதிர்ப்பவையெல்லாம் ‘பி.ஜே.’க்களென பாவித்துப் பரவசமான புன்னகைகளாய் அவள் பதிலிட்டிருந்ததில் ஆலிங்கனத்தையே மறந்துவிட்டிருந்தான். அவளோ முதல் டேட்டில் அவன் தன்னை என்னவாக நினைக்க வேண்டும் என்று நிர்ணயித்திருந்த கண்ணிய உருவைக் காப்பாற்றுவதில் கைபடாமல் கண் சிமிட்டிக் காத்திருந்தாள். குறியோடிருந்தாள்.

இன்று இங்கு மூன்று முடிந்து நான்காவது முறை மனத்தினுள் மிஸிஸிப்பி சொல்லிவிட்டான்.

பதட்டத்தில் வேகமாகச் சொல்கிறேனா. காலேஜிலேயே ‘காட் லக்கி’ தெரிந்திருந்த ரேஷ்மாவிற்கா ‘மிஸிஸிப்பி மேட்டர்’ தெரியாது? ஒன்றென்றால் அரசியல் சரியானது. மூன்றென்றால் அமெரிக்காவிலும் காதல் சரியானதோ? இல்லை இப்போ தெல்லாம் இந்தியாவில் மூன்றுதான் அதற்கு ஒப்பானதா? எதற்கும் ஐந்தாவதற்குள் விலகிவிடவேண்டும்...

ரேஷ்மா விலகினாள். ‘இது நீ இன்றுவரை சாதித்ததற்கு இனியவனே.’ அவளளித்த நான்கு மிஸிஸிப்பி ஆலிங்கனத்திற்கு ஆங்கிலத்தில் விளக்கம் சொன்னாள்.
வாயில் தாங்க்யூவை விழுங்கிக்கொண்டான். ‘நீ அதற்கு உகந்தவன்...’ என்று அவளே தொடர்ந்ததினால்.

‘மாறவேயில்லை ரங்கா... அப்டியே இருக்க...’ விலகி அவனை மேலிருந்து கீழாய்ப் பார்த்தபடி சொன்னாள்.

‘அங்க மட்டும் என்ன வாழுதாம்...’

நான் சொல்வதை அவளும் நம்பப் பிரியப்படுவாள் தானே. நினைத்துக் கொண்டான் ரங்கா.

மேலும் அவனது அந்தச் சொல்லாடல் முதன்முதலில் அவர்களுக்கிடையே இருப்பது காதல்தான் என்று போனில் அவளே கூறி உறுதிசெய்துகொண்ட இரவின் மறுதினம் கல்லூரி செல்ல பஸ் ஸ்டாப்பில் சந்தித்ததும் அவளுக்குப் பிடித்த க்ரீம் பேண்ட் பிரவுன் ஷர்ட்டில் வந்திருந்த அவனைப் பார்த்து அவள் கூறியது. அதற்கு முன்பே அவளைப் புடவையில் கண்டதும் அவன் வலக்கையை நிமிர்த்தி ‘சின்’ முத்திரை பிடித்திருந்தான்.

‘ஞாபகம் வச்சுருக்கியாடா...’ மகிழ்ச்சியை முகத்தில் அடக்க முடியாமல் குனிந்தபடி ரேஷ்மா அவன் காட்டிய நாற்காலியில் அவனெதிரே அமர்ந்து நகைத்தாள்.

அதே அழகான ஒளிவற்ற சிரிப்பு. நீட்டியிருந்த கால்களை முட்டிபடாமல் ரங்கா மடக்கி வைத்துக்கொண்டான்.

காதலர்கள் அல்லது அவ்வாறு அடுத்து வரும் எக்கணத்திலும்

ஆகப்போகிறவர்கள் அல்லது குறைந்தபட்சம் கண் முன்னே இருக்கும் மாந்தரிடம் ஈர்க்கப்பட்டவர்கள் 'காதற் தொடங்கி'கள் சிலவற்றைத் தனைமறந்து வெளிப்படுத்துவர்.

ஆண் அளிக்கும் காதற்தொடங்கி அறிகுறிகள் கேசத்தைக் கோதுவது அல்லது சரிசெய்துகொள்வது. மூச்சை உள்ளிழுத்து மார்பை விரித்துத் தேகத்தைப் பெரிதாய்க் காட்டுவது, சோம்பல் முறிப்பது, கால்களை நீட்டுவது, பிறகு, தற்செயல் தொடுதல்...

பெண் அளிக்கும் காதற்தொடங்கி அறிகுறிகள் இவை: கேசத்தைக் கோதுவது, காதிற்குப் பின்னால் குழலைச் சுருட்டி விடுவது. நிற்கையில் உடையின் மீதாய் கைகளை முதுகுப்புறமாய் ஓட்டி நீவிவிட்டுக்கொள்வது. 'பிரிட்ஜஸ் ஆஃப் மேடிஸன் கவுண்ட்டி' திரைப்படத்தில் கதாநாயகி செய்திருப்பாள். நாவலாசிரியர் எழுதிவைத்திருக்கலாம் என்றாலும் அதையும் கவனித்துக் காட்சிப்படுத்திய இயக்குநர் க்ளிண்ட் ஈஸ்ட்வுட் மேல் 'அட இதைப் பெண்களிடம் அவதானித்திருக்கிறாரே மனுஷன்...' என்று ரங்காவுக்கு அதனால்தானே அபிமானமானது.

அடுத்து, கண்களை அகல விரிப்பது. மேனியைக் குறுக்கிக் கொள்வது - அனைத்துச் செயல்களிலும் தன் தேகத்தைச் சிறிதாய்க் காட்டிக்கொள்வது பெண்மையின் பாதுகாப்பின்மையை அவள் விரும்பும் எதிரில் இருக்கும் ஆணிடம் கூட்டிச்சொல்வதாம். உள்ளங்கை தெரியுமாறு மணிக்கட்டை அடிக்கடி வெளிக் காட்டுவது. கழுத்து, தோள்பட்டை முதலியவற்றை காண்பிப்பது. பிறகு, தற்செயல் தொடுதல்...

ரங்கா கால்களை நீட்டிக்கொண்டான். உடம்பை வளைத்துச் சோம்பல் முறித்தான். அமெரிக்க 'மெக்லாரன் ஜிம்'மின் உபயோகம் அவன் புஜங்களில் அவளுக்குத் தெரிந்திருக்குமா.

எதிரே ரேஷ்மா தலையைக் கோதினாள். மணிக்கட்டுகள் தெரிய கைகளை விரித்தாள். உட்புறமாய் ஓவல் சைஸ் கைக் கடிகாரம் பார்த்தாள். 'ஐயோ, லேட்டாய்டிச்சி...' போலியாய்ப் பயந்தாள்.

அவள் செல்போன் சிணுங்கியது. 'வந்துட்டேங்கமா... இல்ல மருந்துக் கடைல லேட்டாயிடுச்சி... அதுசரி, ஒங்க பொண்ணுக்காக நீங்க கவலைப்பட்டா இங்க கடைக்காரன் என்ன செய்வான். எடுத்து வெக்க ஆள் வரணுமில்ல... ஒங்க டயபெடிக் டாப்லட்ஸும் வாங்கிட்டேன்.

அனிக்குட்டி பேசிச்சா? தூங்கிருச்சாமா... இருமலா... நீங்க மாடசாமிகிட்ட சாவியக் கொடுத்திட்டுப் படுங்கம்மா, நான் வந்து திறந்துக்கறேன்...'

போனை அணைத்து ஏறெடுத்து 'போணும்டா... கௌம்பட்டா?' மழலையில் குழைந்தாள்.

பொய்மையும் வாய்மையிடத்து... எந்த நேரத்தில் எழுதியிருப்பார்? ரங்கா முறுவலித்தபடியே ஆமோதித்தான்.

பேசிக்கொண்டே ஒற்றைப்பின்னல் அவன் மார்பினில் குதித்தாடும் நெருக்கத்தில் மரப்படிகளில் அவளுக்குப் பின்னால் சப்தமிடாமல் இறங்கி வாசலை அடைகையில் கவனித்தான். முறுக்கு மாமி ரேழிக் கதவைச் சாத்தியிருந்தாள்.

'காலம்பர வாக் போறோம்... வழக்கமான எடத்துக்கு... I'll call you by six...' அவன் பதிலுக்குக் காத்திராமல் அவனருகில் நின்று கன்னத்தைத் தட்டினாள். 'Bye sweetie, sweet dreams...' சுற்றிவந்து காரினுள் வலப்பக்க டிரைவர் ஸீட் கதவினுள் குனிந்தாள். டாடா காட்டினாள்.

பதிலுக்குக் கையசைத்துக் குனிகையில் டீ-ஷர்ட் மார்பில் அவள் வாசனை. கார் அகன்றது.

அறையில் வந்து வெள்ளைப் படுக்கையை வெறித்தான்.

***

ரேஷ்மா போனாலும் அவள் ஆலிங்கனம் போகவில்லை. படுக்கையில் ரங்காவுடனேயே கிடந்தது. கிளர்ந்தது. களித்தது.

நான்கு சுவரினுள் இருட்டின் துணையில் தனியே நீ யாரோ அவனை முழுவதுமாய் உலகிற்குக் காட்ட விழைகையில் தான் நீ உண்மையை நேசிக்கத் தொடங்குகிறாய். இன்னொருவருடன் அவ்வுண்மையைப் பகிர்கையிலேயே உத்திரவாதமான உறவை உருவாக்குகிறாய். கைநடுங்காமல் எழுத்தில் அவ் வுண்மையை வடிக்கையிலேயே உலகினோர் கவனிக்கும் உருப்படியான எழுத்தாளனாகிறாய்.

இது எழுத்தல்லவே. நிஜம். படுத்திருக்கும் ரங்காவைப் பக்கத்தில் இருந்து பார்த்தான் ஒரு ரங்கா.

காட்டப்படும் உண்மைகளை உறவும் உலகும் நேசிக்குமா என்பது உன் பிரச்சனை இல்லை. கண்ணாடியின் நேர்மை குருடர்களுக்கென்று உருவானதன்று.
குருட்டு முட்டாள்கள் காதலில் விழுவதுதான் எங்ஙனம்?

ஒரு மாதம் முன்பு ரேஷ்மாவுடன் அமெரிக்காவில் இருந்து செய்த ஜிமெயில்-சேட் அரட்டை நினைவில் நின்றது.

அன்று வேதா தூங்கிவிட்டிருந்தாள். 5.1 surround sound-இல் ஸ்பீக்கர்கள் Paul Simon-ஐ சன்னமாய் அவனைச் சுற்றி வியாபிக்கவிட்டிருந்தது. Still crazy after all these years...

ரேஷ்மா ஆபிஸ் வந்ததும் பேசத் தொடங்கியிருந்தாள்.

பகிர்வதாய்ச் சொன்னேனே, இரண்டு தினங்கள் முன்னர் ஒரு கனவு, அதில் நீ... என்று தொடங்கியவன் தயங்கினான்.

சில நொடிகளில் சொல்லிவிட்டான்.

இணையம் தரும் அநாமதேயம் தரும் தைரியம் தரும் நெருக்கம் தரும் உவப்பில் அவர்களைப் பகலிரவில் கண்டங் கள் பிரித்து இருக்கையிலும் இடைச்செருகலிலும் இருத்தி மின் னிணை பிரியாமல் அட்லாண்டிக் மகா சமுத்திரத்தின் அடி வழியே இணைக்கும் ஃபைபர் ஆப்டிக் கேபிள்களின் உள்ளாகக் கை நீட்டி அவனை அவளால் அறைய முடியாது என்பதால் சொல்லிவிட்டான்.

அவளுடன் உறவுகொள்வதாய் அவன் கண்ட கனவின் நிஜத்தை.

ஓவ்... என்று தொடங்கியவள் அரட்டையே அணைந்து போனது. இரண்டு தினங்களில் அவன் ஏற்கெனவே அனுப்பியிருந்த ‘காதல் கணங்கள்’ வரிகளுக்கு அவளிடமிருந்து பதில் வந்ததும் ஆறுதல் அடைந்தான். அதன் பிறகு அந்தக் கனவைப் பற்றி இருவருமே இதுவரை பேசிக்கொள்ளவில்லை.

All or nothing. அனைத்தையும் பகிர். அல்லது எதுவுமே வேண்டாம்... எத்தனை திணறியிருக்கிறான் இந்த விழுமியத்தை அவனுள் கண்டுகொள்ள. இடைப்பட்ட வருடங்களில் அமெரிக்க வாழ்க்கை உதவியது எனலாம். பள்ளி இறுதியாண் டிலிருந்து பிடித்த ஒன்றிற்கும் மேற்பட்டவருடன் ‘கேஷுவல் செக்ஸ்’ தொடங்கி உறுதிசெய்துகொண்ட உறவின் இயல்பாய் ஒருவருடன் மட்டும்

ஆனால் எங்கு எப்போது எப்படி வேண்டுமானாலும் உறவுகொள்ளுதல் வரை அனைத்தும் கண்ணெதிரே அரங்கேறுகையில் கட்டுப்பெட்டித்தனங்கள் ரங்கா போன்ற ஒருவனை விட்டுக் கழன்றே தீரும்.

All or nothing. காதல் உறவு அன்பையும் காமத்தையும் அனுமதிக்கும். அதில் அனைத்தையும் பகிர். மற்ற உறவு நிலைகளில் இன்னொருவரைத் தொடவும் அனுமதிக்காதே. கை குலுக்கவே தயங்கும் ரங்கா தனக்குள் வளர்த்தெடுத்துகொண்ட விழுமியம்.

முட்டி இடிப்பதென்ன, கட்டிப்பிடிக்கவே சம்மதிக்கும் காதலி அருகில் இருக்கின்றாள். கனவினில்தான் ரேஷ்மா கூடினேன் அன்று. அதை நனவாக்கவே இன்று இங்கு...

‘இன்று உன் முன்னால் நான் யாரோ அவனுக்காகத் தழுவிக் கொள். என் சாதனைகளுக்காகச் செய்யாதே. அவை என் வழியே வெளிவந்தவை. நான் அதில் ஒரு கருவி மட்டுமே. என் ஆளுமைக்காக மீண்டும் ஒருமுறை என்னைத் தழுவிக் கொள். நம் காதலுக்காக அதை மறுமுறை செய். சந்தேகத்திற்கு, உனக்குப் பிடித்திருந்தால் மேலும் ஒருமுறை செய்துகொள்...’

ரேஷ்மாவிற்கு நீண்ட குறுஞ்செய்தியை வடிக்கையில் தொடு திரையின் மேல் விரல்கள் நடுங்கின. தட்டச்சுப்பிழைகள் காதல் எழுத்தை மலினப்படுத்தலாம், காதலையுமா?

‘நாளை உனக்குக் குறைந்தது மூன்று ஆலிங்கனங்கள் நிச்சயம்.’ சில நொடிகளில் ஐ-போன் குறுஞ்செய்தி ரங்காவின் கைகளில் துள்ளியது. ஏஸியில் உடம்பு கொதித்து வியர்த்தது. குடிக்க நீர் வேண்டும்...

மேஜையின் மீது வைத்திருந்த பாட்டிலில் நீரைச் சரித்துக் கொண்டான். படுத்தான்.

இரவில் விழித்திருக்கும் காதலியே, உனக்கும் கனவுகள் உண்டுதானே...
உன் அபிலாஷைகளை இங்கு என்னோடு பகிர்வாய்தானே...

மனங்கவர் மாந்தர்பற்றி நம் மனத்தினுள் உறங்கும் உண்மைகள் - பகிரவே போவதில்லை என்கையில் பொய்களாய் இருந்தால்தான் என்ன?

மனத்தில் எதிர்பார்ப்பின் சுமை தந்த அயர்ச்சியில் உறங்கத் தயாரானான். ரேஷ்மா வந்து போனதில், வந்த வேகத்தில் தந்து போனதில், தந்து போனது தீராநதியென்று வரவேற்கும் வேகத்தில், வரவேற்றுப் போவதன் வரம்பற்ற வெந்தீயினில் அவனுள் காதல் கொழுந்து விட்டெழுகின்றது. வெண்ணிற மழைவில்லை காதலர்க்கிடையே கார்மேக வானில் களிவெறியோடிடத் தவிக்கின்றது. உண்மை. காதலால் கனிந்த என் மனம் அறிந்த பெண்மை பொய் எனில் அறியப்பட்ட பெண்மையும் பொய். அதை அறியவிட்ட பெண்மையும் பொய். அதன் உள்ளூறையும் பெண்மையும் பொய். உண்மை. அவளுக்கும் வேண்டும் என்பதை அவள் ஆலிங்கனத்தில் அறியமுடிந்தது. உண்மை. இனியும் இதை இழுத்துச்செல்வதே இழிவு. உண்மை. இன்றிரவே இப்போதே இந்நிலையிலேயே அவளை... இதுவே உண்மை.

அவளோடு... அவளுள்... அவளாய்...

இதுவும் உண்மை.

இருப்பே ஒன்றை இழந்திருந்ததின் அநியாயத்தை மனத்திற்கு உணர்த்துகிறது. கிடப்பே ஒன்றின் கிடந்த கோலத்தினைக் காட்டிக் கொடுக்கிறது. இதுவரை எவராலுமே தான் கண்டுணர்ந்தவாறே அடுத்த வரையும் உணரவைக்க இயலாத இறைவன் எனப்படுவதை எங்கும் இருப்பதாய் நினைத்துக்கொண்டு அது தன்னுள்ளும் தானுள்ளுமாய்த் தினந்தோறும் திகழ்ந்திருக்கவில்லையே என்று வருந்தும் தவிப்பில்தான் பாரில் எத்தனை பாசுரங்கள் பண்சீர் பரிதவிப்புகள், பக்தி எனும் பெயரில். இருந்த அவளின் இல்லாமையை இன்றவளைக் கண்டதும் உணர்ந்து அவளுடன் இருப்பதற்குத் தவிக்கும் இவனுள்ளம் இயற்றுவது மட்டும் இகழத்தக்க இந்திரியக் காதல் எனக் கொள்ள வேணுமா? இந்திரியங்களை அடக்கியவனுக்குக் காதல் கிட்டியதாய்ச் சரித்திரம் உண்டா? ஆடவரும் பெண்மையை அவாவும் தோளினன் அவ் விறைவனையே அவன் காதலியாய்க் கொள்வான் என்று கருதிடினும். இந்திரக் கடவுளுக்கும் இந்திராதி தேவர்களின் கடவ ளுக்கும் இன்பமது இகபரக் காதலன்றி வேறாய் இசைந்துள்ளதா? இன்னிசையே இக்காதலில் இங்கிருக்க ஏழு ஸ்வ ரங்கள் எஞ்ஞானத்தில் எங்கிருப்பின் என்ன இஞ்ஞாலத்தில். இதை இந்நிலையை இவ்வுணர்வை இக்காதலை அவளுடன் பகிர வேண்டும் நாளை. நேர்மையே காதல். காலத்தினால் பொய்க்காத காதலின் உண்மை காமத்தில் பொய்த்துவிடுமா.

கண் சுழன்றது.

சுகமான அயர்வு. Comfortably Numb... Pink Floyd...

காலைவரை காதல் கன்னிகழியாமல் காத்திருக்க வேண்டியதே... என்று தோன்றுவதற்கு முன்னர் சுடிதார் வாசமடித்த நினைவொன்று சுழன்று மறந்தது. ...வுக்கு ...வுக்கு போன் செய்ய மறந்துவிட்டேனே...

உறக்கம் ஆட்கொண்டது.

## 9

### ஸ்ரீரங்கம். இன்று. முதல் பகல்.

காலை நான்கு மணிவாக்கில் ரங்காவின் மனது எழுந்து விட்டது. நித்ராதேவி நெருங்குகையில் நேற்றிரவு எதை மறந்து விட்டான் என்பதும் தெளிவாய் மேலெழுந்திருந்தது.

வேதவல்லிக்கு வழக்கமாய் வெளியூர் சென்றால் இரவில் பேசும் போனை நேற்றிரவு செய்யவில்லை.

ஏற்ற இல்லறத்தைப் பழகிடவேண்டுமன்றோ.

இருக்கட்டும். அவளும் கூப்பிடவில்லையே. இலக்கிய ஆய்வு மாநாட்டிற்குச் செல்வதன் வேலை மும்முரம்.

ஆறுமணிக்கு ரேஷ்மாவைச் சந்திக்கப்போவது எதன் அறம்?

இல்புற அறமா? இல்புறம் அறமா?

விட்டத்தை முறைத்தவாறு படுத்திருந்தவன் மனம் தெளிவாய் விழித்துக்கொண்டது.

அடிப்படை மானுட அறச்செயல் என்று எதுவுமில்லை. செயல் மானுடனால் செய்யப்பட்டதும் அதற்கான அறங்களை அவன் எழுப்பிக்கொள்ளலாம், விவாதிக்கலாம், அறம் இது என்று ஒழுகுவதற்கு உருவாக்கிவைக்கலாம். அடுத்து வரும் செயல் அவ்வத்தனை அறச்சட்டகங்களையும் தகர்த்தெறியலாம். அத்தகர்த்தலே புதிய அறங்களைத் தோற்றுவிக்கலாம்.

எண்ணும் எழுத்தும் அவனுள் அதிகாலைச் சிந்தையில் தான் என்றுமே தெளிவடைந்துள்ளது.

அடிப்படை மானுட அறம் என்று விசாலமான வீச்சுடன் ஒன்று வேண்டுமென்றால் அது மானுடம் தழைப்பதற்கான செயல்களை அறமென்று நோக்குவது மட்டுமே. இவ்வகையில் கொள்வதைத் தவிர்த்து அடிப்படையாய் எக்கூற்றை அறமென்று வைத்தாலும் சக உயிரினங்களுக்குப் புறம்பானதாய், வாழும் உலகை மனிதனுக்கு மட்டுமே என்றாக்கிக்கொள்ளும் வகை நியாயங்களாய் அவ்வறம் சுருங்கிவிடும்.

அன்பு வேறு அறம் வேறு. அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை என்று தனித்தனியே இரண்டையும் வேண்டினார் வள்ளுவர். பண்பான இல்வாழ்க்கையில் அன்பு போதும் அறம் வேண்டாம் எனின் எங்கு செல்லுமோ அங்குதான் இவ்வகை இல்புறக் காதல்கள் சென்று முடியும். எங்கு என்று புரியவில்லை. இல்லறத்தில் அறம் உண்டெனின் இல்புறக் காதலின் அறத்தை அது ஏற்காதா? இல்லறத்தில் அன்பு உண்டெனின் அவ்வன்பு இல்புற அன்பை நிராகரிக்க வேண்டுமா? முரணுறும் இரு அறங்கள் உறவுகளைத் தீர்மானிப்பது போகட்டும், அவை பேணுவது மனிதகுலம் இருபாலர்க்கிடையே பகிர்ந்து கொள்ளும் ஒரேவகை அன்பையே என்பதை அன்பிற்குண்டோ அடைக்குந்தாழ் என்பதையும் ஏற்றுக்கொண்டவன் ஏற்றுக் கொள்வது எங்ஙனம்?

பதிலாய் முறுக்கு மாமி காபியுடன் கதவை இடித்தாள்.

***

ஸ்ரீரங்கம் வீதிகள் எப்பொழுதும் போலப் பரபரத்தன. வாசல் தெளித்துக் கோலம் போட்டிருந்தார்கள். சாணி கரைத்து மொழுகுவது குறைந்துவிட்டது. வீதிகள் சிமெண்ட், தார் ரோடு களாகி விட்டிருந்தன. மஃப்ளர் மாமாக்கள் ஹிண்டு பேப்பர் களை சுருட்டி மடித்துக் கட்டிய வேட்டித் தொடைகளில் அடித்தவாறு நடை பயின்றனர். ஒன்பது கெஜச் சின்னாளம் பட்டுகள் ஓரிரண்டு கோயிலை நோக்கிச் சரசரத்திருந்தன. எஸ். எஸ். டியூஷன் ஆறுமணி முதல் 'பேட்சி'ற்கு ஸ்ரீரங்கம் ஆண்கள் மேனிலைப் பள்ளி மாணவர்கள் குளிக்காத உற்சாகத்துடன் வழு வழு சிமெண்ட் வாசல் முன்னால் சைக்கிள்களில் நின்றவாறு தோனி ரிடையர் ஆகிவிட வேண்டுமா, ரோஹித் ஷர்மாவை டீமினுள் தக்கவைப்பது எதிரணியின் லஞ்சமா என்றவாறு காத்திருந்தனர். முதுகில் மொய்த்த ஆறுமணி இளஞ்சூட்டையும், முன்னால் அளவில் சிறுத்து அடுத்த அடியில் மிதிபட்டிருந்த தன் நிழலையும் கவனித்தபடி ரங்கா நடையைக் கட்டினான்.

தெற்கு சித்திரை வீதி தெற்குவாசல் சிமெண்ட் ரஸ்தா வைச் சந்திக்கும் மூலையில் மினி ஆட்டோ ஸ்டாண்டில் லோட்டா தேநீர், தினத்தந்தி பரிமாற்றங்களினூடே 'அம்மா'வின் அடுத்த விஸிட் அலசப்பட்டிருந்தது. ஓரிரு ஆட்டோ ஓட்டுநர்கள் கட்சி வட்டச் செயலாளர்கள். பைசா பட்டுவாடா பேச்சு விழுந்தது. சைக்கிள்

மணியோசை, வெளியூர் பக்தகோடிகளின் ஆச்சர்யக் குரல்கள், பாதசாரிகளின் காலைக் கறிகாய் மார்கெட் கறிவேப்பிலைக் கவலைகள், அதிகரிக்கும் மோட்டார் ஈருருளிகளின் சீரற்ற சீற்றங்கள் இவற்றிற்கிடையில் பாதாள கிருஷ்ணன் கோயிலில் அரைநிஜார் சிறுவன் எண்ணெய் விளக்கு ஏற்றிக் கொண்டிருந்தான். அன்று அவனுக்கும் தேர்வு போலும்.

ரங்கா சுறுசுறுப்பாய் நடந்தான். நான்கு மணிக்கே எழுந்தவனுக்கு ஆறு மணி முற்பகல்.

முறுக்கு மாமி சொன்னபடி காபியுடன் ஐந்துமணிக்குக் கதவைத் தட்டியபோது ராகவன் எழவில்லை போலும். யோசனையில் இருந்தவனுக்கு மாமி ஏழு மணிக்குச் சிற்றுண்டி தரட்டுமா என்று வினவியதும் மனத்தினுள் பதியவில்லை.

ரேஷ்மா ஐந்தேமுக்காலுக்குக் குறுஞ்செய்தியில் குட்மார்னிங் சொன்னாள்.

ஆறுமணியளவில் இறங்கி வீதிக்கு வரும் முன்னர் ஐ-போனில் அண்ணாவின் எண்ணில் அம்மா பேசினாள். தூங்கினாயா போன்ற அவனது எவ்வகைப் பதிலா லும் நடந்து முடிந்து விட்ட அக்காரியங்களை எவ்வகையிலும் மாற்றிப் போட முடியாது என்கிற வகையான கேள்விகளைத் தாயின் கரிசனம் என்கிற அவசியத்தில் கேட்டு முடித்ததும், ‘டிபன் வேணும்னா சொல்லிடு, கேட்டாளாம்… பதிலே சொல்லலியாமே நீ…’ என்று அங்கலாய்த்து முடித்தாள். இதுல ஒண்ணும் கொறச்சலில்லை. சிக்கன் பிரியாணி வேணும், மாமிட்ட நீ சொன்னேன்னு கேட்டுப்பாக்கட்டா… போனை அணைத்துவிட்டு வீதியில் இறங்கியவன் திரும்பி வந்து திறந்திருந்த அடியில் உளுத்துக் கரையான் அரித்திருந்த ரேழி கதவின் பித்தளை வளையத்தைக் கொட்டினான். ஏதோ எனக்குப் பிடிச்சத கொடுக்கறதுக்கே பிறவியெடுத்தா மாதிரி… ஒங்க சவுரியத்துக்கு தான செய்வீங்க. அதான் அண்ணன் அவனே முடிவெடுத்து இழுத்துக்கிட்டு வந்து நின்னான்…

‘மாமி… டிபன்… எது இருக்கோ… வந்து சாப்டறேன்…’

தெருவில் இறங்கியிருந்தான்.

நடையில் அவனும் ரேஷ்மாவும் அம்மா மண்டபம் போகும் வழியில் சந்திரா நகர் குறுக்குச்சந்தில் திரும்புவதற்கு அருகே ரெங்கபவன் கல்யாண மண்டபம் முன்னால் சந்தித்துக் கொள்வதாய்… பதினைந்து

நிமிடங்கள் கழித்துச் சந்தித்தனர்.

ரங்கா ‘பெடல் புஷர்’ என்று அறிந்திருந்த, ரிக்ஷாக்காரன் படத்தில் எம்.ஜி.ஆர். அணிந்துவரும், நிஜத்தில் அன்றுமே எந்த ரிக்ஷாக்காரனும் அணிந்திராத சீருடையான ‘முக்கா பேண்டி’ல் இருந்தாள் ரேஷ்மா. பனியன் மார்பில் ‘பாய்ஸ் ப்ளே, கேர்ள்ஸ் வின்’ என்றது. காவிரிக் கரை செல்லும் சந்தில் திரும்புகையில் இடப்புறம் கவனித்தான். நடைபாதை சைக்கிள் ரிப்பேர் கடை இன்னும் இருந்தது. அங்குதான் அவன் சைக்கிளுக்குப் பஞ்சர் ஒட்டுவதைக் கற்றுக்கொண்டான். அங்குதான் நாமே நம் சைக்கிளுக்குப் பிரியமாய் வீல் அலைனிங் (கடைக்காரன் பரிபாஷையில் பெண்டு நிமிர்த்துவது) செய்வதென்றால் நம் தொடைகளின் உட்புறம் வேண்டாத இடங்களில் கிரீஸ் ஒட்டிக்கொள்ளும் அபாயமும், பள்ளியில் கேலி செய்வதற்கென்றே அவ்விடத்தையும் கவனிக்கும் சகாக்களிடையே அது பெற்றுத்தரும் அவமானத்தையும் அறிந்து கொண்டான்.

அண்ணனுக்கு மட்டும் ‘ஹெர்க்யுலஸ்’ எனக்கு ‘அட்லஸ்’ தானா... அப்பாவிடம் எட்டாவதில் எத்தனை சண்டை போட்டுள்ளான். ஏதோ புராண ஹெர்க்யுலஸ் அண்ணன் கட்சி போலவும் அவனுக்கு வாய்த்தது ஹெர்க்யுலஸ் வீழ்த்திய அட்லஸ்-தான் என்பது போலவும்...

இன்றும் புராண அட்லஸ்-ஸைப் போல நான் தான் சுமை தாங்கியோ... யோசித்தவாறு நடந்தவனின் புஜத்தைப் பற்றிய கையைக் கவனிக்கவில்லை. அநியாயமாய் உலகையே சுமந்தான் அவன். நான் இன்னமும் காதல் சுமையை உலகுருண்டையாய் உருட்டித் திரட்டித் தாங்கியவாறு... இல்லை, இன்று இங்கு இறக்கி வைத்து விடுவேன்.

‘A penny for your thoughts? தூக்கத்தில எழுப்பிட்டேனா?’

‘ம்ம்.. என்ன, இல்ல ரேஷ்... இன்னிக்கி நிறைய ‘ஹக்’ செய்றேன்னயே... முதல்த இப்டியே போக்குவரத்துக்கு இடைஞ்சலில்லாம ஓரமா நின்னு தொடங்குவோமா, பொது இடத்தில நீ கட்டிப்பிடிச்சா எனக்குப் பரவாயில்லயா... ரெண்டு பேத்துக்குள்ள ஒருத்தராது வெட்கப்படணுங்கறதால நாந்தான் இப்பவும் படணுமா... இப்டிப் பல யோசனைகள்...’

சிரித்தாள். ஆறரை மணிக் கதிரவன் குணதிசையை அவள் முகமிருந்த பக்கத்திலிருந்து என்றாக்கிக்கொண்டான்.

‘நீயே வெட்கப்பட்டுக்கோ பா. ஆனா நீ சொல்றத இங்க செஞ்சோம்னு

வெச்சிக்க சுத்திருக்கறவங்க வெட்கப்பட்டுத் தலைல அடிச்சுப்பாங்க. ஸ்ரீரங்கம் உன் அமெரிக்கா இல்லை. இன்னமும் small town தான்...'

'நான் அமெரிக்கனா? சரிதான். அப்ப நீ? நீ என்ன ரேஷ்?'

'நான் இன்னும் small town girl தாம்ப்பா...'

ஷூ லேஸ் கட்டுவதற்காகக் குனிந்தவனைக் கடந்து குதித் தோடி முன்சென்றவளை ஏறெடுத்தான். பின்புற வளைவுகளில் குழைந்து டி-ஷர்ட் முதுகை நோக்கி மேலேயிருக்க, முக்கால் பேண்டின் இறுக்கத்தில் கால்கள் முளைத்த கருநீலக் காதற் கலையமாய் அவன் மனத்தை மேற்கிலிருந்து கிழக்கிலாய் ஆட்டுவித்தபடி...

சிற்றூர் நங்கையாம். அவள்தான் பெங்களூரிலில் இருந்து வந்து ஸ்ரீரங்கத்தில் 'ஐந்து மிஸிஸிப்பி ஹக்' கொடுக்கிறாள் எனக்கு. அப்ப நான் என்ன? பெருநகர் பேக்கா?

எழுந்து எட்டி நடந்தான். சேர்ந்துகொள்ள.

தெருவோரம் இரண்டு நாய்கள் முகர்ந்துகொண்டிருந் தவை, ரேஷ்மா அருகில் நடக்கையில் கை சொடுக்கி வாயில் மனிதருக்குப் புரியாத மொழியில் கொஞ்சல்களை முணு முணுக்க, உடனடியாகத் தங்கள் விவாதங்களை ஒத்திவைத்து ஒன்று அவள் பின்னால் வாலாட்டியபடி நடக்கத் தொடங்கியது. மற்றொன்று ரங்காவை முறைத்தது. நீயும் நம்ம ஜாதியா...

'அமெரிக்காலயும் வாக் போவியா ரங்கா?'

'ஷ்யூர்... தினமும். வேதாவிற்கு மிகவும் பிடிக்கும்.'

'ஓ... அவளும் வருவாளா? தட் இஸ் நைஸ். எனக்கும் வாச்சுருக்கே. அபி சேந்து வாக் போமாட்டார் ரங்கா. ஆனா அவரு மட்டும் 'திஸ் இஸ் வாக் டைம்'னு தனியாப் போய்டுவாரு...'

குறைபட்டுக்கொள்கிறாளா? பக்கவாட்டில் கவனித்தான். குரலில் தொனித்த குறை கூறும் பாங்கு முகத்தில் இல்லை.

'பிடித்தவர்களுடன் நடப்பதற்கு ஒரு யோகம் வேண்டும் ரேஷ். எந்தப் பெருஞ்செல்வமும் பெற்றுத் தரமுடியாத யோகம். உல்லாசமாய் நடப்பதற்கு மனத்தில் ஒரு ஓய்வும், விடுதலை உணர்வும், சுதந்திரமும் வாழ்வில் அமையவேண்டும்...'

‘கைகோத்துப்பீங்களா ரங்கா?’ அவன் சொல்லிக்கொண்டு வந்ததைக் காதில் வாங்கியதாகக் காட்டவில்லை.

‘... இல்ல, மாட்டேன்.’

‘அதானே பாத்தேன். அபியும் இப்டித்தான். ஷாப்பிங் போறப்ப கை லேசா பட்ரிச்சினாலும் முறச்சிக்கிட்டு முன்னாடி போய்டுவாரு... வந்து சேந்துருக்கிங்களே எனக்குன்னு...’

‘கை தான் கோத்துக்க மாட்டேன், ஆனா நடக்கறச்சே இடுப்ப சுத்திக் கை போட்டு இழுத்துப்பேன்... செய்யட்டா...’

‘படவா...’ கன்னக் கதுப்புகளில் வெட்கம்.

‘ஒங்க PDA (Public Display of Affection) லிமிட் எங்களுக்குத் தெரியாதா...’

நடந்துகொண்டிருந்த சந்து வளைந்து நெளிந்து சிறுத்து பத்து நிமிடங்களில் ஒருபுறம் வீடுகள் அருகித் தோப்புகள் தொடங்கியிருந்தன. அவன் முன்னர் இருந்த மங்கம்மா நகர் வீட்டிலிருந்து குறுக்காய் வந்து சேரும் பாதையைக் கடந்ததும் திருப்பத்தில் சட்டென்று எதிர்ப்புறம் காவிரி வரவேற்றாள். கரையோரம் பாறாங்கற்கள் பதித்த சரிவானது. தாண்டி ஒரு சமன். புல்வெளி. எதிர்ப்புறம் முள்வேலி அடக்கிய தென்னந்தோப்புகள். நடந்தால் மேலூர் கரைவரை செல்லலாம்.

சமனில் ஓரிருவர் குளித்து முடித்துத் துவட்டியிருந்தனர். உலர்ந்த கைலியை மார்புவரை ஏற்றிச் சுற்றி மடித்திருந்தவன் அதனுள் கைவிட்டு ஈர உள்ளாடையைக் கழற்றப் போய் அவர்களைக் கண்டதும் அவசரமாய்ச் சரிவில் மறைந்தான். மெட்டல் பட்டை கைக்கடிகாரம் கட்டியிருந்த மஞ்சள் சீச்சூரண ‘வாத்தி யார்’ மாமா குந்தி அமர்ந்து காதில் பூணூல் மாட்டிப் புல்வெளி யில் செம்பு பஞ்சபாத்திர உத்திரணியில் இருந்து ‘அர்க்யம்’ விட்டிருந்தவருக்குப் ‘பண்ணி வெச்சுண்டிருந்தார்’. தர்ப்பணம்.

கடந்து சென்று காவிரிக்குப் பக்கவாட்டில் அவள் மேல் படாமல் பாறாங்கல் விளிம்பில் அமர்ந்துகொண்டார்கள்.

நிமிடங்களில் வயதற்ற காவிரியுடன் தனித்திருந்தனர்.

கரையோரம் வளர்ந்திருந்த நாணல் நீர்த்தாவரங்களின் பச்சைச் சிடுக்குகளில் ஆற்றுமயில்கள் ஓரிரண்டு தக்காளிச் சிவப்பில் தலையைச்

சிலுப்பியவண்ணம் ஒட்டக நடை பயின்றன. கரையோர நடைபாதையின் எதிர்ப்புறத் தோப்புத் துரவுகளின் சதுப்புகளில் சஞ்சரிக்கும் கானாங்கோழிகள் மனித நடமாட்டம் குறைவான காலைப்பொழுதில் பாதையைக் கடந்து காவிரிக்கரையோர மக்கி மடிந்த புல் படிவங்களின் மேலாய்ப் பவ்விப் பவ்விக் கால்பதித்துப் பூச்சிகளைப் பொறுக்கித் தின்று கொண்டிருந்தன. கதிரவனின் கிரணங்கள் காவிரியின் வெள்ளிப் பட்டுச் சேலையை இடையில் கை போட்டு வெட்டியதில் ஓர் நீர்ப்படி வழிந்து இறங்கி ஓசையின்றி ஓடிக்கொண்டிருந்தாள். ஆற்றின் நடுவே ஆங்காங்கே மணல் திட்டுகள். சுழித்து ஓடும் காதல் நதியின் இன்றைய கனிவான பொழுதுகளைப் போல. தூரத்தில் மலைக்கோட்டை ஏறிவரும் மஞ்சள் பின்னொளியில் காலை நிழலாய் அவர்கள் காதல் உலாவைக் கண்டு மலைத்திருந்தது. அக்கரையின் கரும் பச்சை வளர்ச்சிகளின் இடைவெளி களில் ஜீயபுரம் திசையில் ரயிலொன்று தென்பட்டு ஒலி தேய்ந்தது. கரூர் பாஸெஞ்சரோ...

ரங்கா பார்த்துக்கொண்டிருக்கையிலேயே நீரின் மீதாய்ப் பாம்பு போல வளைந்த கரிய கழுத்து வெளிப்பட்டு அலகினில் ஏந்திய மீனைத் தலையைச் சிலுப்பித் தூக்கி வானில் வீசி, விழுந்ததைத் தலை முதலாய் அலகைப் பிளந்து விழுங்கியது. பாம்புத்தாரா...

‘அது என்ன ரங்கா... எக்ரெட்?’

‘இல்லை. எக்ரெட் நாரை, இது டார்ட்டர். கழுத்தப் பாத்தீல்ல, பாம்பு மாதிரி... இங்க எப்டி வந்துதுன்னு... நான் காவேரில இதைப் பாத்ததே இல்லை...’

‘அதோ இன்னொண்ணு... மெபி, மேட்டிங் சீஸன்...’ அவள் இதழோரம் சுழித்த குறும்பை ரங்கா கவனிக்கவில்லை.

‘மைக்ரேட் செய்யும் பறவைகள் எல்லாமே மேட்டிங் செய்ய வர்றதில்லை. இனப்பெருக்கத்திற்காகவே பறவைகள் வெளியூர்ல இருந்து இங்க வருதுங்கறது தவறான கற்பிதம். என்ன மாசம்... இது மேட்டிங் சீஸன் முடிஞ்சுட்ட நேரம்...’

‘மேட்டிங் வேணாம், லவர்ஸ் சீஸனா இருக்கலாம்ல. ஜோடியா சுத்துதுங்களோ என்னவோ...’ மீண்டும் முயன்றாள்.

‘நம்ள மாதிரிங்கறயா...’ ரங்கா சுதாரித்துக்கொண்டான்.

‘இருக்கலாம்ல... நீ இப்ப அமெரிகாலேந்து வர்லியா என்னப் பாக்கறத்துக்கு... சரி, கேக்கணும்னு இருந்தேன். எதுக்கு ரங்கா மறுபடியும் வந்துருக்க?’

‘மறுபடியும்னா...’ இரண்டு மாதங்களாய் இவனிடத்தில் இணையத்தில் இதயத்தில் காதல் கண்ணாமூச்சி ஆடிவிட்டு இவளே கேட்கிறாளே.

‘என்னை வேணாம்னு தீர்மானமா சொல்லிட்டுப் போனீல்ல... இப்ப ஏன் வந்துருக்க என்னைத் தேடிங்கறேன்?’

வாயை மழலையாய்க் குழற்றி, கண்களில் உதடுகளில் என்று சிரித்தபடியே அவள் கேட்டதினால்தான் ரங்காவும் நெஜமாகவே தீவிரமாய்க் கேட்கிறாள் என்பதைப் புரிந்து கொண்டான். உண்மையான பதிலைச் சொல்லவும் தீர்மானித்தான்.

எங்கு தொடங்குவது? எளிமையாய்ச் சொன்னால், நான் சொதப்பிவிட்டேன் ரேஷ்... Just  screwed up things for us... போதுமா. இல்லை இவ்வாறு சொல்லிப்பார்க்கலாமா...

வாழ்க்கையில் சமுதாயம் நிர்ணயித்திருக்கும் வகைகளில் அது அளிக்கும் பருவ வயது கடப்பதற்குள்ளான அவகாசத் திற்குள் வெற்றி பெற்றே ஆகவேண்டிய பரிதாபத்திற்குரிய இந்திய மத்யமர் ஆண்மகன் நான் ரேஷ்மா... என் ஆளுமை என்னவென்றே புரியாத, எனக்கு என்ன வேண்டும் யார் வேண்டும் எது முக்கியம் என்றெதுவுமே தெரியாத வயதிலேயே அவற்றைச் சார்ந்த சாதக பாதக முடிவுகள் அனைத்தையும் எடுக்கவைக்கப்பட்ட அல்லது சூழ்நிலையால் எடுத்துக் கொடுத்துவிடப்பட்ட, கனவுகளில் ஜெயித்த கண்ணிய மான ஆளுமைத் தோல்வி நான் ரேஷ்மா...

முதல் காதலிலேயே வெற்றியடையும் சராசரி ஆண் மகனாய் ஆகவேண்டுமா அல்லது கனவுகளை நிறைவேற்றி வெற்றி கண்ட சராசரிக்கும் மேற்பட்ட செயல்வீரனாய் சகல சம்பத்துகளுக்கிடையே சிறுகச் சிறுகச் செத்துக்கொண்டிருக்க வேண்டுமா என்று கேட்டால் இன்று சரியான முடிவெடுக்க முடிந்த அறிவுஜீவி முட்டாள் நான் ரேஷ்மா...

‘பதினைஞ்சு வருஷத்துக்கு முன்னாடி, நாம கடைசியாப் பாத்துக்கிட்டப்ப என்ன சொன்னேன், சொல்லு...’ உணர்ச்சிகளை வெளிக்காட்டாத மெல்லிய குரலில் கேட்டான்.

‘என்ன சொன்னே?’ புருவங்களைச் சுருக்கினாள்.

‘கமான்… உனக்கு மறந்திருக்காது. எனக்குத் தெரியும்.’

‘என்னை ராணி போல் வைத்திருக்க விரும்புவதாய்… அதைச் செயலாக்க முடிந்த ராஜாவாய் இன்று நானில்லை என்பதால்…’

‘யெப். அதுதான். இன்று நான் ராஜா ரேஷ். நான் நினைத்த வாறே ராஜா… வேறு ராணியோடு… இதுக்கு மேல கேக்காதே…’ பொங்கிய கண்ணீரை அவளுக்குக் காட்டாமல் முகத்தைத் திருப்பிக்கொண்டான்.

சுற்றிலும் அன்று அவன் அவளுக்கிட்ட முத்தங்களை ஏந்திச் சிவந்திருந்த நித்யகல்யாணிப் படுகை இன்று உலர்ந்து மறந்து விட்டிருந்தது. இனி வரும் நாளின் வயோதிகத்தை வெருட்டும் அந்த இளங்காலையிலும் கோரைப் புற்கள் காதலிக்கும் வயதைக் கடந்துவிட்டதாகவே தலை கவிழ்ந் திருந்தன.

எதிரே தோப்பின் பச்சைகளினூடே சூரியவொளி குழாய்களாய்ச் சரிந்து ஒளிரத் தொடங்கியிருந்தது. மரங்கள் கரைந்தன. கூவின. தென்னை உச்சிகள் கிளிமிழற்றின. வேலியின் வாலாட்டிகள் விக்கின. மாமரத்தின் கீழாய்ப் பொடிந்து வீழ்ந்த சூரிய ஒளியோடு தவிட்டுக் குருவிகள் அணிவரிசையில் சரிந்திறங்கித் தங்களின் வட்டமேசை மாநாட்டில் தேடப்போகும் இரையைப் பங்குபோடுவதை விவாதித்துச் சிர்ப்பின. வால்களைக் கெந்திக் கெந்தி மரப்பட்டைகளில் முன்னேறிய அணில்களின் அடக்க முடியாச் சிரிப்பொலி கேலியோ. அவ்வாறு கருதியே கானாங் கோழியொன்றின் ‘க்வா கக்கக் க்வா க்ருவாக்ருவா’ அதட்டியது. கீரிகள் இரண்டு உன்னைவிட நான் உயரம் என்று ஒன்றையொன்று எக்கிவிட்டு வேலியோரமாய் வழிந்தோடின. காலடியில் சிவப்பில் கருப்புப் பொட்டுவைத்த இரண்டு காதற் பூச்சிகள் புணர்ச்சியின் ஒத்திசைந்த நிலையில் திசையற்று ஊர்ந்தன. நிமிர்ந்தால், அருகில் இறைந்திருந்த உணவைக் கொத்தும் பச்சைக் கழுத்துப் புறாவின் கொட்டாத இரக்கமற்ற விழிகள் சிறு கரிய வட்ட வெளியினால் பிரிக்கப்பட்ட இரண்டு ஆரஞ்சு இளவட்டங்களாய்… ரேஷ்மா முகத்தின் பொட்டானது.

‘இப்ப எதுக்குடா வந்த?’ அவன் கண்ணீரை அவள் கவனிக்கவில்லை என்று விடாப்பிடியாய்த் தொடர்ந்ததில் தெரிந்தாலும், குரலில் இயலாமை பரிதவிப்பை ரங்கா உணர்ந்தான்.

‘இதச் சொல்றதுக்குத்தான்…’ முயன்று முறுவலித்தான்.

ரேஷ்மாவின் முறை. இயற்கையில் சாய்வதற்கு.

கரையோரம் புதர்ச் செடிகளின் கரும்பச்சை இலைகள் கழுவித் துளிர்த்தன. இலைப்பரப்பிலிருந்து சறுக்கி விழும் நீர்த்துளி எப்போது அதைச் செய்யும் என்று அறிவது கடினமன்றோ. விழுவதற்கான கனத்தை எது அளித்தது என்றறிவதும் கடினம். நீங்கிய கனத்தின் வெறுமையில் மனம் எனும் இலை பாரம் நீங்கிய சோக விடுதலையில் மீண்டுகொள்ள எதிர்ப்புறம் நிமிர்கையில் முட்டுவது எதில் என்று அறிவதும் கடினம். காம்பு ஒடியாமல் தழைத்தால் போதும் என்கிற தவிப்பில் ஆதுரமாய்ச் சாய்ந்து கொள்ளும் செய்கையே மேலோங்கும்.

ரேஷ்மாவிற்கு ரங்காவின் காதல் அன்று விலகியதும் நேர்ந்தது அதுவே. முட்டிக் கொண்டது அபி எனும் அப்பிராணி...

காதல் சங்கேதங்களில் உணர்ச்சிவசப்பட்டு விட்டால் பெண்டிர் செய்வது ஒன்றுண்டு. கண்களின் ஈரத்தை ஆண் காணாதிருக்க தூசி விழுந்ததுபோலக் கையெடுத்துச் சிறுவிர லால் கண்ணோரத்தின் மீதாய் நீவி ஓட்டுவார்கள். இப்போது ரேஷ்மா செய்துகொண்டிருப்பதைப் போல.

ஏறும் சூரியனின் முன்பாய் ரங்கா அமர்ந்திருந்த வாட்டத்தில் அவனை ஏறெடுத்து நோக்க ரேஷ்மாவிற்குக் கூசிற்று.

தலைகுனிந்தவளின் பார்வையில் வியாபிக்கும் சூரியவொளி போல அருகில் அவன் இருப்பு பிரகாசித்தது.

‘எனிவே... சொல்றதுக்கு மட்டுமில்லை. சொல்லிட்டுக் கட்டிப் பிடிச்சுக்க... அதுக்கப்புறம்...’ ரங்கா குரலில் குறும்பு கனிந்தது.

முறுவலித்தாள். ‘ம்ம்ம்... இங்க சொல்றதோட நிறுத்திக்கோ... அப்றமா...’

‘என்ன ப்ளான்?’

‘திட்டமா போடுவாங்க. Just go with the flow’

‘காவேரி மாதிரி... அதனால்தானே இங்கயே செய்லாம்னு... சரி, சொல்லு, இப்ப என்ன plan of action?’

‘ம்ம்ம்... Let me see. அம்மா மலக்கோட்டைக்குப் போகச் சொன்னாங்க... வேண்டுதல் பாக்கியாம். எனக்கு ஒரு டிரஸ் வாங்கணும். Will you help me with that? அப்டியே லஞ்ச். அப்பறமா உன்னை ரூம்ல

கொண்டுவிட்டு...’

கண்ணடித்தாள்.

புன்னகைக்காமல் இருக்க முடியவில்லை ரங்காவால்.

பத்து மணிபோல அவள் காரிலேயே மலைக்கோட்டைக் கோயிலுக்குச் செல்வதாய் ஏற்பாடாகிப் பிரிந்தார்கள்.

# 10

ஸ்ரீரங்கம். இன்று. காலை பத்து மணிக்கு மேல்.

(முதல் அத்தியாயத்தின் தொடர்ச்சி...)

காரினுள் கண்கள் நேற்றைய காதலை இன்று தேடின. கார் நேற்றைய கோயிலை இன்றும் நாடியது. காதல் தொலைந்ததெங்கோ, கோயில்களில்தானே என்றும் வாழ்கின்றது.

ரேஷ்மா படகுக் காரை ஆண்டார் தெருவிலிருந்து மலைக் கோட்டை உள்ளே செல்லும் குறுகலான தெருவில் ஏற்றியிருந்தாள். நினைவுகளில் மீண்டு ரங்காவும் இன்றைய நிஜத்திற்குத் திரும்பியிருந்தான்.

“ரங்கா, வெளித்தோற்றம் தோற்றுவிப்பதுதானா காதல்?”

“அழகானவங்களுக்குத்தான் காதல் வருங்கறயா, நான் அழகா இருக்கேங்கறயா? இல்ல உனக்குமே காதல் வந்திருக்கேன்னு வெளிப்படையாச் சந்தேகப்படறயா?”

“டேய்... வேணாம்...”

“கெழவனானாலும் என்னைக் காதலிப்பியா ரேஷ்?”

“ஆமான்னுதான் தோணுது... காதல்லேந்து என்னிக்குமே வெளியே இறங்க முடியாது. அது ஒரு ஓரத்துல...”

“காதல்னு விளிம்பப் புடிச்சிக்கிட்டே வாழ்க்கை மொத்தத் தயும் ஓட்டலாம். அதானே? நம்பள மாதிரி. ஆத்துல ஒரு கால் சேத்துல ஒருக்கால்...”

“வேற எப்படிப் பின்ன? உங்க ‘ஆத்துல’ ஒரு கால் என் வீட்டுல ஒரு கால்னா...”

பதிலின்றிப் புன்னகைத்தான். அவளது நைச்சியப் பேச்சினால். சன்னமாய் இசைத்திருந்த ‘நீ பாதி நான் பாதி கண்ணே...’விற்கு காரின் முன் மேடையில் தாளமடிக்கத் தொடங்கினான்.

ரேஷ்மா குறிப்பாகவே அப்பாடலைத் தேர்வு செய்திருந் தாள். கல்லூரி தினங்களில் அவர்கள் இருவரும் பரிமாறிக் கொண்ட காதற்

சங்கேதங்களுள் இந்தப் பாடலும் அடக்கம்.

குறுகலான ஆனால் மலையேறும் மேடான முச்சந்தியின் ஓரத்தில் உடைந்த சிமெண்ட் குப்பை மேட்டுக்கருகில் கார் நின்றது. எந்தப் பாதை? பிரேக்கை அழுத்தியிருந்தாள்...

“இந்தப் பக்கமா போ ரேஷ்...” ரங்கா கையோட்டினான்.

ஆண்கள் திசையறிவிலேயே பயணிப்பவர்கள். பெண்கள் அடையாளச் சின்னங்களைப் பற்றியவாறு.

ஜன்னல் கண்ணாடியைக் கதவினுள் அமிழ்த்தி இறக்கத்தில் எதிரே சைக்கிளில் வந்தவனைச் சொடுக்கினாள் “ஏய்... எக்ஸ்யூஸ்...” தமிழ் நடிகையின் தமிழ் டப்பிங் குரலில்.

ஏதோ யோசனையில் சைக்கிளோட்டி பிரேக் அடித்து ஒற்றைக் காலை எக்கி நிலத்தில் ஊன்றியவன், குனிந்து அவளைக் கவனித்ததும் தொடைவரை வழித்திருந்த கைலியை அவசரமாய்ச் சீட்டிற்கு மேலாய்க் கொசுவித்துப் பவ்வியபடி கேள்வியாய் நோக்கினான்.

“கோயிலுக்குள்ள எப்டிப் போகணுங்க?”

அவன் கைகாட்டிய பாதை ரங்கா அனுமானித்தது. “தேங்ஸ்...” திருப்பியதும் “இந்தக் கார் போகுமாப்பா...” ரங்கா தலையை வெளியே நீட்டிப் பின்னால் கேட்கையிலேயே டப்பாக் கைலி இறக்கத்தில் சறுக்கியிருந்தான்.

“எப்டி கரெக்டா சொன்னடா? முன்னாடி வந்துருக்கே...”

“ஒன்னோட சேந்து போற வழி தப்புமா ரேஷ்...”

வெட்கம் மௌனமானது.

ஓரமாய் சிமெண்ட் சாக்கடை ஓடிய கல் தளங்களால் ஆன சந்துகளில் எதிர் சாரியில் ஆட்கள் மட்டுமே வரும் இடைவெளி விட்டு நெளித்து காரை அகலமான மலைக்கோட்டை அக்ரஹாரத் தெருவின் ஒரு கோடியில் திருப்பி நிறுத்தும் வரை ரங்காவும் மௌனத்தைக் கலைக்கவில்லை.

காரினுள் செருப்புகளை விடுத்துப் பூட்டியபடி இறங்கியதும் எதிர்ப்பட்டாள் ஒருத்தி. நடக்கத் தொடங்கிய அவர்களைக் கடக்கையில் ரங்காவின் புறமாய் ஒதுங்கித் தலைகுனிந்து கையிலிருந்த

பூக்குவளையை நோக்கியவாறு சென்றாள்.

“நா இருக்கறச்சயே சைட் அடிக்றா பாரு...”

“ஒன்னப் பாத்துப் பொறாமையா கூட இருக்கலாம்ல...”

“என்னைப் பாத்து... ஹ்ம்... அவ என்னோட லட்சண மாத்தான் இருக்கா...”

“அதான் சொன்னேன் ஒம்மேல பொறாமைன்னு... நமக்குக் கெடைக்காம இவுளுக்கு மாட்டிருக்கேன்னு...”

“ஏன், போயேன் அவ பின்னாடி...”

“சே, நீ இருக்கறச்சே...”

“அதானே, ஒனக்கு எம் பின்னாடி சுத்தறதுக்கே ஒதறும்...”

“இந்தப் பொடவைல நடக்கறச்சே... நல்லாருக்க ரேஷ்...”

“ம்ம்ம்... ஒனக்காகத்தான்... இந்தக் கலர் ஒனக்குப் புடிக்கும்ல... லிஸன் டு திஸ். ஊர்லேந்து கௌம்பற அவசரத்துல பொடவயே எடுத்து வெக்கல... கடுப்பாயிரிச்சி... அப்பறம்...”

“அம்மா பொடவையக் கட்டிண்டு வந்துருக்க...”

“அடப்பாவி, சே... எப்டிரா கண்டுபிடிச்ச...”

“கார்லயே கவனிச்சேன். இந்த டிஸைன்ல ஒங்க அம்மா தான் கட்டிப்பாங்க... ப்ளவுஸ் கூட அவங்களோடதுதான்...”

“ரங்...கா... this is too much, even for you.”

“சரி, உண்மைல ப்ளவுஸ் அவுங்களுதான்னு தெரியாது. ஒனக்குக் கைல லூஸா இருக்கறத வெச்சு அடிச்சுவிட்டேன்.”

“எல்லாத்தயும் கவனிப்பயா நீ?”

“உன்ட்ட யெஸ். நான் கவனிக்கத்தானே நீ செஞ்சுக்கற...”

“That’s bold. நெனப்ஸ். எனிவே, காலேஜ்லேயேவா, இப்பத்தான் கவனிக்கறயா...”

“காலேஜ்லயும் தான். இப்ப சொல்லிடறேன்...”

உடன் நடக்கையில் கவனிக்கவேண்டிய காதல் சங்கேதம், முகத்தைத் திருப்பாமல் அடிக்கடி கடைக்கண்ணால் ஆண் முகத்தை ஏறிடுவது. இப்போது ரேஷ்மா செய்வதைப்போல.

‘மாதவிப் பெண்மயிலாள் தோகை விரித்தாள்...’ தெருவின் பூக்கடை டிரான்ஸிஸ்டரில் ஒலித்துக்கொண்டிருந்தது.

பேச்சும் கலகலப்புமாய்த் தொடங்கிய மலையேற்றம் அய்யர் பட்டை அடித்துச் சங்கிலி சிணுங்க ஆடியிருந்த ஆணை, பலகையில் புகைப்படம் பிடிக்கத் தனிக்கட்டணம் என்கிற கோயில் நிர்வாக ஆணை போன்றவற்றைக் கடந்து பல திசைகளில் பல பாதியிருட்டுப் படிக்கட்டுகள் ஏறிக் கட்டுமானப் பணி மூங்கில் கொம்புகள் பிரகாரமெங்கும் துருத்தியிருந்த விபூதியும் தீய்ந்த எண்ணை விளக்குகளும் கமழும் தாயுமானவர் சந்நிதியை அடைவதற்குள் வியர்த்துத் தேய்ந்திருந்தது.

சந்நிதியில் ரேஷ்மாவைப் பார்த்து நேசமாய்ப் புன்னகைத்தவாறு “வாம்மா...” என்று தான் வெளியே வந்த குருக் களிடம் கைக்குட்டையினால் முகத்தை மொழுகியபடி “அம்மா போன்ல சொல்லிருந்தாங்கள்ல... வாழத் தார் கட்டணும்னு...”

மூச்சுக் காற்று வெளியிடை கண்ணம்மா உன் குரல்... பெருத்துதான் விட்டாள். ரங்கா புன்னகைத்துக்கொண்டான்.

குருக்கள் ஆமோதித்து, சந்நிதி ஓரத்திற்குச் சென்று தன் செல்போனைச் சுண்டி கீழே கடைவீதியில் வாழைத் தார் ஆர்டர் கொடுத்தார். சில நிமிடங்களில் சிறுவன் அவன் உயரத்திற்கு வாழைத் தாருடன் ஏறி ஓடி வந்தான். அவர்கள் பதினைந்து நிமிடங்கள் எடுத்துக்கொண்ட தூரத்தைக் கடந்து...

குருக்கள் சுறுசுறுப்பானார்.

ஓரிருவரே சந்நிதியில் இருந்தனர். ரேஷ்மாவையும் ரங்கா வையும் ஒருபுறமாய் நிற்க வைத்து அர்ச்சனை விஷயங்களை விசாரித்தார். “பேரு, கோத்திரம், நட்சத்திரம் சொல்லுங்கோ...”

“ரேஷ்மா... சிவ கோத்திரம்... திருவாதரை...”

“சாருக்கு...”

“இல்ல..., ஃப்ரெண்டு. அர்ச்சனைக்கு பேரு அபி...” குரல்

தீர்க்கமாயிருந்தது.
ரங்கா சற்று பின்தங்கி நின்றுகொண்டான்.

அர்ச்சனையில் மனம் லயிக்கவில்லை. தாயுமானவர் சந்நிதி ஒளியில் அவன் நிழல் உருவம் சிறுத்திருந்தது.

பார்வதி நாயகன், பித்தா! பிறைசூடி! பெருமானே! அவனுக்கு கங்கை உண்டுதானே? அவர் மகனுக்கு வள்ளி தெய்வானை? விநாயகர் பிரும்மச்சாரியா சித்தி புத்தி மனைவியரா?

அர்ச்சனை முடிந்ததும் ரேஷ்மாவும் அவசரமாய் வெளியேறினாள். பிரதட்சணம் போகையில், பிரகார இடைவாசல் வழியே வெளிப்பட்டு அவனை நிறுத்தினார் குருக்கள்.

“வாழத் தார என்ன பண்றதுனே சொல்லலயே... ஆத்துக்கு...”

“இல்ல மாமா, இங்கேயே விநியோகம் பண்ணிடுங்கோ...” ரேஷ்மாவே அதைப் பற்றிக் கேட்கவில்லை என்கையில்... அவனே முடிவெடுத்தான்.

“அப்ப சரி... இந்தாங்கோ... குங்குமப் பிரசாதம். அவாளுக்குக் கொடுக்க மறந்துட்டேன்... சேத்துடுங்கோ...” பையிலிருந்த பணத்தை அவர் தட்டில் போட்டுவிட்டு முன்னால் சென்றிருந்த ரேஷ்மாவை நோக்கி நடக்கத் தொடங்கினான்.

***

புதிதாய் தீற்றிய குங்குமப் பொட்டு நெற்றியுடன் உச்சிப் பிள்ளையாரைச் சுற்றி விட்டுப் வெண்பாறைப் படிகளில் இறங்குகையில் ரேஷ்மா கேட்டாள். “அங்க போய் ஒக்காந்து பேசலாமா?” கம்பித் தடுப்பிற்கு வெளியே சரியும் பாறைகளின் மீதாய் எனக் கைகாட்டினாள். ஏற்கெனவே சில ஜோடிகள் அடுத்த ஜோடிகளிடமிருந்து நிறைய இடம் விட்டுப் பிய்த்து ஒதறிக்கொண்டிருந்த காற்றை எதிர்த்துப் பாறைச் சரிவினில் காற்றுவெளியிடைக் கண்ணம்மா... என முழங்கால்களைக் கட்டிக்கொண்டு அமர்ந்திருந்தனர். ஓரிருவர் பாண்ட் பாக்கெட்டில் கைவிட்டு ஒடிந்து நின்றுகொண்டு கீழே காவிரிக் கரையோர மெயின்கார்ட்கேட் கான்க்ரீட் குப்பை களைப் பார்வையிட்டிருந்தனர். அவ்வப்போது தூரத்தில் கல்லணை தெரிகிறதா என்று கண்களுக்குமேல் குறுக்காய் கைமறித்து வெறித்தனர்.

ரங்காவின் புஜத்தைப் பற்றியவாறு ரேஷ்மா பாறையில் இறங்கி அவர்களுக்கான மர நிழலோரத்திற்குச் சென்றாள்.

“புள்ளையாரப் பாத்துக்கிட்டு ஒரு ஸெல்ஃபி எடுப்பமா?”

அப்பா காலத்தில் காமிராவில் காதலியைப் பல்வேறு கோணங்களில் புகைப்படமெடுப்பது ஒரு காதல் களிப்பாறல். இன்று அலைபேசி ஸெல்ஃபீ...

“அதுக்கு எடம் பாத்தியே... ஆபத்தான வேலை...”

“வாழ்க்கைல ஒரு த்ரில் வேணும்ல...”

“நாம இங்க ஜோடியா இருக்கறதே அது தான...”

அவன் குரல் ‘நாம’விற்குக் கொடுத்த அழுத்தத்தின் உண்மையில் உதட்டை வலித்துக் காட்டினாள். “சீ போடா...”

“கமான்... இந்த வருஷம் அமெரிக்கால சுறாமீன விட ஆபத்தான கில்லர் எது தெரியுமா, ஸெல்ஃபி தான்... சுறாமீன் கொன்னது எட்டுப் பேர், ஆபத்தான எடத்துலேந்து ஸெல்ஃபீ எடுக்கறேன் பேர்வழின்னு செத்தவங்க பன்னெண்டு பேர்...”

“குப்பைத் தகவல் சேக்கறதலாம் இன்னும் விடலயாக்கும்... குவிஸ் ஷோன்னு...”

“மனசுல சேத்துவெச்சுருக்கற குப்பைனாலதான் கத எழுத முடியுது ரேஷ்... குவிஸ் ஷோவ என்னிக்கோ விட்டுட்டேன். ஓல்ட் டைம் ஸேக்... நண்பர்களுக்காக இன்னிக்கி சாயங்காலம் அதுல பேச ஒத்துக்கிட்டேன்...”

“சொன்னியே... அது வேற இருக்குல்ல... என்ன பேசப் போற ரங்கா? ஐ வாண்டு ஸீ திஸ்... நான்லாம் வரலாமா?”

“யாரும் மனசுல குப்ப சேக்காதிங்கன்னு...”

“தில்லுதான்...”

“யாராது இதையெல்லாம் சொல்லணும்ல. படிக்கற வயசுல மனசுல சேர்ற குப்பைகளாலதான் வாழ்க்கைக்கு எதெல்லாம் அவசியம்னே தெரியாமப் போய்டுது, இல்லையா? நமக்கு இப்ப அனுபவமா புரியாததா...”

ரேஷ்மாவிற்கு நன்றாகவே புரிந்தது.

தகவல் குப்பைகளைத் தேடியலையாத எனக்குமே தெரியலை ரங்கா. நீதான் வேண்டும் என்று அன்றே எனக்கும் சொல்லிக்கொள்ளத் தெரியவில்லை. என்னை வேண்டாம்னு சொல்லிட்டேன்னு உன்மேல கோபமாய் என்மேல வெறுப்பாய்... வேதனை, குழப்பங்களிலிருந்தெல்லாம் வெளிவருவதற்குள், என்னுள் இருந்து என் அனிக்குட்டி வெளிவந்து விட்டான்...

“ஸெல்ஃபியை விட கில்லர் எது தெரியுமா ரங்கா, காதல் தான்...”

சமுதாயம் வழங்கிய உறவுகளைக்கூட விட்டு வெளிவந்து விடலாம். காதலை அது இன்று இல்புறக் காதல் என்று சமுதாயம் ஏற்காத உறவென்றாலும் விட்டுவிட முடியவில்லை. ரேஷ்மா பெருமூச்சு விட்டாள். அபியையும் காதலித்துத் தானே மணந்தேன். ரங்கா கைவிட்டதினால் கோபத்தில், வெறுப்பில், சுய இரக்கத்தில் rebound love? இருந்தால் என்ன, அந்தக் காதல் இன்னும் அழியவில்லையே. உறுதியாகத் தெரிகிறது.

“காதல் எப்பவும் கொல்வதில்லை ரேஷ். காதலர்கள்தான் அவசியங்களால ஒருத்தர ஒருத்தர் தமக்குள் கொன்னுக்கிறாங்க.”

ரேஷ்மா அமைதியானாள். பாறையின் துவாரங்களில் திசைகெட்டு சுறுசுறுப்பாய் ஏதோ இலக்கை நோக்கி ஓடிக் கொண்டிருந்த பிள்ளையார் எறும்புகளைக் கவனித்திருந்தாள்.

“ஒழுக்கங்கறது ஒருவகை அவசியம் தானே, வாழ்க்கைல...” வினாவாக இல்லாமல் இதுவும் வாழ்க்கைக்கு வேண்டித்தானே இருக்கு என்கிற சமாதானம் போலச் சன்னமாய் மன்னித்துக் கொள் எனும் குரலில் வினவினாள். காத்திருந்த சண்டைக்கோழி போலானான் ரங்கா.

“Morals அவற்றைக் கடைப்பிடிப்போரின் மனங்களைச் சார்ந்தது என்பார் தத்துவவாதி நீச்ச. ஒழுக்கத்திற்கான சட்ட திட்டங்களைப் பின்பற்றுவதால் ஒருவன் உன்னதமானவன் என்றாவதில்லை. உன்னதமானவன் என்பதால் அவனிடமிருந்து மாரல்ஸ் - ஒழுக்க விழுமியங்கள் - புறப்படுகின்றன.”

“குழப்பாத. காதல்னா எப்டி வேணா இருக்கலாங்கறயா?”

“இல்லை... நமக்குப் பிடிச்சாமாதிரி இருக்கலாங்கறேன்... அதை தப்பு

ரைட்டுன்னு போட்டுக் கொழப்பாதங்கறேன்...”

“பிடிச்சுருக்கறதுனால என்ன வேணா செய்யலாங்கறயா?”

“குற்றங்களை இல்லை...’

“இது குற்றமில்லையா?”

“காதலிப்பதா, எதன்படி? யார் சொன்னதின்படி?”

“சமுதாயத்தின் சட்டங்கள்... bigamy is illegal... அட்லீஸ்ட் இந்தியால தப்பு...”

“நாம கலியாணம் செஞ்சுக்கப் போறோமா? காதலிக்கிறோம்... அதன் இயற்கையான வெளிப்பாடுகளைப் பகிர்கிறோம்... எந்தச் சட்டத்தில் இது குற்றம்?”

“ஒனக்கு வசதியா யோசிக்கற...”

“அஃப்கோர்ஸ். நமக்கு வசதியா. காதலர்களுக்கு வசதியா. ஆனா எந்தச் சட்டத்தையும் மீறலை... ஸீ தட்... குற்றம், தப்பு ரைட்டுனுலாம் கொழப்பிக்காத...”

“பிடிச்சவங்களுக்குச் செய்யும் துரோகம் இல்லையா?”

“நாம காதலிக்கறதால அவங்களைப் பிடிக்கலைன்னு சொல்லிக்கலயே. நான் வேதாவை வெறுக்கலை. நீ சொல்றதிலேந்து அபியை உனக்குப் பிடிச்சிருக்கு. அதில் எனக்கு எந்த உவர்ப்பும் இல்லை.”

“கமான்... தப்புனு இல்லை... is this practical?...”

“அப்டி வா... தப்பு ரைட்டுன்னு பேசாத... ப்ராக்டிகலான்னு கேளு, யோசிப்போம்... எனக்குமே புரியலை...”

அமர்ந்திருந்த இடத்தைச் சுற்றி நோட்டம் விட்டான். வெயில் ஏறத்தொடங்கியது மலைப் பாறையின் பளபளப்பில் தெரிந்தது. சற்று நேரத்தில் அதன் சூட்டிலும் உணர முடியும்.

“ஒன்னோட சல்லாபிச்சுட்டு அபிட்ட போய் நாளைக்கு... எப்படி அவன் கண்ணைப் பார்ப்பேன் ரங்கா...”

இது புதுக் கோணம். சல்லாபம் வரை சென்றுவிட்டாளா. மனத்திலா, பேச்சில் மட்டுமா...

“உன்னிடம் நான் கொள்வதை வேதாவிடம் பகிர்ந்து கொண்டு விடுவேன் ரேஷ்...”

உறவில் பொய்மை பழகத்தொடங்குவதால் வளர்வது அவ்வுறவென்றால் தேய்வது உறவைப் பேணும் ஆளுமை களன்றோ. தடித்து இறுகிய உறவின் இருமுனைகளில் காலப் போக்கில் எஞ்சுவது இரு பொய்க்கூடுகள் அன்றோ. ஊர் திரும்பியதும் ஒருவாறு வேதாவிடம் சொல்லிவிடுவது என்று நினைத்தபடி பேச்சைத் தொடர்ந்தான்.

“...நமக்குள் ஒளிவுமறைவுகள் இல்லேன்னா, எனக்கு வேதாட்டயும் உனக்கு அபி கிட்டயும் அப்டித்தானே இருக்கணும். அவங்க நம் மனசோட அந்த உண்மை நிலைக்கு உகந்த வங்களே. அவங்களையும் இதே அளவுக்குக் காதலிக்கிறோங்கறது உண்மைனா, அவங்க கிட்ட நம்ம இந்த உண்மையையும் சொல்லிடுறதே முறை.”

“காறித் துப்புவாங்க...”

“வாங்கிக்க வேண்டியதுதான்... லுக்... நாம காதலிக்கறோம், அது உண்மைதானே... அதைச் சொல்லாமல் விடுவதால் மட்டும் இல்லைனு ஆயிடுமா?”

“அவங்ககிட்ட சொல்லாம விட்டா...”

“அது அவர்களிடமான நம் காதலைப் பொய்யாக்கிடுமே... காதலில் உண்மையா இருக்கணுங்கற. அது நம்ம காதலுக்கு மட்டுந்தானா... அவங்களக் காதலிக்கறோம்னா, அங்கயும் உண்மையா இருந்துதானே ஆகணும்...”

“But they’ll get hurt... துடிச்சுருவாங்க... Abi can’t take it...”

நாம காதலர்கள். ஆனா ஒருத்தொருக்கொருத்தர் இன்னொருத்தங்கள அதாவது நீ உன் கணவன் எனும் வேறு ஆண்மகனையும் நான் மனைவி எனும் வேறு பெண்ணையும் இப்போது காதலிக்கறதாச் சொல்லிக்கறோமே. அதைக் கேட்டு நாம ரெண்டு பேரும் துடிக்கலையே. அந்த இன்னொரு காதலை, உறவை, அதற்கான உணர்வு மரியாதையோடு ஏற்றுக்கொண்டு விட்டோமே. எப்படிச் செய்ய முடிந்தது? அவங்க கணவனாவும் மனைவியாவும் சமுதாயப் பார்வையில் அந்தஸ்து பெற்றவர் களாகிவிட்டனர். அதனால் பரவாயில்லை. அப்படித்தானே? காதலைப் பரிமாறிக்க, இப்ப நாம இருக்கறா மாதிரி, வெறும் காதலர்களா மட்டும் இருந்துடக் கூடாது.

அப்ப மட்டும் தப்பாயிடும், அவங்க தவிச்சுருவாங்க. ப்ளா ப்ளா...

ரங்காவுக்கு தன் எரிச்சல் ரேஷ்மாவின் மேல் இல்லை என்பதால் மனத்தில் எழுந்ததை வெளியிட்டுச் சண்டை பிடிக்க வில்லை. நேரிடையாக அவள் கேள்விக்குப் பதிலளித்தான்.

“அவங்க எப்டி எடுத்துப்பாங்கங்கறது அவங்க மனசோட பக்குவத்தைப் பொறுத்தது ரேஷ். அவங்களோட உணர்ச்சிகளை அவங்க சந்திச்சே ஆகணும். உன்னை இன்னும் காதலிக்கறேங்கறத நான் எதிர்கொள்றேனே. வேதாவின் கணவனாய்.”

“நம்மள விட்டு அவங்க போய்ட்டா?”

“அவங்க உணர்ச்சிகளோட விளைவுகளை நாம சந்திச்சு தானே ஆகணும். அதுக்கு அவங்க உகந்தவங்களே.”

“Abi will get hurt. ஆனா வெளில ஒண்ணுமே சொல்ல மாட்டார். But he will be shattered. நல்லாத் தெரியும் எனக்கு. ஒனக்குப் பிடிச்சத செய்மாம்பார். ஆனா நிச்சயமா காயப்பட்ருவார்...”

“என்ன நினைக்கற... டேக் இட் ஈஸி பாலிசின்னு பாட்டா பாடிப்பாங்க. ஆனா பாரு, ஹர்ட் ஆறதும் உறவில் ஒரு பரிமாணம்தான். மகிழ்ச்சி மட்டுமே தருவதற்கான மனித உறவு என்று ஒன்றுமில்லை. ஆணை அது சக உயர பெண் ரப்பர் பொம்மையிடம் கொண்டுபோய் நிறுத்திவிடும். ஒகே, கிடத்திவிடும்...”

“ஒகே ஒகே புரியுது... லீவ் இட்... இடியட்... ஜோக் வேணாம்... எனக்கு அழுகையா வருது.”

“உறவில் உண்மை மட்டுமே உறவைப் பேணும் வழி ரேஷ். உண்மை எனும் உரமே உறவெனும் தாவரத்தின் வளர்ச்சி. மகிழ்ச்சி, துக்கம், துயரம், ஆத்திரம், ஆங்காரம், பொறாமை, போட்டி அனைத்துமே அந்த உண்மை உரத்தின் பயன்கனிகள். உறவின் பல்வகை வெளிப்பாடுகள். அனைத்தும் காதலின் கனிரசமே...”

“இதுதான் எழுத்தாளங்ககிட்ட ப்ரச்சனை. எதச் சொல்லணும்னாலும் நிறைய வார்த்தைகள். சிம்பிளா சொல்லேண்டா...”

இதே இடைவெட்டி அஸ்திரத்தைத்தான் ஒருமுறை வேதா உபயோகித்தாள். ரங்காவுக்குப் பொறி தட்டியது.

தான் தோற்றுவிட்டோம் என்கையில் வாதத்தைத் திசை திருப்பப் பிரதிவாதியை மட்டம் தட்டுவது. அடிவெட்டில் ஆளுமையின் அளவைக் குறைத்துவிட்டால் அது எடுத்துக்கூறும் வாதங்களும் குறையானவையே என்றாகிவிடுமாம். பெண்களின் லாஜிக்கே அலாதி.

“ஐ லவ் யூ. இதை ரெண்டு பெண்கள்ட்ட ஒரு ஆண் உண்மையா சொல்லிடறது உலகத்துல அத்தன பெரிய குத்தமா?”

“இன்னொருத்தரோட கமிட் ஆனவ கிட்டல்ல சொல்ற...”

“பிடிச்சிருக்குன்னு தானே சொல்றேன்... இன்னொருத்தனப் பிடிச்சிக்காதன்னா சொல்றேன்...”

பதிலாய் அவள் போன் ஒலித்தது. பார்த்து, உடனே எடுத்தாள்.

“சொல்லுங்க... இல்லங்க... கோயிலுக்கு... இல்லங்க, நான் மட்டுந்தான், ஆமா தனியாத்தான்... அம்மா சொல்றா மாதிரி இன்னிக்கி எனக்கு ஆன்மீகப் பயணம்...” சங்கடமின்றிச் சிரித்தாள். “...குட்டிய மத்தியானம் நீங்களே கூட்டிட்டு வந்துருங்க... இல்லங்க, அதுக்கு லீவு கொடுத்திட்டேன், ஊருக்குப் போயிருக்கும்... ஆமா, நான் எங்க அம்மா ஊர்ல சுத்தினா அது அவங்க அம்மா ஊருக்குப் போயிர்ச்சி... சமைச்சு வெச்சுருக்குங்க... இல்லாட்டி, ஒரு நாளைக்கி நீங்கதான் செய்ங்களேன்... பெர்ய ஆபீஸ், நீங்கதானே பாஸ் டியர்... குழந்தைக்குப் பசி, அச்சச்சோ நம்பிட்டேன், ஏன் ஒங்களுக்குப் பசிக்கலையாக்கும்... தெரியாதா என்ன செய்வீங்கன்னு, ஓட்லுக்குக் கூட்டிப் போவீங்க... சிரிக்கா தீங்க, வீட்டுக்கு வந்ததும் சொல்லுங்க, எது எங்கருக்குனு சொல்றேன்... பெர்ரிய bonding moment, அப்பாவும் பையனுமா என்னவோ செய்ங்க...”

“எதுனாச்சும் சாப்ட போலாமா... பசிக்குது...” போனை அணைத்துவிட்டு ரங்காவிடம் கேட்டாள்.

***

பேசித் தீர்மானித்து ஸ்ரீரங்கத்திலேயே லஞ்ச்சை முடித்துக் கொள்ளலாம் என்றானதால், அம்மா மண்டபம் ரோட்டில் புதிதாய்த் தொடங்கப்பட்டிருந்த உணவகத்தினுள் நுழைந்தார்கள்.

கூட்டமில்லாத அறையில் ஓரமாய் எதிரெதிரே அமர்ந்து மினி-லஞ்ச்

உண்கையில் ரேஷ்மா கேட்டாள் "இன்னமும் ப்ளீட்டட் பாண்ட்ஸ் தானா?"

"உனக்குப் பிடிச்ச ஸ்டைல் இல்லையோ..."

"இருபது வருஷத்துக்கு முன்னால பா... அமெரிக்கா போயும் பழசக் களைய மனசில்லையோ?"

"உன்னைப் போன்றவளைக் கண்டதினால் எழும் அனைத்தையும் ப்ளீட் இல்லாத பேண்டில் மறைப்பது கடினம்..."

"Happy to see me, is it?..." கடித்த பற்களினிடையே பேசினாள். "தைர்யம்தான்... இதயேதான் கண்ணாலம் கட்றதுக்கு வேதாகிட்டயும் சொன்னியாக்கும்?"

"எப்டி மாத்திச் சொல்றது? கண்டு களிப்புறுவதும் உள்ளிருந்து ஓங்கி எழுவதும்... ஒன்றுதானே..."

"ச்சீய்... இடியட்..." கன்னக் கதுப்புகளில் ஏறிய செம்மை அதட்டியது.

"மனத்துள் எழும் காதலைச் சொன்னேன் ரேஷ் நீ ஏதோ..."

"போதுமே... சமாளிக்காத... ஃப்ராடுறா நீ..."

காலால் டேபிள் அடியில் அவன் கணுக்காலில் எத்தினாள்.

"இந்தப் பழக்கம் இன்னும் போலயா ஒனக்கு. அபியும் வாங்கிருப்பாருன்னு சொல்லு."

"சே, அவர ஒதச்சதேயில்லை. ஒன்னப் பாத்தாத்தான்..."

"ரேஷ்மா Rash-மா வாற..."

"என்னைக் கெட்ட்ட்ட பொம்பளையா ஆக்கறதே நீ தான..." குழைந்தவாறு ஸ்பூனை பிளேட்டில் போட்டுவிட்டுக் கையிரண்டையும் அவன் முகத்திற்கு இருபுறமும் கொண்டு வந்தவள் கன்னங்கள் அருகே அவற்றைப் பிடித்துவிட்டதாய்ப் பாவித்து விரல்களை மடக்கி உலுக்கினாள்.

"ஸ்... வலிக்கும்..." ரங்கா கன்னங்களைத் தன் கைகளால் மூடிக் கொண்டான்.

சிரித்துக்கொண்டார்கள். அடுத்து வந்த சாதத்தை மறுத்தார்கள்.

“கிளம்பலாமா?” அவள் குரலின் அவசரம் நான் ஊகிப்பதற்கா... ரங்கா தலையாட்டியவாறு எழுந்து பில் கொடுக்கச் சென்றான்.

***

சித்திரை வீதியில் முறுக்கு மாமி வீட்டு மாடி அறையில் கதவைத் திறந்ததும் குப்பென மல்லிகை மணம்.

கோடியில் கிருஷ்ணர் ராதை படத்திற்குக் கீழே மாமி காலையில் வைத்திருந்த மல்லிகைச் சரம் மலர்ந்திருந்தது.

ரேஷ்மாவை நுழைய விட்டுக் கதவைச் சாத்தினான்.

ஐ-போன் ஒலித்தது.

ஷிட். தெரியாத எண். ‘யெஸ்... ஹாய், கிகி...’

வினாடி வினா விழாவிற்கு அழைப்பதற்காக நண்பன்.

“...இல்ல இல்ல, ஐம் ஃபைன். நேத்திக்கு ராத்திரி... ஆமா, பல்லவன் தான்... இங்க தான் சித்திர வீதில. நோ நோ, ஒண்ணும் வேணாம்... நம்ம ஊரு தெரியாதா... சாயங்காலந்தானே... ஆறு மணி, ஓகே... ஆமா, ரம்பா ஊர்வசி தியேட்டர் இருக்கும்... ஓ, மூடிட்டங்களா... சரி, தெரியும். வந்துடறேன்... வேணாம், நானே வந்துடுவேன்... ஃப்ரெண்ஸ்குள்ள என்னது இதெல்லாம் ஃபார்மாலிட்டி... நோ இஷ்யூஸ்... பை...”

அவன் போனை வைப்பதற்குக் காத்திருந்தவள் போல, அருகில் வந்து, தழுவிக்கொண்டாள் ரேஷ்மா.

எதிர்பார்த்ததை அக்கணத்தில் எதிர்பார்க்கவில்லை என்பதால் அடுத்த ஒருகணம் வாளா இருந்தான்.

பிறகு ரங்காவின் கை தயங்கவில்லை; இடை பற்றி அவனுடன் சேர்த்துக்கொண்டது. ஜார்ஜெட் ஸ்பரிசம் புதிதாய் வழுக்கியது. தாயின் சேலையல்லவா... சேயைக் காக்கின்றதோ.

அணைப்பை இறுக்கினான்.

சர்வாங்க ஆலிங்கனத்திற்கும் சங்கோஜமின்றி அணைப்பதற்கும் வேதவல்லியிடமே அறிமுகமாயிருந்தான். திருமணத்திற்குப் பின்னர் அமெரிக்க அடுக்ககத்தின் கார்பெட் தரையில் முதல் பிடியிலேயே

வேதாவின் இடையும் பின்புறமும் கைகளில் உறுதியான பிடிமானம் கொடுத்திருந்தது.

ரேஷ்மாவின் இடை சுற்றி முதுகுப்புறமாய் கைகளை ஓட்டி... இறங்குவதற்குக் கைகள் தயார்... மனம் தயங்கியது.

இம்முறை மிஸிஸிப்பி எண்ணவில்லை. அவன் எண்ணத்திலும் இல்லை. அவள் கழுத்தின் மீதாய்க் குனிந்திருந்தவன் கண்களில் அவள் பின்னெழில்... ரேஷ்மாவின் அங்கங்களை கவனித்ததே நண்பர்கள் சொன்ன பிறகுதானே. 'செமுத்திக் கட்டையாப் புடிச்சுருக்கே போ... கொண்டாட்டம்தான்...' அவள் பின்னழகைப் பற்றிய சந்தை இலக்கியக் கொச்சை வழக்கொன்றும் வழங்கப்பட்டது. மனத்தினுள் அன்றே கூனியுள்ளான். எத்தனை இழிவான மனிதர்கள்...

இன்றும் கண்களை மூடிக்கொண்டான்.

வெட்கத்தை விட்டு வேதவல்லியின் நாணத்தைப் பல முறை களைந்ததில் தானே ஊடகத்தில் தெரிந்த பெண் தேகத்தின் நிஜத்தில் புரிபடாத பட்டொளிப் பிரதேசங்களை மனத்தாலும் அறிந்துகொண்டவனான்.

கண்களை மூடியவாறு ரேஷ்மாவின் கழுத்துக் குழிவில் குனிந்தவனின் கன்னத்தில் சிறிதாக முத்தமிட்டாள். 'இது நீ இன்று யாரோ, அதற்காக...' காதில் ரகசியம் பேசினாள்.

முகத்தை அவள் கழுத்தில் வழித்துத் திருப்பியவன் விழி திறக்க அவள் காதோரம் நரை... முடிச் சாயம் தீண்டாத நரை...

நெருக்கம் மேலும் இடமளிக்கும் முன்னர் கதவு தட்டப்பட்டது.

விலகி எதிரெதிரில் அமர்ந்து கொண்டார்கள்.

முறுக்கு மாமி கையில் தட்டில் வைத்த இரண்டு டபரா டம்ளரில் மணக்கும் டிகாக்ஷன் காபியுடன் நுழைந்தாள். மடிசாரில் தலைக் கொப்பி வைத்த பம்பரம் போல் இருந்தாள்.

ரேஷ்மா புடவை மடிப்புகளை அமர்ந்தவாறு சரிசெய்து கொண்டிருந்தாள். அவளுக்கு லேசாய் வியர்த்தது. அறையின் ஏஸி ஓடவில்லையோ. காலேஜில் காதலிக்கையிலும் வீட்டில் தான் சந்தித்துக்கொள்வார்கள். பூஜை வேளையில் பெண் கரடிகள் வந்துபோவது அன்றிலிருந்தே அவளுக்கும் பழகியதுதான்.

மாமி மெத்தையில் தட்டை வைத்தாள். “சாப்டியாப்பா… இல்லாட்டி… ரெண்டு பேருக்கு இருக்கு…”

“ஆச்சு மாமி… தேங்ஸ்… எதுக்கு சிரமம்… ரெண்டயும் நீங்க சாப்டுருங்கோ…” ரங்கா தோன்றியதைப் பேசினான்.

ரேஷ்மா புன்னகைத்தாள். திணறுகிறான். இத்தனை வயதிலும் பயப்படுகிறான். பேச்சுதான் பெரிசா, தொடைநடுங்கி…

“…நானே கீழே கொண்டு வந்து கொடுக்கறேன் மாமி…” காபி டம்ளர்களைப் பற்றி விலகும் மாமியிடம் குறிப்பிட்டான். “…சாய்ங்காலம் ஒண்ணும் வேணாம். வெளில…” போய்விட்டாள்.

மாமி போகும்வரை ரேஷ்மா அவள் பாணியில் காபி அருந்திக் கொண்டிருந்தாள். கோப்பையை வாயுள் விட்டு எச்சில் செய்து மடக்குகளின் இடைவெளியில் உதடுகளின் ஓரங்களில் காபிக்கோடுகள் ஏற்பட்டிருப்பதைக் கவனியாது குழந்தையின் பொருட்டின்மையுடன் காபி அருந்துவது.

“I still like it…” அவள் குடிக்கும் பாணியை அன்று போலவே இன்றும் ரசித்தான். சிரித்தாள்.

சின்னச் சின்னதா இப்டி எத்தனைய ஞாபகம் வெச்சுருக் கான் இவன்…

உதட்டோரம் காபி. ரங்கா விரலெடுத்துச் சுட்டியதும் துடைத்துக் கொண்டாள். சே… ஏதோ செய்யப்போறான்னு நெனச்சா, விரலும் நடுங்குது… சின்னதா கன்னத்த கிள்ளி, வருடி, தட்டி… மாட்டானே…

எதிரெதிரே அமர்ந்து ஸ்ரீரங்கம் பற்றிப் பேசத்தொடங்கி னார்கள். பேச்சு போர்வையே.

ஐந்து நிமிடத்தில் எழுந்து அவள் அருகில் மண்டியிட்டு முகத்தை அவன் பக்கமாய் இழுத்து முத்தமிட்டான்.

அந்த உதடுகளில்…

முத்தமிடுகையில் முகத்தை நேரடியாக முகத்தோடு சேர்க்க விழையக்கூடாது. உதடுகளுக்கு முன்னால் மூக்குகள் இடித்து… மடங்கினாலும், மூச்சுக்காற்று உதடுகளின் மீதாய்க் குறுகுறுத்துத் திணறும். அணுகுகையில் முகத்தைப் பக்கவாட்டில் திருப்பிக் கொள்ளலாம். ஆனால் கழுத்து சுளுக்கி விடலாம். உதடுகளை

ஈரப்படுத்திக் கொள்வது நல்லது. சுவைப்பது தோலியை அல்ல, பழத்தை. கண்களை மூடிக்கொள்வது மூளைக்கு மற்ற உணர்வுகளின் செய்திகளைப் பகுத்தாயும் வேலைப் பளுவைக் குறைத்து சுவையுணர்வின் மாட்சியை மேம்படுத்திச் சொல் வதற்கு.

இதழோரத்தில் தொடங்குவது இருவருக்கும் நலம். மூக்குகள் அருகருகே எதிர்முகங்களில் அமுங்காமல் பொருந்தியிருக்க, ஒருவர் கவ்வ ஒருவர் கனிய, அழுந்திய உதடுகளின் இடைவெளியைக் கவ்வியது தன் நாவினால் பிளந்து ஓட்டிச் சுவைக்கையில் கனிந்து பிளந்த உதடுகள் அந்நாவை உள்வாங்கிச் சுவைக்க... நாவின் சுவை உயிரின் ஆதார உடற்பகுதியைச் சீண்டிச் சிலிர்க்க...
வாத்ஸ்யாயனர் காலத்திற்கு முன்பிருந்தே காதலர்கள் உண்டன்றோ. இவையனைத்துமே அனுபவ பாலபாடம்.

அன்று அவ்வறையில் காதலர்கள் இந்நிலையை ஓரிரு நொடிகளில் எட்டியிருந்தனர்.

நீடிக்கவில்லை.

எதுவெதுவோ அவனிடம் பெற்றிடவேண்டும் என்றிருந்த ரேஷ்மாவிற்கு தனக்கு என்ன வேண்டும் என்பது புரியவில்லை என்பதே, அத்தருணத்தில் அவளுக்கு வேண்டியது இதுவே என்று ரங்கா கருதி வழங்கியதைப் பெறுகையிலேயே உணர முடிந்தது.

கையெடுத்து அவன் கன்னங்களைப் பிடித்து முகத்தை விலக்கிவிட்டாள்.

“ஏய்... என்ன செய்ற ரங்கா...” குரல் கம்மியிருந்தது. கண்கள் சிறுத்திருந்தன. அவன் நாக்கின் ஈரம் உதட்டோரம் எரிந்தது.

“ட்ரிக் கொஸ்டினா? கிஸ்ஸிங்...” இதயம் ஏறி இதழ்கள் வழியே இடம் மாறுகையில் இது என்ன புதிர் வினா, ரங்காவுக்குப் புரியவில்லை.

“அதில்ல... எங்க கொடுக்கற... on my lips?” ரேஷ்மா கனவில் பேசும் நிலையை எட்டியிருப்பதாய் உணர்ந்தாள்.

“On your lips... தெரியுமே...”

“என்ன சொல்ற... எங்க கொடுக்கணும்னு இருக்குல்ல... Is it proper?” அவளுக்குமே புரியவில்லை, என்ன சொல்கிறோம் என்று. நாம்தானே முத்தமிட்டோம் அவனை. இப்போது கூட கன்னத்தை வருடுவானா என்று... இல்லை, சரியாகவே சொல் கிறாய் என்றது உள்ளுணர்வு.

“ஏன்... எங்க கொடுத்தா என்ன, Does it matter?”

மௌனமானாள். நிஜமாகவே குழம்பிப் போயிருந்தாள் என்பது முகத்தில் திகில் ஏறிக் கருத்ததில் அவனுக்கும் தெரிந்தது. அயர்ந்து தன் இருக்கையில் சாய்ந்து கொண்டாள்.

புரியாத ரங்கா எழுந்து எதிரே தன் இருக்கையை அவளருகில் இழுத்துப்போட்டு அமர்ந்துகொண்டான்.

அழத் தொடங்கினாள். காதல் சங்கேதங்கள் களைந்து அவனுக்குத் தெரியுமாறு சிறு கேவலுடன் அழத் தொடங்கினாள்.

பேசாமல் இருந்தான். மனத்தினுள் திகிலாய் இருந்தது. தப்பு செய்து விட்டோமோ... வரம்பு மீறி... என்ன இவள், இவள் தானே என்னைச் சற்று முன்னால் முத்தமிட்டாள்... அதனால்தானே நான்... மறந்து விட்டாளா... நரைக்கலாம் மறக்குமா?

சில நொடிகள் விட்டு ரங்கா அவள் தொடையை வருடினான். “ரேஷ்... என்னாச்சுடா... Did I... நான் ஏதும்...”

“நோ நோ...” சைகையால் மறுத்தாள். பேசாதே என்று விரலை வாயில் வைத்துக் காட்டினாள். கண்களை மூடியிருந்தாள்.

காத்திருந்தான்.

ஐந்து நிமிடங்களில் சுதாரித்துக் கொண்டாள். இவன் என்ன செய்வான், பாவம். எனக்குத்தான்... காதலித்துவிட்டேன். இரண்டாவது முறையும். காதலும் துரோகமும் ஒன்றுதான். இவன் வராமலயே இருந்திருக்கலாம். சே... பாவம். நான் தானே... புன்னகைத்தாள். மணிக்கட்டை ரங்காவின் பார்வையில் விரித்தாள். மணி பார்த்தாள். எழுந்தாள்.
“கௌம்பறேன்டா... ஐல் கால் யூ ஸூன்...”

“ஷுர்... ஒகே...” குழப்பம் தீரவில்லை ரங்காவுக்கு. ஆனாலும் புன்னகைத்துச் சகஜமாய் மீண்டும் அழைக்கிறேன் என்பவளைத் தடுக்க மனமில்லை.
வாசல் சென்று “போய்டுவியா, இல்லாட்டி வரட்டுமா... ஆல் ரைட்?” கேட்டு அவள் மறுத்து காரை செலுத்தும் வரை நின்று வழியனுப்பிப் படியேறியவன் முன்னால் முறுக்கு மாமி.

ஷிட், காபி டம்ப்ளர்களை அறையிலேயே மறந்து விட்டேன்.

“இதோ கொண்டுவர்றேன் மாமி…”

“இருக்கடும் பா, நானே எடுத்துக்கறேன்… ரேஷ்மா தான அது… நானே பாத்து வருஷமாச்சு… பாக்க வந்தாளாக்கம்… தெரியுமோ நீ வந்துருக்கேன்னு… பெங்களூர்லனா இருந்தா… அம்மாவாத்துக்கு வந்துருக்காளாக்கம்… புள்ளையாண்டிருக்காளா… வயத்தப் பாத்தா சந்தேகமாருந்துது…” அவளது முக்கிய மான ஜோலியை கவனிக்கத் தொடங்கியிருந்தவளுக்கு காபி கோப்பைகள் எங்கிருந்தால் என்ன…

ஒற்றைச் சொற்களாய் பதிலளித்துக்கொண்டிருந்த ரங்காவுக்கு ஆத்திரம் அம்மாவின் மீது பொங்கியது. வழக்கம் போல வேலையைக் காட்டிவிட்டாள். அவள்தானே இங்கே தங்க வைத்து இந்த அக்கப்போரிடம் மாட்டிவிட்டவள்… இதன் அடுத்த கட்டம் நாளை காலை என்பதை ஊகிக்கும் மனநிலையில் அவன் இல்லை. இருந்திருந்தால் ஆத்திரத்தில் நிறைய அதற்கென மிச்சம் வைத்திருப்பான்.

***

“என்னம்மா, மொகமெல்லா… செவந்திருக்கு? வெய்யில்ல சுத்தினியா?”

அம்மாவின் கரிசனத்தைப் புறக்கணித்து “தூக்கம் வருதுமா…” என்று அறைக்குள் சென்று கதவை மூடிவிட்டுக் கட்டிலில் விழுந்தாள் ரேஷ்மா. ரங்காவின் அறையிலிருந்து கிளம்பி வரும்வரையில் மிக ஜாக்கிரதையாக மனத்திலிருந்து விலக்கிய முத்தம் இப்போது முழுவதும் ஆக்கிரமித்தது. எரிந்து கொண்டிருந்த உதடுகளை வருடினாள். அவனுடைய இதழ்களின் மென்மை அவளினுள். அவனுடைய மூச்சின் வெப்பமும், நாவின் ஈரமும் நொடியில் ஏற்படுத்திய பூகம்பம் இதயத்தில் இன்னமும் படபடத்தது. பதினைந்து நிமிடங்களாக மூச்சே விடவில்லையோ இவள்? மூச்சு ஏங்கியது. என்ன செய்துவிட்டாய் ரங்கா? வாயில் முத்தமிட்டால் என்ன அர்த்தம் என்று தெரியாதா? அமெரிக்கா விலும் அப்படித்தானே? எங்க கொடுத்தா என்னங்கறயே… அபி மாதிரியே…

அடிவயிற்றில் கிளர்ச்சியை எப்படி அடக்குவது? உனக்கும் இப்படித்தான் இருக்கிறதா? ஜன்னல் வெளிச்சம் கூச, தலையணையைக் கண்களுக்கு மேல் அழுத்திக் கொண்டாள். இருளில் ரங்காவின் முகம் மிக அருகே, கண்கள் மூடி. அவன் மூச்சின் வாசம் நினைவில் பரவ

முனகியவாறு குப்புறத் திரும்பினாள். அவளறியாமல் இடுப்பு படுக்கையினுள் அமிழ்ந்து… கடவுளே.

மூச்சை நான்கைந்து முறை இழுத்துவிட்டாள். பதற்றமும் படபடப்பும் குறைய உடல் தளர்ந்தது. நொடி முத்தம் இப்படியும் புரட்டிப்போட முடியுமா? முத்தமே இப்படியென்றால்? நீ என்ன என்னை அடக்குவது… தறிகெட்டு ஓடியது மனம்.

முத்தம் புதிதல்ல. அதுவும் ரங்காவுடன். வாழ்க்கையின் முதல் காதல் முத்தம் ரங்காவுக்கே. அவன் தன்னைப்பற்றி எழுதிய வரிகளைப் படித்ததால் மனத்தில் தோன்றிய உணர்ச்சி வேகத்தில், அவனைப் பார்த்தவுடன் முதலில் அறைந்துவிட்டு - எதற்காக அறைந்தாள் என்பது இன்றும் புரியவில்லை - கன்னத்தில் முத்தமிட அவள் முனைய அவன் முகத்தை நகர்த்த உதட்டோரத்தில் இவள் உதடு பதிக்க அவனும் அதே கணம் மெலிதாய் முத்தமிட… அதை இவள் அன்றிரவு தோழியிடம் பகிர்ந்தபோது “முத்தங் கூட சரியா கொடுக்கத் தெரியாத பேக்குடீ உங்காளு. கொழந்தைக்கும் காதலிக்கும் வித்தியாசம் தெரில போல. அப்படியே உதட்டக் கவ்வி…” கிண்டல் செய்தாள். பிறகு சிலமுறை நித்யகல்யாணிப் படுகையில் தனிமையில் முத்தமிட் டிருக்கிறார்கள். எதுவுமே தோழி சொன்ன வகை இல்லை, அதைப்பற்றி இருவரும் பேசிக்கொண்டதும் இல்லை. வெட்கமா தயக்கமா தெரியவில்லை. இப்போது நன்றாகக் கற்றுக் கொண்டு விட்டான் - ஒரு நொடியில் குலைத்துவிட்டானே. அபியைப் போலவே.

அபியின் முதல் முத்தத்தின் போதும் அழுதாள். காதலிப்பதாய் அவர் சொன்ன பின்பு தன் பெற்றோரிடம் அறிமுகம் செய்துவிட்டு பெங்களூரில் இவள் தனித்திருந்த அபார்ட்மெண்டிற்கு கொண்டுபோய் விட்ட அன்று. முத்தத்தோடு முடியவில்லை அன்று கதை. இன்றும் உதட்டில் அபி முத்தமிட்டால் அது எங்கு போய் முடியும் என்பது இருவருக்கும் தெரியும்.

ரங்கா பயந்துவிட்டான். கோபித்துக்கொண்டு விட்டாளென்று. படட்டுமே. என்னை அழவெச்சிட்டு ஓடினான்ல. ஆழத்தில் ஒரு கோபக் கீற்று. நோ… சொல்லக்கூடாது. அவன் நெனச்சத செஞ்சிட்டில்ல இருக்கான். அவனிடம் சொல்ல வேண்டும் கோபமில்லை என்று. போனை எடுத்தாள். சே… படுக்கையறையில் சிக்னல் கெடைக்காது. வெளியே போவணும். இப்போதே சென்றால் அம்மா குடைவாள். முதலில் அவனிடம் சொல்ல வேண்டியதை யோசி…

நினைத்துக்கொண்டிருக்கையிலே தூங்கிப்போனாள்.

# 11

## ஸ்ரீரங்கம். இன்று. மாலை, இரவு.

ஐந்து மணிக்கெல்லாம் ரங்கா வினாடி வினா நிகழ்ச்சி நடக்கும் இடத்தில் இருந்தான்.

கிகி நரைத்த கிருதாவுடன், தடிமன் ஏறிய கரும் பட்டை பிரேம் கண்ணாடியில் (நெற்றித் திருநீற்றுப்) பட்டை (கழுத்தில் ருத்திராட்சக்) கொட்டையுடன் 'பெல் பாட்டம்' பேண்ட்டில் அவனுக்கான பதினைந்து விநாடிகள் புகழ் வெளிச்சத்திற்கு எழுபதுகளில் இருந்து காத்திருந்தான். ரங்காவை அடையாளம் கண்டு காவிப் பற்களில் சிரிப்புடன் "வாப்பா..." என்றவாறு கட்டிக்கொண்டான்... கட்டிக்கொள்ள முயன்றான். ரங்கா வழுக்கி விலகிக் கைகுலுக்கி அவன் முதுகில் தட்டிப் பதினைந்து வருடங்கள் கழித்துச் சந்திக்கும் நண்பர்கள் வழக்கமாய்ச் செய்வதைப் போல 'ஹேய்...' மட்டும் சொல்லிப் புன்னகைத்தான்.

"செத்த இப்டி ஒக்காரு. வந்ட்டேன்..." என்றவாறு கிகி நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளராய்ச் சுறுசுறுப்பாய் மேஜை நாற்காலிகளை இழுத்துப் போடுவதில் தொடங்கிப் பங்கு பெறுவோரின் 'இந்த டோக்கனுக்குச் சாப்பாடு உண்டா சார்?' கேள்விகளுக்கு 'இல்லங்க, டீயும் வடையும் மட்டுந்தான். சாப்பாடு போட்டா தூங்கிடறாங்க...' என்று முகம் சுளிக்காமல் உடைந்த ஆங்கிலத்தில் பதிலளிப்பது வரை ஒன்-மேன்-ஆர்மி-யாகக் கவனித்திருந்தான். மேலும் சில நண்பர்களும், பார்வையாளர்களும் வரத் தொடங்கினார்கள். கிகி-யின் வேலைப்பளு குறைந்தது. நிகழ்ச்சி களை கட்டத் தொடங்கியது.

ஏன் இன்னும் கூப்பிடவில்லை? போனில் அழைக்கிறேன் என்றாளே... இன்னும் கோபமா? கோச்சுண்டா போட்டும்... ரங்கா ஓரமாய் அமர்ந்து எதிர்ப்படும் நண்பர்களில் அவனை ஞாபகம் வைத்து இன்று பரவாயில்லை என்று பேசவும் முற்பட்டவர் களைப் புன்னகைத்து இரண்டொரு கேள்வி பதில்களில் அமைதியாக்கித் தன்னுள் அமிழ்ந்திருந்தான்.

"ஏஸியப் போடுங்க. நான் கதவ மூடறேன். டைம் ஆச்சு" அடிப்பொடிகளை ஏவல் செய்தவாறு ரங்காவிடம் வந்து பேசத் தொடங்கினான் கிகி. ரங்காவை விடப் பத்து வயதாவது மூத்தவன் என்றது முகம். உற்சாகம் அந்தப் பத்தைக் குறைத்தது.

மாவா தெறிக்க அவன் கேலி கிண்டல்கள் இடையே கூறியதன் சாரம்: ஓரிரு மணி நேரம் பல சுற்றுகளாய் நிகழ்ச்சி நடக்கும். அவற்றை கிகி பார்த்துக் கொள்வான். முடிந்ததும், சில நிமிடங்கள் தலைமை உரை என்று ஏதாவது பேசிவிட்டுப் பரிசுகளை வழங்கி போட்டோக்களுக்கு போஸ் கொடுத்துச் செல்லும் எளிமையான வேலை ரங்காவுடையது. நஷ்டஈடாக நிகழ்ச்சி முடிந்து திருச்சியில் ஏதாவது பெரிய ஓட்டலில் இரவுச் சாப்பாடு கிகி செலவில். எட்டு மணிக்குக் கிளம்பினாலும் ரேஷ்மாவை சந்திக்க அறைக்கு வரச் சொல்ல முடியுந்தான்... அதற்கு முதலில் அவள் சொன்னபடி போனில் அழைத்துப் பேச வேண்டுமே... அத்தோடு முக்கியமாய், நிகழ்ச்சி நேரத்திற்குத் தொடங்கப்பட வேண்டுமே; ஐ.எஸ்.டி. என்றால் இந்தியன் ஸ்ட்ரெச்சபிள் டைம் என்றல்லவா புரிதல்...
அனுபவஸ்தன் கிகி-யின் நிர்வாகத் திறமை தார்குச்சி போட்டதில், நேரத்திற்கு நிகழ்ச்சி தொடங்கியது.

தகவல் குப்பைகளைப் பதில்களாய்ச் சொல்லிப் பெயரும் பரிசும் பெறவேண்டிய நிகழ்ச்சியில் பெரியவர்களைவிடச் சிறுவர்கள் பொளந்துகட்டினார்கள். ஏதேதோ விளையாட்டுகளின் புள்ளிவிவரங்கள், சினிமாக்களும் சிந்தனைகளும் ஓடிய ஓடாத வருடங்கள். யுதாண்ட் தலைமையில் நடந்த யுனைடட் நேஷன்ஸ் மாநாட்டில் எம்.எஸ்.சுப்புலட்சுமி செய்த கச்சேரியில் ராஜாஜி எழுதிக் கொடுத்துப் பாடிய ஆங்கிலப் பாடலுக்கு இசையமைத்தது யார்? ஹேண்டல் இமான்யுவெல் என்று இத்துனூண்டு பொடியன்கள் சரியான விடை சொன்னார்கள். ‘May the Lord forgive our sins...’ என்று ஒலித்த அப்பாடலின் பொருள் கரகோஷத்தில் கரைந்துவிட்டிருந்தது.

ரங்காவுக்கு லயிக்கவில்லை. சமவயது நண்பனை வற்புறுத்தி வெளியேறி நடந்து சென்று அருகில் சத்திரம் பஸ் ஸ்டாண்ட் டீக்கடைகளைப் பார்வையிட்டான். டீ-யைக் கொப்புளித்து உமிழ்ந்தான். ஃபில்டர் காபி கிடைத்தால்...

“வீட்டுக்கு வாடா, அம்மாவத் தரச்சொல்றேன்...”

அரை மணியில் வேறு டீக்கடையில் முயன்று பார் என நிகழ்ச்சி உந்தி வெளியேற்றுகையில், கூடவே உத்தமர்கோயிலில் இருந்து வந்திருந்த கிகி-யின் வங்கி நண்பர் தொற்றிக் கொண்டார். கையில் மாவா அரைத்தபடி மபொசி மீசையினூடே வாயில் புகைமூட்டமாய் இருந்தவர், உடன் வந்த நண்பன் வாயிலாக ரங்கா அமெரிக்க விஞ்ஞானி, தமிழ் நாவல்கள் எழுதி யுள்ளான், முன்னாள் ஸ்ரீரங்கவாசி

என்று கேள்விப்பட்டு குஷியாகி சட்டை முழுக்கையை உருவி உயர்த்திக் கொசகொச முடிமார்பில் புலிநகச் செயின் மினுக்கத் தோள்களை விடைத்துக் குலுக்கிவிட்டபடித் தழுவிக்கொள்ள வந்து ரங்கா பின்வாங்க, அவன் குலுக்க நீட்டிய கையை இரு கைகளாலும் அமுக்கித் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டார்.

“வாத்தியாரோட கனவுத் தொழிற்சாலைல வருவாளே கல்யாணி... அவளோட நிஜ கிளாஸ்மேட் நான்...”

புளிச் என்று சந்தனச் சிவப்பாய் ரோட்டில் துப்பினார். பின் பாக்கெட்டில் இருந்து சிறிய சீப்பெடுத்து மீசையை வாரினார்.

பேச்சு ‘அந்தக் காலத்தில்...’ என்று நாற்பதை நெருங்கும் அல்லது போன பே-கமிஷன் அரியர்ஸிலேயே அதைக் கடந்து விட்ட ஆண் நண்பர்கள் முச்சந்தியிலோ வாட்ஸ்-ஆப்பிலோ கூடினால் விழுந்தடித்து விரையும் மண்பானைக் குடிநீர், ‘நாகின்’ ஸ்ரீதேவி போன்ற நினைவேக்கங்களுள் வழுக்கியது.

ஏன் இன்னும் போன் செய்யவில்லை... இன்னமும் அழுது கொண்டிருக்கிறாளோ, பாவம்... நாமே கூப்பிட்டு விடலாமா? ரங்கா பாக்கெட்டினுள் ஐ-போனைத் தடவினான். இவர்கள் எதிரில் மீண்டும் போனில் அழுதுவிட்டால், என்ன பேசித் தேற்றுவது? போகையில் அவள் வீடுவரை சென்று... சே சே, கூப்பிடாமல் போவதா... வீட்டில் என்ன சொல்லி வைத்திருக்கிறாளோ... குறுஞ்செய்தி அனுப்புவோமா?

கிகி அனுப்பியதாக ஆள் அவர்களிடம் விரைந்து வந்தான்.

***

நிமிடங்கள் கழித்து நிகழ்ச்சியில் ரங்கா மைக்கைப் பிடித்துப் பேசத் தொடங்கினான்.

‘செம்மங்குடி சீனிவாச ஐயர் இருந்தார். மேடையில் பாடுவதிலிருந்து ஓய்வுபெற்றுவிட்ட எண்பதுக்கும் மேற்பட்ட வயதில் ஒருமுறை அவரிடம் பிரபல எழுத்தாளர் கேட்டார் ‘உங்களுக்கென்ன மாமா, அக்கடான்னு ஆத்துல நீங்க பாடின பழைய கச்சேரிலாம் கேட்டுண்டு இருந்துடலாம்.’ சீனிவாசர் மறுத்தார். ‘நாம் பாடினதக் கேக்கறதில்லைடா. அதெல்லாம் சப்பின மாங்கொட்டைகள்...’

அரங்கில் அமர்ந்திருந்தவர்களைப் பார்வையிட்டான். ஓரிருவருக்குப் புரிந்ததுபோல் ரங்காவின் கண்களைச் சந்திக்கையில் ஆமோதித்தனர். தொடர்ந்தான்.

மனத்திற்குள் கேள்வி: எதற்கு இதையெல்லாம் வினாடி வினா நிகழ்ச்சியில் பேசுகையில் சொல்கிறாய்? என்ன சம்பந்தம்? தயார் செய்து வந்தது மறந்துவிட்டது என்றால், வாழ்த்துக் கூறி அமர்ந்து கொள்வதுதானே... பாக்கெட்டில் ஐ-போன் மௌன மாய் அதிர்கிறது. ரேஷ்மாவோ? குறுஞ்செய்தி?

‘...ஹென்ரி டேவிட் தொரூ என்று நூறு வருடங்கள் முன்னர் ஒரு எழுத்தாளர் இருந்தார். தொல்ஸ்தோயையும் காந்தி யடிகளையும் கவர்ந்தவர். பழையதைத் திரும்பிப் பார்க்காதே என்றார். கடந்தவற்றை வாஞ்சையுடன் திரும்பிப் பார்க்கத் தொடங்கினால் நம் கால் போகும் திசையும் அதுவென்றாகி விடும். அதனால்தான் இன்றைய இளைய சமுதாயம் அவர் எழுத்தைத் திரும்பிப் பார்ப்பதில்லையோ என்னவோ...’

அரங்கில் மூவரிடமிருந்து சிரிப்பொலி.

.

மனம் மீண்டும் எச்சரித்தது. அலைபாயாதே. சுருக்க முடி. வினாடி வினா பற்றிச் சொல். உன் அனுபவங்களைப் பகிர்...

‘...கடந்து வந்த பாதையை நினைவில் வைத்திருக்கலாம். பற்றுவைக்கக் கூடாது. அதை நோக்கியே மனம் வருங்காலத்திலும் பயணிக்கத் தொடங்கிவிடும். இதன் இன்றைய பரிமாணத்தை நம் கைகளில் காண்கிறோம். வாட்ஸ்-ஆப்பில் பள்ளித் தோழர்களைத் தேடிப்பிடித்துக் குழுமமாகி ஒவ்வொரு வரும் தங்கள் சுகநினைவெச்சங்களை - நொஸ்டால்ஜியா - கை வலிக்கும் வரை தப்புத்தப்பாய்த் தட்டச்சி மீட்டிக்கொண்டு, நிகழில் யாராகி விட்டோம் என்பதைப் பகிரவோ அறியவோ பிரியமின்றி, ஓரிரு நாட்களில் மின்குப்பைகளை முற்செலுத்தும் ஆட்டோமேட்டான்களாய் மாறிவிடுவோம்...’
பார்வையாளர்களில் சிலர் நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டனர். ரெண்டு மாசமா நீ செஞ்சத சொல்லிக்கறயா? மனத்தினுள் ரங்கா பேசிக்கொண்டிருக்கும் ரங்காவைக் கேலி செய்தான். நோ நான் ரேஷ்மா ஒருத்தியைத்தான் திரும்பிப் பார்த்தேன். அவள் நண்பியோ, நொஸ்டால்ஜியாவோ இல்லை. காதலி...

‘... கல்லூரி தினங்களில் நானும் இதே போல வினாடி வினா நிகழ்ச்சிகளில் வெறித்தனமாய்ப் போட்டியிட்டுச் சிலவற்றில் வெற்றியும்

பெற்றிருக்கிறேன்...’

அப்பாடா, வினாடிவினாவிற்கு வந்துவிட்டேன். ரங்கா போடியம் முன்னால் கால் மாற்றி நின்று கொண்டான். பேச்சைத் தொடர்ந்தான்.

‘...தகவல் குப்பைகளை நினைவில் நிறுத்தி வெளிக்கொணர்வதில் கில்லாடி என்று பேர் பெற்றிருக்கிறேன். அதனால் அறிவாளி என்று தவறாக மற்றவர்களை நினைக்க வைத்து அவர்கள் நினைப்பதினால் நானும் அதை நம்பத் தொடங்கியிருக்கிறேன். ‘தகவல் என்பது ஞானம் இல்லை. அறிவும் இல்லை. தகவல் சேகரம் அறிவடைவதற்கான வழியன்று. இணையம் வளர்ந்துள்ள இந்நாளில் இப்புரிதல் மிக அவசியம். ஒரு காலத்தில் தகவல்களாய் நிறையத் தெரிந்தவரை ஞானஸ்தன் அறிவாளி என்று கருதினோம். அவசியமும் இருந்தது. அத்தகவல்கள் எளிதில் அனைவருக்கும் கிடைக்காது. அவர் ஏட்டினில் தேடிப் படித்து நினைவில் சேகரித்து நிறுத்தியவை. அவ்வகையில் இன்று விக்கிப்பீடியாதான் உலகின் அறிவாளன். அதைத் தொடுதிரை அலைபேசியில் சுண்டி, தகவல்களை எடுத்துக் கொடுக்கத் தெரிந்த நம்மை விடச் சிறுவர்களை இன்று வள்ளுவன் சுட்டிய பேரறிவாளர்கள் எனலாமா?’ ‘நிறையப் படிக்கவேண்டும் என்பதில்லை. வாழ்வில் விரும்பித் தேர்வு செய்துகொண்ட ஓரிரண்டு புத்தகங்களை முழுமையாகப் படித்து, வயதுகடந்தாலும் அவற்றைப் பற்றியே ஸ்மரணம் செய்துகொண்டிருந்து, மனத்தினுள் வியாபிக்க விட்டு, அவற்றையே அனுதினமும் காதலித்து...’

நிறுத்திக்கொண்டான்.

தன்னிலை உணர்ந்த மனம் உடல்வழி வியர்த்தது.

என்ன பேசுகிறோம்?

மனக்கண் மூடி நிமிர்ந்து புறக்கண் பார்வையை அமர்ந்திருப்போரிடம் செலுத்தினான். கவனித்திருந்தனர். அவன் அதுவரை ஞானத்தையும், அறிவையும், தகவலையும், புத்தகங்களையும் பற்றி மட்டுமே பேசிக்கொண்டிருப்பதாகக் கருதி...

‘...அறிவில் தொலைத்த ஞானமெங்கே, தகவல்களில் தொலைத்த அறிவெங்கே, செய்திகளில் தொலைத்த தகவல் எங்கே, தரவுகளில் தொலைத்த செய்தி எங்கே... இன்று கணினி யுகம். இன்னும் சொல்லலாம். கணினி இரண்டடிமான பிட்டுகளில் தொலைத்த தரவுகள் எங்கே...’

ரேஷ்மாவிடம் மதியம் சொதப்பிவிட்டதை மேலும் வெளிப்படையாகப் பேச்சில் மருகிவிடுவதற்குள் கௌரவத்தைக் காப்பாற்றிக்கொள்ள டி.எஸ்.எலியட்டை உதவிக்கு இழுத்து வந்து எங்கெங்கோ சுற்றி வினாடிவினா எனும் நிகழ்ச்சி இளமையில் பலனளிப்பதாய்த் தோன்றினாலும், ஞாபகத்தில் இருத்தும் தகவல்களைக் குறைந்தபட்சம் அறிவாய் மாற்ற முயல வேண்டும் என்று கூறி வியர்த்து முடித்தான்.

‘கரகோஷம் விண்ணைப் பிளந்தது’ எனும் தேய்வழக்கை இவ்விடத்தில் எழுதிவைப்பது ஊடகத் தமிழ் மரபு.

ரங்காவுக்கு சுற்றம் கேட்கவில்லை. மீண்டும் மேடையில் தன்னிருக்கையில் அமர்ந்து, கைகுலுக்கல்கள், பிளாஸ்டிக் புன்னகைப் பரிமாற்றங்கள் இடையே ஐ-போனை உயிர்ப்பித்து அது அவனுக்கெனப் புதிதாய்த் தேக்கிவைத்திருக்கும் தகவல் ஞானச் செய்தித் தரவுகளை அறிந்துகொள்ள முற்பட்டான். அவன் அனுப்பியிருந்த குறுஞ்செய்தி போய்ச் சேரவில்லை.

***

கூட்டம் கலைகையில் ஒன்பது மணி ஆகிவிட்டிருந்தது. நிகழ்ச்சியை சரியான நேரத்திற்குத் தொடங்க மட்டுமே கிகி-யினால் முடிந்திருந்தது. இனிமேல் போய் டின்னர் முடித்து... இரவு இனி நினைத் தாலும் பார்க்க முடியாது. மேஜர் சொதப்பல். சொல்ல முடியாது, நேற்று ஒன்பதரைக்கு நேரிலேயே வந்தாளே... அறைக்குச் சீக்கிரம் திரும்ப வேண்டும்...

“எங்காத்துலயே சாப்டுறலாண்டா...” ஏற்கெனவே விட்டிருந்த ஃபில்டர் காபி கான அழைப்பை இரவுச் சாப்பாட்டிற் கானதாய் உடனிருந்த நண்பன் அந்நியோன்யம் கூட்டியிருந்தான். ரேஷ்மா இன்னமும் அழைக்கவில்லை என்பது மனத்தில் குமைந்தது. தலை வலித்தது. ஏஸியில் அமர்ந்திருந்ததில் கண் எரிந்தது. சொட்டு மருந்து அமெரிக்க வீட்டில் அல்லவா உள்ளது. கிகி ஏற்பாடு செய்திருந்த குழு விருந்து ரகளை தவிர்த்த வேறு ஆறுதலான மாற்று தேவைப்பட்டது.

கிகி-யிடம் மீண்டும் அழைத்துப் பேசுவதாய் விடை பெற்று நண்பனுடன் பஸ்ஸில் புறப்பட்டான், அவனுடைய ஸ்ரீரங்கம் உத்திரை வீதி வீட்டிற்கு. வழியெங்கும் யோசனை. முத்தமிடப் போய் சொதப்பி விட்டேனோ... கையில் கிடைத்தது... இனி கையிலும் கிடைக்காதோ... ஒருக்கால், நாளை முழுவதும் வீணடிக்காமல் முயல்வதா? இனி

தேவையா? நாளை முதலில் சந்திப்பாளா? இனி போனில் அழைத்துப் பேசுவதும் நாகரீகம் இல்லையோ.

ஆனது ஆகட்டும் என்று ஸ்ரீரங்கத்தில் பஸ்ஸில் இருந்து இறங்கியதும் ரேஷ்மாவின் போனிற்கு அழைத்தான்.

தற்சமயம் தொடர்பு எல்லைக்கு வெளியே... என்றவாறு குயில் தோற்கும் குரலொன்று காதில் ஒலித்தாள். மறுமுறை முயன்றதில் குக் குக் என்று குயிலுக்கு விக்கலெடுத்தது. மீண்டும் முயன்றதில் நிசப்தம்.

உடன் நடந்திருந்த நண்பன் ரங்கா நிகழ்ச்சியில் பேசியதை வழிமொழிந்து வாட்ஸ்-ஆப், முகநூல் என்று இணைய விரயங் களைச் சாடியவாறிருந்தான். இடையே எதிரே வெற்று மார்பில் பூணூல் பறக்க டப்பாகட்டு வேட்டியில் நிறுத்தாமல் சைக்கிளில் விரைபவனை “டேய் குஜிலி... புறப்பாடா, ம்ம்ம்... ரைட்டு...” என்று கனத்த சாரீரத்தில் கட்டியம் கொடுத்தான்.

உத்திரை வீதியின் ஒரு கோடியில் கீற்றுச் சார்ப்பு இறக்கி விட்டில் மொய்த்திருந்த நாற்பது வாட்ஸ் வெளிச்சத்தில் தென்கலை நாமத்தினுள் பச்சைப் பெயிண்ட் பெயர்ந்திருந்த நண்பன் வீட்டுப் படியேறும் முன் ரங்காவின் விடாமுயற்சியில் ஐ-போன் ‘நெட்வொர்க் எர்ரர். நோ ஸெர்வீஸ்’ என்றது. வாசல் மணலில் தேய்ந்து மங்கியிருந்த படிக்கோலத்தில் ஐ-போனை சதுர்காய் போலச் சிதறியடித்துவிடலாமா என்கிற எண்ணத்தைக் கட்டுப்படுத்தி உள்ளிருந்து வரவேற்ற ஒன்பது கெஜ மடிசாருடன் பழசாகிப் போயிருந்த நண்பனின் பசுமஞ்சள் ஏறிய அம்மாவைப் பார்த்துச் சிரித்தான்.

***

முக்கால் மணிநேரத்திற்குள் சாப்பிட்டு விடைபெற்று முறுக்கு மாமி வீட்டிற்குக் கிளம்பியிருந்தான் ரங்கா.

நண்பன் வீட்டில் மாம்பழச் சொம்பிலிருந்து கிணற்று நீர் தெளித்துத் துடைத்த வாழைச் சருகில், அம்மியில் இடித்த பெருங்காயம் தூக்கலான நார்த்த இலைப் பொடி தொட்டுக் கொண்டு கடுகு திருமப்பாரித்திருந்த தித்தியோனம் திவ்யமாய் உள்ளே இறங்கியிருந்ததில் தலைவலி போய்விட்டது.

மனத்தில் உளைச்சல் அதிகரித்திருந்தது.

நண்பன் வீட்டில் ரங்காவின் பெற்றோர் ஸ்ரீரங்கம் வீட்டை விற்றுப்போன அபத்தத்தைக் கொந்திக் கிளறியிருந்தார்கள். நாளை போய்ப் பார்த்து மீண்டும் வாங்க முடியுமா என்றிருக்கிறேன் என்று விடைபெறும் முன்னர் சால்ஜாப்பில் வழிந்தது நடந்துவருகையில் பெற்றோரின் மீது ஆத்திரமாகியிருந்தது. சாறுபிழிந்த சாற்றுக்கொடிச் சுளைபோல கீழ உத்திரை வீதியின் வானில் கிடந்தது நிலா. பறவக்கோட்டை கோபுரவாசலருகே மின்வெளிச்சத்தில் சாக்கடையில் சிதறியிருந்த மாத்திரைத் தாள்கள் போல விண்மீன்கள் வானில் இரைந்திருந்தன.
எப்பப் போறது? காலேஜ்ல வேற பேச வர்றதா சொல்லி ருக்கோம்... கல் தடுக்கியது. இங்க எவன் ஜல்லியக் கொண்டு வந்துக் கொட்டினது... இடியட்ஸ். சின்ன நெட்வொர்க் சொதப்பலில் இத்தனை திட்டமிட்டிருந்த கூடல் குப்புறக் கவிழ்ந்து விட்டதே. Silly incompetent customer service. உதாசீனம். ப்ளடி இண்டியா. இந்த மன உளைச்சலை அமெரிக்காவில் குறைந்தபட்சம் நட்ட ஈட்டுப் பணமாய் மாற்றியிருக்க வாய்ப்புண்டு...

“சாப்டுட்டியோனப்பா, இல்ல...” என்ற கேள்விக்கு “யாராது என்னத் தேடி வந்தாளா மாமி...” என்றவாறு (இல்ல டாப்பா ஒத்தரும் வல்லை...) படியேறி இரவு பத்து மணிக்கு அறையில் மாற்றுத் துணி உருவி மடிக்கணினிப் பையைக் கடாசினான்.

தரையில் சுழன்ற பை சுவர் மரச்சட்டத்தில் மலர்ந்து முடித் திருந்த மல்லிகைச் சரம் தொங்கிய ராதாகிருஷ்ணன் படத்தின் அடியில் சேவித்தது. இப்போது என்ன செய்யலாம்? இருக்கும் நிலையில் எதைச் செய்தாலும் சரிதானோ...

சரியான செயலைச் செய்ய முனைகையில் பிரபஞ்சமே அதில் நீ வெற்றிபெற உதவியாகச் செயல்படும். யார் கூறியது, பாலோ கொயல்லோவின் தீர்க்கதரிசியா? இல்லை உபநிடதக் கருத்துகளை அப்படியே உரித்துவைக்கும் ‘அமெரிக்க நண்பன்’ டோல் எக்கர்ட்டா? இல்லை ஃபெராரியை விற்ற ஏழைத் துறவியா?

ரமணர், ஜேகே, ஓஷோ என்று இந்திய தத்துவ தரிசனங் களையே புது அட்டை போட்டு இங்கிருப்போர் இயம்பியது போக அதனை வேற்று மொழிகளில் வெவ்வேறு புரிதல் நிலைகளில் வருடம் ஒன்றாய் வார்த்தை ஜாலங்களில் வழிமொழி வதைக் கன்னத்தில் போட்டுக்கொண்டு வாசிக்கும் ‘படித்த’ பாமரக் கூட்டம் இருக்கும்வரை இவ்வாறான ஞானசபை அப்பாடக்கர்களும் செல்வந்தர்களாகியே

வருவார்கள்.

ஒருமுறை கூடக் கேட்டுக்கொள்ள மாட்டார்களா - உபநிடதக் கருத்துகளை நேரடியாகப் படித்துக்கொள்ளலாமே; பிரபஞ்சத்திற்கு வேறு வேலைகள் இல்லையா; ஃபெராரியை விற்பவன் துறவியா, வாங்கத் தேவையற்றவன் துறவியா...
படுக்கையில் சாய்ந்து கொண்டுவந்திருந்த 'கெட்டி அட்டை' மார்கஸ் ஆரேலியஸின் 'மெடிடேஷன்ஸ்' விரித்தான். எதிர்ப்பட்ட பக்கத்தில் பார்வையை ஓட்டிய வரியில், 'பிடித்துள்ளதற்குத் திரும்பிச் செல்...' என்றிருந்தார்.

எப்படி இது? இரண்டாயிரம் வருடங்கள் முன்னரே மார்கஸுக்குத் தெரியுமா, நான் இன்று இதற்காக அவரைத் தேடி வாசிப்பேன் என்று? எனக்கான விடையைக் கூறுகிறாரா, அவர் கூறுவதில் எனக்கான விடை உள்ளதாய்க் கருதுகிறேனா?
தன்னுடைய 'சுய முன்னேற்றம்' பற்றி அடுத்தவன் எழுதும் புத்தகத்தைப் படித்தே அறிய முடியும் என்று நம்புபவன் முன்னேற்றுவது எவருடைய சுயத்தை?

இன்னொரு சமயம் பார்ப்போம் என்று மார்கஸ் ஆரேலியஸ் கெட்டி அட்டைகளினுள் மூடிக்கொண்டு விடைபெற்றார்.

இப்போது நமக்கு என்ன பிரச்சனை? ரேஷ்மாவை முத்தமிட்டு விட்டதா? அவள் சம்மதத்துடன்தானே செய்தோம். கன்னத்தில் இடலாம் உதட்டில் கூடாது என்பது அவள் மனத்திற்குள் அவள் உனக்கு விதித்துவைத்திருந்த எல்லை. அபத்தமானது. விளிம்பற்ற பழரசக்கிண்ணத்தை வாய் எச்சில் படாமல் உயர்த்திக் குடி என்பதைப் போல.

என் தர்க்கத்தை அவள் ஏற்காது போகலாம். பிரச்சனை இல்லை. அழுதுகொண்டு அகன்றாளே, அதுதான் பிரச்சனை.

அச்செய்கையின் மூலம் நான் முறை தவறி நடந்துவிட்டது போல் என்னைக் கருதவைத்துவிட்டுச் சென்றுவிட்டாள். நான் செய்தது காதலர்களிடையே தவறில்லை என்பதில் இதுவரை எனக்குச் சந்தேகமில்லை. அவளுக்குப் பிடிக்கவில்லை என்றால் கன்னத்திலும் முத்தமிட அனுமதிக்கக் கூடாது. மீண்டும் 'ஆல் ஆர் நத்திங்' எனும் அவன் கண்டடைந்த விழுமியம் தலைதூக்குவதை ரங்கா உணர்ந்தான்.

கல்லூரி நாட்களில் ரேஷ்மாவுடன் காதலாய் இருந்த போது அவளை

மனத்தாலும் களைய நினைத்ததில்லை. நன்றாக நினைவில் உள்ளது. அவளிடம் இதுவரை சொன்னதில்லை

.

திருச்சியில் அவன் அப்பா காலத்தில் ஆங்கிலப் படம் மட்டுமே திரையிடப்படும் அரங்கம் பிளாஸா. அவன் கல்லூரி நாட்களில் அவ்வகையில் உருவானது சிப்பி தியேட்டர். அதில் ரேஷ்மா போன்ற நண்பியர் கூட வருவதற்கு அனுமதிக்காத அம்மாவின் அராஜகத்தைச் சகித்து, கூடவந்து சீரியஸான காட்சி களில் இருட்டில் கைதட்டும் ஆண் நண்பர்களின் அடாவடி களைச் சகியாமல், விளைவாய் ஒண்டியாளாக ஜேம்ஸ் பாண்ட் படம் பார்க்கச் சென்றிருந்தான்.

ஓரளவு கண்ணியமான புத்தகப் புனைவுகளைப் படமெடுத்து உருத்தெரியாமல் சிதைப்பதெப்படி எனும் ‘ஹாலிவுட் 101’ வகுப்பில் கற்றவகையில் திரை-ஜேம்ஸ்பாண்ட் கை சொடுக்கியதும் வில்லி தளதளக்கும் கரிய பிருஷ்டத்தை ஓரிரு நொடிகள் நம் பார்வைபடக் குலுக்கி ஆடை நெகிழ்த்தி ‘ஓ ஜேம்ஸ்…’ என்று ஆண்பூனைக் கூவலுடன் ஒரே போர்வையினுள் அவனுடன் இறங்கும் காட்சி. ரங்காவுக்கு கொட்டாவி தருணம். ஒரே மாற்றம், இந்த வில்லியின் முகச்சாயல் ரேஷ்மாவினுடையது. அதனால்தானே இந்தப் படத்தையும் பார்க்க வந்திருந்தான்.

திரையில் அரை நிமிடம் போல ஓடும் காட்சியுடன் மனம் தறிகெட்டு அரைமைல் ஓடிய கணம். தனக்கான மேலாடையை மல்லாத்தியிருந்த ஜேம்ஸ்பாண்டைத் தையல் மிஷினாக்கித் திரையில் தைத்துக் கொண்டிருந்தவளின் கரிய முதுகுப்புறம் ரேஷ்மாவினுடையது என்றாகி… சில நொடிகளுள் மனத்தை ஆட்கொள்ள ஏகிய காமப் பேயை மிரட்டிச் சுருக்கி சீட்டை விட்டு எழுந்து விட்டிருந்தான். திரையில் உயிர்பெற்றிருந்த போர்வையினால் ரேஷ்மாவை மனத்தினில் மூடிக் கண்கள் பனித்தான். ‘ஸாரி ரேஷ்… ஜஸ்ட் எ மேன்…’

வீட்டிற்குத் திரும்பி ‘ஏன்டா, இத்தன சீக்கரமா முடிஞ்சுடுத்தா?’ என்ற அம்மாவிடம் ‘ஆமாம் இங்லீஷ்காராளோன்னோ எல்லாமே அவசரம்தான்…’ என்றபடி தன் அறையின் மூலையில் சென்றமர்ந்து கவிதை என்று எதையோ எழுதினான்.

அன்றே முதன்முறை ரேஷ்மாவை மனத்தாலும் களைந்தது. கடைசியுமாக. ரேஷ்மாவிடம் காதலை ஒத்திவைத்துக் கடல் கடந்ததும் அமெரிக்காவில் ஆரம்பகாலக் கல்லூரி வருடங்களில் காமத்தை மட்டுமே பிரித்துப் பார்த்து உடல்பசியைத் தீர்த்துகொள்வதை மட்டும்

மனத்தில் குறுகுறுப்பின்றிச் செய்துவரும் அமெரிக்கச் சகாக்களைக் கண்டு முதலில் ஆச்சர்யப்பட்டிருக்கிறான். அவர்களில் பலரும் உடலால் நெருங்கினாலும் உள்ளத்தால் நெருங்க வில்லை, நெருக்கவில்லை. காதலிக்கவில்லை. சில வருடங்கள் கவனித்ததில் அடுத்த அமெரிக்க படிமம் புரியத் தொடங்கியது. உள்ளத்தால் நெருங்கிவிட்டால், அவர்கள் வேறொருவருடன் உடலாலும் படுப்பதில்லை. ஆனால் உள்ளத் தால் நெருங்கியவருடன் உடலால் இணை பிரியாதிருந்தனர், பொது இடங்களிலும்... காதலர்கள் அன்பைக் காம வெளிப்பாடு களில் உணர்த்திக்கொள்ளத் தயங்கவில்லை. காதல் உறவினில் அனைத்தையும் பகிர்ந்துகொள். இது ரங்காவுக்கு ஏற்புடையதென்றானது. காதலற்று காமத்தை மட்டும் வழங்கிக்கொள்ளும் ‘ஓரிரவு உடன் படுக்கை’களை அவனால் நிஜத்தில் ஏற்கமுடியவில்லை. ஈரக்கனவுகள் பொருட்படுத்தும் முன்னர் மறந்துவிட்டிருந்தன. காதலியைக் காலம் கடந்தும் மனத்திலும் அவள் சம்மதமின்றிக் களைய விரும்பாதவன் பிற பெண்களை அவர்கள் சம்மதித்தாலும் எக்காலத்திலும் உடலில் மட்டும் களைவதற்கு விரும்பியதில்லை என்பது அவனுக்கேற்ற விழுமியமானது. ஆளுமை தெளிந்தவன் ஆங்கே கைப்பிடித்த வேதவல்லி யையும் தான் தேர்ந்த விழுமியப் புலத்தின் பலத்திலேயே காதலித்திருந்தான். கைப்பிடித்த பின்னரே மனத்திலும் கூடியிருந்தான்.

கனவுகளுக்கென நேற்றுவரை ஒதுக்கிவைத்திருந்த காதலில் இன்று காதலியவள் கன்னத்தில் முத்தமிட்டுச் சம்மதம் என்றதும் தானே சாற்றுமுறையைக் கோர விழைந்தான்.

காதலித்தபோதே கல்லூரி நாட்களில் இவ்வாறு இவன் காதலை வழங்கியிருந்தால் ரேஷ்மா அழுதிருப்பாளா? அன்றைய கன்னியவள் காதல் இன்றைய மனைவியவளது காதலை விட எவ்விதத்தில் மாறுபட்டது? காதல் என்று இருவரும் தெரிந்துகொண்ட அன்றே தவிப்பைத் தணித்திருக்கவேண்டும்... அமெரிக்கர்கள் போல்.

எண்ணம் ஒன்று கொட்டாவியுடன் ஊடுபாவியது. சிந்தனைச் சரத்தை தடம் புரட்டியது.

‘ஐம் ஸாரி... ஐ லவ் யூ அஸ் ஆல்வேஸ்...’ என்று நடு இரவு குறுஞ்செய்தி அனுப்பினான். போயிற்றா என்று காத்திருக்கக் கண் சுழற்றியது.

ஏன் அவளை விட்டு அன்று பிரிந்தோம்? இன்று கூடுவது முறையா? முறையற்றது என்றால் எந்த மானுட அறத்தின் அடிப்படையில் ஒழுகி?

மீண்டும் வாழ்ந்தால் அவளைத்தான் கைப் பிடிப்போமா? சந்தேகங்கள் இன்றில்லை. அன்று? அவளை வேண்டாம் என்று மறுத்து அமெரிக்கா சென்ற அன்று? தெரிந்துதானே புரிந்துதானே செய்தோம்.

புரிந்தது தவறென்று அறியப்படுகையில் திருத்த வழி இல்லையா? இல்லை உண்டா? புரியாத வயதில் தெரிந்து கொண்டவளை அறிந்துகொண்ட வயதில் அடையமுடிய வில்லையா?

அறிதலுக்குப் பின் வரும் புரிதல் வாழ்கைக்குப் பயனற்ற தாகி விடுகின்றதே. நம் வாழ்க்கையிலிருந்தே சரியாகச் செம்மையாக வாழும் வழிகளை நாம் கற்பது இயலாது. நம் செயல்களில் இருந்து கற்பதற்கு ஏதிருந்தும் பலதிருந்தும் அவற்றின் பட்டறிவுகொண்டு மீண்டும் அச்செயல்களையே செம்மையாக நடத்திப்பார்ப்பதற்கு நேற்று இன்று நாளை என்றவாறே நீண்டிருக்கும் நேர் கோட்டுக் காலசர்ப்பத்தின் பிடி நமக்குச் சாத்தியங்களை அளிப்பதில்லை. எவ்வித எச்சரிக்கைகளுமின்றி தன்னிஷ்டம் போல் வருகின்ற வாறே அனைத்தையும் வாழ்ந்துபார்த்து அனுபவங்களாய்த் தேக்கியபடி தானியங்கிக் காலப் படிக்கட்டில் கடந்து செல்லச் சபிக்கப்பட்டிருக்கின்றோம். இயற்கை இவ்விதமென்றிருக்க தன் மனம் எனும் தனிப் பெரும் சுகவெளியில் தனக்கென்றே பெற்றதான நினைவெனும் தேன் சுனையில் சபிக்கப்பட்ட ஒருவர் தன்னிஷ்டம் போல் தாகம் தணிகையில் நிஜமெனும் விஷத்தை அச்சுனையில் சொட்டே னும் கலப்பதும் அறமோ. காலசர்ப்பக் காளிங்கனை உன் இஷ்ட நாட்டியக் கட்டுக்குள் வைத்திருக்கும் கண்ணா நீயே சொல். இது சரியோ இது முறையோ இது தகுமோ இது தருமம் தானோ.

மனங்களின் அசைவில்தானே மனிதன் வாழ்கிறான். நிச்சலன மனம் நிகழ்விலும் நீந்தவழியற்ற நெய்தற் படுகையன்றோ. நித்திராதேவி பரிதாபப்பட்டாள்; அதற்கு மேல் அன்றிரவு ரங்காவை யோசிக்கவிடவில்லை.

# மண்ணில் இந்தக் காதல் இன்றி...

தவிப்புதான் காதலா?

காதல் தவிப்பென்றால் தவிப்பதெதற்கு? அது தெரிந்தால், அத்தவிப்பை தீர்த்திடும் வழிகளை ஆய்ந்து விடை கண்டுவிடலாமோ? தவிப்பைத் தீர்த்துவிட்டால் காதலும் தீர்ந்துவிடுமா? காதல் என்பது அன்பு + காமம் / 2 எனலாம். அன்பும் காமமும் சரிவிகிதத்தில் கலந்தியங்கும் உணர்வு. ஏன் என்பதற்கு நீங்களும் நானுமே விளக்கங்களாக முடிவதுமுண்டு. மனத்தைத் தொட்டுச் சொல்லுங்கள் உங்கள் பிறப்பு இருவரிடத்தேயான காமத்தினால் மட்டுந்தானா? அதே இருவரிடத்தேயான காம மற்ற அன்பினால் மட்டும் பிறந்திருப்பீர்கள்தானா? பெற்றது உங்களையோ தெய்வங்களையோ என்றிடினும், குந்தியும் மேரியும் உங்கள் அம்மாக்கள் என்றால் ஒப்புவீர்களா, மனைவிகள் என்றால் சகிப்பீர்களா? இப்போது கூறுங்கள் காதல் என்பது அன்பு + காமம் / 2 எனலாம் அல்லவா.

நம் பிறப்பு நற்பிறப்பே எனக் கருதி மனித குலம் ஜீவித் திருக்க அவசியமான காதலைப் புரிந்துகொள்ள முயல்வோம்.

அன்பை யாரும் எவரிடமும் எழுப்பலாம். அன்பிற்கு உண்டோ அடைக்குந்தாழ் என்கையில் தந்தை மகனிடத்தில் கொண்டதும், ஆசிரியர் மாணவனிடம் கொண்டதும், தங்கை தனயனிடம் கொண்டதும் சேர்த்துத் தம்பதியர் கருத்தொரு மித்தவர் என எவரிருவருக்குமிடையேயும் ஏற்படக்கூடும்தான். அன்பு காட்டவோ பெறவோ காமம் இடையூறில்லை.

காமம் ஒரு சாரார் மறு சாராரிடம் பருவவயதில் தொடங்கிப் பலகாலம் எழுப்பிக்கொள்ள முடிவது. காமத்தை எழுப்பிக்கொள்ள சம்பந்தப்பட்ட இருவரிடையே அன்பு கட்டாயமில்லை. வெறும் காமம் அன்புமில்லை முக்கியமாகக் காதலும் இல்லை. எனின், காதலால் காக்கப்பட்டு உலகின் ஆதித் தொழில் அந்நாளிலேயே அற்றிருக்கும். சலம்புணர் கொள்கைச் சலதியாம் மாதவியும் மற்றுமொரு கண்ணகியாய் அறியப்பட்டிருப்பாள் இளங்கோவிற்கே.

காதல் அன்பின் குறுந்தொகையன்று. அன்பு துயரற்றது. காதல் அன்பு மட்டுமில்லை. துயறுருவது. காதல், காமம் கூடிய அன்பு. எவ்விகிதத்தில் என்பது பங்குபெறும் மனங்களைப் பொறுத்தது. காமமற்ற காதல் என்பது அன்பினையும் அடைக்குந் தாழ். கனவுகளைப் பயந்து

கண்விழித்தே இருப்பது. பெருமூச்சுகளாய்த் தவமிருந்து வயோதிகம் வளர்ப்பது. ஊரை ஏமாற்றுவதான சுய ஏமாற்று. காமம் ஒளித்த காதல் காவியணிந்த கிளர் மனம். பேரறிவாளனின் பெருமூச்சு. படிகளற்ற பத்தினி வீடு.

தவிப்பு என்பது காமமா? அவ்வாறெனின் காதலற்ற ஓரிடத்தில் காமம் தீர்ந்துவிடும் வாய்ப்புண்டு. அவ்வாறு காமம் தீர்ந்ததும் தவிப்பும் அடங்கிவிடவேண்டும். கூடவே வேறிடத்தில் இருக்கும் காதலும் தீர்ந்துவிட வேண்டும். அவ்வாறில்லை என்றால், தவிப்பு காமம் மட்டும் இல்லை என்றாகிறது. பின் காதல் என்பது தவிப்பென்றால் அத்தவிப்புத் தீர வழி என்ன?

காதலில் விழுந்த இருவர் அன்பு பாராட்டிக்கொள்வது தவிப்பைத் தணிக்கக் கூடுமா? அவ்வாறெனின், காதலர்கள் அன்பையல்ல, காதலைத்தான் பரிமாறிக்கொள்ள வேண்டும். முன்பே உறுதி செய்துகொண்டபடி எந்த இருவரிடத்தேயும் எழுப்பிக் கொள்ள முடிந்த அன்பைப் பரிமாறிக்கொள்ள காதலர்கள் என்கிற தனித்துவம் தேவையில்லையே. அதனால், அவ்வன்பினால் காதல் எனும் தவிப்பு அடங்கிவிடும் என்று எதிர் பார்ப்பது சரியன்று.

காதலர் பகிர வேண்டியது அன்பு + காமம் / 2 எனும் காதல் உணர்வை. அவ்வாறு இயலாதென்கையில் காமத்தை மட்டும் பகிர்ந்துகொள்வதை விட அன்பை மட்டும் பகிர்ந்து கொள்ளும் நண்பர்களாய் விலகியிருப்பது கௌரவமானது என்று கருதுவார்கள், காதலித்திராதவர்கள்.

# 12

ஸ்ரீரங்கம். மறுதினப் பகல்.

அதிகாலை. தெருநாயும் உறக்கம் காணும் ப்ரம்ம முகூர்த்தம். கல்லூரி நாட்களில் கோவாவில் நீச்சல் தெரியாமல் மூழ்கி இறந்த 'பேகி பேண்ட்' சகாவுடன் கடலைகளில் அவன் ஒரு தலையாய்க் காதலித்த நீச்சல் தெரிந்த ரேஷ்மாவும் இழுத்துச் செல்லப்படுவதைத் தடுக்க முயன்று விழுந்து நீட்டிய கைகளில் சிக்காத அவள் சிரித்த முகத்தை நீர் கொள்ள, பெரிய கட்டடத் தின் மீதிருந்து லிஃப்ட்டில் இறங்குகையில் கயிறு பிய்த்துக் கொண்டு பாதாளத்தை நோக்கி விரைகையில் கட்டடத்தின் ஆபீஸ் ஜன்னல் வழியே கூரைப்புடவையில் வேதவல்லி இடுப்பில் கைவைத்து முறைத்தபடி 'காதலிச்சவள காப்பாத்தத் துப்பு இல்ல... தூ...' என்று துப்பியதிலிருந்து காத்துக்கொள்ளப் புரண்டு படுத்து, எதிர்க் கட்டடத்தின் புடவை ஷோரூமில் மன்னி 'இதுக்கு ஒங்க அண்ணனையே அவ பண்ணிண்டிருக்கலாமே ரங்கா...' என்று அவன் ரேஷ்மாவிற்கு ஏற்கெனவே தேர்வு செய்து வைத்திருந்த (எப்போது செய்தோம்?) புடவையை அவள் நாபிக்கு மேலாய்ச் சரி செய்துகொள்ள தரையில் மோதிய லிஃப்ட் தண்டவாளத்தில் கிடந்த அவனைச் சுற்றிக் காணாமல் போக, மல்லாந்த வாட்டில் ரயில் நிலையக் கூரையில் சுற்றியிருந்த மின்விசிறியின் அருகில் 'பல்லவன் நிலையத்திற்குச் சரியான நேரத்திற்கு மூன்றாவது பிளாட்பாரத்திற்கு வந்து கொண்டிருக்கிறான்...' எனும் ஒலிபெருக்கிப் பெண்குரல் சிரிக்க, மணி அடித்து, தூரத்தில் அவன் சிறுவயதில் பார்த்திருந்த ஊசிப் பட்டாசு மஞ்சள்-பச்சையில் பல்லவன் இஞ்சின் அவனை நோக்கிப் புழுதி பறக்க... எழுந்திரு எழுந்திரு... யார் கட்டியது... ஸாரி... காதலிக்க மாட்டேன்... மணி அடித்து... அடித்து... கைகாட்டி விழுந்து...

விழித்துக்கொண்டான்.

தொண்டை வலித்தது.

அருகில் படுக்கையில் ஐ-போன் சங்கீதத் துண்டுகளாய் ஒலித்துக்கொண்டிருந்தது. குறுஞ்செய்திகள் வந்து சேர்வதற்கான சமிக்ஞை ஒலித் துணுக்குகள்...

அதுவே மணி அதிகாலை ரெண்டு ஐம்பது என்றது.

எழுந்து மாமி வைத்திருந்த எவர்சில்வர் சொம்பிலிருந்து நீரை சரித்துக்கொண்டு ஐ-போனை உயிர்ப்பித்தான்.

‘ஐம் ஸாரி, அழுததற்கு’ ‘காரணம் நீ இல்லை. நேரில் கூறுகிறேன்’ ‘ஏன் போனை எடுக்க மாட்டேங்கற?’ ‘நிகழ்ச்சியில் உள்ளாயா? பதில் செய்தி அனுப்பேன்...’ ‘இரவு வெளியே சாப்பிடப் போகலாமா?’ ‘ஏன் பதில் இல்லை, இன்னும் கோபமா? அதுதான் ஸாரி சொல்லிவிட்டேனே...’

ரேஷ்மாவிடமிருந்து தொடர் குறுஞ்செய்திகள் வந்தபடி.

நேற்று சாயங்காலம் அவள் அனுப்பியவை. இப்போது தான் நெட்வொர்க் வேலை செய்யத் தொடங்கியுள்ளது.

வோடபோனாம் வோட போன், ஓடா போன்... காசைப் பார்க்காமல் இங்கும் அமெரிக்க நம்பரையே உபயோகித்திருக்கலாம். ஒரு வாரத்திற்கெனத் தற்காலிக இணைப்பு வாங்கியதில் வந்த காரியத்தையே நிறைவேறாதபடிச் செய்துவிட்டார்களே...

கனவில் வேதா வந்தாளே... கோபமாய்... ரெண்டு நாளா பேசலைன்னு கோபமோ... போன் போடுவோமா? அமெரிக்கால இப்போ என்ன நேரம்? கான்ப்ரன்ஸ்ல இருப்பா... ஆய்வு மாநாட்டுக்கு எப்பப் பொடவைல போவா... சே, கனவு...

இன்னொரு குறுஞ்செய்தி டிங்கியது.

ஸ்ரீரங்கம் நேரத்திற்கு ரங்காவை மீண்டும் சரித்தது.

அதான் பேசறாளோனோ, இன்னும் ஒரு நாள் இருக்கே...

அதானே...

உற்சாகமாய்ப் பதில் குறுஞ்செய்தி அனுப்ப விழைந்து, தடுத்துக் கொண்டான். பயித்தியம், இங்க மணி கருக்கல் மூன்றரை. தூங்கறவளை எழுப்பிவிடுவாய். ஆயாச நிம்மதியில் அவசரமாய் ஆப்பிள் மடிக்கணினியை உயிர்ப்பித்தான். தோன்றியதை எழுதத் தொடங்கினான்.

எதைப்பற்றியும் யோசனையின்றி, தூண்டுதல் யார் என்று சரி பார்த்துக்கொள்ளாத படைப்பூக்கத்தின் ஒளியை மட்டுமே நம்பி இறங்கிவிட்ட சொற்காடு...

நினைவுகளின் ஆரண்யத்தைக் காதல் கைவிளக்கை மட்டுமே

துணைகொண்டு மகிழ்ச்சிப் பாதையைக் கண்டுகொள்ள விழையும் படைப்பாளியின் நிஜத் தேடல். நிஜம்தனைத் தேடல்.

அகாலமாய் விழித்த ஆயாசம் அழுத்த... எழுதினான்.

எழுதியதைப் படித்துப் பார்க்கவில்லை. திருத்தவில்லை. ஐ-போனை இணைத்து அதற்கு ‘நோட்ஸ்’ஸில் மாற்றிக் கொண்டான். இணைய இணைப்பு போனில் மட்டுமே...

அனுப்பவேண்டும்... கொட்டாவி வந்தது. கண் எரிந்தது.

நிஜமா கனவா என்று புரியாத ஒரு கணம் நம் அனைவருக்கும் உண்டல்லவா. ஆழ்மனம் விழித்திருந்து காண்பதற்கரிய காட்சிகளைக் காலமற்று விரித்துக் கண்முன் வியப்படைய வைக்கும் கணம். கண்விழித்ததும் மூடிக்கொள்ளும் ஆழ்மன நினைவுகள் நிஜத்திலிருந்தா, இருந்த நிஜத்திலா என்று பகுத் தாயும் மனத்தைத் தத்தளிக்க வைக்கும் தருணத்திற்கு முந்தைய கணம். அங்கு மீண்டும் செல்ல முடியுமானால் தெரிந்து விடும், ரங்கா எழுதிக்கொண்டிருந்த சொற்கோவைக்குக் காரணமான புடவை கட்டிய உருவம் யாருடையதென்று.
எழுதி முடித்த பின்னர் சுய நினைவினில் மனம் பகுத்தாய் கையில் ஆழ்மனத்தின் உண்மைகளைக் கண்டுகொள்வதற்கு இனி அவசியமில்லை... உறக்கம் கலைந்தபோது, மாமி காபியுடன் கதவை இடித்துக் கொண்டிருந்தாள்.
மணி ஐந்தரை. ஷிட்.

“சொன்னியேப்பா எங்கியோ காலேஜ் போணுன்னு... அதான் எழுப்பிட்டேன்...” அவன் சொல்லியிருக்கவில்லை.

மாமியுடன் பேச்சை வளர்க்காது அனுப்பிவிட்டுக் காபியை அருந்தியபடி குறுஞ்செய்திகளை மீண்டும் ஓட்டியதில், ரேஷ்மாவிடமிருந்து புதிதாய் ஒன்று ‘காலையில் சிற்றுண்டி எங்கள் வீட்டில், ஓகே?’

அப்டிப் போடு.

எழுந்து விட்டாள் போலும். முழுவதும் விழித்துக்கொண்டான்.

‘இரவு போன் நெட்வொர்க் வேலை செய்யவில்லை...’ என்று தொடங்கிப் பெரிய குறுஞ்செய்தி ஒன்றை அவளுக்கு எழுதினான். ‘என் நேற்றைய செயலுக்கான காரணத்தை நானும் நேரில் கூறுகின்றேன்...’ அனுப்பினான். சென்றது. பதிலாய் நிறைய :-) வந்தது.

பதிலளித்து அனுப்புகையில் போன் ஒலித்தது.

அண்ணன் எண். அம்மா.

“ஹலோ... ரங்கூ.... எழுந்துண்டியாடா? நல்லாத் தூங்கினியா? மாமி காபி கொடுத்தாளா? நேத்திக்கு ப்ரொக்ராம் நல்லபடியா நடந்துதா?” அதட்டல் கேள்விகளாய் இருந்தவள் அவன் பதில் களை அதிகம் பொருட்படுத்தாமல் அடுத்து கேட் டிருந்தாள். “...நேத்திக்கு ரேஷ்மா வந்தாளாடா? அம்மாவாத்துக்கு வந்துருக்காளாக்கும்...” குரல் பரிவுப்போலியில் ஒலித்தது. ஆத்திரக்காரனுக்குப் புத்தி மட்டு. இருக்கலாம். ஆனால் மட்டான புத்தியிலும் புரிந்துவிடும் சில விஷயங்கள் உண்டல்லவா. ரங்காவுக்கு ஆத்திரத்தில் உடனே தோன்றியது, முறுக்கு மாமி. இதற்குத்தான் திட்டம் போட்டு அம்மா அவனை முறுக்கு மாமியின் இல்லத்தில் அறையெடுத்துத் தங்க வைத்திருக் கிறாள். வழக்கம் போல அவன் செயல்பாடுகளை கழுத்திற்குப் பின்னால் மேலே நின்றவாறு கவனித்துத் திருத்துவதற்கு... முறுக்கு மாமி உளவாளி. அனைத்தையும் கவனித்து அம்மாவிற்கு உடனுக்குடன் போன் போட்டு போட்டுக்கொடுத்துக்...
மனது ஒரு ஆத்திரச் சிந்தனை இழையில் ஓடிக்கொண்டிருந்தாலும் பிறிதொரு இழை வாய்வழியே அம்மாவின் கேள்விகளுக்கு ஏதேதோ பதில்களை வழங்கிக் கொண்டிருந்தது.

“நேத்திக்கு நல்லா நடந்துது மா, ஃப்ரெண்ட் வீட்லயே ராத்ரி சாட்டுட்டேன்... சூப்பர் நார்த்தலபொடி... ஊருக்கு செஞ்சு கொடுமா... சரி, சரீ மன்னீட்டயே கேட்டுக்கறேன்...”

ரேஷ்மா பற்றிய அம்மாவின் கேள்விகளுக்கு கவனமாய் மனம் பதிலளிப்பதைத் தவிர்த்திருந்தது.

நேற்றிரவு ரேஷ்மாவை என்னுடன் தங்க வைத்திருந்தால் என்ன செய்திருப்பாள்? முறுக்கு மாமியால் ஒன்றும் செய்திருக்க முடியாது. முதல் நாள் இரவு பத்து மணி வாக்கில் ரேஷ்மா வந்து போகவில்லையா. என்ன, அம்மாவிடம் உடனே சொல்லிருப்பாள். சொன்னா என்ன? அம்மாவால்தான் அங்கிருந்தபடி என்ன செய்யமுடியும் இப்ப? காலேஜ் பையனா நான்? அன்னிக்கிக் கிணத்துல குதிக்கறேன்னா, இன்னிக்கி? கிணறு இருந்த வீட்ட வித்தாச்சு... அண்ணன் வீட்ல ஏது கிணறு? வேணும்னா மாடிலேந்து குதிக்கலாம்... கொஞ்ச நாள் அம்மா இதே குணநலன்களோட இருந்தா மன்னியே அதுக்கு ஏற்பாடு செய்வா...

“ம்ம்ம்... இப்ப காலேஜ் கௌம்பணுமாக்கும்... மத்தியானம் சாப்பிட என்ன செய்யணும்னு மாமிட்ட சொல்லிட்டுப் போய்டு... வேற எங்கயும் சுத்தாம வந்து இருந்துட்டு காத்தால பல்லவனப் புடிச்சு வந்து சேர்ற வழியப் பாரு... ரெண்டு நாள்ல அமெரிக்கா போணுமே...”

இது என்ன என் நேரத்தையும் செயல்களையும் யாரோ ஒருவர் தொடர்ந்து இயக்கிக்கொண்டிருக்கும் அடிமை வாழ்க்கை... இந்தியானாலே இப்படித்தான். இதனாலும் தானே அமெரிக்கா ஓடினேன்... இனிமே திரும்பி வர்றதா இல்லை... அட்லீஸ்ட் இவாட்ட வந்துற மாட்டேன்... நல்லவேள, வேதாவும் ஓரளவாது தைர்யசாலிதான். மன்னி மாதிரி இல்லாம ஒடனுக்கொடன் பட்பட்டுனு திருப்பிக் கொடுத்துருவா... இல்லாட்டி இவாளோட மைக்ரோ மேனேஜ்மெண்ட்ல வெளிக்கிப்போறது னாலும் இவாட்ட பெர்மிஷன் கேட்டுண்டு... போனை அணைத்துவிட்டு ஆத்திரத்தை அடக்கிக் கொள்ள அறையினுள் குறுக்கும் நெடுக்குமாய் நடை பழகினான். தீர்மானித்தவன் மீண்டும் போனில் அழைத்தான்.

“ஹலௌ டிவி சார் இருக்காரா... சௌக்கியம், நீங்க... அதான், வந்துட்டேன் சார், ஆனா ஊர்ல சட்டுனு அம்மாக்கு ஒடம்பு சரியில்லாமப் போய்டுத்து, இப்பத்தான் போன் வந்துது... ஆமாமா வயசாய்டுத்தோல்யோ... அதான் சார், காலேஜ்க்கு இன்னிக்கி பேச வர்றேன்னு சொல்லிருந்தேனே... யா, ஐ நோ, செஞ்சிருப்பீங்க, ஆனா வர முடியாது...”

ஏற்பாடானபின் உரை வழங்குவதை அவன் கைகழுவிய தற்கு மறுமுனையில் பெரிய மறுப்போ எதிர்ப்போ மானபங்கமோ ரோஷ வெளிப்பாடோ இருக்கவில்லை. இன்று ரங்கா அமெரிக்க விஞ்ஞானி எனும் வெண்கொம்புகள் முளைத்தவன் ஆயிற்றே... டிவி ஏற்றுக்கொண்டு மறுமுறை கட்டாயம் ஏற்பாடு செய்துகொள்ளலாம் என்று அணைந்தார். இந்த வெட்கங்கெட்ட அடிமைத்தனம் ஜீன்லயே இருக்கற வரைக்கும் இந்தியாவத் திருத்த முடியாது. ஒருவேளை அவன் வழங்கிய காரணத்தினால் அம்மா பாசம் டிவி-யை அவனை மன்னித்துவிடச் செய்திருக்கலாம். எதார்ந்தா என்ன, அம்மா சொன்னதுக்காகவே போறதில்லை இன்னிக்கி. ரேஷ்மா சாப்டக் கூப்டால்ல... அங்க தொடங்குவோம் இன்றைய காதல் சுற்றுலாவை.

திட்டங்களை வகுத்தபடி குளித்து முடித்தான். அவற்றைச் செயலாற்றப் போகும் உற்சாகத்துடன் அலங்கரித்துக் கொண்டான். ஆப்பிள் கணினியின் கேமிரா உபயத்தில் ‘ஃபேஸ்டைம் ஆப்’பில் முகம் பார்த்துத்

தலை வாரிக்கொண்டே முறுக்கு மாமி படியேறி அறையினுள் வரும்வரை காத்திருந்து அவள் கொண்டு வந்த சிற்றுண்டியைத் தட்டுடன் திருப்பி அனுப்பினான்.

“காலேஜுக்கு லேட்டாயிடுத்து...” என்று அவள் கேட்காமலேயே விளக்கமளித்தான். வெளியேறினான்.

***

ரேஷ்மா வீட்டில் இல்லை. அம்மாவுடன் காலனி பிள்ளையார் கோயிலுக்குச் சென்றிருந்தாள். அவள் அப்பா அடையாளம் கண்டு ஹாலில் அமர்த்திப் பேசிக்கொண்டிருந்தார்.

சம்பிரதாய உரையாடலின் நடுவே மௌனங்கள் சங்கடப்படுத்தும் அளவை எட்டியிருக்க, ரேஷ்மா அம்மாவுடன் நுழைந்தாள்.

“வாப்பா... இப்பத்தான் எங்கூட்டுக்கு வழி தெரிஞ்சிச்சா... வீட்டுக்காரி என்ன சொல்றா... எப்பப்பா கண்ணுல காட்டப் போற? அப்டியேதான் இருக்கு... ஒல்லிக்குச்சியா. ஊதிருச்சி பெருத்துட்டான்னியே ரேஷு... அம்மா அப்பாலாம் நல்லாருக்காங்களாப்பா... அண்ணங்கூடவா... அண்ணி என்ன செய்றாங்க...” சற்றே உடல் தொய்ந்து நடை தளர்ந்திருந்தாலும் பதினைந்து வருடங்கள் கழிந்தும் சாய்ந்த கருங்கொண்டை சாந்துப்பொட்டு பவுடர் முகத்தில் ரேஷ்மாவின் அம்மாவிற்குப் பொலிவு மங்கவில்லை. நேற்று முத்தமிட்ட ரேஷ்மாவின் உதடுகளுக்கான தோற்றுவாயின் சகஜப் பேச்சிற்கும் குறைவில்லை.

‘சும்மாதான், ரேஷ்மாவப் பாத்து ஐ லவ் யூ சொல்லிட்டுப் போலான்னு வந்தேன் மாமி...’ உண்மையைச் சொல்லிவிட்டால் மட்டும் ஏன் உலகம் அதைப் பொய் எனக் கருதத் துடிக்கின்றது? “...ஒங்களலாம் மறப்பேனா மாமி... ஜஸ்ட் பிஸி... இப்பத்தான் வர முடிஞ்சுது...” பொய்களைப் பழகிப் பழக்கி அவை உளமார்ந்த உண்மைகளே எனக் கொள்வதற்குத்தான் உலகம் எவ்வளவு அவாவுறுகின்றது.

இடியாப்பம், கொழாப் புட்டு, பாயா... பரிமாறுவதில் சுவைப்பதில், தாகத்திற்கு நீர் அளிப்பதில், தேநீர் வேண்டாம் என்றதும் காபி கொடுப்பதில், கடைகண்ணிக்கு வீட்டுப்பெண் காரெடுத்துப் போவதற்குத் துணையாக அவளது பொறுப்பான அமெரிக்க நண்பன் உதவுவதற்கு... இவை எதற்கும் பரஸ்பரம் பொய்யுரை பழக

வேண்டியிருக்கவில்லை.

மீண்டும் ரேஷ்மாவுடன் தனிமையில் ரங்கா.

இன்று பட்டு சுடிதாரில் பளபளத்தாள். கார் சவாரியில் அவள் குடியிருப்பு காலனி கடந்ததும் கண்ணடித்தாள். காவேரிப் பாலம் தாண்டியதும் கை பிடித்தாள். சிங்காரத்தோப்பு சூப்பர் பஸாரில் காரை நிறுத்துவதற்குள் கலகலத்திருந்தாள்.

“ரங்கா... இப்ப நோ கோயில்... வேணும்னா சாயங்காலம் ஒங்க கோயிலுக்குப் போலாம்... இப்ப எனக்கு டிரெஸ் வாங்க ஷாப்பிங் போறோம்... அப்பறமா ஐஸ்க்ரீம்... சாப்டுட்டே பேசிட் டிருப்போம்... தொரத்தினாங்கனா வேற எங்கயாச்சும் ஒக்காந்து கன்ட்டின்யூ பண்றோம்...”

“தங்கள் சித்தம் என் பாக்கியம் அரசியாரே... தேரை வேண்டுமானாலும் இனி நானே ஓட்டுகிறேன்... சூப்பர் பஸாரில் பார்க் செய்வதற்குள் தங்களுக்குத் தாவு தீர்ந்துவிடலாம்...”

தீரவில்லை. ரேஷ்மாவே அநாயாசமாய் வளைத்து நெளித்து ஓரங்கட்டிவிட்டாள். தரையிறங்கி தங்களுக்கான உலகினில் மற்றவர்களினூடே உலா வரத்தொடங்கினார்கள்.

எத்தனையோ இருந்தாலும் முதலில் தொடங்கிய பரிமாற்றம் - ரேஷ்மாவின் வீட்டில் ரங்காவைப் பற்றி என்ன சொன்னார்கள்...

“அம்மா இஸ் கூல் வித் நான் ஒன்னோட சுத்தறதுல... அப்பா தான்... பொண்ணு மேல அத்தினி நம்பிக்கை. கேட்டுட்டே இருந்தார் எப்டி நீ வரச்சே அவனும் வந்துருக்கான்னு...”

“அதுக்கு அம்மா என்ன சொன்னாங்க...”

“‘அவன் வரச்சே இதுதாங்க வந்துருக்கு’னாங்க. என்னத்தான அப்போத்திலேந்தே காலை வாருவாங்க...”

“அப்டி இல்லை ரேஷ் அது. அவங்களுக்குத்தான் பொண்ணு மேல நம்பிக்கை. அதான் கண்டுக்கறதில்லை... பொண்ணப் பத்தித் தெரியும்.”

“அப்போ அப்பாக்கு என் மேல நம்பிக்கை இல்லைங்கறயா?”

“ஒங்க அப்பாக்கு ஆம்பிளங்களப் பத்தித் தெரியும் ரேஷ். அதான்... அவருக்கு என் மேல நம்பிக்கை இல்லை...”

சிரித்தாள். “சரியாத்தான் கணிச்சுருக்க... பட் ஹெ கோர்ஸ்... எனக்குப் பிடிச்சுருக்குப்பா... ஒன்னோட சுத்துறதுக்கு...”

புன்னகைத்தான். காலையில் அம்மாவுடன் ரேஷ்மா கோயிலுக்குச் சென்றிருந்தபோது அவருடன்தானே தனிமையில் பேசிக் கொண்டிருந்தான்.

“காதலிச்சுட்டான்னா கண்ணாலம் கட்டி வெச்சுறதாம்ப்பா சரின்னேன். ஏன்னு கேட்டான். என் தம்பி பையந்தான், இல்லேங்கலை. தம்பிட்டயே சொன்னேன். இல்லாட்டி மனசுல அவள நெனச்சுட்டு நீ சொல்றதுக்காக இன்னொருத்தியக் கட்டுவான். அப்பறம் அவளோட குடும்பம் நடத்துவான், இவள வச்சுப்பான். இதெல்லாம் நமக்குச் சரிபடா துன்னேன்...” நரைமுடி வகிடு கலையாது சாய்வு நாற்காலியில் முஷ்டியில் விரல்களால் தாளம் போட்டவாறே, கைவைத்த பனியனில் தமிழ் நாளேட்டை மடியில் விரித்துக் காலாட்டியபடி ரேஷ்மாவின் அப்பா அவனிடம் பகிர்ந்தது.

ரங்காவின் வியப்பு எதற்குக் கணகாரியமாய் இதை இன்று ரேஷ்மா இல்லாத இச்சமயத்தில் கூறுகிறார் என்பதே.

பல வருடங்கள் பலமுறை அவர் வீட்டிற்குச் சென்று ரேஷ்மாவை காலேஜிற்கு கூட்டிச் சென்றிருக்கிறான். இரவுவரை தொடரும் நிகழ்ச்சிகளின் போது காலேஜில் லேட்டாகி விட்டால் கொண்டுபோய் விட்டிருக்கிறான். அவனிடம் மிகக் குறைவாகவே பேசுவார். வருடங்கள் முன்னால்... இன்று... பொறுப்புகளை முடித்துவிட்ட நிறைவில் அவனிடம் ஏதேதோ கலகலக்கிறார். அவர்கள் ஜாதியின் நடப்பு அவலங்களை, மேன்மையை, முற்படுத்தப்பட்ட என்று முத்திரை யிடப்பட்டதை எதிர்த்துப் பிற்படுத்தப்பட்ட என்று முத்திரை வாங்குவதற்காக தமிழக அரசுடன் சங்கம் நடத்திய போராட்டங்களை அவனிடம் பகிர்கின்றார். கூடவே எச்சரிக்கிறார். இல்புறக் காதலைப் பற்றிய அவர் கருத்தை வலித்துரைத்து.

மௌனத்திலிருந்து ரங்கா மீள்வதற்குள்தான் ரேஷ்மா கோயிலில் இருந்து வந்துவிட்டிருந்தாள். பிறகு கிளம்பும்வரை அவனுடன் அவர் பேசவில்லை. விடைபெறுகையில், மீண்டும் இந்தியா வருகையில் வந்து சந்திப்பதாய்க் கூறியதற்கு வெளிப் படையாய் அவர் ஏதும் தெரிவிக்கவில்லை.

ஐஸ்க்ரீமை சுவைத்தபடி ரங்கா நினைத்துக்கொண்டான்.

காதலில் உள்ளவர்களைப் பெற்றோர் கண்டுகொண்டு விடுகிறார்கள். எங்கிருந்தும், எத்தனை வருடங்கள் கடந்தும்.

***

“சரி. ஏன் அழுதேன்னு சொல்றேன்னியே...” நேரடியாகக் கேட்டுவிட்டான்.

ஐஸ்கிரீமைக் கொந்தியபடி தொடங்கினாள். “...நீ என்ன சொன்னே... ஆமா, முத்தம் கொடுக்கறப்போ... அதில்ல... நான் கேட்டதுக்கு, எங்க கொடுக்கற ரங்கான்னு நான் கேட்டதுக்கு, உதட்டுலதான கொடுத்திட்டிருந்த, மறந்து போச்சா... அதான், அப்ப என்ன சொன்ன, எங்க கொடுத்தா என்ன... டஸ் இட் மேட்டர்...”

“ஆமா கேட்டேன். இப்பவுந்தான் கேக்கறேன். அதுல என்ன? ஒனக்கு உதட்டுல கொடுத்தாப் பிடிக்காதா? வெளையாடாத...”

“அதில்ல டா. ஷட் அப்... பேசாத கேளு... நீ சொன்ன அதே வார்த்தைகள் ரங்கா... அதயேதான் அபியும் சொன்னாரு... மொதல்ல முத்தம் கொடுக்கறச்ச... when we made out... நான் எதிரே பாக்கலை, உதட்டில... கேட்டதும், இப்ப நீ சொன்னியே... அதே மாதிரி மூஞ்ச வெச்சிட்டு, டஸ் இட் மேட்டர்...”

ரங்கா மனத்தில் களேபரமாய் எழுந்த எண்ணங்களைக் கட்டுப்படுத்தினான். மௌனமாய்க் காத்திருந்தான்.

“...அதான் ரங்கா... தாங்க முடியலை என்னால. எனக்குப் புடிச்ச ரெண்டு பேருமே அப்டியே அதே மாதிரியே அதே தருணத்துல அச்சு அசலா அதே ரியாக்‌ஷனோட... அதான் அழுதிட்டேன்...”

ஸு... வெளிப்படையாக மூச்சுவிட்டான் ரங்கா. ஸோ, நம்ம மேல தப்பொண்ணும் இல்லை. கொழப்பம் அவகிட்ட... சே, ஆனாலும்... இப்ப என்ன சொல்றா?

‘நான் அபி மாதிரிங்கறயா ரேஷ்... இல்ல அவரு...’ கேட்க நினைத்துத் தடுத்துக்கொண்டான். “...கிளம்புவோமா? வேற எடத்துக்குப் போய்ப் பேசுவோமே...”

‘பூல்வார்’ என்று உச்சரிக்க வேண்டியதைத் தமிழிலும் புலிவார்டு என்றே எழுதி அதன் பொருளான ‘சாலை’ என்பதை யும் கண்டுகொண்டதாய்

வெளிக்காட்டாத ‘மேற்கு புலிவார்டு சாலை’ என்று விளிக்கப்பட்டிருக்கும் பிரதான போக்குவரத்துப் பாதையில் ஓரமாய் நடந்து புனித வளனார் கல்லூரியின் தேவாலயத்திற்கு முன்பாகப் பழைய தெப்பக்குளம் போஸ்ட் ஆபிஸிற்கு எதிரில் மலைக்கோட்டையின் மதிலுக்குள் திறந்தே இருக்கும் திட்டிவாசல் கதவிரண்டிற்கிடையில் நுழைந்தார்கள். ஏதேதோ பேசியவாறு.

“அந்த சர்ச்குள்ள போயிருக்கியா ரங்கா?”

“இல்லை... ஸ்கூல் சகா ஒருத்தன் படிச்சான்... அந்த ஜோஸப் காலேஜ்ல... தேசிக்காச்சாரினு... அமெரிக்காலதான் குப்பகொட்டிண்டிருந்தான்... எங்கயோ தெரிலை. டச்சுல இல்லை...”

நீர் இருக்கும் தெப்பக்குளத்தை இடப்பக்கம் விட்டுச் சின்னக் கடை வீதியின் ஜனத்திரளினுள் நுழைகையில் ரேஷ்மா கடந்து வந்த ஏடிஎம் மெஷினைச் சுட்டி “பணம் எடுக்கணும்... சரி அப்றம் எடுக்கலாம்... ஸ்டேட் பேங்க் ஏடிஎம்மா...”

“அபிக்கும் ஏடிஎம் ல பணம் எடுக்கத் தெரியாதே...”

“எப்டிறா ஒரே மாதிரி வந்து எனக்கு மாட்டிருக்கீங்க...”

காலையில் வீட்டிலிருந்து கிளம்புகையில் அவள் அம்மா “ஏன் ஒன்ன வெச்சு அவன் ஓட்ட மாட்டானாமா?” என்றதற்கு “அதெல்லாம் ஃபாரின் கார்தான் ஓட்டுவான். எனக்கு வீட்ல ஒண்ணு இருக்கே... நாம கேட்டா பிகு பண்ணும். எல்லாம்... எனக்கு வந்ததும் சரியில்ல வாச்சதும் சரியில்லம்மா...” அம்மா விடம் விடை பெற்றிருந்தாள் சிரித்து. ரங்காவுக்கு நினைவில் வந்துபோனது.

“அபியும் எப்பவும் சீரியஸ். எங்கிட்ட மட்டுந்தான் வெளையாட்டுத்தனத்த, குறும்பக் காட்டுவார். ‘ஐம் இம்ப்பிஷ் ஒன்லி வித் யூ...’ ம்பார். நீயும் அதே மாதிரி எஸ்ஸெம்மெஸ் அனுப்சியே ஞாபகமிருக்கா... அப்பவே ஆ...னு இருந்திச்சு...’

அபியைப் பற்றிச் சொல்லிக்கொண்டே போனவள் சட்டென்று தெருவோரம் மண்ணில் பெட்டிமீது வைத்து விற்கப்படுவதைச் சுட்டி “அந்த நாடா... வாங்கணும்... மாமியாருக்கு வேணும்... அப்றமா வாங்கிக்கலாம்...” இருவருமே நிற்கவில்லை.

ரங்காவுக்கு சற்றே சலித்தது. என்னை என்ன அபி என்கிறாளா? அதான்

ஏற்கெனவே எனக்கே தெரியுமே... காட்டிவிடுவது என்று தொடங்கினான். "தரௌள, சுத்தம், எடுத்தத எடுத்த எடத்துல வெக்கற, முதல் காதலி பிஸிக்ஸ்தாங்கற, நிறைய புக்ஸ் படிக்கற, படிச்ச தெல்லாத்தயும் குறிச்சு வெக்கற, பென்சில ஷார்ப்பா சீவி... சீவல் களைக் கவனமா குப்பைத் தொட்டியில் போடற, கார் ஓட்ட விரும்பாத, கையில வாட்ச் கட்டாத, பேங்க் அக்கௌண்ட் பராமரிக்கத் தெரியாத, ஏடிஎம்-ல பணமெடுக்கத் தெரியாத, பளிச்சுனு டிரஸ் போட்டுக்கக் கைவராத, நாளுக்கு எட்டு தடவ டிகாக்ஷன் காப்பி கேக்கற, செத்த கம்மியா சக்கரை போட்டுக்கற..."

"Sto…p it weirdo." ரேஷ்மா அசந்துதான் போனாள். "...எப்டிறா? Bull's eye... ஆச்சர்யமா இருக்கு ரங்கா. எல்லா ஆம்பளைங்களும் இப்டித்தானா? அத வெச்சு சொல்றயா?"

"இல்ல ரேஷ், அபியப் பத்தித்தான் சொல்றேன். எல்லா ஆம்பிளங்களையும் பத்தி எனக்கெப்படி..."

"ஹ்ம்... அபி இப்டித்தான்னு எப்டி சொல்ற? நீ பாத்ததே இல்லயே... Are... Do you know him earlier?. ரெண்டு பேத்தயுமே நம்ப முடியாது... ஃப்ராடுப் பசங்க..."

"அபிய எனக்குத் தெரியாது. ஆனா என்னப் பத்தி எனக்குத் தெரியும் ரேஷ்..." பாண்ட் பாக்கெட்டினுள் கைவிட்டிருந்தான். "...உனக்குப் பிடிச்ச ஆம்பளை எம்போலல்ல இருக்கணும்."

"நெனப்புதான்... so much confidence on yourself, is it?"

"சின்ன வயசுல 'அஃப்கோர்ஸ்'னு பதில் சொல்லிருப்பேன். இப்ப அனுபவம்... நம்பிக்கை என் மேல இல்லை ரேஷ்மா, உன் மேல... உனக்குப் பிடிச்சததான் நீ வாங்கிப்பன்னு தெரியற நம்பிக்கை..." நடக்கும் பாதையை மறித்துத் தட்டுக்கூடையில் ப்ளம்ஸ் பழம் விற்றிருந்தவனைக் கடந்து முன்னால் சென்றான்.

மௌனமாய் நடந்தார்கள்.

ரேஷ்மாவிற்கு மந்தகாசமாய் இருந்தது. எப்படி இத்தனை நிறுத்திருக்கிறான். மூஞ்சிலயே காட்டிர்றேனா? வாயெல்லாம் பல்லா. சே... சிரிக்கறதக் கொறச்சுக்கணும் இவன்ட்ட. இடியட். இவன மாதிரியேவா அபியும்... பிடிச்சேன் பாரு. மனசுக்குள்ள இவனோடதான் கம்பேர் பண்ணிக்கறேனா... சரி சொன்னதே பொருத்தம் பலதும் ஒத்துப்

போனதுனாலயா... சீ சீ... இவன நம்பக்கூடாது... He’s blowing me away... காதல்... இரு இரு யோசி... கையக் கோத்துக்காத... அபி இல்லை இவன்... இவன மாதிரி இல்லை அவர்...

எட்டி நடந்து முன்னால் சென்றவனோடு சேர்ந்தவாறு கேட்டாள் “டேய்... இத்தினி சொல்றயே... நீயும்...”

“இல்ல... அவ உன்ன மாதிரி இல்ல ரேஷ்...”

சிரித்தாள். “டாமிட்... அதுதான் கேப்பேன்னு எப்டித் தெரியும்... இல்ல.. நான் அதக் கேக்கவே வரலை...”

“சரி அது இல்லை. சொல்லலை...”

“இல்ல, சொல்லு... அவ.. ஹௌ இஸ் வேதா?” “அவ உன்ன மாதிரி இல்லை ரேஷ். பெண்தான். சந்தேகமில்லை. கழட்டிப் பாத்தே...”

“சரி போதும். அதக் கேக்கலை...” தோளில் இடித்தாள்.

“பாயறியே... வேற எப்டித் தெரிஞ்சுக்கறதாம்... மனச... வேதா உன்ன மாதிரி இல்லை.”

“நீ மட்டும் என்ன...”

“ஆடி ஆடி அகம் கனிந்து இசை பாடிப் பாடி கண்ணீர் மல்கி, நாடி நாடி நரசிங்கா என்று பரவசத்துல தொழுத ப்ரஹலானைப்போல... பயந்துபோன ஹிரண்யகசிபுவும் நரசிம்ம மூர்த்தியைத்தானே அனுதினமும் நினைத்திருந்தான்...”

“அப்பா... நீ அய்ங்கார் பயங்கறது அப்பப்போ மறந்துடுதுபா...”

***

சின்னக்கடை வீதியில் நடந்து வலப்பக்கம் பெரியகடை வீதிக்குப் போகும் பாதையில் திரும்பி, மீண்டும் சிங்காரத்தோப்பு வருவதற்குள் இடையில் தர்ஹாவிற்கு எதிரில் குறுக்குச் சந்தில் திரும்பி, காவல்துறை, நீதிமன்றம் தவிர்த்து... “இது என்ன தெரியுமா ரேஷ்? நாயக்கர் கால அருங்காட்சியகம். திருச்சியோட மியூஸியம்.” வெளியே வாசலின் இருபுறத்திலும் சிறு பீரங்கிகள் பொருத்திய குட்டையான கட்டடத் தின் முன்னால் நின்றிருந்தார்கள். “உள்ள பாத்துருக்கியா?”

“வேணாம்ப்பா. ஒரே இருட்டு… வௌவால் பறக்கும்… இதுக் குள்ளயா பேசப்போறோம்?” கலவரமாய்க் கேட்டாள்.

“உள்ளே இல்ல, நேர் எதிரே… வெளியே…”

எதிரே தாசில்தார் ஆபீஸ் போன்றிருந்த அரசாங்கக் கட்டடத்தின் முகப்பில் பெஞ்சில் அமர்ந்துகொண்டார்கள். அருகே பெரிய ஆலமரம் விழுதூன்றி நிழலாடியது. அடியில் சிவப்பு மஞ்சள் துணிகள் சுற்றிய நாகச் சிலைகள். எலுமிச்சை குத்திய வேல் கம்பு. குட்டைச் சுவரில் சாய்ந்தவாறு பேசத் தொடங்கினார்கள்.

ரேஷ்மாதான் ஆரம்பித்தாள். “சொல்லு நீ என்னவோ சொல்றேன்னியே… ஆல் ஆர் நத்திங்…”

சொன்னான். நேற்று அந்தி இரவு பின்னிரவு என்று சிந்தித்ததை, அவளைக் காதலித்ததை, மனத்திலும் அவளைக் களையாததை, அமெரிக்கப் புதுவாழ்வில் காதல் என்றால் அன்பும் காமமும் சரிவிகிதத்தில் கலந்துள்ள உணர்வு என்று அனுபவத்தில் உணர்ந்ததை வேதவல்லியுடன் அவ்வுறவை அதன் சரியான எல்லைகளுக்கு இலக்குகளுக்கு முன்னேற்றியதை, ரேஷ்மாவுடன் அதே காதல் இன்னும் தன்னுள் கனன்று கொண்டிருப்பதை, அநாமிகாவின் மரணத்திற்குப் பின்னர் உணர்ந்ததை, நடுவயது வீழ்ச்சி என்று அவ்வெண்ணங்களைச் சில நாட்களுக்கு ஒத்தி போட்டதை, துணிந்து இணையத்தில் அளவளாவத் தொடங்கி அவளுக்குள்ளும் வருடங்கள் கடந்திடினும் அவர்களிடையேயான காதல் உயிர்ப்புடன் இருப்பதை உணர்ந்ததும்… அவள் நேற்றும் இனியும் தழுவிக்கொண்ட முத்தமிட்ட செய்கைகளின் பொருட்சுவையிலேயே அவர்கள் காதல் அடுத்த இலக்கைக் கோருவதை முன்வைத்தே அவளை முத்தமிட்டதை…

“உன்னுடன் உறவுகொள்ள ஏங்குகிறேன் என்றில்லை. விரும்புகிறேன். என்னுடன் உறவுகொள்வதில் உனக்கும் விருப்பமே என்பது எனக்குத் தெரியும் ரேஷ்மா…”
ரேஷ்மா மௌனமாக இருந்தாள்.

அவன் கேட்டதை மறுக்கவும் இல்லை. அவன் வழங்கி யதை ஏற்கவும் இல்லை. அவன் சொன்னவற்றை சிந்தித்திருந்தாள்.

முழங்கால்களைக் கட்டிக்கொண்டாள். நெஞ்சு மெலிதாய் வலித்தது. தாகமாய் இருந்தது.

“இது, இவ்வுறவு இதுவரை தத்துவ ஞானிகளால் விவாதிக்கப்பட்டுள்ளதா என்றறியேன் ரேஷ். யாரோடு வேணாலும் புணரும் hedonism இல்லை இது. மனத்தால் மணந்தவளுடன் உடலாலும் ஒன்றிட விழைகிறேன். ஒன்றிற்கு மேற் பட்டதாய் அவ்வகை உறவு மனிதருள் இருக்கலாம் என்கிறேன்...”

“சமுதாயம், கலியாணம்...” ஏதோ நினைவினில் இருந்து ரேஷ்மா முனகியதில் ரங்கா கடுப்பாகிப் போனான்.

“கருமாதிய விட்டுட்டியே... அதுலயும் ஒண்ணா இருப்பேன். ரெண்டு பேருக்கும் தெவசமும் செய்வேன் ரேஷ். என்னை இங்கு விட்டு இருவருமே போய்டுவாங்க எனின்...”

அவன் பதிலை மட்டும் பிடித்துக்கொண்டாள். “திஸ் இஸ் நாட் நார்மல் ரங்கா... டிஸ்டர்பிங்... not common sense...”

“பதினெட்டு வயது வரையில் நமக்கு நம் பெரியோர்களால் கற்றுக்கொடுத்துக் கேள்வியின்றி ஏற்றுக்கொள்ள வைக்கப்பட் டிருப்பதே பொது அறிவு... சொன்னது, ஆல்பர்ட் ஐன்ஸ்டைன்...”

“இது மாதிரி நெறைய படிச்சிக் கொழம்பிட்ட ரங்கா...”

ரேஷ்மா தனக்குப் பழக்கமான முறையில் தன் மனத்திலுள்ள தவிப்பை வெளிக்காட்டத் தேவையின்றி, எதிராளி அப்போது பேசியதை வைத்தே பேச்சை வளர்த்தித் தொடங்கிய பிரச்சனையில் இருந்து எந்த முடிவும் எடுக்காமல் வெளிவந்து விடும் வார்த்தைப் போரைத் தொடங்கிக் கொண்டாள்.

“நான் நிறைய படிச்சிருக்காட்டா ஒனக்கு என்னைப் பிடிச்சிருக்காது ரேஷ்.”

“கொழப்பாத. ஐம் கன்ஃப்யூஸ்டு...” நிஜம்தானே. நினைத்தாள்.

“நெறையாப் படிக்காட்டாலும் கொழம்பலாம். காட்டற பாரு.”

“திமிரா... போடா... ஒரு டிகிரிக்கே தவிச்சி தலையால தண்ணி குடிச்சேன்... என்னை என்ன வேதான்னு நெனச்சியா...”

சுருக்கென்றிருக்க “இல்லை, ஒன்ன வேதானு நெனக்கலை ரேஷ்மா. கொழப்பிக்காத...”

பாய்ந்தாள். “நீ தான சொன்ன, படிக்காதவ கொழம்பறேன்னு...”

“கமான்... அது... லீவ் இட்...” ஆயாசமானான். அமைதியானான்.

ஆலமரத்தில் பறவைகள் மதிய உணவிற்கு முறையிட்டன.

இரண்டு ஆலிலைகள் ஒன்றன் பின் ஒன்றாய்க் கண்ணுக்குத் தெரியாத காதல் சுழலில் தலைசுற்றியவாறு தரையிறங்கின.

அருங்காட்சியகத்தில் இருந்து இருவர் வெளிவந்தனர். எதிர் சாரியில் கட்டட முன்பெஞ்சில் அமர்ந்திருந்த அவர்களை ஏறெடுத்து ஒருவன் கையில் வைத்திருந்த நோட்டுப்புத்தகத்தில் குறிப்பெடுத்தான். அருகில் நீதிமன்றம் நோக்கி அவர்கள் இருவரும் நடந்தனர்.

ஊரில் எத்தனை இல்புறக் காதலர்கள் என்று ஏதும் அரசாங்கக் கணக்கெடுப்பா? ஈர்க்குகளைக் கிள்ளியிருந்த ரங்கா நினைத்துக்கொண்டான்.
“அது சரி, கேக்கணும்னு இருந்தேன். என்ன திடீர்னு நாவல் எழுதத் தொடங்கிட்ட?” எதையாவது பேச வேண்டும் என்றில்லை ரேஷ்மாவிற்கு. எழுந்த எண்ணங்களை எப்படியாவது பேசாமல் தவிர்த்தால் போதும் என்றிருந்தாள். எவ்வளவு ஆழமாய்க் காதலித்துள்ளான்...

“ஏன் நல்லால்லயா?” ரங்கா வெடுக்கினான். அவனுக்கு ரேஷ்மா பிடிகொடுக்காமல் வேண்டுமென்றே டேக்குவது புரியாமல் இல்லை. அது தனக்குப் புரியாது என்று அவள் இன்னமும் நினைக்கிறாளே என்றே எரிச்சலாய் இருந்தது.

“செ சே... சூப்பரா இருக்கு. அதான் கேக்கறேன். ஆனா ரொம்ப மாடர்னா இருக்கு. பயோ லேப்ல ஓரினச்சேர்க்கை ஆள் ஒருத்தனோட மனசு துடிக்கறதெல்லாம் டோட்டலி அமெரிக்கன் தீம்... ஒன் ஆபிஸ்ல நடந்தத வெச்சு எழுதிருக்க தானே... எத்தன பேருக்கு இங்க அதெல்லாம் புரியும் ரங்கா...”

“ஏன் ஒனக்குப் புரிஞ்சிருக்கே... தவிர இதப் பத்திலாம் எழுதறவன் கவலப்படக்கூடாது. தனக்கு வர்றத நேர்மையா செஞ்சிட்டே போவேண்டிதே. இலக்கியம்னா சமகாலத்தச் சொல்றதும்பாங்க. இதெல்லாம் ஒலகத்துல இன்னிக்கி நடக்கறது தானே. அலசி எழுதி வெச்சா மட்டும் இப்ப இருக்கற யாருக்கும் புரியாதுங்கறது பேத்தல். எத்தன நாளைக்குதான் தமிழ் இலக்கியம் ஆடு மேச்சுக்கிட்டிருக்கறது...”

“ஒனக்கு ஆடு மேய்க்க வராதுங்கற...”

சிரித்துக்கொண்டான். ரேஷ்மாவே தொடர்ந்தாள். மனத்தினுள் இருப்பது தளும்பிவிடாதிருக்க எதைப் பற்றியாவது அவனைச் சீண்டிப் பேச வைத்தால் போதும் என்றிருந்தது.

“காலேஜ்லயே தெரியாமப்போச்சே நீ எழுத்தாளர்னு...”

“அதெல்லாம் கவனிக்கற வாசிக்கற காலம்...”

“அப்பவே எழுதிருந்தாலும் நல்லாத்தான் எழுதிருப்ப...”

“மகத்தான நாவல்கள் பலதும் எழுதினவங்களோட நாப்பது வயசு கிட்ட எழுதப்பட்டவையே...”

“உனக்கு நாப்பது வயசாலியா ரங்கா?”

“சொன்னேன்ல, மகத்தான நாவல் எழுதும்போது ஆகும்...”

“அப்பா... மடக்கிட்டே இருக்காத... ஏன் இப்ப எழுதற... சரியாச் சொல்லு... லைக், எப்டி முடியறது, விஞ்ஞானியா பிஸீ...யா இருப்ப. கூடவே இத எதுக்குச் செய்யணும்?”

“குழும விஞ்ஞானியா இருப்பதுல படைப்பூக்கம் குறைவு. அனுபவிச்சா புரியும். Gets monotonous. Routine...” நிஜமாகவே தெரிந்துகொள்ளக் கேட்கிறாள் என்று விவரித்தான். “...சில வருடங்கள்ள சம்பளத்துக்கான மற்றுமொரு வேலைனு ஆயிடும். தனிமனித மனவெழுச்சிகளுக்கான வெளிப்பாடுகள் சாத்தியமில்லைன்னு இல்லை, வாய்ப்புகள் குறைவு. நீலவான ஆய்வு என்பதெல்லாம் பெரும்பாலும் பேப்பரில்தான். காலக் கனிம இழப்புகள் வராத, போட்டி பொறாமைகளினால் பின் தங்கிவிடாத, சேதாரங்களைக் கூட்டிவிடும் தவறுகள் இல்லாத, வர்த்தகப் பேரிழப்புகளில்லாத சராசரி முன்னேற்றப்பாதையே குழும விஞ்ஞானப் பாதை. குழும விஞ்ஞானச் சட்டகத்தின் எதிர்காலம் நிர்ணயமாவது தனி விஞ்ஞானிகளின் தொலை நோக்குக் கருத்தாக்கங்களால் இல்லை. பதவிக்காலம் முடிவதற்குள் எண்ணிக்கை ரீதியாக வெற்றிகளை அறுதியிட்டுக் காட்டிக் கொள்ள வேண்டியவர்களால் நிர்ணயமாகிறது. பச்... அதை விடு, தனி டாபிக். நீ என்ன கேட்ட? யெப், ஏன் எழுதறேன்...

எனக்குத் தனிமனித வெற்றிகள் வேண்டும் ரேஷ்மா. என் சுயத்தை அறியக்கூடிய, என் சுயம் தழைக்கக்கூடிய வெற்றிகள். எவனுக்கோவான டாலர் எண்களால் என் வெற்றியை உணர முடியாது.

விஞ்ஞானம் ஆய்வு சார்ந்து நான் படித்த பின்புலத்தில் என்னால் இப்போது கணிதத்தில் மட்டுமே தனிமனித ஆக்கங்களைத் தேட முடியலாம். அது சம்பாத்யத்தை கொடுக்கும் வேலையில்லை. ஆத்மதிருப்திக்குச் செய்யலாம். பரிசோதனைகளற்ற பேப்பர் பௌதீகம் பயனற்றது. மாயாவிநோதப் பரதேசியாகிவிடுவேன். யோசித்துப் பார்த்தால், இலக்கியத்தில் மட்டுமே இன்னும் பெரிய அளவில் குழும எழுத்தாள ஆக்கங்கள் வரவில்லை. இசைக் குழு, சினிமா, கட்டடக் கலை, கோயில் என்று இன்றைய விடியோ கேம்ஸ் அனிமேஷன் துறை வரை பல கலைகளும் குழும ஆக்க முயற்சிகளுள் சென்று விட்டன. சிற்பக்கலை பாத்ரூம் கம்மோடுகளை கலை என்று கவிழ்த்துவைத்துக் கவுந்துவிட்டது. ஓவியக்கலை போட்டோ ஷாப் மாயைகளுக்கிணங்கிச் சிறுமைப்பட்டுவிட்டது. சமையல் கலை உள்ளது. ஐந்து நட்சத்திர ஓட்டலில் பன்னாட்டு உணவு சமைக்கத் தெரிந்த ‘சீப் செஃப்’ பிற்கு ஏக டிமாண்ட். ரேட்டடூயீ போல... நானே இட்லிக்கடை ஆரம்பிக்கலாம் என்றும் திட்டம் வைத்திருக்கிறேன்...”

“வெளயாடறயா? சீ... இத்தன படிச்சுட்டு... நீ சமைப்பியாடா?” அப்பாடா, மீண்டும் வேறு ஏதோ டாபிக். என்னை மனத்தாலும் களையாதவன்... விருப்பமா... ஏன் இத்தனை குழப்பம் இதில். காதலிப்பது நிஜம்தானே...

“ஷுர். இதுல ஒனக்கென்ன சந்தேகம். படிச்சவன் சமைக்கக்கூடாதா? நல்லாவும் சாப்பிடுவேன்.”

“அபிகிட்ட சொல்லணும். ஒடம்பப் பாத்தா தெரியலையே...”

“நல்லா சாப்டறதும் நிறைய சாப்டறதும் வேற வேற ரேஷ்...”

“ஏய், என்ன சொல்ற நீ? நல்லாருந்தா நிறைய சாப்பிட மாட்டாங்களா?”

“நல்லா காதலிக்கறவங்க நிறைய காதலிப்பாங்களா?”

“... ... ...” குபுக்கென்று கண்ணீர் பெருகியது. திரும்பி ஆல மரத்தை நோக்கினாள். சே... PMS சனியன்... கண்ட்ரோல்...

“என்ன பேசாம நிறுத்திட்ட?”

“அப்பப்ப இப்டி எதையாது சொல்லிக் கவுத்துர்ற... அடுத்ததா என்ன பேசறதுன்னே... கொஞ்சம் ஃபீலிங்ஸ் காட்டவுடுப்பா...”

“ஸோ... அதான் காரணம். எழுதறத்துக்கு. தனியா என்னோட முயற்சில

என்னோட படைப்பூக்கம் எப்படி வருதுனு பாக்க ஆசை... அதான் எழுதறேன்...”

“சுய திருப்தி?”

“சுய ஏமாற்றுனும் சொல்லலாம்.”

“சே... You do write well. ஏன் யாரும் சொன்னதில்லையா?”

“நல்லா இல்லேன்னா ஒடனே சொல்லிடுவாங்க. கப்சிப் புனு இருக்குன்னா, நல்லாத்தான் எழுதறேன்னு நானே புரிஞ்சுக்கணும், அதான் இலக்கிய உலகம். ஆக்சுவலா, அதான் உலகம்...”

ரங்காவுக்கு கொட்டாவி வந்தது. பசி? என்ன நேரம்?

நேற்று கோயிலில் ஓரங்கட்டினாள். இன்று என்னை எதையோ பேசவிட்டு இவளே ஒதுங்குகிறாள். இப்போது அவள் மனசில் நான் அபி அளவு உயர்ந்துள்ளேனா, தாழ்ந்து விட்டேனா?

“ரேஷ்மா, எதாவது சாப்பிடப் போலாமா...”

***

தில்லை நகர் பக்கம் சென்றுகொண்டிருந்த காரை ‘ஸ்நாக்ஸ் தானே கேட்ட... This will do என்றவாறு ஓரங்கட்டினாள்.

“எங்க கொண்டுவந்து நிறுத்திருக்க?” ரங்கா கடையை நிமிர்ந்து கவனித்தவாறு உள்ளே நுழைந்தான். “‘மாரி ப்ரவுன்’னா... ஏன் கொஞ்சம் வெள்ளயா இருந்தா பண்ணிக்க மாட்டியா என்ன?”

இருவருக்குமே ஆயாசமாய் இருந்தது. அடுத்தவரின் உற்சாகத்தில் பங்குபெற்றிருந்தனர்.

“கடிக்காதடா... பசி நேரத்துல...”

“பசிச்சா கடிக்க வேண்டியதுதானே... பைதிவே இங்க சிக்கன்தான் நன்னா இருக்கும்...”

“நான்-வெஜ் சாப்பிடுறதை நான் நிறுத்தி வருஷமாயிருச்சி.”

“எப்போலேந்து இந்தக் கெட்ட பழக்கம்?”

“எல்லாம் ஒனக்கு ரூட் போட்டதாலதான்...”

இருவருமே உடற் பேணலில் ஒரு சுற்று பெருத்து, மனப் பேணலில் ஒரு சுற்று இளைத்து விட்டோமோ... ஊர்வன பறப்பனவற்றைக் கொன்று தின்பது பாவம் என்று கருதுகிறாள் இன்று. அவற்றிற்குத் தப்பியோட இருக்கும் வாய்ப்பையுமே பெற்றிறாத தாவரங்களை அதற்கென்றே வளர்த்து மனிதன் உண்பது மட்டும் சரியா என்கிற எதிர்ப் புள்ளியில் நானின்று.

ரங்கா இருவருக்குமே வெஜ்-பர்கர் தருவித்தான்.

போனில் ஆபிஸ் வேலையாக ரம்மி சும்மி என்று பட்டப் பேர்கள் சொல்லி கறாராகச் சில நிமிடங்கள் குழைந்திருந்தாள். ரங்காவும் கிகி-யுடனும் நேற்றிரவு அன்னமிட்ட ஸ்ரீரங்கம் சகாவுடனும் போனில் ஒரு வட்டம் பேசினான்.

“நாம நண்பர்களா இருப்பமே ரங்கா...” பர்கர் விள்ளலை அதக்கியவாறு புதுக் கோணத்தில் தொடங்கினாள். அவளுக்கு நட்பு என்பது தெளிவாகப் புரிந்துகொள்ளப்பட்டு சமுதாயத் திலும் காலகாலமாய் ஒரே தராதரத்தில் இருக்கும் உறவு. தொடர்ந்தாள்.

“...நாம நண்பர்கள்னா எத்தினி நல்லா இருக்கும்” அவன் மறுத்துத் தலையாட்டுவதைக் கண்டு “...வேற என்ன இது? ஃப்ரெண்ஸ் மாதிரி ஒன்னோடவும் ஜாலியா ஊர் சுத்தறதுக்கு நான் ரெடி. பிடிச்சுருக்கு... விட்டுக்கொடுக்கறதா இல்லை...”

ரங்கா கையில் இருந்த பர்கரை சிவப்பு பிளாஸ்டிக் தட்டில் வைத்துவிட்டுப் பதிலளித்தான் “நான் உன் நண்பன் இல்லை ரேஷ்மா. ஐ லவ் யூ.” அவன் குரலின் தீர்க்கம் அச்சுறுத்தியது.

“அப்டீனா ஃப்ரெண்டா இருக்கக்கூடாதா?”

“நட்பா மட்டும் இருக்கச் சொல்ற. அதுதான் நானா இத்தனை நாளும் ஒனக்கு? கண்ணப் பாத்துச் சொல்லு...”

“ஆமான்னா என்ன செய்வ?” கண்கள் பர்கரை முறைத்தன.

“நான் நண்பர்களோட ஊர் சுத்தறவன் இல்லை. அவங்க கூப்டாங்கன்னு முக்கியமான எனக்குப் பிடிச்ச வேலயெல்லாம் விட்டுட்டு அமெரிக்காலேந்து ஒரு வார அறிவிப்புல பொண்டாட்டிக்குத் தெரியாம பறந்துவந்து, தக்கல்ல டிக்கெட் போட்டு திருச்சில தெருத்

தெருவா பொழுதப் போக்கறவன் இல்லை...” அவன் கோபமாய்க் கடித்ததில் பர்கர் சிவப்பு ஸாஸ் உமிழ்ந்தது.

“ஆமா. ஸாரி. நான் தான் வரச்சொன்னேன்...”

“அதுல பிரச்சினை இல்லை. அதை நண்பர்களுக்காக நான் செய்யமாட்டேன்.”

“சொல்லிருக்க வேண்டிதானே...”

“நிச்சயமா. நாம் நண்பர்கள்தான்னு நீ சொல்லு, அடுத்த தடவ நிச்சயம் சொல்லுவேன்.”

“... ... ...”

“ஏன் பேசாம இருக்க? Show me where we stand...” நேத்திக்கி கோயில்ல ஒதுக்கிவெச்சா மாதிரி... என்று முடிக்க வந்ததை மனத்தினுள் கரைத்தான். இல்லை, அங்கு அவள் செய்ததுதான் சரி என்று பகுத்தறிவு எச்சரித்தது.

“ரங்கா... நீ சொல்றது எல்லாமே புரியுது. ஒன்னோட லவ், ரெண்டு பேர லவ் பண்றது அவ்ளோ தப்பானு நீ கேக்கறது... ரெண்டு பேர்ட்டயும் நீ கடைசி வரைக்கும் உண்மையா இருப்ப... நீ சொல்லவே வேண்டாம். எல்லாமே புரியுது. ஆனாலும் எனக்கு... ஸொசைட்டியோட அடித்தளத்தையே ஆட்டிட மாட்டோமா ரங்கா... அட்லீஸ்ட் நெருங்கினவங்கள ஹர்ட்...”

முடிக்க விடவில்லை அவளை. பர்கரை முக்கால்வாசி முடித்திருந்ததில் தெம்புடன் இருந்தான்.

“சமுதாயம் ஒப்புக்கொள்ளுமா. சமுதாயம் என்பது சூழலின் நிர்பந்தங்களில் அன்றையவரையில் ஏற்புடையதாகிவிட்டதை ஏற்றிச் சுமக்கும் காலப் பச்சோந்தி. பச்சோந்தியின் அங்கங்களுக்குத் தெரியாது அவற்றின் அன்றைக்கான நிறங்களைப் பற்றி. நிறங்களின் அறிவியலும் வரலாறும் பச்சோந்திக்குப் பொருட்டல்ல. அன்றைய சூழலுக்கேற்ப நிறம் மாறிக் கொண்டிருப்பதே சமுதாயப் பச்சோந்தியின் வாழ்வாதாரம். சூழலுக்கேற்ப நிறம்மாறத் தெரியாத பச்சோந்தி செத்து விடும்.

அன்றுவரையிலான சட்டதிட்டங்கள் வகுப்பதே அன் றைக்கான வாழ்க்கை என்றாகாது. அதனை வருங்காலத்திற்கும் தக்கவைப்பதற்கான சட்டதிட்டங்களை அன்றைக்கான வாழ்க்கையே

உருவாக்கிக் கொண்டுவிடும். இலக்கணம் இழுத்து வகுப்பதல்ல இலக்கியம். இலக்கியம் எகிறி வரைவதே இலக்கணம்.

நான் இருவரைக் காதலிக்கிறேன். அவர்களும் என்னை அவ்வாறே. இருவருடனும் உறவுகொள்ள விழைகிறேன். இருவருக்கும் உண்மையாய் இருப்பேன்.”

“உன்னுடன் உறவு கொள்ளவதைக் கனவிலும் நினைக்க வில்லை...” என்று ரேஷ்மா ஆங்கிலத்தில் இடைமறித்ததைக் கவனியாது தொடர்ந்தான். காம வேட்கை அவனுள் குறைந்து விட்டிருந்தது. அவனுடைய காதலின் நியாயமும் நேர்மையும் மட்டுமே இச்சமயத்தில் மிஞ்சி இருப்பதாய்த் தோன்றியது.

“இது சமுதாயச் சட்டங்களை மீறும் செயல் என்றால், ஒருவருடன் திருமண உடன்படிக்கையில் இருக்கிறேன். இன்னொருவருடன் காதல் உடன்படிக்கையில். இதிலிருந்தபடியே இன்னொரு திருமணம் செய்யமாட்டேன் என்றுதான் திருமணமானவருடன் இந்து சமுதாயச் சட்டம் கோரும் உடன்படிக்கை. வேறு எவரையும் இனி நேசிக்க மாட்டேன் என்பதல்ல. ஒருத்தி பெண்டாட்டி இன்னொருத்தி வைப்பாட்டி என்றால் அவை சமுதாயம் தன்னைத் தக்கவைக்க விசிறும் பட்டங்கள். அவமானப்படுத்தினால்தான் பெண் பயந்து அடங்குவாள் எனக் கருதி. யாருக்குப் பயந்து? இருவரால் நேசிக்கப்படும் அப்பேறு தங்களுக்கு அமையவில்லையே எனப்படுவோருக்குப் பயந்து. யாருக்கு அடங்கி? பெண் வீடு தாண்டினால் தன் நிலை என்னவாகும் என்று பதைக்கும் காதலிக்கத் தெரியாத, கலியாணம் பெற்றுத்தரும் பெண்சுகத்தை விட்டுக்கொடுக்க இயலாத ஆண்களுக்குப் பயந்து. இப்படியாகிய வைப்பாட்டி பட்டத்தைப் பெண்களே பெண்களுக்குக் கொடுக்கத் தயங்காத இச்சமுதாயத்தின் சரிபாதி பெண்ணுரிமை பேசுகிறது.

எனக்கு இருவரைப் பிடித்துள்ளது. என்னைப் பொறுத்த வரை இருவரும் என் காதலிகள். எதிர்த் திசையில் சொன்னால் என் காதலி இன்னொருவன் மனைவியே. கணவன் அவளுக்கு ஆண்டாட்டி என்றால், நான் அவளுக்கு வைப்பாட்டன் (husband versus mister?) தானே. மாற்றான் மனைவியான என் காதலிக்கு நான் மிஸ்டர் தானே, அதை ஆண் நான் இச்சமுதாயப் பின்புலத் தில் ஏற்றுச்செல்வேனா அவளுக்கு வைப்பாட்டன் (மிஸ்டர்) என்பதால் கூசுவேனா என்பதைப் பற்றி சரிபாதி ஆண்கள் கொண்ட இச்சமுதாயத்திற்குக் கவலையில்லை. அவ்வாறான சமவுரிமை பற்றிப் பெண்ணுரிமைவாதிகளுக்குப்

பொருட்டில்லை. ஆண்களுக்கு வெட்கமில்லை.

யுகாந்திரமாய் உருமாறிவரும் மனித நாகரீகப் பெருங்கால நிறமாலையில் சற்று முன்னர் வரை பால்ய விவாகத்தை ஏற்றிருந்ததும் இச்சமுதாயந்தான். அந்தப் பாலகியை உடன் கட்டை ஏற்றியதும் இச்சமுதாயந்தான். பிடித்தவளை உரிமையுடன் கவர்ந்து செல்லும் காந்தர்வம் உட்பட ஐந்து வழியான விவாகங் களை விதந்தோதும் ஸ்ம்ரிதியை ஆக்கியவனான மனுவும், சாமான்யனென்ன சித்தார்த்தனென்ன காதலும் காமமும் மனித குலத்திற்கே கூடாது என்ற புத்தனும், சம்சாரத்தைச் சகியாமல் சென்மத்திலெதற்கோர் சந்நியாசம் என்ற சடகோபனும் தோன்றியது பழைய பஞ்சாங்கம் என்று நாம் கருதும் சமுதாயத்திலிருந்தே. அவரவர் காலகட்டங்களில் சமுதாயத்தில் பழையன களைவதற்கு அவரவர் யாத்தவை சீர்திருத்தங்களாகிவிட்டனவா? யாவற்றையும் ஏற்றுக்கொண்ட சமுதாயம் முன்பிருந்ததைவிடப் புதிய பச்சோந்தியா? மாறும் அதன் நிறங்கள் மட்டுமே புதியனவா? நிறங்களில் புதியன பழையன என்றுண்டா? அனைத் துமே சமுதாயப் பச்சோந்தியின் அங்கங்களான மனிதகுல உறவெனும் நிறமாலையினுள் அடக்கமே.

ஞானிகள் காலத்தின் மறுதினம் இக்காலச் சமுதாயம் நம்மைக் காதலிக்க மட்டும் சொல்லியதா என்ன? அதையுந்தானே தவறென்றது. ரங்கா ரேஷ்மா என்கிற தற்கால சமுதாயத் துகள்கள் நாமிருவர் கல்லூரிப் பருவத்தில் நம் காதலை அன்றைய 'புதிய' சமுதாயம் வெறுப்பதாய்தான் கலங்கினோம். அப்படியே காதலித்துத் தொலைத்துவிட்டால் திருமணம்தான் என்று சொல்லியதா ஞானிகள் சீர்திருத்திய அந்தப் புதிய சமுதாயம்? வாயால் சொன்னதற்கே ரங்கா இவன் அம்மா கிணற்றில் குதிக்கிறேனென்றாள். ரேஷ்மா நீ சொல்லியிருந்தால், உன் தந்தை அரிவாளுடன் கிளம்பியிருப்பாரோ என்னவோ. காதலித் தவளைக் கடமையாய்க் கைபிடிக்கறேன் என்றதற்கே இருபது வருடங்கள் முன்னர் அன்றைக்கான சமுதாயம் ஏற்காது என்றார்கள் சமுதாயத்தின் மூத்த பிரதிநிதிகள். இன்று, நேற்று கைப் பிடித்தவளுடந்தான் இனியும் இருப்பேன் என்கிறேன்; முந்தா நாள் காதலித்தவள், கலியாணம் செய்யாமல் காதலியாகவே விட்டவளை, இன்றும் காதலிதான் என்கிறேன். இந்த உறவு நிலைகளையும் இன்றைய சமுதாயம் ஏற்காதென்கிறாய்.

ஒன்றுக்கும் மேற்பட்டவருடன் நேசமாய் இருப்பதையே பொறுக்காத சமுதாயம் கூட்டுறவைப் பேணுவதற்கே அச்சகிப் பின்மையால்

முயலுவதாய் எவ்வாறு நாம் கொள்வது? மானுட வெறுப்பெனும் மாநரகுக்கு வழிகோரும் இப்பாதை எங்குமே கள்ளம் பழகாக் காதலர்களுக்கு இடமில்லை."

"இதெல்லாம் அப்டியே வர்றதுதானில்ல..." சாப்பிட்டு முடித்திருந்தவள் கையையும் முகத்தையும் பரிதாபத்தைக் கூட்டும் அறிகுறிகளில் வைத்தபடி கேட்டாள். "...உன் நாவல்ல வர்றா மாதிரியே பேசற... யோசிக்கறச்சயே வாக்கியங்களாத் தான் செய்வியாடா?"

இடைமறித்த ரேஷ்மாவின் தரைதட்டிய கேள்வியினால் ஒரு கணம் புரியாமல் வியர்த்து அமைதியாய் இருந்தான் ரங்கா.

"சே சே ஒன்னோட இருக்கறதால அப்டி ஒரு ஃப்லோ. அதுக்குதான் இவ்ளோ கிட்டக்க ஒக்காறாதங்கறேன்..." கருத்துகளாய் தான் இத்தனை பேசியதற்கு இதுதான் பலனா என்றிருந் தாலும், ரங்காவும் காதலியிடம் சுதாரித்துக்கொண்டான்.

இனி சொல்வதற்கு ஒன்றுமில்லை. அவள் இஷ்டம். அவள் முடிவு. சிறிது நேரத்தில் இரண்டு நாட்களில் இரண்டாம் முறை யாக அவள் காரினுள் ஒலித்த காதலிசைக்கு தாளம் தட்டத் தொடங்கினான்.

கார் ஸ்ரீரங்கம் நோக்கி விரைந்தது.

# 13

ஸ்ரீரங்கம். மறுதினம் மதியம்.

காதல் அன்புதான் சந்தேகமில்லை. அன்பு மட்டுமில்லை.

பெண் காதலி மட்டுமில்லை, மனைவியும்தான்.

காதல் காமமும்தான் சந்தேகமில்லை. காமம் மட்டுமில்லை.

பெண் காதலி மட்டுமில்லை, தாயும்தான்.

மன ஊஞ்சல் ஆவேசமாய் அதன் வீச்சுப் புள்ளிகளை இரு உடற்கூடுகளையும் கடந்து எட்டுகையில்தானே அதில் ஊசலாடுவது தங்கள் காதல் என்பதை அவ்விரு மனங்களாலும் உணர முடிகிறது. கார் எதிர்காலத்தை நோக்கி விரைகையில் அதனுள் மனங்கள் இரண்டு எதிர்த்திசையில் நினைவுகளில் தவ்வியிருந்தன.

“ஒங்கிட்ட இதச் சொல்லித்தான் ஆவணும்... நீ இவ்ளோ அருமையா காதலிச்சிருக்க, அதுக்காவாது... உறவில் நேர்மைனு பேசிட்டே இருக்க... நானும் கொஞ்சமாச்சும் அட்லீஸ்ட் தோண்ற எல்லாத்தயும் இல்லேன்னாலும் நிச்சயமா இந்த விஷயத்த சொல்ல முடியும்... இது நடந்து முடிச்சது...”

“சொல்லு...”

“ஞாபகமிருக்கா... பூனால என்னோட முதல் வேலைல என் பாஸ்... இங்க ஒருவாட்டி வீட்டுக்கு கூட வந்துருக்கான்... நீ ஸ்ரீரங்கத்துல இருக்கறச்சேதான்...”

ரங்கா ஆமோதித்துத் தலை யாட்டுவதைக் கண்டு காரின் வேகத்தை மிதப்படுத்திப் பேச்சைத் தொடர்ந்தாள். “நாம அப்ப பிரிஞ்சுட்டமா இல்ல விட்டுக்கோ தொட்டுக்கோனு இருந்தமா தெரிலை, நீ அமெரிக்கா போகப் படிச்சிட்டிருந்த, நான் லீவுக்கு வந்தேன்... அவனயும் கூட்டிட்டு...”

“ஆமா, பாடி பில்டர் தானே... சொல்லு...”

“அவன் எனக்கு முத்தங்கொடுத்துருக்கான். தெரியுமா.”

முதல் கணம் இதைச் சொல்ல ஏன் இவ்வளவு திணறினாள் என்றிருந்தது

ரங்காவுக்கு. அடுத்த கணம் பரிதாபப்பட்டான். மூன்றாவது கணத்தினுள் ரேஷ்மா பேச்சைத் தொடர்ந்தாள்.

"...எப்பனு தெரிலை. Raking my brains. நீ ஒருத்தரையும் உன்னைத் தொட விடறதில்லைன்னேல்ல. அதுலேந்து எனக்கு இத ஒங்கிட்ட சொல்றதா வேணாமான்னு கொழப்பம்... இப்ப நீ என்ன சொல்லுவியோன்னு... ஒன்ன ஹர்ட் பண்ணுவேனோன்னு... என்னப் பத்தி நீ என்ன நெனப்பேன்னு... பத்தியா சிரிக்கற... You are making this worse..."

"இல்லை நீ செஞ்சதுக்கு சிரிக்கலை... something else... வேற..."

"சொல்லு... ப்ளீஸ்..." ரோட்டை விட்டுத் திரும்பி அவன் தொடையில் கையூன்றி முகம் ஏறெடுத்தாள்.

"யா யா, சொல்றேன். ரோட்ட கவனி. மொபெட்ல வீட்டுக்கு அண்ணங்கிட்ட டியூஷனுக்கு வருவாளே தெரியுமா?"

"யெஸ்... ஒன்னயே லவ்ஸ் அடிச்சாளே... உன் உறவுக்காரி தான... எங்கருக்கா இப்ப?"

"அவதான். அப்ப... நீ சொல்ற இந்த முத்தமிடல் படலம் போதுதான் இருக்கணும்... பைஞ்சு வருஷம் முன்னாடி இல்லையா..."

"Leave that dating now... விஷயத்த சொல்லித்தொலை..."

இவனும் என்னைப் போலவே... ஐயோ நல்லதாப் போச்சு. சீ வேணாம். என்னைக் காதலிச்சப்பவே அவளயுமா... நோ. தான் அது மாதிரின்னு இப்போ சொல்லித் தொலைக்கக் கூடாதே. Don't let me down ரங்கா...

"இல்ல... அவளும்... முத்தமிடச் சொல்லிருக்கா... நான் ஒன்ன நெனச்சுட்டு மாட்டேனுட்டேன்... கோச்சுண்டா..."

ரேஷ்மாவிற்கு அழுகையில் மூக்கு துடித்தது. ஆனந்தத்தில்... குனிந்து மூக்கைச் சிந்தினாள்.

"ஏய்... ஏய்...ரோட்ட கவனி." ரங்கா பதற்றமாய் சிரித்தான்.

"எதுக்கு சிரிக்கற... இடியட்... You made this worse for me." நீ மனத்தாலும் என்னை மொலஸ்ட் செய்யக்கூடாது என்றிருந் திருக்கிறாய். நான் உடலாலும் உன்னை வீழ்த்திவிட வேண்டும் என்று ஏதேதோ செய்து பார்த்திருக்கிறேன் ரங்கா...

“சே சே... ஒன்ன வெறுப்பேத்தச் சிரிக்கலை ரேஷ். விடு. இதெல்லாம் அந்த வயசுக் குழப்பங்கள். நீ மட்டுமா, நான் மட்டுமா, வயசுல அப்டித்தான் நடந்துப்போம்...”

உன் காதல் ஆழமானது. அதைச் செயல்படுத்தத்தான் முனையவில்லை இருவருமே... காலேஜ் நாட்களில்... “இல்லை ரங்கா... அப்பகூட எனக்கு நீதான் வேணும்னு கண்டிப்பாத் தெரியும். நீ என்னைச் சரியாக் கண்டுக்கறதில்லைன்னு கடுப்புல ஒன்னப் பழிவாங்கறதா நெனச்சுட்டு அவன...”

இப்போது ரங்கா பெரிதாகச் சிரித்தான்.

பொங்கிவந்த கண்ணீரை ரேஷ்மா அடக்கிக்கொண்டாள். கையெடுத்துக் கைக்குட்டையினால் கண் இமை மேலாய் ஒட்டி ஈரக்கசிவை ஒற்றியெடுத்தாள். ஸ்டியரிங் வழுக்கியது.

ரங்கா ஏதோ பேசிக்கொண்டிருக்கிறான். சீர் அப். அவன் தானே முத்தமிட்டான் என்று... “நானுந்தான் வேறு பெண்களுடன் பழகியிருக்கிறேன், இடைப்பட்ட காலங்களில். இன்று மனைவியோடு இல்லறம் நடத்துகிறேன். இதில் என்ன செய்ய முடியும். ஆனால் இன்றுவரை நீ சம்மதிக்காமல் உன்னை மனத்தாலும் நெருங்க நினைக்கவில்லை. ஆனால் இந்த இரண்டு மாதங்களில் நீயும் என்னைக் காதலிக்கையில் இன்று அதன் வெளிப்பாட்டை... வெல், அதான் காலம்பறயே சொல்லிட்டேனே... சொல்றதுக்கு ஒண்ணுமில்லை ரேஷ்... ஐ லவ் யூ...”

இங்கேயே காரை ஓரமாய் நிறுத்திவிட்டு இவனை இப்படியே காரினுள் கிடத்தி... உடல் பரபரப்பதை ஒவ்வொரு மூச்சிலும் ரேஷ்மாவினால் உணர முடிந்தது. என்னைவிட இவன் தான் என்னை அதிகம் காதலித்துள்ளானா? இன்றும் அதற்கு நான் அருகதையானவளா. எதனை எதிர்த்து மனம் ஜெயிக்கின்ற தோ அதனிடமே அடுத்த கணத்தில் விரும்பித் தோற்றுத் தஞ்சமடையத் துடிக்கிறதே... யாருக்கு அருகதை என்பதாய் இப்போது என்ன கவலை. தீண்டும் இன்பம் தோன்றுதடா நந்தலாலா...

“உன் ரூமுக்குப் போய்டலாமா ரங்கா?”

நொடிப் பலவீனத்தில்... ஐயோ என்ன சொல்லிவிட்டோம்... நோ... அபி? இல்லை... வேதா? To hell with her.

பரபரப்பில் தன்னிச்சையாக மிதித்திருந்த ஆக்ஸிலேட்டரினால் மாம்பழச்சாலையின் காவிரிக் கரையொட்டிய சாலையில் வலப்புறம் திரும்புவதற்கான அணைந்தெரியும் விளக்கொளியுடன் வேகம் குறைந்த மோட்டார் பைக்கை அபாயகரமாய் முந்தி... சுதாரிப்பதற்குள் பைக் வலப்புறம் காரை நோக்கித் திரும்பி விட, க்ரீச்... பிரேக் பிடித்து அவளும் வலப்புறம் ஒடித்து, எதிர் சாரியில் நடந்துவந்த பெண்மணியை உரசித் திருப்பி...

காரின் உள்ளே வெளியே எவ்வித ஆபத்தும் நேர்ந்திருக்கவில்லை. ஒரு நிமிட மௌனத்திற்குப் பிறகு மிருதுவாய் அருகில் அமர்ந்திருந்தவன் கை அவள் கையில் வருடியது.

“என்னாச்சு... Are you ok...”

“தூக்கம் வருதுடா... தூங்கிட்டு அப்றமா சுத்தலாம்... அதான் கேட்டேன்... ஒன் ரூமுக்கு வந்து தூங்கட்டா? I need my seven hours daily... அப்பறமா கோயிலுக்கு...”

“ஓரமா நிறுத்து ரேஷ்மா.” விபத்தைத் தவிர்த்த கணத்திற்கு முன் கணத்தில் அவள் கண்கள் கேட்டது வேறு தூக்கத்தை. இதுகூடத் தெரியாத மடையன் என்று... பொய் சொல்றியே ரேஷ்...

“நேத்து ராத்திரி நீ பதிலே போடலியா. லேட்டா தூங்கினேன்...”

ஒன்றும் பேசாமல் இறங்கிக்கொண்டான். “வீட்டுக்குப் போய் தூங்கிட்டே வா... நான் முழிச்சிண்டுதான் இருப்பேன். எனிவே எங்க பழைய வீட்ட ஒரு எட்டு போய் பாத்துட்டு ரூமுக்குப் போறேன்... போனதும் அம்மா பொலம்பித் தீத்துடு வாங்க...”

“இந்த வெயில்ல எப்டி...”

கையெடுத்து அவள் கரிசனத்தை மறித்தான். “தட்ஸ் ஓகே... நீ எழுந்ததும் போன் பண்ணு... காத்திருப்பேன்...”

அம்மா மண்டபம் ரோட்டில் மங்கம்மா நகர் நோக்கி நடக்கத் தொடங்கினான், அவள் கார் வந்தவழியே சுற்றித் திரும்பி வேகமெடுத்து ஒலி மங்குவதைக் கேட்டவாறு.

***

ஒரு வீட்டின் முன் ரங்கா நின்றுகொண்டிருக்கிறான்.

நினைவுகளில் ஒல்லியாய் இருந்தது இன்று ஒரு சுற்றுப் பெருத்து வேறு கட்டடம் போல். அவன் வாழ்ந்த வீடு உருத் தெரியாமல். முகப்பே வேறுமாதிரி ஆகி, வேறு வேடத்தில்.

ஏதோ பாடசாலைக்கு அல்லவா விற்றிருக்கிறேன் என்றனர். இங்கு... அபிநந்தனக் குடில்... புதுப் பெயரோடு...

உள்ளே முன்போலவே இருக்குமா? அன்று வழங்கிய நிம்மதியை, சுகத்தை இன்றும் வழங்குமா? தயங்கி நிற்கிறான் அதன் முகப்பில். உள்ளே செல்லலாமா? எந்த உரிமையில்? பிறன் மனையல்லவா. சொல்லலாமா, நான் முன்னால் வசித்த வீடு என்று. அதனால் உரிமை உண்டா, உள்ளே சென்று படுக்க.

எங்கு நோக்கினும் வயதாவதை ஆமோதித்து அனுசரணையாய்ப் பேணுகின்றோம். பழைய கட்டடம், பள்ளி, வாத்தியார், வாத்தியம், சிலை, சிற்பம், மொழி, நட்பு, வேட்டி, வைன், வலி, புத்தகம், புளியோதரை, சோறு... அனைத்திலும் பழையதில் உன்னதம் காண்கின்றோம். காயத்தையும் காதலையும் பழைய இளமையிலேயே வைத்திருக்க விழைந்து தோற்கிறோம். மாறியது பழைய வீட்டின் முகப்பு மட்டுந்தானா? இவ்வீட்டில் இனி அவனது எண்ணங்கள் நிலைபெறுமா? இது புதிய வீடல்லவா. அவனது அன்றே போய்விட்டதே, இன்னொருவனுக்கு விற்ற அன்றே. இல்லை ரங்கா கைவிட்ட அன்றே... விட்டு அமெரிக்கா சென்ற அன்றே. இனி அவன் உரிமை என்ன அதில்? நினைவேக்கங்களில் ஏறுகட்டவேண்டிய நினைவுச்சின்னம்.

புதிதாய் பெயிண்ட் அடித்து... இன்று யாருடையதாகி விட்டது? இது கோரும் விலையை இனி என்னால் தர முடியுமா?

பொட்டை வெயிலில் பார்வை மங்கியது.

முறுக்கு மாமியின் மாடி அறை ஏஸியில் வியர்வை குளிர்ந்தது.

ஒலித்த ஐபோனை இரண்டு தினங்களில் இரண்டாம் முறையாக ரேஷ்மா என்று எண்ணி ஏமாந்தான். அண்ணன் எண்.

“சொல்லும்மா...”

அதிலும் ஏமாற்றம். அம்மா இல்லை. கனைப்பிற்குப் பிறகு இளமை அதிகாரம் உரிமையுடன் ஒலித்தது “ரங்கா...”

“ஓவ்... மன்னி... சர்ப்ரைஸ்...” உள்ளத்தின் மலர்ச்சி நட்புறவினால் என்பதைக் கருதி ஏற்றது குழப்பத்தில் இருந்த காதல் மனம். அதற்கும் முன்னரே ஆசுவாசத்தைக் கோரி அது அவளது அனுபவத் தோளில் சிந்தை கழன்று சாய்ந்து விட்டிருந்தது.

“ரேஷ்மா வந்திருக்கறாப்ல... லூட்டிதானா...” மன்னி நேரடியாய் தான் பேச வேண்டியதற்கு வந்துவிட்டாள். காலையில் அம்மா அவனுடன் பேசுகையில் கேட்டிருப்பாள். இவளிடம் மறுத்துப் பயனில்லை. அடுத்து அண்ணன் கூப்பிடுவான். ஆடிட்டர் அறிவுரை வழங்க... போனில் ஆமோதித்தான்.

“படவா, என் இட்லியதான் சாப்ட்டியா இல்ல காரசாரமா நான் வெஜ் ஜமாய்ச்சியா...” வெளியே அவளிடம் பதிலுக்கு “ஐயோ அதெல்லாம் இல்லை...” என்று மறுத்தாலும் ரங்காவின் மனம் அவள் நக்கலை ஏற்கத்தான் வேண்டும் என்று குட்டியது.

“சீரியஸா கேக்கறேன் ரங்கா. Lover or mistress?” முகத்தில் அடித்தாள் மன்னி. எதிர்பார்க்கவில்லை.

நேரடியாகப் பதில் சொல்ல வரவில்லை. பதில் எது என்பதை ரேஷ்மாவிடம் கேட்டுத் தெளிந்திருக்கவில்லையே.

“இல்லை மன்னி... முன்னாள் லவர். காதலிச்சவ... மறக்கலை. இன்னிக்கும் லவ் பண்றா... சொன்னாளே... ஸோ ஜஸ்ட்... தப்பு தண்டாலாம்...” என்று ரங்கா திணறியதை வெட்டினாள்.

“இன்னும் செய்லேங்கறியா? வேணாம் சொல்ல வேணாம். ஏதோ காவியக் காதலின்னு நெனச்சுண்டிருக்க. ஒங்ட மட்டுமே காதலா இருக்கறவ இல்ல அவ. நீ இல்லைன்னு ஆய்ட்டதுமே இன்னொருத்தரக் காதலிச்சுக் கல்யாணம் பண்ணிண்டவ. நீயே சொன்னேல்ல. அவனயும் இன்னிக்கிக் காதலிக்கறவ...”

“ஸோ? என்னையும் இன்னிக்கும் லவ் பண்றாளே மன்னி...” குரல் ‘மன்னி’யை இழுத்ததில் வெளிப்பட்ட உணர்வின் வயது இன்றைய ரங்காவையும் அச்சுறுத்தியது.

“ரங்கா... உன்னோட இருக்கற காதலை வேணும்னா அவ உங்கிட்ட இன்னிக்கும் மறுக்காம இருக்கலாம். Nice of her. ஆனா அந்தக் காதலை உங்கிட்டதான் மறுக்க மாட்டா. புரிஞ்சுக்கோ. கணவன்ட்ட அதாது உனக்குப் பின்னாடி கெடச்ச காதலன்ட்ட மறுத்தே சொல்லிவைப்பா.”

“அவ அதுமாதிரி பொய் சொல்லிண்டு இருக்கலாம். நான் அப்டி இல்லையே மன்னி. வேதவல்லிட்ட சொல்லிடுவேன்…”

“இப்டி அவளோட இங்க அலஞ்சதயா? இதென்ன முழுக்க நனைஞ்சதும் முக்காடு. இங்க எல்லாத்தயும் பண்ணிட்டு அதப் போயி வேதாட்ட சொல்றதப் பெருமையா நெனச்சுக் கறயா?”

“ஐயோ… ஒண்ணும் பண்ணலை… ஜஸ்ட்…”

“வேண்டாம் என்ன நடந்ததுன்னு எங்கிட்ட சொல்லிக்க வேணாம் நீ. எனக்குத் தெரியவும் வேணாம்… வேதாக்கும் தெரியவாணாங்கறேன். வாயப் பொத்திக்கோ. யோஸ்சு பாரு. பொய்மையும் வாயை அடைத்துன்னு ஏதோ குறள் வருமே…
”

சிரிப்பதா மன்னியைத் திருத்துவதா தன் நிலையை விளக்குவதா… “மன்னி… இல்லறத்தில உண்மையா இருக்கணும்னு…”

“அறிவுஜீவிகள் முட்டாள்கள் என்பதை ஒரே குடும்பத்துலேந்து ரெண்டு ஆண்கள் எனக்கு நிரூபணம் செய்றீங்கோ…”

மன்னி இத்தனை தீவிரமாய் இதுவரை பேசியதில்லை.

“என் பொடவக் கடை புத்திலேந்தே சொல்றேன். ஒரே புடவை ரெண்டு வெவ்வேறு மாதிரியான பெண்களுக்குப் பொருத்தமாய் அமைந்துவிடலாம். நடப்பதுதானே. ஒத்தரால தான் அத முழுசாக் கட்ட முடியும். புரிஞ்சிக்கோ. அதயே விடு.
என்னவோ உண்மையா இருப்பேன்னு சொல்றயே… சிரிப்புதான் வருது. உனக்கு வசதியானப்ப ஒத்துக்கிடறதுக்குப் பேரு உண்மையா இருக்கறது இல்லபா. எல்லா மனுஷா மாதிரி நீயும் இயல்பா இருக்க அவ்ளோதான். நீ இல்லறத்தில் உண்மையா இருக்கேன்னு சொன்னா, இத்தன வருஷங் கழிச்சி அந்த ரேஷ்மாவோட ஆன்லைன்ல நீயாவே தேடிப்போயி பேசினேன்னியே, ரெண்டு மூணு மாசம் முன்னாடி, அன்னிக்கே அதை வேதாகிட்ட சொல்லிருக்கணும். அதுக்கு அப்பறம் என்னெல்லாம் செஞ்சியோ, இன்னிவரைக்கும்… அத்தனையையும் அப்பப்படியே அன்னன்னைக்கே சொல்லிருக்கணும். அத நீ செய்லியோனொ… முடியாதில்ல… அப்பறம் என்ன இல்லறம் நேர்மை அது இதுன்னு ஜபர்தஸ்து…
எல்லாம் முடிஞ்சதுக்கப்பறம்… இப்பப் போயி ரேஷ்மா வோட ரெண்டு நாள் இருந்தேன்னு வேதாகிட்ட சொல்றது உன் வசதிக்கு உனக்கு

வேண்டியத செஞ்சிண்டு வெளிய புனிதப் பசுவாய் சாயம் பூசிக்கற சந்தர்ப்பவாதம். வேணும்னா செய். நடத்து உன் ஹிப்பாக்ரஸிய. இதைவிட மனைவிய யாரும் திட்டமிட்டு இல்லறத்துல துன்புறுத்தியிருக்க முடியாது. அறிவுஜீவி முட்டாள் உன் செய்கையைக் காட்டிலும்.”

தொடர்ந்த ஆங்கிலப் பேச்சில் அவனுக்கு மன்னிப்பில்லை.

பிறகு போனை வைத்துவிட்டாள் மன்னி.

மின்விசிறி சுழன்றது. பார்வை அறையைத் திருகியது.

அறிவுஜீவி முட்டாள் படுக்கையில் மல்லாந்திருந்தான்.

மூன்றே விசிறிக் கால்கள். கண்ணுக்குத்தெரியாத காதல் மின்சாரம் சுழற்றி வைக்கையில் எத்தனை ஆவேசம். விரும்பிய ஒன்றை ஒன்று பிடித்துவிடவா, ஒன்றை மறுத்துவிட்டு ஒன்றுடன் ஓடிவிடவா. சுற்றம் கலைத்துச் சூழல் பொய்த்து...

உன்னை விட்டு இன்னொருவனைக் காதலித்து மணம் முடித்த அன்றே அவள் முடிவு செய்துவிட்டாள். அவள் வாழ்வில் இனி நீ இல்லை என்று. புரிந்துகொள்.
மன்னி அடித்துச் சொன்னது நிஜமா?

இப்போது அவளுக்கு வேண்டிய நடுவயது கிக், த்ரில், உங்கிட்டப் பெறுகிறாள். ஆபத்தில்லாமப் பெற்றிடவே துணிவாள். முதல் ஆபத்து உருவாகும்போதே கழற்றிவிடுவாள். இந்த வயஸ்ல அவளுக்கும் ஏன் ஒனக்குமே இல்லறம் கடந்த ஒரு அங்கீகாரம் தேவையா இருக்கலாம். மிட்லைப் கிரைசிஸ்னு ஓரங்கட்ட மாட்டேன். எனக்குமே ஒங்க வயசுல ஒரு கொழந்தயப் பெத்ததும் தேவைப்பட்டது. சமயத்துல இன்னுமே தேவையா இருக்கு. இந்த வயசுலயும் சகஜமாய்ப் பழகும் சம வயது நண்பன் என்ன வெச்சே ஏ-ஜோக் அடிச்சா நமுட்டுச் சிரிப்போடு செல்லமா அவன் கையத் தட்டுற த்ரில். பதிலுக்கு அவன் கைய என் இடுப்பைச் சுத்த விடமாட்டேன். அப்பப்ப எல்லை தடுமாறி மிஸ் ஆலாம். இரை சிக்கிய சிலந்தி வலை போலச் சுதாரிச்சுக்கணும். இல்ல பிச்சிக்கும்.

மன்னி சொன்னது போல காதல் வலைவீசும் சிலந்தியாகவே என்னை இன்றும் கருதுகிறேனா? சிக்கிய பிடித்தமான இரையின் இன்றைய இல்லறக் கனத்தைத் தாங்காமல் காதல் வலை தன் இருப்பிற்கே

திணறுகிறதோ. வரச்சொன்ன அவள் இரையா, வந்த நானா? இரை சிலந்திக்கு விரித்த வலையா இது? காதல் வலை மட்டுமாவது நிஜமா?

நின்றிருந்த மின்சாரம் உத்திரத்தில் மின்விசிறியின் கால்களை மூன்றெனப் பிரித்து நிறுத்தியிருந்தது.

பழையன களை. பழையன ஞாபகங்கள். அவை ஞாபகமிருக்கும் வகையிலேயே முழுவதுமாய் நடந்தவை என்று கொள்வது நிகழ்கால மனத்தின் விருப்பமான சுயஏமாற்று. கடந்தகாலத்தை நிகழ்காலத்தில் அசைபோடுகையில் மனத்தில் தோன்றும் பரவசங்களுடன் அன்றைய நிகழ்காலமாய் அது ஒருபோதும் இருந்ததில்லை. அப்பரவசங்களும் 'அதெல்லாம் அந்தக் காலம்…' போன்ற வாஞ்சையான மன வருடல்களும் நடந்தேறும் நளினங்களற்ற நிகழிலிருந்து தற்காத்துக்கொள்ள மீட்டெடுத்துக் கொள்ள நம் மனது உருவாக்கிக் கொள்ளும் இயங்கு வழி. ஏகாதசி விரதம் போல நிகழை உண்ணா மன விரதம். துவாதசிச் சமையல் பத்தியமாய் செய்து கொள்ள வேண்டும். இல்லையேல் பழையது பெருந்தீனியாய் மனத்தை ஆக்கிரமித்து வாழ வேண்டிய நிகழை எதிர்க்கும் ரகளையான மனப்போக்கெனும் பிறழ்வு உபாதையில் முடிந்து விடும்.

கடந்தவை என்றுமே நம் நிகழ் மனம் தடவிவிடும் அளவிற்குத் தடியான சர்க்கரை உறையுடன் இருந்ததில்லை. அன்றைய போதில் நிலவிய அதிருப்திகளினால் தானே அன்றே காதலைக் கைகூட்டிக்கொள்ளும் முயற்சிகள் எடுக்காமல் எப்படியும் போகட்டும் என்று பிரிந்தேன். இன்று அசைபோடு கையில் மட்டும் அக்காதல் எவ்வாறு தித்திப்பாக மட்டுமே இருந்தது என மனம் கொள்கிறது.

வாழ்க்கையில் முன்னேறுவதற்குத் தடையாகத் தோன்றியதுமே அன்று கைவிட முடிந்திட்ட அக்காதல் கைகூடாமல் போனதற்குப் பழியை இன்றைய நினைவு மற்றவர் மேல் ஏன் போடுகிறது? அன்று இருந்திருக்க வேண்டிய பிரிவின் துயரம் இன்றைய தவிப்பாய் ஏன் வெளிப்பட வேண்டும்? மனம் அன்றைய காதலைச் சுவைக்கிறதா, இன்றைய கணங்களை உவர்க்கிறதா? உல்லாசம் உறங்கிவிட்ட உறவுகளின் உவர்ப்புருண்டை நினைவுகளில் உருவாக்கி உருட்டும் ஒப்பு இனிப்பா உறங்கும் கைகூடாக் காதல்கள்? அன்றைய அதிருப்திகளைத் தாபத்துடன் தத்தளிக்கும் இன்றைய மனம் மறதியெனும் வசதியினால் பூசிமொழுகிக் கொள்கிறது. இன்றைய அதிருப்திகளை விட அன்றைய திருப்திகள் எத்தனை மேன்மையானவை என்றெல்லாம் ஒப்பீட்டு மாயாலோகத்தில்

சிறிதுநேரம் ஆடுகுதிரையேறி இருந்த இடத்தினில் ஆடிப் பார்க்கின்றது. இன்றிருக்கும் அதிருப்திகள் இன்னும் பத்தாண்டுகளில் நினைக்கையில் ஞாபகங்களில் ஒன்று மில்லாமலாகிவிடும். அன்றைக்கான ஆடுகுதிரை.

எப்போது மின்சாரம் வந்து உறங்கினான், ரங்காவின் நினைவில் இல்லை. கரப்புப்புழுக்கை மனத்துடன் நடுவில் எழுந்து மின்னஞ்சல் அனுப்பியதாய் ஒரு ஞாபகம்.

***

உதட்டைக் கடித்து, கொட்டிவிடுவேன் என்ற கண்ணீரை அடக்கினாள் ரேஷ்மா. வருகிறேன் என்றவளை எதற்காகத் துரத்தி விட்டான்? ஆக்ஸிடெண்ட் ஆகிவிடுமோ என்றா? ஆகலையே. நேற்று நான் அழுதது பிடிக்கவில்லையோ? பின் ஏன் இன்று காலை நான் அவனது தோழி இல்லை, காதலி என்றெல்லாம் சொன்னான்? என்ன தப்பாகச் சொல்லிவிட்டேன், முகம் கறுப்பதற்கு? காலை முழுதும் உணர்ச்சியாய் இருந்தானே. பதினைந்து வருடங்களுக்கு முன் நிராகரித்ததைப் போல் இன்றும் நிராகரிக்கிறானா. இதற்கா அமெரிக்காவிலிருந்து வந்தான். நான் அழைத்தேன் என்றுதானே ஓடோடி வந்திருக் கிறான். பெர்ரிய இவன்... இவன் மட்டுந்தான்...

அவள் வீடிருந்த தெருவுக்குள் திரும்பினாள். கண்கள் நிரம்பிப் பார்வை மறைக்க வண்டியை ஓரங்கட்டி கண்ணாடியில் முகம் பார்த்துக் கண்ணோரமாய் வழியும் மையைக் கைக் குட்டையால் ஒற்றினாள். கண்களின் சிகப்பில் அம்மா உடனே கண்டுபிடித்து விடுவாள். ஆசுவாசமானதுமே போகவேண்டும். பாட்டில் நீரைப் பருகினாள். தொண்டை அடைத்து வலித்தது. அழுகையை அடக்க அடக்கக் கேவலாய் வெளிவந்தது. ஸ்டிய ரிங்க் மீது தலையை வைத்து அழத் தொடங்கினாள். ரங்கா இன்றும் காதலிப்பதாகவே சொல்கிறான். பார்க்கும் பார்வையில், கொடுத்த முத்தத்தில், அவன் ஸ்பரிசத்தில் காதல் வழிந்தோடு கிறதே. பின் ஏன்? இடியட். இதுவா உனக்கு வேண்டும்? ஆழ் மனத்தினுள் மற்றொரு ரேஷ்மா, அவளுக்குப் பழக்கமான வாழ்க்கையில் வெற்றிகளை விரும்பும் ரேஷ்மா அதட்டினாள்.

வருடங்கள் முன்னால் வாழ்க்கையில் சாதிக்க வேண்டும் என்று என்னை விட்டவன் இப்போது மட்டும் ஏன் வருகிறான்? சாதித்துவிட்டோமே, இனி இவளால் எதுவும் செய்ய முடியாது என்றா? அப்படிப்பட்டவளா நான்? ஆபீஸில் அபி என்னுடைய பாஸாக இருந்தபோது வேலை

பிடிக்கவில்லை என்று அவர் சொன்னதும் விட்டுவிட்டு பிசினஸ் தொடங்கு என்று என் நகைகளை எல்லாம் கொடுத்து ஊக்கப்படுத்தினேனே, ரங்காவின் கனவுகளுக்கு நான் எப்படித் தடையாக இருந்திருக்க முடியும்? சொல்லப்போனால், என்னைச் சுற்றியிருப்பவர்கள் சாதித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். அபியைக் கைப்பிடித்ததும் அனிக்குட்டியைப் பெற்றதும் மட்டுமே இன்று வரை என் சாத னைகள். பாழாப் போன கணிக்ஸ் கூட அவ புருஷன் ஓடினா எங்கிட்டல்ல அழறா. அவ வேலயையும் சேத்தில்ல பாத்துக் கிட்டிருக்கேன். ரங்காவுடன் இருந்திருந்தால் இன்னும் சாதித் திருப்பேனோ... அமெரிக்காவில் ஐபிஎம், மைக்ரோசாஃப்ட் பதவிகளில்... கணிக்ஸின் பொலம்பலைக் கேட்டுக்கற நடுத்தர ஊழியராய்க் குப்பை கொட்டாமல். நீ என்னைக் கைவிட்டதால் தானே என்னால் எதையும் சாதிக்க முடியாமல் போய்விட்டது.

நிற்கலாமா என்றிருந்த அழுகை மீண்டும் கோபத்திலும் சுயகழிவிரக்கத்திலும் முழுமூச்சாய்க் கிளம்பியது.

ஏன் என்னை விட்டுச்சென்றாய்? ஏமாற்றத்திலிருந்து மீண்டு ஒரு வாழ்க்கையை அமைத்துக்கொள்ள எத்தனை வருடங்கள் ஆயிற்று. இப்போது மீண்டும் மனத்தைக் கிளருகிறாய்.

ரங்காவின் கண்களிலும் ஏக்கம். அபியின் காதலை ஏற்று திருமணம் செய்து, குழந்தை பெற்ற இந்தப் பத்து வருடங்களில் நானாவது மறந்தேவிட்டிருந்தேன், அவன் என்னை மறக்கவே இல்லையே. இல்லை நாடகமா? உறவுகொள்ள இத்தனை போலித்தனம் அவசியமில்லையே. எனக்கில்லை. வேண்டும் என்று முடிவெடுத்தால் பெண் எத்தருணத்திலும் உறவு கொள்ளத் தயங்குவதில்லை. யாரிடமோ ஏற்கெனவே கூறினோமோ. நம் எண்ணமா ஏக்கமா இது... ஏக்கம் உண்மை என்றால் இவ்வளவு காதலை மனத்தில் வைத்துக்கொண்டு எப்படிப் பதினைந்து வருடங்கள் வாழ்ந்தாய் ரங்கா? மனைவியிடம் காதலாய் இல்லையா நீ? அவள் தன் காதலால் என்னை மறக்க வைக்கவில்லையா? நீ என்னைக் காதலிக்கும் அளவு அவள் உன்னைக் காதலிக்கவில்லையா ரங்கா? அவளிடம் இல்லாத காதலை என்னிடம் காண். துரத்திவிடாதே. என்னதான் இருவரையும் காதலிப்பதாய் நீ சொன்னாலும், எனக்குத் தெரியும் ரங்கா, நீ என்னவன். எங்கு சுற்றியும் என்னையே சேர்வாய்.

சீட்டில் சாய்ந்து மூச்சை இழுத்துவிட்டாள் ரேஷ்மா. அழுகை சட்டென நின்றதில் நொடிப்பொழுது மனம் கரண்டு போன

கணினித்திரையானது. கண்ணாடியில் முகத்தைச் சரிசெய்து கொண்டாள். மூக்கின் நுனிச்சிகப்பு ரங்காவுக்குப் பிடிக்கும். தனியே பேசிக்கொண்டிருப்பதெல்லாம் வேலைக்காகாது. இந்த நிமிடம் தோன்றும் அளவிலாக் காதலைச் சொல்லிவிட வேண்டும். பழைய வீட்டைப் பார்க்கத் தானே சென்றிருக்கிறான், மங்கம்மா நகர் கோடியில்...

காரைக் கிளப்பி வலப்புறம் திருப்ப அறிகுறி விளக்கைப் போட்ட கணம் கைப்பையில் பர்சனல் அலைபேசி அலறியது.

புறக்கணிக்கலாமா என்று நினைத்தவள், பையிலிருந்து எடுத்தாள். அபி முகம். காலையில்தானே பேசினோம்...

“சொல்லுங்க டியர்...”

“மம்மீ... நீங்க இப்பவே வாங்க...”

ஷக்ஸ். இதுகிட்ட எதுக்கு போனை... “செல்லம், என்ன ஆச்சு?”

“நீங்கதானே என் best friend? இப்பவே வாங்க...”

“வந்துருவேன் செல்லம். நாளைக்கு வந்துருவேன்.” சும்மா போனை இவன்ட்ட கொடுத்துட்டு என்ன செய்றாரு?

“இல்ல. இ...ப்ப...வே... இப்பவே வாங்க மம்மீ...”

“என்ன நடந்துச்சி, டாடி திட்டினாங்களா? கொடுடா செல்லம் அவருட்ட. நான் போன்லயே ஒரு அடி வெக்கறேன்...” அபி திட்டமாட்டாரே. இவள் திட்டினாலே பிடிக்காதே.

“மம்மி, அவ இனிமே என் ஃப்ரெண்டு இல்லை. அவகூட பேசவே மாட்டேன். Bad girl...”

அப்பாடா. “அச்சச்சோ... என்ன ஆச்சு? நேத்திக்கி பார்ட்டில நல்லாதானே எஞ்சாய் செஞ்சீங்களாம். டாடி சொன்னாங்களே.”

“விளையாட வரேன்னா. டாடி இப்ப கூப்டாங்க. அவ டிங்கு வீட்டுக்குப் போயிட்டா. டிங்குதான் இப்ப அவளுக்கு பெஸ்ட் ஃப்ரெண்டாம். போங்க மம்மி. எனக்கும் இப்பவே பெஸ்ட் ஃப்ரெண்டு வேணும். நீங்க வந்து வெளயாடுங்க...”

“அனிக்குட்டி... டிங்கு வீடு அவ வீட்டுப் பக்கத்துல இருக்குதுல? ஈஸியா

அங்க போயிருப்பாங்க. அவ வரலன்னா என்ன? உங்களுக்குத்தான் பக்கத்து வீட்டுல சகி இருக்குதே, அதோட போய் விளையாடுங்க...”

“அவ என் best friend இல்ல... நீங்க வாங்க... டாடி புக் படிக்கப் போய்ட்டாரு...”

“ஐயோ கண்ணா, எப்டி திடீர்னு கிளம்பி வருவேன்? டிரெயின் ராத்திரிக்கில்ல...”

நைஸா போன் போட்டு எங்கிட்ட மாட்டிவிட்டு இவுரு ஹாயா புஸ்தகம் படிச்சிக்கிட்டிருக்காரு...

“பிளேன்ல வாங்க... டாடி சொல்றாரு... இல்ல, சொல்லலை.”

“இப்போ டிக்கெட் கிடைக்காது செல்லம். நீங்க நல்ல புள்ள தானே. அழுவாதீங்க. மம்மி கண்டிப்பா காலைல நீங்க தூங்கி எந்திரிக்க வந்துருவேன். நாளக்கி உங்களுக்கு ஸ்கூல் வேன் வேணாம், நானே ஸ்கூல்ல விடறேன்? ஓகேயா?”

“... ... ...”

“இருக்கீங்களா? அழுவறீங்களா? அச்சச்சோ... நீங்க தைரிய மான புள்ளையாச்சே, அழ மாட்டீங்களே. மம்மி நாளைக்கு வந்துருவேனில்ல? டாடிகிட்ட சொல்லி சகி வீட்டுல... போன டாடிகிட்ட கொடுங்க, நானே பேசறேன்...”

“... ... ...”

“என்னங்க, அவன பக்கத்துல சகி வீட்டுல விட்டுருங்களேன். பிடுங்கல் இல்லாம நிம்மதியா புக் படிக்கலாம். ஐஸ்கிரீம் கொடுங்க... ஆங். சளி புடிச்சா மருந்து கொடுத்துக்கலாம். ஞாபகமா கேக்கறதப் பாரு. பாவம் புள்ள அழுதுல்ல. பேசாம வண்டர்லா கூட்டிட்டுப் போயிருங்க. சும்மா பொஸ்தகத்த வெச்சிட்டு ஒக்காராதீங்க... காலைல வந்துருவேன். ராத்திரி கூப்டறேன்... ஐல் கால் யூ டியர்...”

“மம்மீ... ஸ்கூல்ல... பெர்ரிய ஸ்பைடர்...” பிள்ளை போனைப் பிடுங்கியது.

“சொல்லுங்க ஸ்வீட்டி...” என்ற அவளது ஆமோதிப் பிற்குக் காத்திராமல் தொடர்ந்தது “...விடியோ ஷோ... ஸ்பைடர்... அது பேரு black widow மம்மீ... கடிச்சிருச்சி...”

மேய்ப்பதற்கு ஸ்கூலில் டிஸ்கவரி சேனல் விடியோ எதையோ போட்டிருக்கிறார்கள். ரேஷ்மா அனுமானித்துப் பேச்சுக் கொடுக்க மழலை தொடர்ந்தது. “...மம்மி கட்டிப்பிடிச்சி girl ஸ்பைடரயே சாப்ட்டுரிச்சி. ஏன் மம்மி? சொல்லுங்களேன்... வயுத்துக்குள்ளார உசுரோட இருக்குமா மம்மி?”

“அது... நிறைய பிடிச்சுருச்சா... அதுக்கு கடிச்சு சாப்ட்டுரணும்னு தோணுது குட்டி... அனிக்குட்டிய மம்மி அப்டியே கட்டிப் பிடிச்சு சாப்பாட்டுல வெச்சி சாப்ட்டுறவா... பெஸ்ட் ப்ரெண்டு இல்ல... ஊருக்கு வந்ததும் செஞ்சிர்றேன்... சரியா...”
போனை நிறுத்தியதும் தலை சுள் என்றது.

சற்று முன்னர் அழுததில் தலை வலித்துக் கனத்தது. தூக்கம் தேவை. ரங்கா இருக்கும் அறையில் ஏஸியை சுத்தம் செய்து நாளாகிறதோ. சொன்னானே. அங்கு தூங்கினால் தலைவலி அதிகமாகலாம். அலைபேசியில் சார்ஜ் இல்லை. அம்மா போன்ல அபி நம்பர் இருக்கா? புஸ்தகத்துக்குள்ள தலைய விட்டுக்காம அனிக்குட்டிய கவனிப்பாரா. பெத்ததோட தன் வேல முடிஞ்சுருச்சுனு. சே, கூட்டிட்டே வந்திருக்கலாம்... நோப். தனிமையே கெடச்சுருக்காது. அபிக்கு அக்கறை பத்தாது, ஆறு வயசுக் குழந்தை விளையாடுமா வீட்டுக்கணக்கு போடுமானு நல்லா லாஜிக் பேசுவார். நான் இல்லைன்னா வீடு வீடாவே இருக்காது. இஸ்திரிக்கு கொடுக்க மறந்திருப்பார். வெளுத்துப் போன அந்தச் செவப்பு டீஷர்ட்லயே காலம் தள்ளு வார். ஸ்பைடர்மேன், ஸ்டார்வார்ஸ் கேம்ஸ்னு வீட்டையே குப்பையாய் அடிச்சிருப்பாங்க. சரிசெய்யவே ரெண்டு நாள் ஆவும். நாளைக்கு க்ளையண்ட் கால்... கணிக்ஸ் காலை வாரிட்டா. அவ புருஷனுக்கு செக்ஸ் பைத்தியம் தெளிஞ்சுருச்சுன்னா கூட்டிப்பாளா? இப்ப ரொம்ப தேவை எனக்கு...

பாடிக்கொண்டே கண்ணடித்தவாறிருந்த காரின் அறிகுறி விளக்கை அணைத்தாள். ரங்காவை மாலையில் சந்திக்கலாம். முழுமனசாக் காதலிக்கிறேன், ஆனால் இழுப்பிற்கெல்லாம் கூட வரமுடியாது. சொல்லிவிட வேண்டும். அபியைவிட்டு இவனுடன் போவதாய் இவனாகவே கற்பனை செய்துகொண்டால் நான் என்ன செய்வதாம்? பைத்தியக்காரியே. இதையும் நீதான் கற்பனை செய்துகொள்கிறாய். அவன் வாயைவிட்டு இதுவரை என்னுடன் வந்துவிடு என்று அழைக்கவில்லை...
பின்னர் எதற்கு வந்தாய் ரங்கா? ஜஸ்ட் ஃபார் செக்ஸ்? நான் அழைத்ததாலா? காதலி என்பதாலா, உனக்கு இப்போது காதல் தேவை

என்பதாலா? காதலிப்பதும் காதலில் இருப்பதும் வேறு வேறானவை என்று எனக்கு உணர்த்துகிறாயா? இன்று காதலில் இருக்கையில் கோருவதை, அளிப்பதை, ஏற்பதை அன்று காதலிக்கையிலும் செய்திருக்கலாம் அல்லவா. மீண்டும் வருவதால் மீட்டுக்கொள்ள வந்துள்ளாய் என்பதா. காதலிப்பதற்கும் காதலில் இருப்பதற்குமான வேறுபாட்டை இம்முறை உன்னை விட நன்கு அறிந்தே காதலிடம் வந்திருக்கிறேன்…

ச்சேய் என்ன வாழ்க்கை இது. நமக்கு வேண்டியதைப் பிறரை நினைக்க வைப்பதற்காகவே நாம் நினைத்தவற்றை அவர்கள் அறியாமால் மறைத்துவைத்து…

அவனுக்கு என்ன, நினைத்ததைச் சாதித்துவிட்டான். பேட்டிகள் கொடுக்கும் அளவிற்கு வளர்ந்துவிட்டான். அந்த சந்தோஷத்தில் என்னைப் புதைத்துக் கொள்ள வேண்டியதே. வேண்டு மானால் உதட்டில் அவனளித்த முத்தத்திற்குப் பதிலாய் ஒன்று…

எறும்புப் புற்றை மிதித்த காலாய் மனம் இருக்கும் நிலையை விடுத்து அகன்றுவிடும் முயற்சியாய் காரைக் கிளப்பி னாள். மூக்கை உறிஞ்சிக்கொண்டு அது நகர்ந்தது.

# 14

ஸ்ரீரங்கம். மறுதினம் மாலை.

எட்டாக்கையில் கவனித்துவிட்டாள். தேஜாவூ. காலேஜ் நாட்களில் பேருந்து நிலையத்தில் அவளுக்காகக் காத்திருந்த அதே ரங்கா. தோள்கள் விரிந்து, அமெரிக்கக் குளிரில் வெளுத்த முகம், முன்னைவிட அழகாக. நெற்றியிலிருந்து பின்னடைந்த முடி மட்டுமே இழந்த பதினைந்து வருடங்களை நினைவூட்டியது.

ரேஷ்மாவிடமே மாற்றங்கள் அதிகம். பத்து கிலோ எடையும் அம்மா படித்துப் படித்துச் சொல்லியும் பெல்ட் கட்டாததால் பெருத்துவிட்ட பிள்ளை பெற்ற வயிறும்...

“நீ என்ன ரெஸ்ட்டுனு வந்திட்டு வூட்டிலியே தங்க மாட்டீங்கற.” புலம்பிய அப்பாவை இடைமறித்து “ஊருல ஆபீசுல எம்புட்டு கவலையோ. கோயிலுக்குப் போறதத் தடுக்காதீங்க” என்ற அம்மா ரேஷ்மாவின் ரத்தக்கொதிப்பை ஏற விடவில்லை.

மதியம் ஒரு மணி நேரம் தூங்கியதில் ரேஷ்மாவிற்குத் தலை பாரம் குறைந்திருந்தது. அபியுடன் பேசியதில் குழந்தை வண்டர்லா சென்றிருப்பது தெரிந்தது. வருகையில் காரில் தூங்கிவிடுவான். நிம்மதியாக இருந்தது. குளித்து, அம்மா கொடுத்த பூரி-மசாலை மறுத்துக் கிளம்பினாள். வெங்காய வாசத்துடன் பேசினால் ரங்காவுக்குப் பிடிக்காது.

அவளை மதியம் வீட்டிற்கு அனுப்பி வைத்தது ஏன் என்ற கேள்வி மனத்தில் முன்னளவு அறுக்கவில்லை. நல்ல பையன்... ஆள்... இனியும் பையனா? விளக்கை நோக்கி வரும் விட்டில் பூச்சியாய் வந்திருக்கிறான். ம்ம். விட்டில் பூச்சி அவனா அவளா? ஏன் இப்போதும் அவனைக் காணச் செல்கிறாள்? அவனிடம் என்ன இழுக்கிறது?

சீச்சீ, அதெல்லாம் இல்லை. இரவு பெங்களூர் கிளம்பு கிறாள். நண்ப... முன்னாள் காதலனிடம் சொல்லிக்கொள்ளப் போகிறாள். தவறென்ன?

***

ரேஷ்மாவின் காருக்காக ஸ்ரீரங்கம் காவல் நிலையத்திற்கு எதிரே

‘அம்மா நிழற்குடை’யில் பேருந்துகளைக் கவனித்தபடி காத்திருக்கையில் ரங்காவுக்கு அச்செயலின் காலம்கடந்த வேடிக்கையே உறைத்தது.

கல்லூரி தினங்களில் இதே இடத்தில் காலையில் ரேஷ்மா வருவதற்காகக் காத்திருப்பான். அருகருகே அமர்ந்து பேருந்தில் கல்லூரிச் செல்வதற்காக. சுற்றிலும் விரையும் அனைவருமே அவன் எதற்குக் காத்திருக்கிறான் என்பதை அறிந்துகொண்டு அவ்விஷயம் யாருக்குத் தெரியாதிருக்க வேண்டுமோ அவரிடம் அணி வரிசையில் நின்று கோள் சொல்வதற்கே விரைவதாய்... இன்று அந்த சல்லி பயம் ஏற்படவில்லை. தவிப்பு மட்டும் அதேபோல் வயிற்றில் நமநமத்தது.

இருபது வருடங்கள் முன்னால் இருந்த விடலை இல்லை இன்று நான். அன்று அம்மா கொதித்திருப்பாள். இவ்விதம் சம வயதுப் பெண்ணுக்காக நிறுத்தத்தில் காத்திருப்பதை விடலைத் தனம் என்று குற்றம்சாட்டி. இன்று எனக்கே நாற்பதை எட்டுகிறது. அன்றைய என்னை நானே இன்று விடலையாய்க் கருதிக் கொள்கிறேன். உண்மையில் இந்த நாற்பதைக் கடந்த நாய்க் குணமே சல்லித்தனம். எவ்வயதிலும் என் மகிழ்ச்சியை நான் தேடிக் கண்டடைய விழைகிறேன். அச்செயலினுள்ளே குற்றவுணர்வைக் கலக்கும் வயதானவர்களே சல்லித்தனமானவர்கள். தாங்கள் முயன்று கைவிட்டதை இவன் இன்னும் இளமையாய் அடித்து ஆடுகிறானே என்கிற இயலாமை. நிமிர்ந்து நின்றான். எதிரே வாஸன் மெடிகல்ஸ் களை கட்டியிருந்தது. நான்கைந்து கடை ஆட்கள் சாரியாய்க் காத்திருந்த மக்களுக்குக் கல்லா கலகலக்க ஓயாமல் மருந்துகளை விற்றவாறு. நோயுற்ற வாழ்வே குறைவற்ற செல்வம். இடப்புறம் பெட்டிக்கடை குறுக்குக் கயிறுகளில் தமிழனின் வாசிப்பு ரசனையையே மழுங்கடித்துவிட்ட பாரம்பர்ய வெகுசன வாராந்திரிகள் புதிய நாபிக்கமலங்களையும் நாலுவிரக்கடை நச்சுச் செய்திகளையும் நம்பி நாலு லட்சம் விற்றுவிடுகிற வேகத்தில் தலைகீழாய்த் தவமிருந்தன.

ஒரு காலத்தில் மாராப்பு மூடிய முழங்கைவரை ரவிக்கை அணிந்த கைகளைத் தலைக்கு மேல் உயர்த்திக் கோயில் தெய்வத்தை வணங்குவதற்கே தயங்கிய பெண்குலத்தின் பிரதிநிதி இன்று ‘மக்கள் இதையே விரும்புகின்றனர்’ என்கிற விளக்கத்துடன் போஸ்டரில் ஜீன்ஸ் கால்களை அமர்ந்த நிலையில் விரித்து அக்குள் தெரிய நிர்வாணக் கைகளை தலைக்குப் பின் அகட்டி, பாதசாரிகளை வாய் பிளந்து வரவேற்கிறாள், கனவுக் கண்களில் குழந்தை ஆச்சர்யத்துடன்.

யார் இந்த போஸ்டர் சிறுமியை விரும்புகிற, கையில் குஞ்சாமணியுடன் ரோட்டில் அலைகிற மனிதர்கள்? அவர்களும் இந்தச் சமுதாயத்தின் பிரதிநிதிகள் தானே? பதில் சொல்லட்டுமே. ஆடை கட்டிய இரண்டு பெண்மணிகளை நான் மட்டும் மனதாரக் காதலிக்கக் கூடாதா?

“அழுதயா?”

அருகில் நின்ற காரில் ஏறி அவளைக் கவனித்ததும் கேட்டான்.

முகத்தில் பவுடர் திட்டுத் திட்டாய் கண்களுக்குக் கீழே...

“இல்லயே... எதுக்கு அழணும்... I’m fine.. ஹேப்பியா இருக்கேன்...” தேவைக்கதிகமாய் விளக்கமளிக்கிறாள்.

“எங்கிட்டயும் பொய் சொல்ற. நான் அபி இல்ல ரேஷ்மா.” சே... குத்தியிருக்க வேண்டாம்.

“வழி சொல்லுடா...” ரேஷ்மாவிற்கு வலித்திருந்தாலும் வெளிக்காட்டவில்லை.

ராயகோபுரத்திற்கு முன்னால் பாலு ஸ்டூடியோவிற்கு இடப்புறம் போலீஸ் காலனி இருக்கும் திருவடி தெருவில் காரைத் திருப்பி, ஒரு பர்லாங் சென்று வலப்புறம் தசாவதார சந்நிதிக்குச் செல்லும் பாதையில் விட்டு, இடையே வலப்புறம் கோயிலை நோக்கி மேற்கு வாசல் வழியாக நுழைந்து இடப்புறம் திரும்பி, உத்திரை வீதிகளில் சென்று, தாயார் சந்நிதி முன்னர் ஒதுக்கிக் காரை நிறுத்தினார்கள்.

சில நிமிடங்களில் ரெங்கநாச்சியார் சந்நிதி மூடியிருந்ததைக் கண்டு உள்ளே நடந்துசென்று ஆயிரங்கால் மண்டபத்திற்குச் செல்லும் வழியில் ‘அரங்கனைப் பாடிய வாயால் குரங்கனைப் பாடமாட்டேன்’ என்று மறுத்த தொண்டரடிப் பொடியாருக்குக் காட்சிதந்து வீற்றிருக்கும் மணலடி சீனிவாசர் சந்நிதி அருகே மணலில் அமர்ந்துகொண்டனர்.

மாலை அந்தியாகி மடியில் விரித்த அவளது உள்ளங்கை ரேகை மறையும் நேரம். மக்கள் சந்நிதிகளிடையே பக்தி மார்க்கத்தில் உலாவியிருந்தனர். “காலைலயே கேக்கணும்னு இருந்தேன். நீ வேற மனசால கூட... அப்டி இப்டின்னு தூக்கி வெச்சிட்டியா... மறந்ட்டேன்... ஏதோ எழுதிருக்கேன்னயே... காட்டவேயில்லையே...”

ஆமாம். சொன்னேன். அது அதிகாலையில். அதிகாதலில். இப்போது அந்திம நேரம். நிறையப் பேசிவிட்டோம். இனி எனக்குச் சொல்வதற்கு

ஒன்றும் இல்லை... மனது மறுத்தாலும் தன்னிச்சையாய் போனை எடுத்து 'நோட்ஸ் ஆப்பில்' சேமித்திருந்ததை ரேஷ்மாவிடம் காட்டவே செய்தான்.

வாசித்தவள் மனத்துள் அவனை மிக நெருக்கமாய் உணர்ந்தாள்.

"நைஸ். அம்மா பொடவையக் கட்டினதுக்கே இந்தப் பரிசு கொடுக்கற... நீ வாங்கிக் கொடுத்திருந்தா..." கட்டிப் பிடித்து முத்தமிட கை பரபரக்கின்றது.

"உனக்கில்லை ரேஷ்மா. சொன்னேனே... உன் சம்மதமில்லாம என் மனத்தின் எழுத்திலும் உன்னைக் களைய மாட்டேன்..."

"ஓவ்..." முனகத்தான் முடிந்தது ரேஷ்மாவினால். யாருக்கு என்று கேட்பதை வாய் செய்யவில்லை என்றாலும் கண்கள் செய்துவிட்டதை ரங்கா கவனித்திருந்தான்.
மத்தியானமே ஏதோ மெயில் அனுப்பினோமே...

மௌனம் பார்வையில் படும் அளவில் அவர்களிடையே பிறந்தது. சிறுகச் சிறுக உக்கிரம் பெற்று சற்று நேரத்தில் அவர்கள் மனத்தினுள் காதலின் கழுத்தை நெரிக்கத் துணிந்தது.

மனத்தாலும் மொலெஸ்ட் செய்ய மாட்டேன் என்று ஒருவன். மனத்தில் கூடுவதற்கே என் அனுமதியைக் கோருபவன். அதே காரியத்தை ஒருவரிடம் செய்கையில் சரி என்றும் மற்றொருவரிடம் செய்கையில் தவறென்றும் ஆகிவிடுமா? இருவருமே நான் காதலிப்பவர்கள் என்கையில். ரேஷ்மா நகம் கடித்தாள்.

ஒருவரிடம் செய்வதையெல்லாம் மற்றொருவரிடம் என்று வேண்டுமானாலும் செய்யமுடிந்த சுதந்திரமும் அதை என்றுமே உபயோகிக்காத தவிப்பும் தான் காதலா. உபயோகித்துவிட்டால் காதல் போய்விடுமோ. ஒருவரிடம் சுதந்திரமாய் உரிமையுடன் உறவாடியதுமே போய்விட்டதா? உடலிலா மனத்திலுமா? மனத்தின் சுதந்திரக் கூடல் உரிமையை, கூடுதல் உரிமையை, உடலினால் கூடிவிட்டுக் கொடுக்க என் மனம் மறுக்கிறதா? தன்மானம் என்று தடுமாறுகிறதா?
ஏன் என்பதற்குக் காரணங்கள் ரங்கா இவன் கூறியது போலத் தனிமனித விழுமியங்களில் காத்திரமாக இல்லை என்பதால் சமுதாய சராசரிகளை சார்ந்துகொள்கிறேனா? தன் நீதி வழங்கும் முடிவை அன்பானவர்களிடம் வெளிப்படுத்தும் திறன் இல்லாக் கோழையாகி மனு நீதியை முன்நிறுத்தி மனங்கவர் மானுடனை மறைந்திருக்கச்

சொல்கிறேனா? அவன் அள்ளியிறைக்கும் காதற்காட்சிகளை மனத்தில் மங்கியிருக்கச் சொல்கிறேனா? மானுடர்க்கு ஒருமுறையே வருவதை மறுமுறை தன்னால் வந்து தாழ்நீக்கியதை, திறவாதே அதற்கு எனக்குத் திராணியில்லை அதனால் உனக்கும் அனுமதியில்லை என்று திருப்பி அனுப்புகிறேனா? என்றும் என்னோடு இரு ஆனால் மறுபடியும் வந்திடாதே என்று...

ஐயோ... ரங்காவோட ரெண்டு நாள் பழகினதுல அவன மாதிரியே யோசிக்கறேனே... இடியட். எனக்குள்ளயே புகுந்து... You are in my system, ரங்கா ...

ஷிட்... அபியிடம் எத்தனை முறை பகிர்ந்துள்ளேன் இதையே... ரெண்டு நாள் போதுமா என்ன மாத்த? Damn it... என்ன சொன்னான்?

“ஒன் மனசு எனக்குத் தெரியாதா ரேஷ்... என்னப் பச்சக் கொழந்தைன்னு நெனக்காத... உனக்கும் இது வேண்டாம்னு சொல்லுபாப்போம்... என் கண்ணப் பாத்து சொல்லு... நெஜமா...”

வேணுந்தான்டா... பின்ன பொய்யிலயா, நெஜத்துலதான். ஆனா உன் விருப்பம் மட்டுமேவா? என் விருப்பம், தேவை, ஏமாற்றம், ஆற்றாமை... எத்தனை வருடங்கள் மனத்தினுள்ளேயே குமைந்து புகைந்து புதைத்து... அபிகிட்ட என்னால கதை விட முடியாது, உங்கிட்ட நிஜத்த விட முடியாது...

“ரங்கா... Just a thought...”

முகமெங்கும் வியர்த்திருந்தான். எத்தனை ஒருமுகம், தீவிரம். எதிலுமே இவன் இப்படித்தானே...

“சொல்லு ரேஷ்...”

“இதெல்லாமே... நீ சொன்ன, சொல்ற விஷயங்கல்லாம்... These two days... நடந்த எல்லாம்... இத்தன லவ் பண்றதாச் சொல்றயே... நம்பவேமுடியாத சந்தோஷத்துல என்னை...”

“Ya, go on...”

“நான் ஹானஸ்ட் அதான் புடிக்கும்னு சொல்லுவேல்ல... அதனாலதான்... நினச்சத சொல்லிடணும்னு...”

“யா... சொல்லு...”

“இதெல்லாமே ஒன்னோட அடுத்த நாவலுக்காக எங்கிட்டப் பேசிப்பாக்கறயோன்னு...”

“வாட்? என்ன சொல்ற?”

அதே நெற்றிச் சுருக்கம் ரசித்து விடாதே என ரேஷ்மாவை இப்போது அச்சுறுத்தியது.

“இல்ல... என்ன நெனைக்கறேன்... நாம சேந்து... அதப் பத்தி...”

“You mean…making love...”

“ஆமா... அதுவுந்தான்... எல்லாமே... நான் லவ் பண்றேனான்னு... இப்ப காட்டினயே, எழுதினது எனக்கில்லேன்னு சொல்றயே, அதுக்கு என்ன சொல்லுவேன்னு... என் தாட்ஸ மனச தெரிஞ்சுக்க கேக்கறயோன்னு... நாவல் எழுத...”

“... ... ...”

“என்ன பதிலக் காணோம்...”

ரங்கா அவனுள் அமிழ்ந்துவிட்டிருந்தான்.

சட்டென்று இதயம் இருப்பிடத்தைவிட்டு இறங்கி அமிழ்ந்து வயிறு வீங்கியது போலானது. கோபம் அழுகை அவ மானம் கண்ணியம் வெறுப்பு விரக்தி... உணர்ச்சிப் பேய்கள் ஒவ்வொன்றாய் மனத்தை அது மட்டுமே ஆக்கிரமிக்கக் கோரும் வலுவிழந்து, பிடாரிகளாய் ஒன்றை ஒன்று விரட்டிக் கொள்ளும் வழி மறந்து, கலவையாய் வெடித்துக் களி வெறியுடன் அழுத்தின.

பயித்தியக்காரனுள்ளும் இயங்கும் பகுத்தறிவு அவற்றைப் பல்லாண்டு சிக்கலெடுத்துப் பலவாறு சிந்தித்துப் பளிங்குமனப் பக்குவத்துடன் புத்தகங்களாய் பரவசப்பட்டுப் பார்த்துக் கொள்ளட்டுமே. அவளது அக்கேள்வி அழுத்திய அந்தக் கணத்தில் அத்தனை மணிநேரங்கள் அத்தனை மாதங்கள் அத்தனை வருடங்கள் சிறு சிறு காதற்கோளங்களாய் கொண்டு கூட்டிச் சேர்த்துக் கோர்த்து சமுதாயவெளியில் ஏற்புடையதாக புரிபடுவதுபோல மனத்தினுள் உருக்கொடுத்திருந்த உறவு காதல் கழிந்து முன்னிலும் அளவினிற் சுருங்கிய மின்னற்துகள்களாய் பசையற்ற பின்னங்களாகிப் போய்விட்டதல்லவா.

மௌனத்திலிருந்து பேச்சை மீட்பதற்குள்ளேயே மரகத மின்னற் துகள்கள் மின்னி மங்கி மகரந்தமிழந்தவையாய் மனத்தினுள் மிதக்கின்றனவே.

“என்ன சட்னு ஸைலண்டாயிட்ட? தப்பாக் கேட்டிட் டேனா? கோ..வ..மா?”

மௌனத்தைப் பொறுக்கமுடியாமல் தோன்றியதைப் பேசத் தொடங்கினாள். வழக்கமான குழைவுடன்.

தப்பாத்தானே கேட்கிறோம். தப்பு என்று தெரிந்துதானே கேட்கிறோம். தெரியாமல் இருக்கத்தானே கேட்கிறோம். தெரிந்தலும் புரிந்தாலும் அறிந்தாலும் இனி திரும்ப வரமுடியாத தூரங்களுக்குத் திருப்பித் தரமுடியாத தேவைகளுக்கு இருவரையும் அழைத்துச் சென்றுவிட என் மனதும்… இல்லை. ஷட் அப். அவனைக் கவனி. அழுகையை நிறுத்து.

கையெடுத்து விழியோரமாய் அவன் கவனிப்பதற்குள் கரு மையைச் சரி செய்துகொண்டாள்.

அவளையே நிலைகுத்தி விழித்திருந்தான் ரங்கா. கழுத்தைச் சாய்த்துக் கண்களை விரித்து நாக்கைக் குழறி அவளுக்கே உரிய மழலைக் குழைவில் கத்தியால் குத்திய இடத்தில் ரத்தம் வடிவதை எதிர்பார்த்தவள் போல… அறிவுஜீவி இவனுக்கும் இடம்பார்த்துக் குத்தினால் ரத்தம் வருமா? என்ன நினைக்கிறாள் பொம்பளை ஷைலாக்? யாரே நினைத்திருப்பர்? இந்த நோஞ்சான் மனிதனின் இதயத்தில் இத்தனை ரத்தமா? விழித்திரு விழித்திரு என்று நினைவுறுத்தியவாறே காணற் கரிய அதிசயத்தைக் காட்டக் காரிருளில் கானகம் கடத்தி அழைத்துச் சென்றவர் கால்போகும் போக்கில் கற்பனையை விரித்துக் கண்ணயறும் அக்கணத்தில் கண்ணாடி முன்னே கொண்டுபோய் நிறுத்தியதைப் போல.

பெண்ணைப் பற்றி ஆண் உண்மையில் என்ன நினைக்கிறான் என்பதைப் பெண்கள் பொறுப்பதில்லையோ.

ஆண் அவனைப் பற்றி அவள்?

பெண்கள் என்றுமே ஆண்களைச் சற்றே தங்கள் பரிதாபத்திற்குகந்த ஆன்மாவில் அகலமாய் ஓட்டைகொண்ட சபலபுத்தி ஆளுமைகள் என்றுதான் நினைக்கிறார்களோ.

மார்பை விரித்துப் பெருமூச்சை ஓசையின்றி வெளியேற்றினான். கால்களை நீட்டிக்கொண்டான். கைகளைத் தலைக்குப் பின்னால் கோர்த்தபடி புன்னகைத்தான். நான் இதையும் தாங்குவேன் ரேஷ். பொய் சொல்கிறாய். பரவாயில்லை.

“இல்லை ரேஷ்... நாவலுக்காக இல்லை. இது சத்தியம். இந்த இரண்டு தினங்களும் சத்தியம். உனக்கான சத்தியம். நமக்கான சத்தியம்...”

சே... மெலோடிராமா பண்ணாதே. ஆண்மகன் நீ. இருந்தாலும்... தன்மானத்தில் அடித்துவிட்டாளே.

காதல் காமத்தில் இறங்கியேறுவதை அடித்திருந்தால் ஏற்றிருப்பேன். காதலையே சந்தேகித்து...

இலக்கியம் வடிக்கவா இன்றுவரை இவளைக் காதலித்தேன். இலக்கியம் வடிந்துவிட்டால் இனியவளைக் காதலிக்க வேண்டாவா? இலக்கியம் வடிக்க இசைந்திடா எவருக்குமே இனி காதலியென்று எவருமே வேண்டாவா?

கல்லூரியில் அறிமுகப் பழக்கம் மட்டுமே வைத்திருந்த அநாமிகாவின் பிரிவை எழுதிவைத்ததையே அன்று அடுத்த வரிடம் காட்டி ஆளுமைக் காலரை உயர்த்தலாகாது என்றிருந்ததை இவளென்ன எவரும் அறியமாட்டார்கள்...

“தாயார் சந்நிதி திறந்திருக்கும். போவோமா...” வெறுப்புத் தளும்பித் தேளாய் அவளைக் கொட்டிவிடும் முன்னர் இப்போதைக்கு எதையோ பேசிச் செயல்வடிவம் கொடுத்து இடத்தை விட்டு அகன்றிட மனம் பரபரபத்தது.

“Sure.” உடனடியாக ஒப்புக்கொண்டாள். இந்த மௌனத்தைக் கலைக்க எச்செயலும் பரவாயில்லை. நினைத்தாள்.

மணலடியில் எழுந்து நடக்கத்தொடங்கினார்கள். எதிர் எதிர் திசைகளில்.

“ரேஷ்... இல்லை. வந்த வழிலயே வேண்டாம். அப்பிரதட்சணம்பா... நேர் பாதைலயே போவோம்...” என்ன சொல்கிறான் இவன்? எதைப்பற்றிச் சொல்கிறான்?

ரேஷ்மா தீர்மானிப்பதற்குள் கையைப் பிடித்துத் தான் எத்தனித்த திசைக்கு இழுத்துச் சென்றான். “சுத்தி வந்து சேவிக்கலாம்...”

“ஏண்டா... நேத்திக்கு கைகோக்க மாட்டேன்ன இப்ப புடிச்சு...”

“ஓ... ஸாரி... சரியான வழி...”

“தட்ஸ் ஓகே... I don’t mind...”

கையை விட்டுவிட்டான். ஆனால் நெருக்கத்தை விட்டு வைத்திருந்தான். நடக்கும் காதலுற்ற உடல்கள் ஒன்றையொன்று நாகரீகம் போர்த்திவிட்ட ஆடைகளினூடாய் அவ்வப்போது ஸ்பரிசிக்கும் நெருக்கத்தை விட்டுவைத்திருந்தான்.

நாவலாய் எழுதிவிடத்தான் நடித்தேனா நாளிரண்டிலும், நாற்பது வயதிலும்? தேக்கிவைத்திருந்த தேம்பாவணிகள் அனைத்துமே தேய்பிறையில் தெவிட்டித் தேம்பவைத்திடும் ஒப்பாரிகளா. என் காதலும் அதன் விண்ணிலடங்கா விரக வீரியமும் விடை தேவையற்ற விடுகதையா இல்லை வாசித்த வீணருக்கும் விவேக சூடாமணி விடைகூறிச் சென்ற வியர்த்தங்களா?

தாயார் சந்நிதியில் பட்டாச்சாரியார் திருத்துழாய் மஞ்சள் காப்பு சடாரி என்று அளிக்கையில் தொட்டுக்கொள்ளும் நெருக்கத்திலேயே நின்றிருந்தான்.

வேண்டிக்கொண்டாள். “அம்பாளே... எங்க வெக்கணுமோ அங்கயே எல்லாரையும் நல்லபடியா வெச்சுரும்மா...” கண் திறந்தவள் எதிரே ஏந்திய தீபாராதனையைத் தொட்டுக் கண்ணொற்றியபடி அருகில் ரங்காவைத் தேடினாள். வெளியே போய்விட்டிருந்தான்.

என்னவோ சரியில்லை. நான் கேட்டதில் கோபமென்றால் என்னிடம் இந்நேரம் கொட்டிவிடுவான். பேச்சினால் காதலைக் கடந்த உணர்வொன்றைக் கிண்டிவிட்டிருக்கிறேனோ...

உலோகப் பளபள ஆடையணிந்த கல் நிலைப்படியில் மெட்டி ஒலிக்கக் கடந்து வெளிப்பிரகாரத்திற்கு அவனை நோக்கி வந்தவள் சற்றும் எதிர்பாராமல் “ரேஷ்மா... நில்லு...” என்று சொல்லியபடித் தன் கைவிரல் எடுத்து நெற்றியில் மஞ்சள் காப்பை இட்டுவிட்டான்.

என்ன... வாட்... ஐயோ... என்னடா செய்றே... எதுக்கு... ரங்கா, I can’t take it... வேண்டாம்... ஏதேதோ நினைப்பதற்குள் அவ்வெண்ணங்கள் அனைத்தையுமே ஒற்றைக்கை விரலில் மனத்திலிருந்து சுண்டியெறிந்து மேலும் ஏதேதோ நினைக்க வைத்தான் தன் அடுத்த சொற்களினால்.

“நல்லா இரு ரேஷ்மா...”

விடுவிடுவென்று வெளிப்பிரகாரத்தின் இருட்டான மூலையை நோக்கி நடந்தாள் ரேஷ்மா. முகம் வெளிறியிருக்க வேண்டும். தூணருகில் அமர்ந்துகொண்டாள். அமர்கையில் கைக்குட்டையை எடுத்துக் கண் துடைத்தாள். கவனித்திருப்பான். செய்யட்டும். பாவி. இடியட். ஃப்ராடு... சே... இல்லை, ஃப்ராடு இல்லை... நம்பமுடியாத அளவு நல்லவன்...

“என்ன ஆச்சு ரேஷ்மா... ஏதாது தப்பா... ஐம்...”

“சே... வேணும்னுதான செஞ்சே...” ஆனால் இதை அன்றே பிடித்துக்கொண்டிருக்க வேண்டும் ரங்கா. இருவருமே. இன்று அணையும் முன்னர் பிரகாசமாகும் தீபமாய்...

“ம்ம்ம்...”

உறவென்பது அதைப் பேணும் மனங்களின் ஆன்மீகப் பயணமா? காதலென்பது அது சூல்பெறும் மனங்களின் புனித யாத்திரையா? வாழ்வின் அனைத்துக் கணங்களிலும் எங்கிருந்தாலும் மற்றொன்றின் நலத்தை மட்டுமே காதலாய் வேண்டும் இரண்டு இதயங்களை இணைத்திட்டு அவற்றினுள் எழும் அன்றாடங்களையும் அநித்தியங்களையும் சுத்திகரிக்கும் உயிர்த்தேன் ஓடும் ரத்த நாளங்களா?

பாலம் அது இணைப்பவற்றைப் பேணுமா? கைகுலுக்கல் கைகளைக் கறைபடியாமல் காப்பாற்றுமா? உறவின் தூய்மை அது பாலமிடும் மனங்களின் மாசுகளையும் அகற்றும் வல்லமை கொள்ளுமா? நேர்மை என்பது உறவினிலா அதைப் பேணும் மனங்களிலா?

“கிளம்பவேண்டாமா.” அவனை நோக்கி விரித்த மணிக் கட்டில் அவள் கைக்கடிகாரம் பதினைந்து நிமிடங்களுக்கு மேல் அவர்கள் மனங்களினால் பரிமாறிக்கொண்டிருந்த கடந்தவற் றிற்கு அத்தாட்சி வழங்கியது.

***

முறுக்கு மாமி வைத்துவிட்டுப் போயிருந்த அரிசி உப்புமா ஆறிப்போய் உப்புக் குறைவாகச் சப் என்று இருந்தது. தாமதித்து விட்டேன்... ரங்காவுக்குத் தட்டை எடுத்து எதிர்ச் சுவரில் வீச வேண்டும் போல் இருந்தது.

காபியுடன் அறையினுள் வந்தவள் அவன் உணவுத்தட்டின் முன்னர் வெறித்திருந்ததைக் கவனித்துவிட்டாள். “அப்பவே வர்றேன்னியேன்னு கொண்டுவந்து வெச்சுட்டேம்பா. நோக்கு பேசறதுக்கு அத்தன இருந்துருக்கும்... ம்ம்ம்... பேசிப் பேசி என்னத்தக் கண்டோம் சொல்லு... காலாகாலத்துல சாப்ட்ருந்தேனா தேவாம்ருதமாருக்கும். பாரு பாவம் மென்னு முழுங்கற... ஏதோ வசனம் சொல்லுவா... ஆக்கிவெச்ச அன்னத்தயும் ஆத்துக் காரி கன்னத்தயும் ஆறப் போடக்கூடாதுன்னு... முடியாட்டி வெச்சுருப்பா... ராத்திரி வேற...”

“அதெல்லாம் ஒண்ணுமில்ல மாமி. பசிக்கலை. போதும். காபி நன்னாருக்கு... ராத்திரி எதும் வேணாம். தேங்ஸ்...” பேச விட்டால் ஆபத்து. ஹேஷ்யமாகப் பேசியே கிண்டிக் கிளறி என்னை உப்புமாவாக்கி விடுவாள்.

நிஜமாகவே அவளுக்கு அவனுடன் உறவு கொள்வதில் விருப்பமில்லையோ. சந்தித்துப் பேச மட்டுந்தான்... போனால் போகட்டும் என்று ஒரு ஆலிங்கனம், sweety pie, snooky wooky தடவிய மேலை நாட்டுக் காதல் பரிபாஷை, கன்னம் மட்டும் களிக்கும் முத்தம். பிடித்தமான உயிரற்ற பொம்மையை ஆராதிப்பதைப்போல, இடையிடையே மானே தேனே சொல்லி... மனிதர் உணர்ந்துகொள்ள இது மனிதக் காதல் மட்டுந்தானா...

“உடலுறவற்ற உறவில் நீ சொல்லும் மீள்-காதலில் பெண் தனக்கு வேண்டியவாறே அனைத்தையும் பெற்றுவிடுகிறாள். ஆண் தனக்கு வேண்டிய எதையுமே பெறுவதில்லை.” அமெரிக்க ஆண்டி அன்று ஆபீஸில் சொல்லிச் சிரித்தது. சத்தியம்.

கேட்டதைத் தருவதற்குத் தயக்கம் என்றால் என் காதலையும் கீழ்தரமாக்கி இருக்க வேண்டாமே. எண்ணங்களில் சேறடித்து இனி நான் தான் என் கண்ணியத்தை இவளிடம் மீட்டுக்கொள்ள வேண்டும் என்றல்லவா ஆக்கிவிட்டாள்.

ஆல் ஆர் நத்திங் என்பதில் சம்திங் என்று நிலை ஒன்று மில்லை. இந்த இல்புறக் காதலில் நான் விழையும் ஆல் ஆர் நத்திங் உறவது என்றாலும், இரண்டு நிலையிலுமே ரேஷ்மா விற்குப் பெறுவதற்கும் அனுபவிப்பதற்கும் போதியவை உண்டு, அவளுக்கு இழப்பு ஒன்றுமில்லை. ஆனால் இரண்டு நிலை யிலுமே வேதாவிற்கு இழப்பு உண்டு...

அனைத்தும் என்றால் கணவனை இன்னொருத்தியுடன் சரிசமமாகப் பங்கிட்டுக் கொள்ள வேண்டும். ஒன்றுமில்லை என்றாலும் உடலால் தான் ரேஷ்மாவுடன் ஒன்றுமில்லை. மனத்தால் அவளுடன் இந்த ரங்கா பகிர்வதை வேதாவிற்கு இழப்பு என்றே கருதவேண்டும். மனைவி என்கிற பிரத்யேக அந்தஸ்து அவளுக்குப் பெற்றுதரும் சிறப்பு நிலையை, கணவனின் அனைத்துத் தேவைகளுக்கும் தான் உண்டு என்கிற அந்த உரிமையில் சற்றேனும் அவள் இழக்க நேரிடும். உணர்வுபூர்வமாய், உணர்வுகளை அதற்கான படிமத்தில் பங்கிட்டுக்கொள்ள இன்னொருத்தி இருக்கிறாள் இந்த ரங்காவுக்கு என்பதால்... மீள்-காதலில்... வேதாதான் பாவமோ இதில்...

வாஷ் பேஸினில் முகம் அலம்புகையில் கவனித்தான், ராதாகிருஷ்ணர் படத்தில் மல்லிகைப் பூச்சரம் காய்ந்த சருகாய்.

குப்பைக் கூடையில் கடாசுகையில் ஐ-போன் ஒலித்தது.

***

ரேஷ்மா டிகாக்ஷன் இறக்கிப் பசும் பாலில் அம்மா சூடாய் கலந்து கொடுத்த காப்பியைப் பருகினாள். தலைவலி இதமடைந்தது.

ரங்கா அவளுடன் காரில் வரவில்லை. நடந்தே போகிறேன் என்று போய்விட்டான். “இல்ல ரேஷ்.. கமான்.. கோபமில்லை... ஜஸ்ட் வருத்தம்... அத்த விடு... அதுக்கும் இதுக்கும் என்ன... இப்டியே கோயிலுக்குள்ளால அந்தப்பக்கம் போனா ரெங்கா கோபுரத்தத் தாண்டி நாலு எட்டுல தெற்கு சித்திரை வீதி... ஒன்னோட கார்ல வந்தா மதிலச் சுத்தி மல்லிப்பூ அக்ரஹாரத்துல கொண்டு விடுவ... திரும்பி உள்பக்கமா நடந்து வரணும்... அய்யங்கார் பையனோல்யோ எனக்குத் தெரியாத ஸ்ரீரங்கமா, சொன்னாக் கேளு... ராத்திரி நீ கௌம்பறத்துக்குள்ள ஐல் கால் யூ...” சிரித்துக் கொண்டுதான் அகன்றான். சொதப்பிவிட்டேன்.

நடுக்கத்தைக் குறைக்க இரண்டு கைகளிலும் குடிக்கும் குவளையைப் பற்றிக்கொண்டாள். “நீ இப்டிக் கொழந்த மாதிரி இப்பவும் ரெண்டு கைலயும் புடிச்சிண்டு காபி குடிக்கறது எனக்கு ரொம்பப் பிடிக்கும்.” அடுத்த வாய் பருகுகையில் ரங்கா என்றோ சொன்னது தோணிற்று. பொறை ஏறி இருமினாள்.

“பாத்துடா... மெதுவா குடின்னா கேக்கறயா... யாரோ நெனச்சுக்கறாங்க

போல... அனிக்குட்டியாத்தான் இருக்கும்... தனியா விட்டு வந்திட்டேல்ல... தலைல தட்டு...”

அம்மா உணவு மேசையின் எதிர்முனையில் அவள் நேற்றுக் கட்டியிருந்த நீலப் புடவைத் தலைப்பை அக்குளில் இழுத்துச் சொருகியபடி எழ முனைந்தாள்.

தானே தன் தலையில் தட்டியவாறு ரேஷ்மா காபி கோப்பையுடன் அருகில் சமையல் அறைக்குள் அவசரமாய் நழுவினாள், பேசிக்கொண்டே. “காலனி பிள்ளையார் கோயில் அய்யர் வீட்டு மாடுதானாம்மா இன்னும் ஒங்களுக்கு... அது மட்டுந்தான் ஒங்க சொன்ன பேச்சக் கேக்குது இன்னமும்... கேட்டதும் பால் வந்திருச்சி... அவரு வீட்டுப் பொண்ணுதான நம்ம சமூகத்துல கட்டிக்கிச்சி... சுகமாருக்குதாம்மா? மதுரைலயா... எத்தினி சண்ட போட்டாங்க, சாதி அது இதுன்னு... சேந்துகிட்டாங்களாக்கும்... அப்பா சொல்லிட்டாருன்னு குருக்கள் ஒத்துக்கிட்டாராக்கும்... இதுக் கொண்ணும் கொறச்சலில்ல, அப்பா ஊருக்கெல்லாம் நல்லவரு... ஒண்ணுமில்ல, அப்பா இப்பல்லாம் பகல்ல காபி கேக்கறதில்லையா ஒங்கள... அத்தை போனதுக்கப்பறம் நீங்க மட்டுமில்ல தனியா குடிக்கணும்... மாத்திர போட்டுக்கிட்டாராமா, கேட்டீங்களா... வண்டி பத்தரைக்குத்தாம்மா... எல்லாம் ரெடி... அதான் குமார் கார் வரும்ல... நானே போயிருவேன், பச்சப் புள்ளயா...” அம்மாவிடம் தன் இயல்பில் எவ்வித மாற்றமும் இல்லை என்பதை உறுதி செய்வதற்குக் கவனமாய்த் தழைந்த குரலில் பேசியபடி சமையலறை விட்டு வெளியேறி கல்லூரி தினங்களில் பெற்றோர் வீட்டில் தன் தனிப்பட்ட அறை என்றிருந்ததற்குள் நுழைந்து கதவைச் சாத்திக்கொண்டாள்.

உடையைக் களையாமல் படுக்கையில் விழுந்தாள். உணர்ச்சியை அடக்கி அம்மாவுடன் மெலிதாய்ப் பேச முற்பட்டதில் தாடையின் அடிப்பகுதி தொண்டை இழுத்துக் கொண்டு வலித்தது. அழுகை அயர்ச்சியை மீறிப் புறப்பட்டது.

ஏஸி உறைக்கவே இல்லை. புதுசு மாத்தச் சொல்லணும். எப்டித்தான் பகல்ல தூங்கறாங்களோ. ஸோ ஹாட். பெங்களூர் பரவால்ல... இதுல ஏஸியே வேணாமாம் இவனுக்கு. பைஞ்சு வருஷமா அமெரிக்காலயே பழகிட்டான்... போகாம என்னோட இங்கயே இருந்துருந்தான்னா என்ன செஞ்சிருப்பானோ... வீட்ல சண்டை போட்டுக்கிட்டு ரெண்டு பேருமா மெட்ராஸ்ல எங்க யாச்சும் சிங்கி அடிச்சிருப்போம்...

நிகழாத கடந்தகாலத்தைப் பெருமூச்சுடன் உள்ளிருந்து வெளியேற்றியபடி புரள்கையில் தோள்புறம் துணியில் ரங்காவின் வியர்வை வேறு வாசமடித்தது. மிகவும் நெருங்கிவிட்டேனோ. மீள முடியாமல். ஸ்டேஷனுக்கு வரச்சொல்லலாமா?

ரேஷ்மா அலைபேசியைத் திருகத் தொடங்கினாள்.

## 15

ஸ்ரீரங்கம். மறுதினம் இரவு.

“குமார் ஸ்டேஷனுக்கு வந்துருவாரில்லம்மா?” ஸ்டியரிங் கைப் பற்றியவாறு ஜன்னல் வழியே தலைநீட்டி வினவினாள்.

“இல்லாட்டி ரங்கா எடுத்து வந்து விட்ராதா?”

அந்த இரவு நேரத்தில் ரங்கா அவர்கள் வீட்டிலிருந்தே ரேஷ்மாவை பெங்களூர் ரயிலேற்றத் துணைக்குப் போவதற்கு அவள் அம்மா ஆட்சேபிக்காததற்கு இதுவும் காரணமா. “ரொம்ப தேங்ஸ் பா... காலேஜுக்கு பத்திரமா கூட்டிப் போய்ட்டு வருவே... இப்பவும் அதே டியூட்டி...” என்றிருந்தாள்.

தாய் தவிர்த்து காவிரி விடுத்துக் காதல் உறைய விரையும் ஏஸி காரினுள் ரேஷ்மாவின் சன்னமான குரல் “ரங்கா டியர்...”

“ம்ம்ம்... சொல்லு...” அடித்தொண்டையில் பேசினான்.

“ரெண்டு நாளையும் வாழ்க்கைல மறக்க முடியாதுடா...”

“... ...” இடைவெளிவிட்டு நிரப்பினான். “...என்னாலுந்தான்.”

“எனக்கு இது வேணும்னுதான் தோணுது. சரியா தப்பானு லாம் இனிமே யோசிக்கப்போறதில்லை. ஆனா இப்பைக்கி இது போதும்னும் தோணுது...”
பொய் சொல்கிறாள் என்றது ரங்காவின் மனம்.

“இப்பக் கையப் பிடிக்க மாட்டியா.” தொடையில் கிள்ளினாள்.
ஏன் இவன் தொடுகை இப்போது தேவையாய் உள்ளது? கை பிடித்தால் போதுமா? கூடுவதில் அவன் காலையில் தெரிவித்த விருப்பைக் காதலுடன் கோயிலில் போட்டு உடைக்கையில் தேவை என்று படாத உணர்வு இப்போது அதிகரிப்பதேன்.

“நோப்... அபச்சாரம். அதெல்லாம் கோயில்ல மட்டுந்தான்...”

“எப்பேர்பட்ட பக்திமான்... ஃப்ராடு...” அரையிருட்டில் மாறி வரும் வெளிக்காட்சிகளில் அவள் பற்களின் வெண்மை ரங்காவுக்குப் பரிகாசப் பிடிமானமானது.

“கையப் புடிச்சு கோயில்ல சரியாத்தான வழி காட்டினேன்...”

“ஏன்... இப்பவும் வழிகாட்டப் புடிச்சுக்கறது...”

காதல் வெளிப்பாட்டின் கட்டுப்பாட்டு எல்லைகள் இருவருக்கும் வெவ்வேறு என்று மீண்டும் நிச்சயப்படுத்திக் கொள்வதில் என்ன லாபம்? ஆல் ஆர் நத்திங் என்று தீர்க்கமாய் நம்பும் அவன் இவ்வாறு கை மட்டும் பிடிக்கமாட்டான் என்று தெரிந்தும் அதை மட்டுமே வேண்டுவதில் குரூர ஆனந்தமா? இல்லை நிகழா அச்செயல் விளைவிக்கும் தவிப்பிற்கு முழுக் காரணமும் அவனே என்று பழியைத் திருப்பும் மனச்செய்கையா?

“வழி புரியாமலா ரேஷ்... பொய் சொல்லாதே...”

“ஒங்கிட்ட எதுக்கு...”

“அபிகிட்ட மட்டும்தான் செய்வியா?” நாக்கைக் கடித்துக் கொண்டான். “...Sorry, that was not proper.”

ரேஷ்மா துணுக்குறவில்லை. அவன் மீது பரிதாபமாயிருந்தது. “என்ன பொய் சொன்னேன்?”

“இது போதுங்கறயே, அது மாதிரி...”

“அது உண்மைதான் ஸ்வீட்டி...” இவனும் அனிக்குட்டி தானோ. ‘நீங்க மட்டுமே என்னோட கேர்ள் ஃப்ரெண்டா இருந்து ருங்கமா...’ னுச்சே போன்ல, அதுமாதிரி...

“இப்போதைக்கா? எப்போதுமேவா?”

“எப்போதுந்தான்... ஏன்? ஒனக்குப் பிடிக்கலயா?”

“இதுக்கு மேல ஒண்ணும் வேணாமா? Are you sure?”

“வேற என்ன நம்மால தந்துக்க முடியும் ரங்கா?”

மூச்சை இழுத்தாள். முகத்தைத் திருப்பிக்கொண்டான்.

ஜன்னலுக்கு வெளியே தூரத்தில் மலைக்கோட்டை ஒளி மாலையிட்ட மார்பக நிழலுருவாய் ஏறித் தணிந்தது.

சற்று நேரங்கடந்து அவனும் விடை அளிக்கவில்லை.

ஞாபகமாய் அவனுக்குப் பிளாட்பாரம் டிக்கெட் வாங்கிக் கொண்டு ஸ்டேஷன் உள்ளே நுழைகையிலும் ஏதேதோ பேசிக் கொண்டு வந்தாள். “அபியும் ஒன்ன மாதிரியேதான்... எப்பயும் எதையாச்சும் படிச்சிட்டேருப்பார். இந்த கீழ கெடக்கற டிக்கெட்ட கூட விடமாட்டார்... இவுருக்குன்னே வீட்டுல மூணு பேப்பர் வாங்குறோம்...”

மறுநாள் பழையதாகிவிடப்போகும் செய்திகளைத் தினமும் மூன்று முறை வெவ்வேறு எழுத்துருக்களில் வாசிப்பதில் என்ன லாபம்? குப்பை டிக்கெட்டில் என்ன குறுந்தொகையா கிடைக்கும்? கண்டதையெல்லாம் படித்தால் கண்டபடிதான் படித்திருப்போம். கவனமாய்ப் படிப்பதற்குள்ளேயே கால் நூற்றாண்டு கடந்துவிடுகிறது. கனவுகளில் கலைந்து, கருத்துகளைச் செரித்து, கால்போனபோக்கில் கண்டதையும் ஜெயித்து விடுகிறோம். காதலில் தோற்றுவிடுகிறோம். என் வயதொத்திருப்பவனுக்கு இக்கற்பிதம் எட்டியிருக்காதா என்ன? எனிவே, நான் அபி இல்லை. அவன் முதல் காதலில் ஜெயித்தவன்...

ரங்காவுக்கு அபியைப் பற்றிக் கேட்டுக்கொள்ளப் பிடிக்கவில்லை. பொறாமையில் என்றால், வேதாவைப் பற்றி ரேஷ்மா விடம் பகிரவும் தோன்றவில்லையே. வேதவல்லியையே மணந்துள்ளேன் நான் அபியில்லை என்கிற இறுமாப்பா?

ரேஷ்மாக்களைக் காதலிப்பது எளிது. எவ்வயதிலும். அதில் ஜெயிப்பதும் எளிது. எவ்வயதிலும். தோற்பதுதான் கடினம். எவ்வயதிலும்.

வேதவல்லிகளிடம் காதலில் தோற்பது எளிது. எவ்வயதிலும். நான் அதில் ஜெயித்திருக்கவே விரும்புகிறேன். இவ்வயதிலும். ஜெயிக்க விரும்பாத ஆணா?

பேசிக்கொண்டிருந்த அலைபேசியை அணைத்து அவனிடம் சிரித்தாள். “அம்மாதான். குமாரை உன்னைக் கொண்டுபோய் உன் வீட்டுல விட்டுத் திரும்பச்சொல்றாங்க...”

“இல்ல வேணாம்... பஸ்லயே போய்டுவேன்... Send him off... thanks...”

அவர்கள் இளமையில் நேரிடையாய் எளிமையான பாதையில் திருச்சியிலிருந்து பெங்களூர் சென்றுகொண்டிருந்த அவள் போகவேண்டிய ரயில்வண்டி இன்று மயிலாடுதுறையில் கிளம்பி மைசூர் வரை சென்றுகொண்டிருந்தது. நடுவே திருச்சி யிலும் பெங்களூரிலும் தாட்சண்யத்திற்கு நிற்கிறது.

வருடங்கள் தான் எத்தனை தேவையற்ற தளைகளையும் அலங்கார அடுக்குகளையும் ஏற்றி வாழ்க்கைப் பயணத்தின் இலக்குகளைச் சம்மந்தமில்லாமல் சிதறி, புறப்பட்டதெங்கே போவதெங்கே அவற்றை நிர்ணயித்த திட்டங்கள் எங்கே என அனைத்தையுமே புரட்டிப்போட்டு, பயணத்தையே பொருளற்றதாக்கி...

வண்டி ஆயாசமாய் வந்து நின்றது. அரைமணி லேட்.

“We’ll meet again ரங்கா... Keep in touch...” ரேஷ்மா ஏறுவதற்கு ஆயத்தமாகியிருந்தாள். “பாக்கலாந்தானே...”

“நிச்சயமா. நாம என்னிக்குமே நண்பர்களுக்கு மேல, இல்லயா... இந்தியா வந்தா சொல்றேன்...”

அவனுக்குப் பகலிலும் ஒத்துவந்திராத ஏஸி குளிர் ரேஷ் மாவை ஆட்கொண்டது.
கந்தகப் பூமியின் சூடான இரவு அவன்மீது கவிந்தது.

# 16

## பயணங்கள். இரவு.

ரேஷ்மா தன் பக்கவாட்டு மேல் பெர்த்தில் சாய்ந்திருந்தாள். உறக்கம் இன்னமும் சாயவில்லை. டிக்கெட் பரிசோதகர் வரும்வரை விழித்திருக்க வேண்டும்.

படுத்திருந்த நிலையில் திசையற்ற பயணம் தன்னை இட்டுச் செல்வதெங்கே என்று வயிற்றில் மருட்சி சுரந்தது. காட்சிப்பட்ட சுற்றம் அரையிருளில் அவளுடனேயே இருந்தது ஆதுரமாய் மூச்சுவிட வைத்தது.

ரங்கா பஸ் பிடித்திருப்பான். இடியட். திரும்பிப் பார்க்கக் கூட இல்லை. தழுவிக்கொள்ளவும் அவனுக்குத் தேவையிருக்கவில்லை. மாறவேயில்லை.

குறுஞ்செய்தி அனுப்பினாள்.

நானுந்தானே மாறவில்லை... அதே கோப...

போன். அம்மாவிடமிருந்து. “ரேஷு... வண்டி கௌம்பிருச்சா... அவுரு வர்ற வரைக்கும் அங்க ரயிலடிலயே வெயிட்டிங் ரூம்ல இருந்துக்க. நம்ம ஊரு இல்ல. தனியாப் போவாத...” அரைத் தூக்கத்திலும் அன்னை... அதற்குள் செல்போனில் அழைத்திருந்த அபியிடம் மீண்டும் அழைத்துப் பேசினாள்.

“...இல்லங்க, அம்மாவோட... ஆமாங்க, தனியாத்தான் வந்தேன்... அப்பா வந்து என்ன செய்யப்போறாரு... எனக்கென்ன எங்கூரு தெரியாமப் போயிருச்சா. ரயில் ஏறிட்டேன். குமார் அப்பவே போய்ட்டாங்க... ஆமா, தலவலி... அய்யோ, ஆமா ஒரே ஒரு சிகரெட் தான்... இல்லை, மீண்டும் தொடங்கலை... மாட்டேன். டென்ஷன்... நிக்கோடின் பாட்ச் எடுத்திட்டு வர மறந்திட்டேன். ஏனா, ம்ம்ம் ஒங்களாலதான்... இங்க கெடக்கலை. ஏனா... ஸ்மால் டௌன். அப்டித்தாங்க, டன்ஹில் கெடைக்கும், நிகோடின் பாட்ச் கெடைக்காது, அதுதான் ஸ்ரீரங்கம்... வளச்சு வளச்சு கேக்குறதப்பாரு... கம்பெனில கண்ட சாப்ட்வேர வாங்க வெக்குது பாருங்க ஒங்க அட்வைஸர் பேனல், அந்த பர்சேஸ் மீட்டிங்ல சிஇஓன்னு கெத்தா இப்டி மடக்கி நாலு கேள்வி கேட்டீங்கனா செலவக் கொறைக்கலாம்... மனசுலலாம் ஒண்ணும் இல்லைப்பா... ஒங்கள

கோச்சுட்டு நாங்க எங்க போறதாம்... நத்திங் பர்சனல்... ஜஸ்ட் ஆபிஸ் பிரச்சனை... கணிக்ஸ்... சொன்னேனே... நேத்திக்கு ரிஸைன் பண்ணிட்டாங்க. நானே ராத்திரி கான்ப்ரன்ஸ் கால் போட்டு ஊரைக் கூட்டி... நிம்மதியா ரெண்டு நாளு ரெஸ்ட்டுன்னு வந்தா அதுக்குள்ளார ஆபீஸ் பிரெச்சனை... அத்தோட PMS, வலி... கேக்கணுமா... இல்லங்க, அவங்க புருஷன் மொத்தமா உருவிக்கிட்டு ஓடிட்டாரு போல. ரஜனீஷ் மேட்டர்... ஸாரிபா, தப்பு... அவரால இல்லை... இவனாப் பிச்சிக்கிட்டு ஓடிட்டான்... ஆமாங்க, கணிக்ஸ் படுத்திச்சி, இவுருதான் கண்டாரு... அதான... ஒங்க பவிசு எனக்குத் தெரியாதா... அய்யோ... இவுரு அப்டியே தாங்குறாருப்பா... ரெண்டு நாளு பாத்துகிட்டாராம்... ஒங்க புள்ளயுந்தான அது... ஏன், போங்களேன் நீங்களுந்தான்... நோ நோ, அதர்வைஸ் நத்திங்... ஒங்களால ஹெல்ப் பண்ண முடியாது டியர்... ஆங், அதுசரி... ஒங்க கம்பெனிய நல்லாக் கொண்டுவாங்க... ரெண்டு வருஷத்துல இந்த வேலைய என்ன வுட வெய்ங்க, இன்னும் நாலுன்னாலும் பெத்துக்க நான் ரெடிதான், இப்ப சீக்ரம் படுங்க... தூங்கிருச்சா, கேட்டுச்சா... அதான, அம்மாக்கு இல்லாத பாசம் புள்ளைக்கி மட்டும் வந்துருச்சாக்கும்... அலார்ம் வெச்சுக்குங்க... காலைல ஸ்டேஷன் வரணுமில்ல... கண்டோன்மெண்ட் இல்லைங்க, எத்தினி வாட்டி சொல்றது... அங்க நிக்காது. ஸிட்டி ஸ்டேஷனுக்கு வந்துருங்க...”

சரிந்து படுத்தாள். நீல ஒளியில் விட்டத்தின் ஓரத்தில் அபாயச் சங்கிலிப் பிடி கருப்பாய்த் தேவைக்கதிகமாய்க் குலுங்கியது.

ஆயாசமாய் இருந்தது. கண்களை மூடினால் எரிந்தது. தலைவலி.

மற்றொரு முறை அபியிடம் அவருக்கான உண்மைகளை மனமுவந்து அளித்தாகிவிட்டது.

உறக்கம் தலைவலியையும் ரங்காவையும் மனத்துள் ஒரு ஓரத்தில் குவித்தது. மனம் அந்த ஓரத்தையே உக்கிரமாய் உள் வெறித்திருந்தது. குவிமையம் கூர்மையாய் வெறித்திருந்ததைக் கழுவேற்றியது. வலித்தது. ஆடுதொடை தளர்ந்தது. அடிவயிற்றைச் சுருட்டி யெடுத்தது வலி. ஆனால் இவற்றையெல்லாம் கடந்து, அசைவற்ற குளத்தினுள் கையை முக்குகையில் நீரை மூடியிருக்கும் பாசி விலகுவதுபோல், மனம் நொடியில் கட்டவிழ்ந்தது. இரவின் மங்கிய வெளிச்சத்திலும் மனத்தின் கண்களுக்குள் திடீர் ஒளி.

விலக்காகிவிட்டாள் போலும்.

இப்போதெல்லாம் உடல் உபாதையைவிட மனத்திலிருந்து விலகும் அழுத்தம் காட்டிக்கொடுத்துவிடுகிறது. முதல் துளி ரத்தம் வெளியேறுகையில், விசை அழுத்துகையில் திறக்கும் மேடைத்திரையைப்போல, ஸேப்டி வால்வ் திறந்துகொண்ட பிரெஷர் குக்கர் போல, ஒரே நிமிடத்தில் ஈஸ்ட்ரொஜென் சுரந்து இந்தா பிடி அமைதியை என்கிறது. நல்லவேளை கிளம்பும் முன்னர் அனுமானித்து டாம்ப்பானைப் பொருத்தியிருந்தாள். என்னதான் முதல் வகுப்பு என்றாலும் ஓடும் ரயில் கழிப்பறையில் அதைச் செய்வதென்றால்... இரண்டு நாட்கள் அவளுள் அடைபட்டிருந்த பெருமூச்சு சிறையிலிருந்து வெளிப்பட்டது.

உறக்கத்தை வரவழைக்க ரேஷ்மா கைப்பையிலிருந்து பரிசு உறை கிழித்து அட்டையில் சீனத் தளபதியைச் சுற்றிலும் டிராகன்கள் வேலைப்பாடுகளுடன் வரையப்பட்டிருந்த சிறிய புத்தகத்தை எடுத்து விரித்தாள்.

‘...தாக்குதலில் வெற்றிகொள்வாய் எனும் உறுதியை, பாதுகாக்கப்படாத பகுதிகளை நீ தாக்கும்போதே பெறுவாய். தாக்குதலுக்குட்படாத நிலைகளைத் தேர்வு செய்கையில்தான் உன்னுடைய தற்காப்பைப் பாதுகாப்பானது என்று உறுதி செய்துகொள்வாய்.’

ஸ்ரீரங்கம் வருவதற்கு முன்னால் ப்ராஜெக்ட் மேனேஜர்களுக்கான தலைக்கு இரண்டு லட்சம் கொடுத்து ஆபீசில் ஏற்பாடாகியிருந்த ‘மேநிலை அலுவலில் திறன்கூட்டி இயங்குவது எப்படி’ என்ற போதனை ‘வொர்க்ஷாப்’பில் படிக்கக் கொடுத்திருந்த குப்பைக்கட்டை அப்படியே கைப்பையில் திணித்திருந்தாள். அதில் ஒன்றைத்தான் எடுத்து விரித்தாள். கி.மு.வில் எழுதப்பட்ட ஸண்ட்ஸு-வின் ‘போர்க் கலை’.

ஐடி கம்பெனியை லாபத்திற்கு நடத்துவது எதிரியுடன் யுத்தம் செய்து தாய்நாட்டைப் பாதுகாப்பதற்கு ஒப்பானதாம். மேலாளர்களுக்கு இப்பாடம் என்றால், நெஞ்சுரம் ஏற்ற இன்னொரு புறம் ‘ப்ராஜெக்டு லீட்’கள் டாலர் அம்மனுக்கு நேந்துகொண்டு பேண்டை மடித்துவிட்டுத் தீ மிதித்துக் கொண்டிருக்கிறார்கள்.

‘...சிறப்பான தளபதி என்பவனின் தாக்குதல் எவற்றின் மீது என்பதை எதிரியால் நிர்ணயிக்க முடியக்கூடாது. அவ்வகைத் தளபதியே தன்னுடையதில் எவற்றைத் தாக்கவேண்டும் என்பதையும் எதிரிக்குப் புரியாமல் வைத்திருப்பான்.’

பொய் சொல்லிருக்க வேண்டாம். ஆனால் உண்மையை எதிர்கொள்ள எனக்கு வேறு எது அரண்? நானொன்றும் ஆண் மனம் வடித்த ஆண்களின் மனங்கவர் குலமகள் ராதை இல்லையே. இந்த மீள்-முதல்-காதல் இரண்டு தினங்களின் முடிவில் எங்கு போய் முடிந்திருக்கும் என்று எனக்கும் தெரியுந்தானே. அம்முடிவில் சங்கடமில்லை. தவிப்படங்கியிருக்கும். ஆனால் அங்கிருந்து தொடங்கப்படுவது எது என்பதில்தானே... குலமகள் ராதை இல்லையெனின் கண்ணனின் ராதையும் நானில்லையே. மீள்-காதலின் உண்மை தடுத்திரமுடியாத முடிவையல்லவா அம்முடிவினால் தொடங்கப்பட்டுவிடும் மற்றொரு ஆரம்பத்தையல்லவா பொய்யரணால் பொடித்தேன். அன்று ரங்கா அவன் கண்டுகொண்ட உண்மையை எதிர்கொள்ள என்னிடம் உபயோகித்த அதே அரண்தானே இன்று எனக்கும் அவனிடம்...

‘ஒப்பிற்கு உருவாக்கப்படும் குழப்பம் சீரான தெளிவையே முன்வைக்கிறது; ஒப்பிற்கான பயம், தைர்யத்தை; பாவனையான பலவீனம் முன்வைப்பது பலத்தையே...’

சீன சூத்திரதாரி ஸண்ட்ஸு போர்க்கலையை குறுஞ்செய்திகளாய் விரித்துக்கொண்டிருந்தார்.

படுத்திருந்த வாட்டத்தில் காதருகில் போனில் குறுஞ்செய்தி சிணுங்கியது. ரங்கா கனவுகளை நினைவுறுத்தியிருந்தான். அபி எனும் விடியல் வரை. பதில் குறுஞ்செய்தியை அனுப்பாமல், மனம் ரங்காவிடம் முறையிட்டது.
ஒங்கிட்ட பொய் சொல்ல முடியற அளவுக்குக் காதல் உண்டு ரங்கா. என்னிக்கு வேணா உண்மையைச் சொன்னா நீ ஏத்துப்ப. நான் இல்லாதப்பவே என்னை நீ என்னிக்கும் காதலிக்கறவன். அபியோட நானா ஏற்படுத்திக்கிட்ட பந்தமும் காதல்தான். ஆனா அந்தக் காதலில் அவரிடம் உண்மையைத்தான் சொல்ல முடியும். அதுவும் ஓரளவுதான். அந்தக் காதலுக்குப் பொய்யைத் தாங்கற சக்தியும் கிடையாது. உன்னுடன் இன்று உடலாலும் உறவாடிவிட்டு நடந்தவாறே உண்மையைச் சொன்னாலும், இல்லை அவ்வாறில்லை எதுவும் நடக்கவில்லை என்று பொய் சொன்னாலும் அக்காதல் இன்று ஏற்கலாம். நாளை தாங்காது. உன்னுடன் பழகிய இரண்டு தினங்களில் அதன் நெருக்கத்தில் அந்நியோன்யத்தில் தான் இதை என்னால் உணர முடிந்தது. எனக்கு என்றும் உன் காதல் வேண்டும். அந்தத் தவிப்பை வேண்டியபோது என் மனத்தில் திறந்துகொள்ளும் உரிமை வேண்டும். அத்தவிப்பு தரும் உடலாலும் கூடிவிடக் கூடிய அனுமதி வேண்டும்.

அதை என்றும் எந்நிலையிலும் வழங்க நீ இருக்க வேண்டும். பெற்றுக்கொள்ள நான் இதே நிலையில் அல்லவா இருக்கவேண்டும். என்னுடனான முதல் காதலில் நீ செய்த தவறை அபியுடனான என் இரண்டாவது காதலில் நான் செய்வதாய் இல்லை. காதலன் உன்னிடம் நான் கற்றது ஏதுமில்லை என்றாகிவிடுமே. ஸாரி ஸ்வீட்டி... இப் பிறப்பில் என்னோடு காதலில் வீழ்ந்துவிட்டாய். You can’t get lucky with me...

புரண்டு படுத்தவளின் கண்கள் அயரும் முன் வாசித்ததொரு வாக்கியம். ‘...தெய்வீகக் கலைகளான சூட்சுமமே! ரகசியமே! உங்களைக்கொண்டே நாங்கள் தென்படாதிருத்தலைக் கற்கின்றோம், உங்களைக்கொண்டே ஓசையெழுப்பாமலானோம்; அதனாலேயே எதிரியின் விதி எங்கள் கைகளில்.’

போர்க்கலை மடிந்து அவள் தேகத்தினுள் பொதிந்தது. காதல் யுத்தம் டிக்கெட் பரிசோதகர் வரும் முன்னரே உறங்கி நீண்டது.

***

திருச்சி புகைவண்டி நிலையத்தை விட்டு வெளியேறி, இருபது வருடப் பழக்கத்தின் துணையோடு, ஞாபகமாய் வந்த பஸ்களில் ஏறாமல் - நிலைய வாசலில் ஏறினால் அனைத்தும் திருச்சி பேருந்து நிலையம் சென்றுவிடும் - நடந்து வலப்புறம் திரும்பி எதிர்சாரி நிறுத்தத்தில் ‘ஒண்ணான் நம்பர்’ டிஎஸ்டி பஸ்ஸில் ஜன்னலோர இருக்கையில் ரங்கா அமர்ந்து கொண்டான். தூங்கியிருப்பாளா? ஐ-போனை உயிர்ப்பித்தால் வருவாள். எதையாவது பேசுவாள். இல்லை, இனி விலகிவிட வேண்டும். அபி பற்றி இன்னொரு முறை எதுவும் சொல்லாதே என்று சொல்லிவிடலாமா? போகட்டும். மனத்தை அவளாலும் சமாளிக்க முடியவில்லை. அதற்காக நான் காதலித்த கணங்கள் அனைத்தையுமே கற்பனையாக்கிவிட்டாளே, ஒரு கணத்தில்... ‘என்னோட எல்லாத்தயுமே உன் அடுத்த நாவலுக்காகத்தான் செய்றியோனு தோணுது ரங்கா...’

என் கதைகளை நிஜம் போலுள்ளது என்கையில் மகிழ்ந்த நான், அவள் என் நெஞ்சின் நிஜத்தைக் கதையோ என்றதும் தாளவில்லையே...

எண்ணங்களை நிறுப்பதில்தான் உலகினோர்க்கு எத்தனை பாரபக்ஷம். அடுத்தவரின் எண்ணங்கள் தன் மனத்தை விட்டு ஒரு ஆள் தூரம் விலகி இருப்பதாலேயே அவை செயற்கைத்தன்மை பெற்றுவிடுகிறன. தனதை

என்றுமே துல்லியமாய்க் காட்டும் நமது தன்னாடிப் பார்வையில் மனைவி என்றாலும் காதலன் என்றாலும் அடுத்தவர்களின் ஆழ்மன எண்ணங்களின் உண்மை வீரியம் உதவாக்கரை வக்கரிப்புடனேயே வெளிவருவதாகின்றது. அடுத்தவரின் ஆழ்மனம் அன்பைக் கூறி அலறுகையில் ஆண்டாண்டு அழுத்தியவற்றை அகற்றி அன்பைக் கோருகையில் அல்பத்தனம் நிறைந்ததாய் அது அடையாளப்படுத்தப்படுகிறது.

கால்நூற்றாண்டாய்க் காலம் வார்த்தவற்றைக் கடிது விரையும் கடுகுப்பொழுதில் அடிவேருடன் ஆட்டி அசைக்கும் அடுத்த வரின் ஆசைகள் அபிலாஷைகள் அனைத்துமே நமக்கு நம்மைக் கடந்து உள்ளிறங்கும் பண்பற்றவை பயனற்றவை பொருளற்றவை.

முதிராக் கவித்துவச் சுயமைதுனங்கள்.

என் உண்மைக் காதலையே சந்தேகித்ததாய், அதன் மூலம் காதலைக் கடந்து அவள் என் தன்மானத்தைத் தாக்கிவிட்டதாய்க் கருதுவது பேதமையோ? அதிகம் காதலித்து விட்டேனோ? காதல் என்ன கனிரசமா என்னுள் மட்டும் அதிகமாய் ஊற்றெடுக்க? நன்றாகக் காதலிப்பவர்கள் நிறையக் காதலிப்பார்களா என்ன?

எது பொய்? அவள் கதையா என்று கேட்டதா, தானும் இன்றும் காதலிப்பதாய்ச் சொன்னதா? எது நிஜம்? மதியம் அவள் கண்களில் என்னுடன் கூடவேண்டும் என தெரிந்த காதல் வேட்கையா, இனி எழுதப்போகும் என் மூன்றாம் நாவலா?

தலைமைத் தபால் நிலையம், மேலப்புதூர், சிந்தாமணி, ஆலிந்தியா ரேடியோ நிலையம் செல்வதற்கு முன் வலப்புறம் திரும்பி ரேஷ்மா படித்த கான்வெண்ட்... பழகிய பாட்டையில் விரையும் பேருந்தினுள் சுற்றிலும் சொந்த ஊர் என்பதற்கான அடையாளங்களுடன் அந்நிய முகங்கள். ஏதேதோ குரல்கள். சாமான்களைச் சிதறியபடி, சாமான்யங்களைச் சிந்தியபடி. சட்டைக்குள் மூடிய மனங்களினுள் காதலைக் கசிய விட்டபடி.

நிஜம் என்றது பொய். சொந்த ஊர் என்று எனக்கு என்றுமே ஏதுமிருந்ததில்லை. மற்றவர்களுக்கு மற்றுமொரு வீடு எனத் தோன்றும், நான் வாழ்ந்தது என்னுடையது எனக்கு மட்டுமென்று கருதிய ஓர் வெளி உண்டு. இந்த ஊரில். இன்று வேறொருவனை அதனுள் இருத்தி மகிழ்கிறது. மற்றவர்களுக்கு இன்றும் அது மற்றுமொரு வீடுதான்.

என்னை வழக்கமான விருந்தாளியாய் காபி கொடுத்து உபசரிக்கிறது. கைகோர்த்துக் கோலாகலிக்கிறது. நிஜத்தில் தழுவிக்கொண்டு நினைவுகளைக் கூட்டிச் சொல்கிறது. விடைபெறுகையில் மீண்டும் சந்திப்போமா எனக் கேட்டுக் கண்ணீர் உகுக்கிறது. நேரம் வந்ததும் நலுங்காமல் கையசைத்துத் தன்வழியே சென்றுவிடுகிறது. நினைவுகளை நினைத்தவனிடமே சந்தேகத்திற்குரியனவாக்கி.

‘You didn’t give me a hug.. ;-(’ குறுஞ்செய்தியில் ரேஷ்மா.

தழுவுதல். விடைகொடுக்கையில் அமெரிக்கர்கள் செய்வது. ஶ்ரீரங்கம் வந்தவுடன் மகிழ்ச்சியில் அவள் செய்தது. இன்று நான் விடைபெறுகையில் செய்யவில்லையாம். அவளை இதுவரை நானாகக் கட்டிப்பிடிக்கவேயில்லை தான். விடை கொடுக்கவும் இல்லையோ? எனிவே, நான் அமெரிக்கனில்லை. அமெரிக்காவில் தற்சமயம் வசிக்கும் இந்தியன்.

‘ஆலிங்கனம் அத்துடன் நின்றிருக்காது... பிறகு, நம் நிலை கண்டு சுற்றிலும் உன் ஸ்மால் டௌன் வெளிப்படையாய்ச் சங்கடப்பட்டிருக்கும்...’ முடித்து அனுப்ப இருந்தவன், தயங்கிப் பிற்சேர்த்தான். ‘...ஓரிரவு முழுவதும் உள்ளதே... ஸ்வீட் ட்ரீம்ஸ்... காலையில் அபி ஸ்டேஷனுக்கு வருவாரில்லையா?’

குறுஞ்செய்தியை அனுப்பிவிட்டு மனித உடல் கோணல்களின் அழுத்தத்திற்கேற்பத் தன்னுடலைச் சற்றே வளைத்து அனுசரித்து அழுத்தம் நீங்கியதும் ஞாபகமாய் மீண்டெழுந்து நிமிர்ந்து கொள்ளும் புதிய அனொடைஸ்டு அலுமினியக் கலவையினால் ஆன ஐ-போனை பின் பாக்கெட்டினுள் நுழைத்து, டிக்கெட் வாங்கி மீண்டும் ஓர இருக்கையில் சாய்ந்தான்.

நினைவுகளை வெளியே வேடிக்கை பார்க்கத் தொடங்கினான்.

காதல் இருப்பதால் மனத்தில் ஆசைகள் எழுகின்றனவா, ஆசைகளே காதலைத் தோற்றுவிற்கிறதா? காலையில் ரேஷ்மா வீட்டில் உண்ட இடியாப்பம் போன்ற சிக்கலில் ரங்காவுக்கு ஒற்றை இழைத் தெளிவு பிறப்பது போல் இருந்தது.
நம் காதலி இல்லை, நம் சிந்தையே காதலுக்குக் காரணம். மனத்துள் ரசித்த முத்தம், காதலியின் இதழ்களில் பரிமாற வேண்டும் என்பதில்லை. மனத்துள் மகிழ்ந்த காதலியின் உறவு, நிஜத்தில் நிகழ்வதைக் காட்டிலும் வீரியம் மிக்கது. காமத்தின் ரஸவாதம் நிஜத்தின் எப்பொருளையும்

மனத்துள் தங்கமாய் மாற்றி விடுகிறது. தங்கும் உணர்ச்சியாய், தடுக்கும் தவிப்பாய், தணியாத நெருப்பாய், தத்தளிக்கும் தளிராய், தளும்பும் கலனாய், தன் வெறியெடுத்த தானியங்கி ஊர்தியாய்...

காதல் காதல்தான். காமம் காமம் மட்டுமே. ஆணுக்கு இவ்வாறு பிரிவது பெண்ணுக்கோ இரண்டும் ஒன்றிணைந்ததே.

பெண் காதலை மனத்தில் தொடங்கி மற்றதில் முடிக்கிறாள். ஆண் மற்றதில் தொடங்கி மனத்தில் முடிக்கிறான். பெண் மனத்தால் பெறுவதைக்கொண்டே காதலித்துக் காதலுள் கிடந்திட முடியும். உடலால் பெறுவது ஊக்க போனஸ். இல்புறத்தே அவள் கொள்ளும் உறவில் ஆணின் மனத்திடம் பெறுவதை வைத்தே அவள் சாந்தி அடைய முடியும். நடுவயதிலும் மற்றொரு ஆண் கவனிக்கும் கண்டுகொள்ளும் காதலுறும் தன் நிலை ஏற்றம், அதில் வந்தடையும் திருப்தி போதும் அவளுக்கு. உடலால் அக்காதல் மனத்திற்குரியவனுடன் உறவு கொள்ளாமல் போவது ஆபத்தின்மையே, அவளைப் பொறுத்த மட்டில்...
மனத்துள் மணந்துவிட்ட மனம் அதனைப் போல...

ஆணுக்கு இதில் ஏமாற்றமே. மனத்துள் மணந்த மன மதனைப் போல... நடுவயது இல்புறக் காதல் மணந்து காதலிக்கும் மனைவியை விட்டு விலக வேண்டுவதால் வருவதல்ல. தன்னை விட்டே விலக விரும்பும் நடுவயது மனத்தில் எழுவது அக்காதல்.

காதல் என்பது ஆட்கொள்வதல்ல, விடுவிப்பது என்பாள் வேதவல்லி. ஒருவரை நாம் ஆட்கொள்வதல்ல அவளுடைய காதல், நம்மிடமிருந்து விடுவிப்பது. விடுதலையிலேயே எதற்குக் கட்டுப்படலாம் என்பதை மனம் கற்றுக்கொள்ளும். கற்றதைத் தன்னிச்சையாய் ஏற்றுக்கொள்ளும். ஏற்றுக்கொண்டதைக் காலமெல்லாம் காப்பாற்றும். எவ்விதச் சத்தியத் தளைகளும் சட்ட திட்டங்களும் சதிபதி சந்நிதானங்களும் இன்றி. உறவுத் தளைகளில் விடுபெற்ற மனம் கட்டவிழ்ந்த நாய்போலத் தனக்கு விடுதலையளித்தவர்கள் எனக் கருதுபவரிடமே விசுவாசத்துடன் வந்து சேரும். தாம்பத்யம், தளைக்கா தாம்புக் கயிறு. இருமனங்களை இணைக்கும் மன-வடம். இரண்டு நாளில் விமானம் ஏற வேண்டும்.

இப்பூவுலகில் பிழைக்க வழியுள்ளவரை அரங்கன் தன்னுடன் வைத்திருப்பதில்லை. காதலிக்க வழியுள்ளோரைக் காதல் தன்னுடன் வைத்திராததைப்போல.

வேதா காலையில் மின்னஞ்சலில் ‘இலக்கியக் காதல், உனக்குப் பிடிக்கும்...’ என்று அவள் கலந்து கொண்டிருக்கும் மாநாட்டிற்கான அவளது ஆய்வுரையை அனுப்பியிருந்தாள். அவளை மீண்டும் சந்திப்பதற்குள் வாசித்துவிட வேண்டும்.

மேலைக் காற்று இதமாய் அவனை வருடத் தொடங்கியது.

# 17

## அமெரிக்கா. சென்ற வாரம்.

வாஷிங்டன்னில் நடைபெற்ற ‘உலக இலக்கியங்களில் காதல்’ மாநாட்டில் வேதவல்லியின் ஆய்வுரையின் தமிழாக்கம்:

### தொல்ஸ்தோயின் காதல்

நான் முதல் முதலில் ஆன்னா காரனீனாவை படிக்க ஆரம்பித்தது வருடங்களுக்கு முன் - என் முதுகலைப் பட்ட ஆய்வுக் கட்டுரைக்காக. அப்போது எனக்கும் காதலில் விழும் வயது - கவனியுங்கள், காதலிக்கும் வயதில்லை, காதலில் விழும் வயது.

ஒரு காதல் கதையைப் படிக்கும் மனநிலையில்தான் அதை முதலில் வாசித்தேன். கதாமாந்தர்களுடைய மனப்போராட்டங்களையும் தேர்வுகளையும் காதல் கண்ணோட்டத்துடன் மட்டும் பார்த்து, அவர்கள் எதைச் சரியாகச் செய்தார்கள், எதைத் தவறாகச் செய்தார்கள் என்றெல்லாம் என்னுடைய தனிப்பட்ட நெறிமுறைகளின் வழியே மதிப்பிட்டு, அவர்களின் செயல்களை மெச்சி அல்லது கண்டித்து ஆராய்ந்தேன்.

பிறகு ஆன்னாவை எட்டு முறை படித்துவிட்டேன்.

ஒவ்வொரு முறை படிக்கும்போதும் எத்தனை குறுகிய கண்ணோட்டத்துடன் என் கட்டுரையை எழுதியுள்ளேன் என்பது விளங்குகிறது. கொலம்பியா பல்கலைக்கழகத்தில் என் கட்டுரையை ஏற்று எனக்கு எப்படிப் பட்டம் கொடுத்தார்கள் என்று ஆச்சரியமாக இருக்கிறது. கத்துக்குட்டி நான் கூறினாலும் ஆன்னாவின் காதல் புறவய அகெடெமியர்களையும் மயக்கவல்ல அத்தனை வசீகரமானது போலும்.

தொல்ஸ்தோய் ஆன்னா காரனீனாவை எழுதும்போது காதலை மட்டும் சொல்லவில்லை. அன்பையே ஒரு விதியாக, சாபமாக, மதிப்பீடாக, உலகத்தின் இன்பத்தை மட்டுமன்றி துன்பத்தையும் ஏற்றி வரும் பாத்திரமாக, விளங்காப் புதிராக அமைத்துள்ளார். அன்பை அவர் இன்பம் தரும் தென்றலாகக் காட்டவில்லை, வாழ்க்கையையே புரட்டிப்போடும் சூறாவளி யாகக் காட்டியுள்ளார்.

தொல்ஸ்தோய் ஆன்னா காரனீனாவை தனி நாவலாக எழுதியிருப்பார்

என்று எனக்குத் தோன்றவில்லை. ‘வார் அண்டு பீஸ்’ என்று போரையும் வாழ்வையும் எழுதும் போது பொங்கி வழிந்தோடிய எண்ணங்களின் வடிகாலாக எழுதியிருக்கிறார் என்றே தோன்றுகிறது. சமுதாயத்தில் போரும் அமைதி வாழ்வும் தனி மனிதக் கட்டுப்பாடுகளுக்கும் இச்சைகளுக்கும் மீறித் தன்னிட்டமாய்த் தோன்றி மறைவதைப் போல, தனி மனிதன் வாழ்க்கையில் உருவாகும் போர்களும் அமைதிகளும் பல நேரங்களில்
அவனது கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டு அமைவதின் உண்மையைத்தான் ஆன்னாவின் வழியே கூறுகிறாரோ?

ஆக, ஆன்னா காரனீனாவும் ஒருவிதமான வார் அண்ட் பீஸ் தான் - ‘வார் அண்ட் பீஸ்’ சமுதாயத்தைப் பற்றியென்றால், ஆன்னா எனும் வார் அண்ட் பீஸ் தனி மனித விதிவசங்களைப் பற்றியது.

ஆன்னா காரனீனாவை தொல்ஸ்தோய் எப்படி எழுதத் தொடங்கினார் என்பதை அறிந்தால், அவர் எழுதியது காதல் கதையன்று, மனப் போராட்டங்களின் காவியம் என்பது விளங்கும். ‘பீட்டர் த கிரேட்’ என்ற சரித்திர மகாகாவியத்தை எழுத முற்பட்டுத் தோல்வியுற்று, மனத்தளர்ச்சியுற்று இருக்கையில் நடந்த ஒரு விபத்தே தொல்ஸ்தோயிற்கு ஆன்னா காரனீனாவின் வித்தாக அமைந்தது. ஆன்னா ஸ்டெபனொவ்னா பிரொகவா என்ற தொல்ஸ்தோய்க்குத் தெரிந்த பெண் தன் குழந்தைகளின் ஜெர்மன் ஆசிரியையுடன் கணவன் வைத்திருந்த தொடர்பினால் வருந்தி, பித்துப் பிடித்தாற்போல் அலைந்து, ‘என்னைக் கொலை செய்தவன் நீயே’ என்று கணவனுக்குக் கடிதம் எழுதி விட்டுச் சரக்குரெயில் வண்டியின் முன் விழுந்து தற்கொலை செய்துகொண்டது தொல்ஸ்தோயை உலுக்கிவிட்டது. அவளது உடலைப் பரிசோதனை செய்தபோது, கணவனுக்கு எத்தனை இன்பங்களை அளித்த அந்த மார்பகங்களும் இடையும் உருத் தெரியாமல் குலைந்து இருப்பதைப் பார்த்து, இதற்கான காரண காரியங்களை ஆராய முற்பட்டு, அன்பின் முடிவு இப்படிச் சாதாரணமான அருவருப்பான மரணம் மட்டுந் தனா என்று வெதும்பிய அவர் மனத்தில் தோன்றியதே இக்கதை என்று தொல்ஸ்தோய் கூறியுள்ளார்.

ஆம். ஆன்னா காரனீனா ஒரு காதல் கதையும் கூடத்தான். ஆனால் காதலைப்பற்றி அன்று. காதலின் தீவிர விளைவுகளைப் பற்றியது. காதல் மனித மனத்தின் அடிப்படை உந்துசக்தி. ஆனந்தம், ஆத்திரம், அன்பு போல. சில சமயம் களிப்பானது, பல சமயம் கொடுமையானது.

ஆபத்தானதும் கூட.

லெவினும் கிட்டியும் காதல் வயப்பட்டது களிப்பு. ஆன்னா காதல் வயப்பட்டது கொடுமை. இரண்டு காதலுமே அவற்றில் இருந்தவர்களாலும் தடுத்திரமுடியாத மனிதக் கட்டுப்பாடுகளுக்கு அப்பாற்பட்டதாய்த்தான் இருக்கிறது.

இலக்கியக் காதலைப் பற்றிய இந்த ஏட்டு வரையறை படிப்பதற்கு நன்றாக இருக்கலாம். ஆனால் நிஜ வாழ்க்கையில் இதை ஒப்புக்கொள்வது எளிதல்லவே. தேவதைகளாக, ‘காதலில் விழுந்தவர்களாக’ சாதாரண மக்களை விட உயர்ந்தவர்களாக, அற்புதமிக்கவராக மனத்தில் உருவகித்துள்ள காதலர்களைத் துன்பத்தால் கெடுபவர்களாகப் படிப்பது காதலைப் பற்றி நாம் எழுப்பியுள்ள மணல் கோட்டையைச் சரிப்பதாக இருக்கிறதே. பயமாகவும்தான்.

ஆம், எல்லாக் காதலும் மரணத்தில் முடிவதில்லை - லெவின்-கிட்டியின் காதலைப்போல். ஆனால் லெவின்-கிட்டி யின் காதல், ஆன்னா காரனீனாவின் வலிமிக்க காதலுக்கு மருந்து போல்தான் அமைத்துள்ளாரோ? லெவின்-கிட்டியின் காதல் சிற்றலை, ஆன்னாவின் சுனாமியில் மறைந்து விடுகிறதே? காதல் தோல்வியின் வலியில்தான் எழுச்சி; வெற்றி பெற்ற காதல் சாதாரணத்துவத்திற்குள் விழுந்துவிடுகிறது.

‘காதல் மட்டுமே புரியவேண்டும், திருமணம் செய்து கொள்ளக் கூடாது’ ஆஸ்கர் வைல்ட்டின் கூற்று உண்மையோ?

காதலைப்பற்றி நாம் கொண்டுள்ள மனப்பிம்பம் ஆன்னாவின் மரணத்தை உன்னதத் தியாகமாகப் பார்க்க வைக்கிறது. காதலுக்கு வாய்ப்பளிக்க ஆன்னா உயிரையும் பணயம் வைத்தது போலல்லவா இருக்கிறது? அப்படி யோசிப்பது, காதலுக்கு ஒரு கவர்ச்சியைக் கொடுக்கிறதன்றோ. ஆனால் இதைக் காவியம் என்பதை மறந்து ஒரு நிமிடம் நிஜம் என்று எண்ணிப் பார்ப்போம். ஆன்னாவின் காதலால் யாருக்கு என்ன நற்பயன்? ஆன்னாவிற்கு மட்டுமன்றி, அவள் காதலன் வ்ரொன்ஸ்கிக்கும் கணவன் கரெனினுக்கும் மகன் செர்யொழாவிற்கும் அல்லவா இது துயர முடிவாய் அமைகிறது?

காதலால் யாருக்கும் எதுவும் துயரமும் இல்லை, ஆன்னாவின் தற்கொலையால் மட்டுமே துயர முடிவு அமைந்தது என்று பதில் வாதம்

செய்யலாம். ஆன்னா தற்கொலை செய்து கொண்டது சமூக, மதக் காரணங்களால் என்றும் காதலுக்கும் தற்கொலைக்கும் சம்பந்தம் இல்லை என்றும் விவாதிக்கலாம். சமூகம் பெண்ணிற்கும் ஆணிற்கும் வெவ்வேறு விதிகளை அமைப்பதால்தான் துயரம் ஏற்பட்டது, இல்லையெனில் வ்ரொன்ஸ்கியும் ஆன்னாவும் மகிழ்ச்சியாக வாழ்க்கை நடத்தியிருக்கக்கூடும் என்றும் கருதலாம். ஆனால் வாழ்க்கையின் சமகால நியதிகள் அன்றைய சமுதாயத்தின் கோட்பாடுகளைப் பின்பற்றியே அமையும் என்பது இயல்பு.

சரி, ஆன்னா காதலின் தியாகி இல்லை என்றால், அவள் யார்? ஆன்னாவின் தற்கொலையால் ஏமாற்றம் அடைந்த வாசகர்கள் அவளது குணத்தையும், அவளது தேர்வுகளையும், நோக்கங்களையுமே சந்தேகப்படுவர். அவளது மனப்போராட்டங்களை, அவளது நற்குணங்களைக் கவனிக்காமல் அவளைக் காமப்பித்து பிடித்த வன்மம் நிறைந்த எதிர்நாயகியாகப் பார்க்கின்றனர். ஆனால் அவளைக் ‘கெட்டவளாகப்’ பார்ப்பது அவளுக்கும், தொல்ஸ்தோய்க்கும் செய்யும் அநீதி.

உலகில் நடக்கும் கேடுகள் பலவற்றிற்கும் காரணம் வன்மம் இல்லை, அறியாமைதான். ஆன்னா முட்டாள்தனமான காரியங்களைச் செய்கிறாள்தான். ஆனால் அதற்கான காரணம் தான் செய்யும் காரியங்களின் விளைவுகளை முன்காண முடியாத அறியாமையால்தான். வ்ரான்ஸ்கியுடன் காதல் வயப்பட அலையும் காமப்பித்து கொண்டவள் அல்ல ஆன்னா. நாவலின் தொடக்கத்தில் தனது சகோதரன் ஸ்டிவாவை அவனது காதலியிடமிருந்து பிரித்து மனைவியுடன் சேர்க்கத்தான் மாஸ்கோ செல்கிறாள். அண்ணனின் இல்புறக் காதலைத் தவறென்று கருதிய அவளே வ்ரான்ஸ்கியிடம் இல்புறக் காதல் வயப்பட்ட தால் (வாழ்க்கையின் முரணை எத்தனை அற்புதமாய்ப் புனைவினில் பிரதிபலிக்கிறார் தொல்ஸ்தோய்! என்று விளக்க மாய் வியந்து சுட்டுகையில்தான் எளிய வாசக மனநிலைகளுக்கு இவ்வகை இலக்கியப் படிமங்கள் புரியத் தொடங்குகிறது!) தன் மீதே அவளுக்கு ஏற்பட்ட ஏமாற்றமும் கூட அவளுடைய பிற்காலச் செயல்களுக்கு - அவை சரியா தவறா என்பதை மதிப்பிட நமக்கு உரிமை இல்லை - காரணமாக இருந்திருக்கலாம்.

ஆன்னாவுடைய வீழ்ச்சியில் அவளுடைய பங்கு என்ன என்பது தொல்ஸ்தோய்க்கே புரியாமல் இருந்திருக்கலாம். நிஜ வாழ்க்கை ஆன்னாவின் கணவன் ஜெர்மன் ஆசிரியையுடன் கொண்ட

தொடர்புக்கு அவளே எத்தனை தூரம் பொறுப்பு என்பது புரியாதது போல். வார் அண்டு பீஸ்-ஸில், போரில் தனி யொரு போர்வீரனுடையப் பங்களிப்புப் புரியாதது போல்.

ஆனால் தனிமனிதன் வாழ்க்கையில் செய்யும் தேர்வுகள் அவனது சூழ்நிலைகளால் மட்டுமே உருப்பெறுகின்றன என்பதில் தொல்ஸ்தோய் தெளிவாக இருக்கிறார். ஒருவருடைய குணநலன்களும் ஆளுமையும் சூழ்நிலையால் உருவாக்கப்படுபவையே என்பதிலும் உறுதியாக இருக்கிறார். உலகோடு ஒத்து வாழச் சில வரம்புகள் இருக்கின்றன என்பது உண்மையே. அதே போல மனம் தாங்கக்கூடிய உணர்வுகளுக்கும் வரம்புகள் உள்ளன. ஆன்னாவின் கதையில், நாற்புறங்களிலிருந்தும் வருபவற்றால் அவளுக்கு ஏற்படும் உணர்வுக் குவியல்கள் - வ்ரான்ஸ்கி மீது கொண்ட காதல், அலெக்ஸிஸ் மேல் கொண்ட கோபம், குழந்தை மேல் கொண்ட பாசம், தன் மேல் கொண்ட ஏமாற்றம், சமுதாயச் சட்டங்களின் மேல் கொண்ட எரிச்சல் சேர்ந்து அவளது வரம்பை உடைத்திருக்கலாம். இவற்றின் கலவையில் சில பல (அவளுக்கு) தவறான முடிவு களுக்கு அவளைத் தள்ளியிருக்கலாம். தானே செய்தாளா இல்லை செய்வதற்கு உந்தப்பட்டாளா என்பது வாழ்க்கையின் விடையில்லாக் கேள்வி. எளிதாக விட்டுக்கொடு, வாழ்க்கையில் நீ ஒரு ஏனோதானோ. எதற்கெடுத்தாலும் போராடு, வாழ்க்கை உனக் கொரு பெருந்துயரம் மட்டுமே.

ஆன்னாவின் மரணத்திற்குப் பிறகு தொல்ஸ்தோய் லெவினின் கதாபாத்திரம் மூலம் அன்பு, மகிழ்ச்சி, இன்பம் பற்றிய தன்னுடைய மனப்போராட்டங்களை தற்காலிகப் புரிதல்களை விளக்க முயல்கிறார். ஆன்னாவின் மனப்போராட்டங்கள் மரணத்தில் முடிந்தது போலல்லாமல், வாழ்க்கை என்பது தழைப்பதற்கு ஓரளவு அது உறையும் சமுதாயத்தை ஒத்திருந்துதான் ஆக வேண்டும் என்ற ‘புரிதலால்,’ லெவினின் மனப்போர் அமைதியில் முடிகிறது. ஆக, காதல் என்பது என்ன என்பதன் பதில் தேடி இந்த நாவலைப் படித்தால், பதில் கிடைக்காது என்பதே விளங்குகிறது. ஆன்னாவிற்குப் புரியாத அன்பின் சூத்திரம் லெவினுக்கு மட்டும் புரிந்ததா என்றால், இல்லை என்பதே ஆசிரியர் புனைவின் வழியே அலசும் மானுடப் பெருங்கேள்வி ஒன்றிற்கான விடை என்பது நாவலை ஊன்றி வாசிப்பவருக்குத் தெளிவு.

அன்பு என்ன என்பதை ஆராய்வதை விட அதை அந்த நொடியில் அனுபவிப்பதே மேல் என்பதைப் புரிந்துகொண்ட தால் மட்டுமே லெவினால் மகிழ்ச்சியுடன் வாழ முடிந்தது.

இந்த ‘ஏனோதானோ தெளிவு’ உண்மையை ஆராயும் உறுதியில்லா ‘நழுவும்’ உத்தி எனப்படலாம். ஆனால் சில புரிதல்களின் காரணிகளைப் பகுத்தாய்ந்து அறிய முற்பட்டால் அமைதியாக வாழ்ந்திருக்க வேண்டிய நம் வாழ்க்கை ஆராய்ச்சி யில் செலவழிந்து, அனுபவத்தில் இழந்து, அதுநாள் வரை மனப் போராட்டத்தினூடே நிலையற்றதாய்ச் சந்தேகித்த ஆதர்சங்களிடம் பிடிமானமற்ற ஒரு கையறு தினத்தில், ஆன்னா போன்று கண்மூடித்தனமாய் எதிர்ப்படும் வாழ்க்கையின் நிதர்சன வண்டியில் மோதி விழுந்து விடலாம். காதல் கொல்லுமா, வாழவும் வகை செய்யுமா? ஆன்னாவின் காதலுக்கான முடிவுடன் தொல்ஸ்தோய் நாவலை முடிக்கவில்லை. அதற்குப் பிறகும் நூறு பக்கங்கள் எழுதி, லெவினின் காதல் சுட்டும் பாதையை வைத்தே நாவலை முடித்துள்ளார்.

ஆன்னா காரனீனா காலங்களை வென்ற இலக்கியப் புதையல். அதை ஓரிருமுறை படிப்பது கடல் ஆழத்தை, காலில் தொட்டுப் போகும் அலைக் கரையில் நின்று அளப்பது போலாகும். அந்தக் காதலுக்கும் அன்பிற்குமான ‘வார் அண்ட் பீஸ்’ காவியம் கதை மாந்தர்களின் எண்ணங்கள், உணர்வுகள், மனப் போராட்டங்கள், வருத்தங்கள், மன அமைதி அனைத்தும் மானுடத்தின் வாழ்வியல் புதிர்கள் விடைகளாய் வழிந்தோடும் அமுதசுரபி. காதலைப் போலவே. இந்த அமுதசுரபியிலிருந்து எதைப் பெறுகிறோம் என்பது வாசிப்போரின் மனங்களில் இருக்கிறது. காதலின் ஆழத்தைத் தேடும் மனங்களில்.

# இல்புறம்.

கண்ணியமான எழுத்தாளர்கள் வெகுளிகள். ஆங்கே வெளிப்படுவது ராமனுடையது இல்லை என்பதைக் கடந்து ராவணனின் எந்தத் தலை என்பதைப் பற்றியும் பொருட்டின்றி அனுமனாய் மார்ப்பைப் பிளந்து உலகினிற் காட்டும் வெகுளிகள். எழுத்தாளர்கள் அசடுகள். வாழ்வில் என்றுமே சந்திக்கப் போகாத மானுடர்களை மேம்பட்ட வாசகர் குழாமெனக் கருதி அவர்களின் புறங்கைப் பாராட்டுதல்களைக் கருதி, மானுட சராசரி வெள்ளத்தனைய நீளும் அவர்கள் அறி நீட்டத்திற்கு உட்பட்டு அவர்கள் பரிசீலனைக்கும் விவாதத்திற்கும் விமர்சனத்திற்கும் எனத் தங்கள் அந்தரங்கத்தை நேர்மையாக உரித்து வைக்கும் அசடுகள். காதல் என்பது நம்மிடம் இருப்பதாய் நினைத்துப் பார்த் திராத தவிப்பு. காதல் என்பது நம்மால்...

... ... ... தன்னுடைய மூன்றாவது நாவலைத் தொடங்கியிருந்த ரங்கா எழுதுவதை நிறுத்தினான்.

காதலின் வெளிப்பாட்டைத் தடுப்பதாய் அவள்மீதான காதலையே வெறும் கதைக்காக என் மனத்தில் உருவாக்கிக் கொண்டதாய் அவள் எடுத்தெறிந்து சொன்ன பிறகு, வேறு எந்தக் கதையை எழுதுவதற்கு இந்தப் பீடிகை. மனத்திற்கு தோன்றும் உண்மையை மட்டும் எழுது...

ஆப்பிள் கணினியில் தனிப்பட்ட மென்பொருள் தேவைகளின்றித் தமிழ் எழுதுவது சுலபம். அழிப்பதும்.

அழித்துவிட்டு மீண்டும் தொடங்கினான்...

நித்யகல்யாணிப் பூவை எங்கு காண்கையிலும் ரிஷியுடனான நிறைவேறாக் காதல் நினைவிற்கு வரும்.

ஒரு ஆளை உருவாக்கப் பார், உன் எழுத்தில் உலகை உருவாக்குவாய். உலகையே எழுதப் பார்த்தால் ஒருவருமே உருப்படியாக உருவாகியிருக்க மாட்டார்கள். இது எழுத்தின் அடிப்படை என்பர், பெண் ஆண் உறவுச் சிக்கல்களையும் சார்ந்த உணர்வுகளையும் இயல்வதே இலக்கியம் எனக் கொள்பவர்.

ரிஷி யார்? உங்களைப் போன்றவன்தான். ஆனால் என்னைக் காதலித்தவன். உங்களைப் போன்று வாழ்வில் நிறை வானவன்தான். ஆனால் அவனை முழுவதும் சொல்வது கடினம்.

அதனால்தான்...

அவன் சம்பந்தப்பட்ட ஒரு காதலை மட்டும் ஓரளவு சொல்லப் பார்க்கிறேன். ஒரு இல்லறத்தையே பேணப் பார்க்கிறேன். ஒரு கதையையே உருவாக்குகிறேன். ஒரு முடிவையே தேடுகிறேன். அம்முடிவே உலகப் பொதுமறை எனின் அதை ஓதிய ஒரு காதலியும் பிழைப்பாள். இரு குடும்பங்களில் இல்லறம் இசையும். ஏனெனில் மகிழ்ச்சியான குடும்பங்கள் ஒரே வகையினதே...

# 18

பெங்களூர். இனி வரும் வாரம்.

கலவியின் உச்சத்தில் ஒத்திசையும் ஓங்கார வெளியில் கண் முன்னே கணவனின் கனிவான முகம். அக்கண்களில்தான் எத்தனை தவிப்பு. காமம் தீர்ந்த காதல் மீந்த ஆழியில் அமிழ்ந்த அமைதி. அன்புடன் எழுந்த மீசையற்ற மழுங்கச் சவரம் செய்த மங்கிய இரவினில் மங்காத மாட்சியுடனான அந்த முகம்...

கண்களை மூடிக்கொண்டாள்.

சரிந்த கணவன் அழுத்தமாய் அதரங்களில் முத்தமிட்டு அணைத்து அருகில் அயர்ந்தான்.

எலக்ட்ரானிக் சிட்டியையும் மின்விளக்கணைத்து அசத்தி ஓய்வெடுக்கச் செய்திருக்கும் பெங்களூர் பெருங்குளிர் பின்னிரவின் பின்பாதி. மதனோற்சவ நாட்டிய நங்கைகளின் செதுக்கிய வடிவங்களை இரவினால் மறைத்திருந்த இல்லறக் கட்டிலில் மூடிய இமைகளுள் ரேஷ்மா விழித்திருந்தாள்.

ரங்கா அமெரிக்கா போயிருப்பான். வேதவல்லியிடம்.

நான் அபியிடம் வந்துவிடவில்லையா.

நடந்திருந்தால்... கேட்டுக்கொள்ளாமல் இருக்க முடியவில்லை.

முதல் காதல் முன்னிலையில் நேற்றைய தாரம், இன்றைய தாய் என வாழ்க்கை வேடங்களாய் என்னுடன் இருக்கும் இவரெவரும் என்னைக் காப்பாற்றத் திராணியற்றவர்களே. எத்தனை துல்லியமாய்க் கணித்துவிட்டான்... காதலன் என்பதால்...

காதல் என்பது உன்னை ஒருவரிடத்தே முழுவதுமாய் இழந்து அவரை முழுவதுமாய்ப் பெறுவதன்றோ.

மயங்கி இருந்த போதினிலே மனத்தாலும் என்னைக் களையாதவன் மனம் விரும்பிக் கூட வருகையிலே அவன் காதலையே கேள்விக்குறியாக்கித்தான் என்னிடமிருந்தும் எம்மைக் காத்துக்கொள்ள முடிந்தது...

ஓசையின்றி எழுந்து படுக்கையின் அருகில் மடிக்கணினி மேஜையின் முன்னால் சுழல் நாற்காலியில் சரிந்தாள். தளர்ந் திருந்த உள்ளாடையின் இடைவெளிகளில் பெருத்திருந்த இடை பொதிந்த அமர்வினில் திசைகெட்ட மார்பகத் தொய்வுகளுடன் கனத்தது. பர்சனல் டிரெய்னர் வைத்து எவ்வளவு ஜிம் போனா லும்... சை... கூந்தலை அள்ளி முடிந்து தங்க பிரேமினுள் சிறிய செவ்வகங்களான வாசிக்கும் கண்ணாடியை அணிந்து கணினியை உயிர்ப்பித்தாள்.

ஸ்ரீரங்கத்தில் ரங்காவைச் சந்தித்து ஒரு வாரம் ஆகிறது.

அந்த இரண்டு தினங்களில் உள்ளுணர்வின் உந்துதலிலேயே எடுத்திருந்த முடிவுகள் இன்று பகுத்தாய்ந்து எழுப்பிய எண்ணங்களால் உருப்பெற்று சமுதாயப் பச்சோந்தியின் குருட்டு அறப்பார்வைக்கான இல்புற விழுமியத்தையே பேணிய வகையாய்ச் சரியென்று சமாதானமாகியிருந்தன. காதலிருவர் கருத்தொருமித்துக் கட்டியெழுப்பிய காதல் கோட்டையின் கதவுகள் காமத்தீயில் காந்தலாகும் முன்னரே காலக்காற்றினால் அடைக்கப்பட்டுவிட்டன. இனி சில வருடங்களாவது வாழ்க்கைப் போராட்டம் அக்கோட்டையைத் தகர்க்க முனைந்து தருவிக்கும் எம்முற்றுகையையும் அது தாக்குப்பிடித்துவிடும். அரசியாய் தான் தங்கிவிட்டது கோட்டையின் உள்ளேயா வெளியேயா என்பதை இனி இவள் சரிபார்ப்பதில் பயனில்லை.

அந்த இரண்டு தினங்கள் தாண்டி மேலும் சில தினங்கள் வயதாகிவிட்டிருந்தாலும் அத்தினங்களின் இளமை உணர்வு மனத்தையும் முகத்தையும் பொலிவாகவே வைத்திருந்தது.

இருக்கட்டுமே. இருக்கும்வரை இவ்வுணர்வுகளை அனுபவிக்கத்தான் போகிறேன். ஆபீஸ்ல தனியாச் சிரிச்சுக்கறது லூஸ்னு நெனைப்பாங்க... புன்னகைத்துக்கொண்டாள் ரேஷ்மா.

புன்னகையின் கோணல், மனத்தின் புதையோர எண்ணம் ஒன்றை மேல்பரப்பிற்கு எதிர்பாராத நினைவுக்கோணத்தில் சுண்டி இழுத்தது. நடக்கையில் உள்ளாடை மட்டும் கோணலாய்த் திரும்பிவிட்ட உணர்வு. உயிர்பெற்று அவள் முகத்தை ஒளிர்வூட்டிய கணினியில் இணைய இணைப்பு தாமதித்தது. கணிக்ஸ் வேலையை விட்டதில் அலுவலில் மேலதிகாரியானாலும் தின வேலைப் பளு கூடிவிட்டதை உடலின் ஆயாசம் அறிவித்தது. கால்களை விரித்து அருகில் மோடாவில் நீட்டித் தொடைகள் மேல் மடிக் கணினியை வாகாய்ப் பொருத்திக் கொண்டாள்.

தளர்ந்து அகன்ற கால் விரலில் மெட்டி இரவின் வெளிச்சத்தில் கணினியின் விளிம்பில் கிளரொளி இளமையாய்த் தொலைவில் பார்வை யைக் கூசி உறுத்தியது.
அவளுள் எஞ்சியிருந்த கேள்வி ஒன்றுதான்.

எதற்கு?

'...தாக்குதலில் வெற்றிகொள்வாய் எனும் உறுதியை பாதுகாக்கப்படாத பகுதிகளை நீ தாக்கும்போதே பெறுவாய்...' ரயிலில் ஊர் திரும்பிய அன்று தொடங்கியிருந்த ஸண்ட்ஸூவின் போர்க்கலை புத்தகத்தை நேற்றிரவுதான் முடித்திருந்தாள்.
அமெரிக்காவில் இருந்து இரண்டே மாதங்களில் கொக்கி போட்டு வரவழைத்து ஏமாற்றி அனுப்பிவிட்டேனா? இல்லை, நிஜமாகவே காதலன் அவனுக்கு வேண்டியதை வழங்கும் துணிச்சல் எனக்குத்தான் இல்லையா?

அவ்வாறு மட்டும் கருதமுடியாதே. நான்தான் எனக்கே புரியாத உள்ளுணர்வின் நியாயப்படி தயங்கினேன் என்றால், ஆண்மகனாய்ப் பிடிவாதம் பிடித்துப் பெறுவதற்கு அவனுக்குமே அத்துணிச்சல் இல்லையே. முன்போலவே இன்றும் தனக்கு வேண்டியதைத் தீர்மானிக்க முடியாதவனாய், தைரியமாய் எனை மீறி அடுத்தமுறை முத்தமிடக்கூட துணியாமல்... இல்லை. என் ரங்கா அப்படியில்லை. Sweet guy. இந்த ரெண்டு நாள் அனுபவங்களும் உன் கதை எழுதவா என்று நான் கேட்டதும் சுருங்கி விட்டானே. முகத்தில் குரலில் உடலசைவில் அனைத்திலும் தெரிந்ததே...

பின் எதற்குத் தயங்கினாய்? அவனுக்கு அளிப்பதை அபியிடம் கொடுப்பதில் இருந்து எடுக்கப் போவதில்லையே. வேண்டுமென்றே அவன் காதலையே சந்தேகித்து என்ன பெற்றாய்? வரவழைத்தவளே நீதானே. உனக்கில்லாத காதலா?

'...சிறப்பான தளபதி என்பவனின் தாக்குதல் எவற்றின் மீது என்பதை எதிரியால் நிர்ணயிக்க முடியக்கூடாது...'

ஏன் தயங்கினேன். அபியோ, குட்டியோ காரணமல்ல. ரங்கா இவர்களுக்கு முன்பே என் காதலன். இன்றும் அவ்வாறே. ஆனால் அன்றே என்னை விட்டு ஓடியவன்... மனத்திற்குள் சுறு சுறுவென கோப மலரொன்று மொட்டவிழ்த்துச் சிவந்தது.

ரங்கா எனும் ஆணுக்குத்தான் எனை அன்று நிராகரிக்கும் ஆணவமா,

ரேஷ்மா நான் நினைத்தால் எனக்குக் கிடைக்காத ஆண்மகன் உண்டா எனும் என் பெண்ணவமா?

அவன் இளமையில் உன்னை அவன் தன் அல்பக் கனவுகளுக்காக நிராகரித்தான் என்கிற ஆற்றாமையைப் பொறுத்திருந்து சந்தர்ப்பம் அமைந்ததும் இன்று அவனைத் திருப்பி அனுப்பித் தணித்துக் கொள்கிறாய். உனக்கும் வேண்டும் என்கையிலும் உன் உணர்வுகளையே பொய்யாக்கி உன் காதலை உண்மை என்று நம்பியவனின் ஆதாரங்களையே பொய்யாக்கிப் பழிதீர்க்கின்றாய். மற்றொரு ரேஷ்மா இரைந்தாள்.

'ஒப்பிற்கு உருவாக்கப்படும் குழப்பம் சீரான தெளிவையே முன்வைக்கிறது...' போர்க்கலை அவள் மனத்துள் விரிந்திருந்தது. காதல் யுத்தம் குருதி கொப்பளித்திருந்தது. மனத்துள் மாமதமொன்று மத்தகசித்தது. நைச்சிய நிழலொன்று கெக்கலித்தது. நித்யகல்யாணி அலறியது. இரவின் தெளிகாப்பில் மின்னொளியில் பனிமுள் ஒன்று நீலவண்ணக் குளிரைப் போல விழித்தமர்ந்திருந்தவளின் விகசிப்பைத் தான் வளர்ந்து விரும்பியது.
மடிமீது உயிர்பெற்றிருந்த கணினியில் ஜி-சேட் அரட்டை அரங்கில் ரங்காவின் புகைப்பட முகம் சிரித்தது.

கால்களுக்கிடையே அவனை நெட்டித் தள்ளினாள். கிடந்த அவன் குரல்வளையில் கைபதித்தாள். சிரித்தான். ஒரு கையினால் முடியைப் பிடித்து உயர்த்தி உலுக்கினாள். மார்பகங்கள் அவன் கண்களைக் கொந்திவிடக் குறிவைத்துக் குனிந்தன. உயிர்மூச்சிற்கு ஏங்கி அவள் மார்பிடையே திறந்த அவன் வாய் பிளக்கும்வரை காத்திருந்து விடைத்து எழுந்தாள். அவன் மீதாய் ஆரோகணித்த கோலத்தில் வளைந்து திரும்பினாள். மோகப்பனி முள்ளைப் பற்றியிழுத்துப் பொருத்தியது ஒரு கை. என்னை எதற்குக் காதலித்து ஏமாற்றினாய் ரங்கா?

எத்தனை காதற்கைகள் பார் எனக்கு. நான் உன் மோகப் பசிக்கு ஆட்படும் காதற்பூச்சி யல்ல. கருஞ் சிலந்தி. காதல் மதுவைக் கடித்து ஊட்டி உணர்வற்ற உன்மத்த நிலையில் உனை வாட்டி வைக்க வல்லவள். ஆருக்கும் அடங்காத நீலி. உன்னைக் காதலிக்கும் கன்னிச் சிலந்தி. உறவு கொண்ட பின்னர் உன்னைக் காதல் உணவாய் உண்டு கபளீகரம் செய்ய உரிமையுள்ள கருஞ் சிலந்தி விதவை. சுயநலக் கோழையே நீ வேண்டியவாறு நீ என்னைக் காதலித்தாலும் நானே உன்னுடன் நான் வேண்டியவாறே உறவாடுவேன். நீ கேட்கையிலே

கொடுக்கும் ஆண்குல மனப்பிம்ப குலமகள் ராதை இவள் இல்லை. எனக்கு வேண்டியதை உன்னிடம் என்றும் எடுக்கத் தெரிந்த பாதி சிவன். பார்வதை. உதடுகள் துடித்தன. அலறும் மலரைப் போல. சிரித்தான். பளாரென்றது உள் ஒலித்தது. காதல் கனன்றது. கனவு கேவியது. இடை விரைந்தது. அரை எரிந்தது. அறை சுழன்றது. அனைத்தையும் அடிவயிற்றில் ஆர்ப்பரித்துச் சுரந்த அன்பு அரவணைத்தது. தான் இரைக்கத் தன்னுள் தெறிக்கக் குதித்து விரட்டினாள் தானமர்ந்த காதற் புரவியை. முகமிலா மோக மோட்சத்தை ஏகி...

'...தெய்வீகக் கலைகளான சூட்சுமமே! ரகசியமே! உங்களைக் கொண்டே நாங்கள் தென்படாதிருத்தலைக் கற்கின்றோம், உங்களைக்கொண்டே ஒசையெழுப்பாமலானோம்; அதனாலேயே எதிரியின் விதி எங்கள் கைகளில்.'

விழித்தவள் முதலில் உணர்ந்தது தொடைகளிடையே அந்தரங்க ஈரத்தை. காமம் அன்பெனக் கனிந்த காதல் உச்சத்தின் வெந்நீர்த் துளிகள்.

மடிக்கணினி கார்பெட் தரையில் விரிகோணத்தில் சரிந்திருந்தது. நிசப்தம். அருகில் கட்டிலில் உறக்கம் கலைந்திருக்கவில்லை. நாற்காலி மோடாவில் சரிந்திருந்த தன் தேகத்தை விலுக்கினாள். மார்பகக் குழிவில் வியர்வை வழிந்திறங்கியது.
ஆழ்மனம் என்றோ தெளிந்திருந்த உண்மையை அறிந்து கொண்டதான அவள் மனம் ஆசுவாசத்தில் இதற்கும் வழக்கம் போலச் சமுதாயச் சோம்பேறி கற்றுக்கொடுத்த குற்றஉணர்வை எழுப்பிக்கொண்டு குதுகலிக்கலாமா என்று எத்தனித்தது.

அரையிருட்டில் பாத்ரூமை ஓசைப்படாமல் நாடினாள்.

அடுத்த அறையில் அத்தையுடன் உறங்கும் குழந்தையை எழுப்பிவிடக்கூடாது என்பதில் ஓர் கவனம்.

வந்து உணவுமேஜை கோஸ்டர் மீதிருந்த குவளையின் கழுத்தைத் திருகிப் பருகினாள். படபடப்பு குறைந்திருந்தது.

மீண்டும் கணினியை விரித்து மடிமீது அமர்த்தினாள். ரங்கா மௌனமாய் நகைத்தவாறு உறைந்திருந்தான்.

உண்மைக்குக் குறைந்தது மூன்று முகங்கள். கண்டதாய்ச் சொன்னவனது. அதைக் கேட்டு விரித்தவனது. காணல் கேட்டல் என

அறிபுலன்களில் ஆட்படா உள்ளிருட்டில் ஓசையற்றுப் புன்னகைக்கும் முகம் மூன்று.

மனத்தில் ஒரு பகுதி உணர்வற்றதாய் ஆனதை உணர முடிந்தது. அழுகை வரவில்லை. ஆயாசம்? பதினைந்து வருட பாரத்தை இறக்கிய வகையா, பருவத்தைப் பாடைவரை சுமக்கின்ற வகையா? உறவின் உச்ச சுவையை பெற்றிட்ட வகையா, அளிக்காமல் நிகழ்போலியில் இழந்திட்ட வகையா? எதை அன்று இழந்தேன் அவ்விழப்பை அவனுக்கும் இன்று அளித்து ஆயாசப்பட. எதை இன்று பெற்றேன் அவனையும் அன்றுபோல் இன்றும் என்னை இழக்கவைத்து. காதல் என்பது உன்னை ஒருவரிடத்தே முழுவதுமாய் இழந்து அவரை முழுவதுமாய்ப் பெறுவதன்றோ.

எதிரே கணினியில் ஜிமெயில்-அரட்டை ஜன்னலில் ரங்காவின் மீசையற்ற முகம் முறுவலித்தது. ‘கள்ளி! உனக்குள் இத்தனை காதல் உண்டென்றுதான் நேரிலும் சொன்னேனடி...’

கண்களைச் சிமிட்டினானோ. உயிரற்ற உருவப் படத்தில்.

‘...தகாத உறவாய் நியாயப்படுத்த முயலாததும் நம் காதலின் நேர்மையில் தானே. நேர்மையான காதல் நேசத்தில் நிலைக்கும். நிரடும் காமம் நீண்டு நிலைபெற வழியில்லையேல் வயதினில் விலகும். நத்தையாகி நேசத்தினுள் உறங்கிடுமன்றோ...’

ரங்கா அருவாய் மின் உருவாய் மன மருவாய் ஒலித்துக் கொண்டிருந்தான்.

கணினியினின்று முகத்தைத் திருப்பிக் கொண்டாள். அமர்ந்தவாறே நாற்காலியில் சுழன்று கணவன் ஆனந்த உறக்கத்திலிருந்த தங்கள் படுக்கையை கவனித்தாள்.
அபியை மீசை வளர்க்கச் சொல்ல வேண்டும்...

கண்களில் தூக்கம் கனத்தது. கொட்டாவியைக் கட்டுப் படுத்தாமல் பிதுங்கிய ஈரத்தை இமைகளில் கொட்டியவாறு கணினியின் பரவசத்தில் கவனத்தை ஊன்றினாள். ஜி-மெயில் அரட்டையில் ரங்காவுடனான பழைய அரட்டைக் கோப்புகளை கணினியின் டிராக்பேடின் மீதாய் தேர்ந்த விரல் நடனங்களில் கவனமாய்த் தேடத் தொடங்கினாள். அன்றொரு நாள் ரங்கா அமெரிக்காவிலிருந்து தயங்கித் தயங்கிப் பேசிய அன்றொரு நாள் இவள் செய்த, செய்யவிருந்த அரட்டையின் மீதி...

மனதும் உடலும் சற்றுமுன்னர் வரை கட்டுப்பாடின்றி உழைத்திருந்தாலும் மெய்வருத்தக் கூலியை தற்போதைய அமைதி வழங்கியதாகவே கணினியை இயக்கித் தேடும் விரல்களின் நடுக்கமின்மை உணர்த்தியது.

ஆ... இதுதான்... இந்த அரட்டையில் தான்... தேடியது இதையே.

ரங்கா அவளுடன் கனவில் உறவு கொண்டதாய்ப் பகிரங்கமாய் எழுதிய பேச்சுக் கோளத்திற்கு ரேஷ்மா எழுதிச் ‘செலுத்து’ விசையை அமுக்கியிருந்த பதில்..

.

‘கனவுகளிலேயே அனைத்தையும் அளித்துவிடாதே. நேரில் சந்திக்கையில், எனக்குள்ளும் மிச்சம் வைத்திரு... ;-)’

மின்வெட்டு ஏற்பட்டு ரங்காவைச் சென்றடைந்திராத பதில்.

அவனால் இனி இச்சென்மத்தில் உறுதியாக அறிய முடியாத அவள் காதலின் அழைப்பும் அளிப்பும் ஏந்திய சம்மதச் சொற் கோவை. பெண்மனத்தின் நாடிய ஏற்பும் நடுங்கிய மறுப்பும் நிரந்தர மையலின் நிச்சயமற்ற மையத்திலிருந்தே என்பதைப் புரிந்துகொள்ள வகைசெய்யும் சொல்லிழை. விரல்களினால் கீ-பேடில் நர்த்தனமாடி அந்த அரட்டைச் செய்திகள் அனைத்தையும் தேர்வு செய்து, டெலிட் அழுத்தி...

அழித்தாள்.

ஆயாசம் அதன் பெயர் அமைதியே என்றதை மறுத்து வினவும் தெளிவு முதல் நொடியிலேயே போய்விட்டிருந்தது. எப்போது எவ்வாறு உறங்கினாள் என்று அறியாள். காலைக் கதிரவன் கீழைக் கதவோரம் கனைக்கையில், கணவனின் கதகதப்பில் கண் விழித்தவளின் நினைவுகளுள் ரங்காவுடனான காதல் கைகூடிய கனவாய்க் கரைந்துவிட்டிருந்தது.

எழுந்து பிள்ளையைப் பள்ளிக்குக் கிளப்ப ஆயத்தமானாள்.

# மண்ணில் இந்தக் காதல் இன்றி...

அன்பின் வழியது உயிர் என்கையில் அவ்வன்பு காதலற்ற தெனக்கொள்ளத்தான் முடியுமா மனிதகுலம் தழைக்க உயிரின் தொடர்ச்சியைப் பேணுவதாய்ப் பறைமுழக்கும் தத்துவ தரிசனங்களினால்? அறிவியல் இனி ஆக்கிவிடலாம் மனித உயிரை. இவ்வுலகில் காதல் இல்லையேல் அவ்வுயிர் அன்பின் வழிப்பிறந்ததெனக் கொள்வதும் இயலுமா? திருமணத்திலோ ஆழ் மனத்திலோ காதலித்திராதவர் மனிதகுல உயிர்த் தொடர்ச்சியில் பங்குபெறும் தகுதி இழந்தவர்களே. ஆற்றில் இறங்கத் துணிபவனையே அக்காதற் சுழல் அறிவற்ற ஆழ்மன அமிர்தம் ஊட்டி ஆதிமனித அன்பில் அலைத்துக் கழிக்கும். இதில் பெண்மை வெறுத்த காமம் கடிந்த காதல் வடிந்த தனிப்பெரும் ஜோதியெனும் பேரானந்தத்தைக் கண்டுவிட்டதாய்க் கரையில் நிற்கும் அறிவுஜீவிக் கோழை களிப்புற்று வழி காட்டுவது மனிதகுலத்தில் யார் உய்வதற்காக?

காதலிக்கையில்தான் காதல் இருக்கும். அச்செயலினுள் அமிழ்கையில்தான் மனத்தில் தவிப்பு தலைதூக்கும். காமத்தில் தொடங்கியவை என்றும் காதலில் முடிவதில்லை. காதலில் தொடங்கியவை அன்பொழுகும் காமத்தில் திளைக்காவிடினும் காதல் தோற்றுவித்த அன்பில் முடியலாமல்லவா. நிறைவேறாக் காதல்கள் காமம் களைந்து இருந்துவிட்டுப் போகட்டுமே, அன்பொழுகும் நடைப்பிணங்களாய்.

காதலர்கள் என்றும் காதலில் திளைப்பதில் தேர்ந்தவர்களே. எப்பொழுதில் எங்கு எவருடன் என்பதை அக்காதல் மனங்கள் தருணத்தில் முடிவு செய்து கொள்ளட்டுமே. இடையில் இதைப் போன்ற கதைகள் பல கற்பனைவெளியில் கால்பரப்பிக் களிநடனம் புரிந்திருக்குமானால் அவை கடைந்த நிஜங்களின் தரிசனங்கள் கூறுவதும்...

அச்சுவை பெறினும் வேண்டேன்
அரங்கமாநகருளானே.